வரு.76 இல. 40 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி (printed in Sinhala script)

2024 ஒக்டோபர் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

October 13 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-
















## பொதுத் தேர்தலில் பின்வாங்கிய சிரேஷ்ட அரசியல்வாதிகள்!

இரண்டு தசாப்த காலமாக பாராளுமன்றத்திலும், நாட்டின் ஆட்சி அதிகாரத்திலும் செல்வாக்கு செலுத்தி வந்த ராஜபக்ஷவினர் எவரும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லையென அறிவித்துள்ளனர்.

அதேபோன்று, முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன உட்பட கடந்த அரசாங்கத்தில் சிரேஷ்ட அரசியல்வாதிகளாக செயல்பட்ட பலரும் தேர்தலில் போட்டியிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வந்தது. இம்முறை 101 அரசியல் கட்சிகளும், 349 சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன.


பிரதான அரசியல் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் போட்டியிடுவதுடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்பினர் வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றனர்.

அதேபோன்று வடக்கில் தமிழ் கட்சிகள் கூட்டணிகளாகவும் தனித்தனியாகவும் போட்டியிடுகின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சித் தலைமையில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை சிதறிப்போயுள்ளதுடன், தமிழரசுக் கட்சி தனித்து வடக்கு, கிழக்கில் போட்டியிடுகிறது.

மலையகத்தில் இ.தொ.கா ஐ.தே.கவின் யானை சின்னத்திலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியிலும் போட்டியிடுகின்றன.

06

## மக்கள் நலன்சார் விடயங்களுக்கு உதவ சமந்தாபவர் உறுதி




ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் (USAID) நிர்வாகி சமந்தா பவருக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (11) இணைய

06

### இளம் தலைமுறையினரின் பங்களிப்புடன்

## தமிழரின் பாரம்பரிய கட்சி மீண்டும் அரசியல் களத்தில்

### வடக்கு, கிழக்கில் உதயசூரியன்

தற்போதைய அரசியல் கள நிலையில் தமிழ் மக்கள் சார்ந்த கட்சிகளின் சின்னங்கள் சிதைந்துள்ள ஒரு இக்கட்டான காலகட்டத்தில் தமிழர்களின் மிக நீண்டகால வரலாற்றுப் பாரம்பரிய சின்னமாகிய உதயசூரியன்

06




## வெற்றி தரும் விஜயதசமியில் வித்தியாரம்பம்



அனைத்து நற்காரியங்களிலும் வெற்றி தரும் விஜயதசமி நாளான நேற்று பிள்ளைகளின் கல்வியை ஆரம்பிக்கும் நோக்குடன் ஆலயங்களில் வித்தியாரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. நேற்று வெள்ளவத்தை மயூராபதி அம்மன் ஆலயத்தில் வித்தியாரம்ப நிகழ்வு நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# புற்றுநோய் மருந்து இறக்குமதியில் பாரிய மோசடி



### தடுப்பூசி குப்பிகளில் வெறும் தண்ணீருடன் Saline கலந்து 3,150 ஊசி மருந்துகள் கொள்வனவில் 14 கோடி ரூபா மோசடி

தீவிரமான புற்றுநோயாளர்களுக்கும் நரம்பியல் தொடர்பான நோயாளர்களுக்கும் வழங்கவென வெறும் தண்ணீர் மட்டும் நிரப்பப்பட்ட 3,150 ஊசி மருந்து குப்பிகளை கொள்வனவு செய்துள்ளமை

06

## வேட்பாளர்களுக்கான விருப்பு எண்கள் அடுத்த வாரம்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களுக்கமைய வேட்பாளர்களின் விருப்பு எண்கள் அடுத்த வாரத் தொடக்கத்தில் வெளியிடப்படுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் பணி நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களிடம் இருந்து 690 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத்

06

## கடலுக்கு செல்வதை தவிர்க்கவும்

### வளிமண்டலவியல் திணைக்களம் மீனவருக்கு எச்சரிக்கை

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இக்கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுமெனவும், கொழும்பிலிருந்து காலி மற்றும் மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகளின்

06

## சவுதி அரேபியாவின் ரியாத் வர்த்தக கண்காட்சியில் விஜார் 'சிலோன் டீ'



சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சியில் விஜார் பிராண்ட் 'சிலோன் டீ' காட்சிக்கு வைக்கப்பட்டது. கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இக்கண்காட்சி இன்று 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் நடத்தப்பட்ட

06

## எங்கள் கருத்து...

### ஐக்கியப்பட பக்குவமற்ற தமிழ் அரசியல் கட்சிகள்!

பாராளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான தீவிரமான செயற்பாடுகளில் அரசியல் கட்சிகள் தற்போது ஈடுபட்டுள்ளன. பெரும்பான்மை அரசியல் ஒருபுறமும், சிறுபான்மை அரசியல் மறுபுறமுமாக பொதுத்தேர்தல் களம் பரபரப்படைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளதையடுத்து, பாராளுமன்றத்தில் அதிகப் பெரும்பான்மையைப் பெறுவதற்கான பெருமுயற்சிகளில் ஆளும் தரப்பும் எதிரணியும் ஈடுபட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள போதிலும், அக்கட்சி பாராளுமன்றத்தில் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதே அவசியமானதாகும். பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியினால் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாது போகுமானால், நாட்டின் அரசியல் சிக்கல் நிறைந்ததாகவே மாறிவிடும்.

06

## மாவையிடம் ஆசி பெற்று மாம்பழ சின்னத்தில் களமிறங்கிய தவராசா



இலங்கை தமிழரசுக் கட்சியின் ஜனநாயக பிரிவினருக்கு முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் கே.வி.தவராசா தலைமையிலான அணியினர் நேற்று முன்தினம் மாலை மாவை சேனாதிராஜாவை அவரது

06

## கொழும்பில் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான மரங்கள்



கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் ஆபத்தான மரங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் பத்ராணி ஜயவர்த்தன தெரிவித்தார். ஆபத்தான மரங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்ற கொழும்பு மாநகர சபையின் மூன்று விசேட குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

06

## யாழில் ஊடகவியலாளர் மீது சரமாரித் தாக்குதல்


### பணி முடிந்து வீடு திரும்புகையில் சம்பவம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் மீது அடையாளம் தெரியாத இருவர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் நேற்று முன்தினம் மாலை (11) இடம்பெற்றுள்ளது. ஊடகவியலாளர் தனது பணி

06



# ரத்தன் டாடா

# இந்தியர்களின் இதயம் கவர்ந்த தொழிலதிபரானது எப்படி?

பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடாவின் மறைவு தேசத்தையே கலங்கச் செய்துள்ளது. அவரது மறைவுச் செய்தியை அறிந்து தொழில் துறையினர் மட்டுமல்லாது அனைத்து தரப்பு மக்களும் வருத்தம் அடைந்துள்ளனர். தொழிலதிபரான அவர் இந்தியர்களின் இதயங்களை வென்றது எப்படி?.

கடந்த புதனன்று மாலை மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் 86 வயதான ரத்தன் டாடா அனுமதிக்கப்பட்டதாக தகவல் வெளியானது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, 'வழக்கமான மருத்துவ பரிசோதனைதான்' என தனது உடல் நிலை இற்றைப்படுத்தல்களை அவரே கொடுத்திருந்தார். இந்தச் சூழலில்தான் புதன்கிழமை பின்னிரவு அவர் காலமானார். வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவு அவர் உயிரிழக்க காரணமாகியது.

டாடா குழுமத் தலைவராக இருந்து, அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா. மும்பையில் புகழும் வளமும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர். டாடா குழும நிறுவனர் ஜாம்ஷெட்ஜி டாடாவின் கொள்ளுப் பேரன். 1962இல் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டமைப்புப் பொறியியலில் பி.எஸ்சி. பட்டம், 1975இல் ஹார்வர்டு வணிகக் கல்லூரியில் உயர் முகாமைத்துவப் பட்டம் பெற்றார்.

1962இல் டாடா குழுமத்தில் இணைந்தார். 1971இல் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த தி நேஷனல் ரேடியோ அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி நிறுவனத்தின் (Nelco) பொறுப்பு இயக்குநராக பொறுப்பேற்றார்.

இவரது ஆலோசனைகளால் நெல்கோ மீண்டது. 1991ஆம் ஆண்டு ஜே.ஆர்.டி.டாடாவிடம் இருந்து டாடா குழுமத் தலைவர் பொறுப்பை ஏற்றார். பல புதிய திட்டங்களைப் புகுத்தி நிறுவனத்தின் வருமானத்தை 10 மடங்கு உயர்த்தினார். கோரஸ், ஜாகுவார், லேண்ட் ரோவர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களை டாடா குழுமம் வாங்கியது.

பங்குச் சந்தையில் மிக அதிக சந்தை முதலீடு கொண்டதாக டாடா குழுமம் திகழ்கிறது. இவரது வழிகாட்டுதலில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் பொது நிறுவனமானது. நியூயோர்க் பங்குச் சந்தையிலும் பட்டியலிடப்பட்டது.

நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு பைக்கில் 4 பேராக கஷ்டப்பட்டுப் போவதைப் பார்க்கும் போதெல்லாம், குறைந்த விலையில் சிறிய கார் தயாரிக்க வேண்டும் என்ற உந்துதல் இவரிடம் ஏற்பட்டது. இந்த கனவு, 'டாடா இண்டிகா' வடிவில் 1998இல் நிஜமானது. உலகிலேயே மலிவாக ரூ. 1 லட்சத்துக்கு கார் வெளியிடுவதாக அறிவித்தார். 'டாடா நானோ' கார் 2008இல் உற்பத்தியாகியபோது அதன் செலவு அதிகரித்துவிட்டது. ஆனாலும், விலையை உயர்த்த மறுத்துவிட்டார்.

இந்தியாவின் மோட்டார் வாகனத் தொழிற்துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படுத்திய தொழிலதிபர் இவர். பிரதமரின் வணிகம் மற்றும் தொழில்கள் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்தவர். பல்வேறு வெளிநாட்டு அறக்கட்டளைகளுக்கு அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தவர். பில்கேட்ஸ் நிறுவனத்தின் இந்திய எய்ட்ஸ் திட்டக் குழுவிலும் இருந்தவர்.

பத்மபூஷண், பத்மவிபூஷண், நற்பணிகளுக்கான கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின் கௌரவ நைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கௌரவங்களைப் பெற்றுள்ளார். டைம் இதழ் வெளியிட்ட உலகின் செல்வாக்கு படைத்த 100 பேர் பட்டியல் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம்பெற்றவர்.

2012 வரை டாடா குழுமத் தலைவராக இருந்த இவர் தற்போது டாடா குழும அறக்கட்டளைகளின் தலைவராக இருந்து வழிநடத்தியவர். 'ரிஸ்க் எடுக்காமல் இருப்பதுதான் பெரிய ரிஸ்க்' என தனது சக்சஸ் மந்திரம் குறித்து அவர் சொல்வார். அதை அவர் வாழ்வின் இறுதிவரை தொடர்ந்தார்.

இன்று இந்தியாவில் அதிகமானவர்கள் பயன்படுத்தி வரும் பேடிஎம், லென்ஸ்கார்ட், ஓலா உள்ளிட்ட 50 ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் முதலீடு செய்தவர்.

கடந்த 2021இல் ரத்தன் டாடாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டுமென சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்தபோது, அதை தவிர்க்குமாறு தனது பதிவின் மூலம் கேட்டுக் கொண்டார். 'விருதுகளை காட்டிலும் இந்தியனாக இருப்பதே எனது அதிர்ஷ்டம்' என அப்போது அவர் சொல்லி இருந்தார்.

இந்திய வீதிகளில் பயணிக்கும் ஒவ்வொருவரும் டாடா நிறுவன வாகனங்களை கடந்தே பயணிக்க வேண்டி உள்ளது. அது தனது தொழில் சாம்ராஜ்யம் மூலம் மக்களுடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு.

வழக்கமாக தொழிலதிபர்கள் தான் உண்டு, தன் தொழில் உண்டு என்றுதான் இயங்குவார்கள். பெரும்பாலான தொழிலதிபர்களின் ஒவ்வொரு நகர்வும் தொழில் ரீதியானதாகவே இருக்கும். ஆனால், ரத்தன் டாடா அதற்கு விதிவிலக்கு. தொழில் துறையையும் கடந்து தன் ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

அவரது நோக்கமும் செயலும் அப்படி இருந்து. IIFL Wealth Hurun India Rich List 2022 பட்டியலில் இந்திய பணக்காரர்களில் 421ஆவது இடம் பிடித்திருந்தார்.

'டாடா டிரஸ்ட்ஸ்' மூலம் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் ஆரோக்கியம், மருத்துவம், கிராமப்புற மேம்பாடு மற்றும் வாழ்க்கை மேம்பாடு சார்ந்த திட்டங்களுக்கு ஆதரவு தந்தவர். இதில் டாடா குழும பங்குதாரர்களின் பங்கும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் முக்கிய தொண்டு நிறுவனங்களில் டாடா டிரஸ்ட்ஸ் உள்ளது.

கொரோனா பேரிடரின்போது சுமார் 500 கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கிய கொடை உள்ளம் படைத்தவர். தான் படித்த ஹார்வர்ட் பிசினஸ் ஸ்கூலில் பிரத்தியேக மையம் நிறுவ 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியவர்.

கடந்த 2008இல் மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மறுவாழ்வுக்காக 'தாஜ் பொது சேவை நல அறக்கட்டளை'யை தொடங்கினார். பல்வேறு தருணங்களில் அவரது சமூகப் பணிக்காக புகழ்ந்து கொண்டாடப்பட்டவர் (கொண்டாடப்படுவார்). முக்கியமாக அவரை அனைவரும் எளிதில் அணுக முடியும். அந்த வகையில் தனது இயக்கத்தை அவர் கொண்டிருந்தார்.

கடந்த 2021இல் இரண்டு ஆண்டு காலம் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த முன்னாள் ஊழியரை பார்க்க மும்பையிலிருந்து புனேவுக்கு பயணம் செய்து நலம் விசாரித்தார். அவரது அந்த உன்னதச் செயலைக் கண்டுக்கு சமூக வலைதளத்தில் நெட்டிசன்கள் போற்றியிருந்தனர்.

பிராணிகள் நல ஆர்வலரான அவருக்கு நாய்கள் என்றால் அதிகம் பிடிக்கும். அதன் காரணமாகவே மும்பையில் உள்ள டாடா குழுமத்தின் தலைமை அலுவலகத்தில் தெரு நாய்களுக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள நாய்களை பராமரிக்க ஒரு குழுவும் உள்ளது.

அது மட்டுமல்லாது கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர், 'பருவமழைக் காலத்தில் வீதியில் நிறுத்தும் கார்களை ஸ்டார்ட் செய்வதற்கு முன் அதன் கீழே ஏதேனும் விலங்குகள் உள்ளனவா என்பதை பார்க்க வேண்டும். இதன் மூலம் வீடற்ற வாயில்லா ஜீவன்களுக்கு காயம் ஏற்படுவதை தவிர்க்கலாம்' என சமூக வலைதளத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நாய்கள் மீதான நேசத்தின் ஊடாக தனது உதவியாளர் சாந்தனு நாயுடுவின் அறிமுகம் அவருக்கு கிடைத்தது. தெரு நாய்களுக்கு ஒளிரும் கழுத்து பட்டையை அணிய செய்யும் 'Motopaws' என்ற ஸ்டார்ட்அப் நிறுவனத்துக்கு நிதி திரட்டும் முயற்சியில் சாந்தனு ஈடுபட்ட போதுதான் ரத்தன் டாடாவை சந்தித்தார், பின்னர் அவரது உதவியாளர் ஆனார்.

மூத்த குடிமக்களுக்கு உதவும் உறுதுணை (Companionship) சேவையை வழங்கி வரும் 'Goodfellows' ஸ்டார்ட்அப் நிறுவனத்தில் கடந்த 2022இல் அவர் முதலீடு செய்தார். இதை சாந்தனு நாயுடு நிறுவியது குறிப்பிடத்தக்கது. இப்படியாக அவரது ஒவ்வொரு செயலும் சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பு உள்ளங்களையும் ஈர்த்தது. அதன் காரணமாகவே 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய தேசத்தில் கொண்டாடப்படும் தொழிலதிபர்களில் முதன்மையானவராக உள்ளார்.

— கனக சூரியர்...



# மட்டு. மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை பிளவுபடுத்த முயற்சி

## முன்னாள் அமைச்சர் பஸீர் சேகுதாவுத்



முஸ்லிம் மக்கள் மத்தியில் பல்வேறு அரசியல் தலைமைகள் உள்ளூராட்சி மன்றத்திலிருந்து பாராளுமன்றம் வரைக்கும் அங்கம்வகித்து செயற்பட்டு வருகின்றபோதிலும் அவ்வப்போது, ஆங்காங்கே அபிவிருத்திகள் நடைபெற்றாலும், இன்னும் அம் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமலுள்ளதாக, மட்டு. மாவட்டத்தில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சீரேஷ்ட அரசியல்வாதியும் அக்கூட்டமைப்பின் தலைவருமான பஸீர் சேகுதாவுத் தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இதனை தெரிவித்தார். அந்த நேர்காணலின் முழுவிபரம் வருமாறு :

***கேள்வி : தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் சுயேச்சை குழுவாக களமிறங்கி பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொள்ளலாம் என நினைக்கின்றீர்களா?***

பதில் : எந்த சுயேச்சைக் குழுவுக்காவது, மக்கள் மத்தியில் செல்வாக்கும், நற்பெயருமுள்ள வேட்பாளர்கள் அமைந்திருந்தால் வெற்றிபெற வாய்ப்புகள் உண்டு.

***கேள்வி : தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் பிரிந்து சென்று, தனித்தனியாக தேர்தலில் களமிறங்குவதனால் கட்சிகளின் இருப்பு எதிர்காலத்தில் கேள்விக்குறியாக்கப்படும் என நீங்கள் நினைக்கின்றீர்களா? இது ஏனைய கட்சிகளுக்கு சாதகமாக அமையும் எனக் கருதலாமா?***

பதில் : இனமாக, சமூகமாக, கட்சியாக பிரிந்துச்சென்று தேர்தலில் மாத்திரமல்ல, எந்தவொரு பொது வேலைத் திட்டத்திலும் களம் இறங்குவது எவ்வித சாதகமான முடிவையும் தரப்போவதில்லை.

கட்சிகளின் இருப்பு மாத்திரமல்ல, சமூக, அரசியல் இருப்பும் மக்கள் குரலும் நசுக்கப்படும். இது நிச்சயமாக தேசிய கட்சிகளுக்கு சாதகமாக அமையும்.

***கேள்வி : தென்னிலங்கையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக அரசியல் ரீதியில் தெளிவடைந்திருப்பதாக கருதப்படுகின்றது. இந்நிலையில் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பிரிந்துசென்று தனித்தனியாக தேர்தலை சந்திப்பதால் அவர்கள் மத்தியில் கிடைக்கப்பெறும் பாராளுமன்ற ஆசனங்கள் குறைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் முஸ்லிம் கட்சிகள் ஒற்றுமையாக களம் இறங்குவதற்கு சாத்தியங்கள் இருக்கின்றதா?***

பதில் : அண்மையில் ஏறாவூர் பாடசாலையொன்றில் நிகழ்ந்த இமாம் கல்வி பவுண்டேஷன் நடத்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோது, அனைத்து முஸ்லிம், இலங்கை தமிழ், மலையக தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைத்து தேர்தலில் களமிறங்குமாறு பகிரங்கமாக நான் அறைகூவல் விடுத்திருந்தேன். இவ்வாறு நடந்திருந்தால் தேசிய பட்டியல் உட்பட ஆசனங்களில் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டிருக்கும். அது மாத்திரமன்றி இந்த கூட்டு, பாராளுமன்றத்தில் தீர்மானிக்கும் சக்தியாக மிளிர்ந்திருக்கும். நான், ஈரோஸ் இயக்கத்திலும், உறுப்பினராக இருந்தபோது கைதுசெய்யப்பட்டு நான்காம் மாடி வரையில் கொண்டுச்செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன்.

வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் என அனைத்து பகுதிகளிலும் மக்கள் மத்தியில் பல திட்டங்களை செய்துள்ளேன். இந்த அனுபவத்தினாலேயே மேற்கூறிய கருத்தை பகிரங்கமாக அறிவித்திருந்தேன். தற்போது சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்புள்ளது.

### மதத்தால் இந்துவானாலும், மாண்பில் முஸ்லிம் என்றாலும், வேதம் பயிலும் கிறிஸ்தவரென்றாலும் ஈழத்தவர், ஈழத்தவரே!

***கேள்வி : நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி அதற்கு ஆதரவளிக்குமா? புதிய அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கான எண்ணம் உள்ளதா?***

பதில் : பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைபெற்று ஆட்சிமைக்குமாயின், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியின் உச்சபீடம் கூடி எடுக்கும் முடிவின் அடிப்படையிலேயே நான் செயற்படுவேன்.

### பாராளுமன்றத் தேர்தலில் தே.ம.ச பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்தால், எனது கட்சியின் உச்சபீடத்தின் முடிவின் அடிப்படையிலேயே செயற்படுவேன்.

***கேள்வி : தென்னிலங்கை அரசியலில் பல சிரேஷ்ட அரசியல்வாதிகள் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் களமிறங்குவதிலிருந்து விலகி இருக்கின்றார்கள். மாறாக தற்போது இளைஞர் யுவதிகளுக்கும் புதியவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கவேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றார்கள். இது பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?***

பதில் : தென்னிலங்கை சிரேஷ்ட அரசியல்வாதிகள் இம்முறை களமிறங்காமல் இருப்பது அக்கட்சிகள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளின் அச்சத்தினால் ஆகும். முன்னைய காலங்களில் பிள்ளைகள் தாய், தந்தையர்களின் சொற்களுக்கு செவிசாய்த்து செயற்பட்டார்கள். ஆனால், தற்போதைய இளைஞர் யுவதிகளின் சொற்களுக்கு பெற்றோர்கள் செவிசாய்க்கும் நிலைமை உருவாகியுள்ளது. இதற்கு, தற்கால சமூக ஊடகங்களின் பயன்பாடு அதிகரிப்பு, இலத்திரனியல் ஊடகங்களின் ஆதிக்கம், வாசிப்பில் ஈடுபாடுயின்மையே காரணமாக அமைந்துள்ளது.

### தென்னிலங்கை சிரேஷ்ட அரசியல்வாதிகள் களமிறங்காமலிருப்பது, அக்கட்சிகள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளின் அச்சமாகும்

***கேள்வி : நாட்டை தற்போது பொறுப்பேற்றிருக்கின்ற புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமைத்துவத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?***

பதில் : புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது கட்சியை திறம்பட நடத்திக் காட்டியுள்ளார். பிறப்பில் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர், கிராமிய பாடசாலையில் படித்து விஞ்ஞான பீடத்தில் பல்கலைக்கழக கற்கையை பூர்த்தி செய்தவர், கடின உழைப்பாளி, மக்கள் மத்தியில் வேலைத்திட்டங்களை முன்னிறுத்தி நடத்தியவர். ஆகவே, அவர் நாட்டுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவார் என நம்புகிறேன். காலம் பதில் சொல்லும்.

### மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்களை பிளவுபடுத்துவதற்கான அரசியலை 80 களிலிருந்து செய்து வருகின்றனர்.

### புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நாட்டுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவார்

***கேள்வி : மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள்.***

***ஆனால், இவ்விரு இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதனால் அடிமட்ட மக்கள் மத்தியில் இன ஒற்றுமையில் விரிசல் ஏற்பட்டுவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்கு உங்களிடம் ஏதேனும் ஆலோசனை உள்ளதா??***

(20ஆம் பக்கம் பார்க்க...)

நேர்கண்டவர் : வ.சக்திவேல்...✍





'நாட்டியதரங்கிணி' கலாசூரி 'ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் 48 ஆண்டு கால பரதநாட்டியப் பணியை கொண்டாடும் வகையில் கொழும்பு நாட்டிய கலா மந்திர் வழங்கும் 'நாட்டியதரங்கிணி' நடன நிகழ்ச்சி அக்டோபர் மாதம் 17ஆம் திகதி மாலை 5.30க்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில், பல இளம் மாணவர்களும், சிரேஷ்ட கலைஞர்களும் இணைந்து தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக இது அமையவிருக்கின்றது. இம்முறை நாட்டிய தரங்கிணி நடன நிகழ்வில் 'கிருஷ்ணா' என்னும் நாட்டிய நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. இந்திய தூதரகத்தின் விவேகானந்த கலாசார நிலையத்தின் பணிப்பாளர், பேராசிரியர் அங்குரன் டத்தா பிரதம அதிதியாகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பிரபாகரன் குமாரரத்தினம் மற்றும் செஞ்சொற்செல்வர்' 'கலைமாமணி' எஸ். விஸ்வநாதன் (சிரேஷ்ட ஊடகவியலாளர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகள் முன்னாள் பணிப்பாளர்) விழாவின் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.




# தேசிய மக்கள் சக்தியின் வெற்றியும் புதிய அரசியல் கலாசாரமும்

அதிசயம் ஆனால் உண்மை. இத்தனை பேரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையாம். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றியின் எதிரொலி எதிர்பாராத கோணங்களில்... இவர்களுள் 3 முன்னாள் ஜனாதிபதிகள் (மஹிந்த, மைத்திரி, ரணில்) அடக்கம். சம்பிக்கவும் விமல் வீரவங்சவும் கேட்பதில்லையாம்.

அத்தோடு மாவை சேனாதிராஜாவும், C.V.விக்னேஸ்வரனும் தாமாக ஒதுங்கியிருக்கிறார்கள். அலி சப்ரி, டலஸ், ஷெஹான், நாலக கொடஹேவா, லக்ஷ்மன் கிரியெல்ல, சமல் ராஜபக்ஷ, பந்துல, காமினி லொகுகே, ஜோன் செனவிரத்ன... இப்படி நீள்கிறது பட்டியல்.




## சிவசக்தி நர்த்தனஷேத்திராவின் நடன நிகழ்வு இன்று



உலக சைவ ஆராய்ச்சி நிறுவனமும் கொழும்பு விவேகானந்த சபையும் இணைந்து நடத்தும் கொலுவுடன் கோலாகலம் என்ற நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வாக நாட்டியாஞ்சலி என்ற நிகழ்வு இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் ஒன்பது நடன ஆசிரியர்களின் மாணவிகளின் நடன நிகழ்வுகள் மேடையேறவுள்ளன. திருமதி நதீகா சந்திரன் நடத்தி வரும் சிவசக்தி நர்த்தனஷேத்திராவின் மாணவிகளின் நடனம் இங்கு மேடையேறவுள்ளன. இவர் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கொழும்பு அளுத்மாவத்தையில் உள்ள சிவசக்தி நர்த்தனஷேத்திராவில் இந்த நடன வகுப்புகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

IFSLS

வட்டி இல்லா மாணவர் கடன் திட்டம்

(2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்)

- 8ஆவது கட்டத்திற்காக மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல் இறுதித் திகதி 2024 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- விண்ணப்பங்களை அனுப்புவதற்கு www.studentloans.mohe.gov.lk என்ற முகவரிக்கு பிரவேசிக்கவும்

செயலாளர்
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

# மாணவர்களின் அச்சுறுத்தும் தொடர் மரணங்கள்!



## பிள்ளைகளின் உள ஆரோக்கியத்தில் எந்தளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறோம்?

கொழும்பிலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி பயின்ற 16 வயது மாணவி 356 மீற்றர் உயரம் கொண்ட தாமரை கோபுரத்தின் பார்வையாளர் பகுதியிலிருந்து குதித்து அண்மையில் தற்கொலை செய்து கொண்டார். இதனையடுத்து இதுதொடர்பில் பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் மிகவும் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பு 03 ஐச் சேர்ந்த மாணவியொருவரும் இன்னுமொரு மாணவனும் கடந்த ஜூலை 2ஆம் திகதி கொம்பனி வீதியிலுள்ள அடுக்கு மாடி குடியிருப்பின் 67ஆவது மாடியிலிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டது அனேகருக்கு நினைவிருக்கும். சில தினங்களுக்கு முன்னர் தாமரைக் கோபுரத்தில் இருந்து உயிரை மாய்த்தவர் இந்த மாணவர்களின் நெருங்கிய தோழி என்பது பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த இவர் சம்பவத்தன்று பெற்றோரிடம் மாலையில் சங்கீத வகுப்புக்கு செல்வதாகவே கூறிச் சென்றுள்ளார். மாணவியின் தந்தை, காலை 7.10 அளவில் அவரை வழமை போல் பாடசாலையில் விட்டுச் சென்றுள்ளார். அதன் பின்னர் மதியம் 2.30 மணியளவில் மதிய உணவை கொண்டு வந்து கொடுத்துள்ளார். உணவுப் பார்சலை தந்தையிடமிருந்து பெற நண்பியொருவருடன் பாடசாலை வாசலுக்கு வந்துள்ளார் மாணவி.

ஆனால் சங்கீத வகுப்பில் கலந்து கொள்வதாக கூறி சாப்பாட்டுப் பார்சலை தந்தையிடம் வாங்கிச் சென்ற மாணவி, அதிக நேரம் பாடசாலையில் இருக்கவில்லை.

பாடசாலையிலிருந்து சுமார் இருநூறு மீற்றர் தொலைவிலுள்ள தாமரை கோபுரத்துக்கு முச்சக்கரவண்டியில் 3.30 மணியளவில் சென்றுள்ளார். சர்வதேசப் பாடசாலைச் சீருடை அணிந்து, பாடசாலை பையுடன் தாமரை கோபுரத்தில் நுழைந்தார்.

ஆனால் அவர் தாமரை கோபுரத்தின் பார்வையாளர் தளத்துக்கு வந்த போது பாடசாலைச் சீருடையுடன் வரவில்லை. இடையில் எங்கோ அவர் ஆடைகளை மாற்றியிருக்கிறார்.

கொம்பனி வீதியிலுள்ள அடுக்கு மாடி குடியிருப்பின் 67ஆவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட மாணவர்கள் இருவரும் இதே பாணியிலேயே சீருடை அணிந்தவாறு அடுக்குமாடி குடியிருப்புக்குள் நுழைந்து பின்னர், ஆடைகளை மாற்றிக்கொண்டு பாடசாலை பைகள், மொபைல் போன்கள் மற்றும் காலணிகளை வைத்துவிட்டு கட்டடத்திலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகெண்டனர்.

ஆனால், அவர்களின் தற்கொலை குறித்து தீவிரமான விசாரணை நடத்தப்படவில்லை.

கொம்பனி வீதி அடுக்குமாடி குடியிருப்பை விட, தாமரைக் கோபுரத்தின் பார்வையாளர் பகுதி அதிக உயரம் கூடிய பகுதியாக காணப்படுகின்ற போதிலும் அது அதன் 29 ஆவது தளமே. எனவே இந்த மாணவியின் தற்கொலைக்கும் கொம்பனிவீதி அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட இருமாணவர்களின் மரணங்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர்கள் விழுந்த இடமும் ஒரே மாதிரியாகவே உள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதேபோல் மாணவி தாமரை கோபுர வளாகத்துக்குள் தற்கொலை செய்துகொள்ளும் வரை சுமார் இருபது நிமிடங்கள் இருந்துள்ளார். அங்கிருந்து பார்த்தால் அம்மாணவியின் நண்பர்கள் குதித்து தற்கொலை செய்துகொண்ட கொம்பனி வீதி அடுக்குமாடி குடியிருப்பு நன்றாக தெரியும். அந்த திசையை நோக்கியே அவர் நின்றிருந்ததாகவும் சுமார் இரண்டு நிமிடங்கள் அதைப் பார்த்தபடி இருந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேபோல் பலமுறை கீழே குதிக்க முயன்றதாகவும் கூறப்படுகின்றது. தாமரைக் கோபுரத்தின் பார்யாளர் தளத்தைச் சுற்றியுள்ள உயரமான சுவர் பகுதியில் ஏற முடியாமல் போனமை



யால் முதல் முயற்சி தோல்வியடைந்தது.

அதன்பின்னர் மீண்டும் கொம்பனி வீதி அடுக்குமாடி குடியிருப்பை இரண்டாவது முறையாகப் பார்த்து விட்டு மீண்டும் முயற்சி செய்த போதும் அதுவும் தோல்வியில் முடிந்தது.

இறுதியாக, மாணவி தனது காலணிகளை கழற்றி வைத்துவிட்டு குதித்துள்ளார். இதன்மூலம் மாணவி நீண்டகாலமாக யோசித்த பின்னரே இச்செயலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மூன்றாவது மாடியின் திறந்த பகுதியில் தரையில் சடலத்தைக் கண்டதுமே மேலே இருந்து ஒருவர் விழுந்துள்ளமை அங்கிருந்தவர்களுக்கு தெரிவந்துள்ளது.

250 மீற்றருக்கும் அதிகமான உயரத்திலிருந்து கீழே விழுந்த அவளது உடல் எலும்பு முறிவுக்கு உட்பட்டு பலத்த சேதமடைந்திருந்தது.

இதனையடுத்தே இதுதொடர்பில் அங்கிருந்த நிர்வாகியொருவர் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

29ஆவது மாடியிலுள்ள பார்வையாளர் தளத்தில் மாணவியின் பை மற்றும் மொபைல் என்பன இருந்துள்ளன. அதில் சர்வதேச பாடசாலை பரீட்சை வினாத்தாள்கள் இருந்தன. அந்தக் கோப்பில் அவளது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அவளது அடையாளத்தைக் கண்டறிய சர்வதேசப் பாடசாலை அதிகாரிகளை பொலிஸார் தொடர்புகொண்டனர். அதுமட்டுமின்றி மாணவியின் தந்தையிடமிருந் து கையடக்க தொலைபேசிக்கு அழைப்பு வந்தது.

அந்த அழைப்புக்கு.பொலிஸ் அதிகாரியொருவர் பதிலளித்துள்ளார். அப்போது நேரம் சுமார் மாலை 4.55 மணியிருக்கும் மகளின் தொலைபேசியில் ஆணொருவரின் குரல் பதிலளிப்பதைக் கண்டு பதற்றமடைந்துள்ளார் தந்தை. மகள் பெரும் ஆபத்தில் உள்ளதாகவும் விரைவில் மருதானை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும் பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார்.

அதன்படியே அவர் மருதானை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுள்ளார். இப்போதே தனது மகள் தாமரை கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டமை தெரியவந்துள்ளது.

பை மற்றும் பாதணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை உரிமையாளரான மாணவியின் தந்தை, தனது மகளின் மரணம் தொடர்பில் யாரையும் நேரடியாகக் குற்றம்சாட்டவில்லை. மகள் சுறுசுறுப்பாக படித்துக்கொண்டிருந்ததாகவும் மன அழுத்தத்தில் இருந்ததற்கான எந்த அறிகுறியையும் வெளிகாட்டவில்லையெனவும் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த மாணவியின் குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள். மூத்த மகள் வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் மருத்துவம் கற்கிறார். இரண்டாம் வருட மருத்துவபீட மாணவி, உயிரிழந்த மாணவி குடும்பத்தில் இளையவர். லண்டன் பொதுத் தேர்வை எதிர்கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடந்த சில நாட்களாகப் பாடசாலைக்கு செல்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளார், ஆனால் மாணவி அதற்கான காரணத்தை பெற்றோரிடம் கூறவில்லை. ஆனால் நண்பர்களின் மரணத்திற்குப் பின்னர் அவர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

கொம்பனி வீதி அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்ட மாணவர்கள் இறப்பதற்கு முன்னர் அவளுடன் பேசிய பின்னரே இவ்வுலகிலிருந்து விடைபெற்றுள்ளதாகவும் தெரிவருகின்றது.

அதுமட்டுமின்றி மாணவி நவம்பர் 2022 முதல் மன அழுத்தத்திற்கு சிகிச்சை பெற்று வருவதாகவும், தனது இரு நண்பர்களின் மரணத்தினால் ஆழ்ந்த வேதனையில் இருந்ததாகவும் அவரது தந்தை தெரிவித்தார். மகள் பாடசாலைக்குச் செல்லும்போது, தேவையில்லாமல் பணம் கொடுப்பதில்லை என்றும். அவள் பயன்படுத்தும் மொபைல் போன், கம்பியூட்டர் என்பவற்றை அடிக்கடி தான் கண்காணித்ததாகவும் தந்தை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அவர் இறந்து 24 மணித்தியாலத்துக்குள் பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்து. இறுதிக் கிரியைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்புடன் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. குறைந்தபட்சம் அவரது பாடசாலை நண்பர்களுக்கு கூட இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

பாடசாலை மாணவர்கள் உயரமான இடங்களில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயற்சிப்பது இது முதல் தடவையல்ல என புலனாய்வு அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவரொருவர் ஹெவ்லொக் சிட்டி குடியிருப்பின் மேல் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். அவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரியவந்தது. அதனை தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் பிரபல கல்லூரி மாணவரொருவர் 2023 ஆம் ஆண்டு வீடியோ கேம்களுக்கு அடிமையாகி பாடசாலையின் மூன்று மாடி கட்டடத்திலிருந்து குதித்து தற்கொலைக்கு முயன்றார், ஆனால் அவர் இன்றும் உயிருடன் இருக்கிறார். இதுதொடர்பில் தேசிய மனநல நிறுவனத்தின் சிறப்பு மனநல மருத்துவர் விந்தியா விஜயபண்டாரா தெரிவிக்கையில்,

தற்கொலை என்பது ஒரு செயல். அப்படி ஒரு யோசனை வரும் ஒருவர் முதலில் அதைப் பற்றி திட்டமிட்டு பிறகு செயற்படுத்துகிறார். விரக்தி, மனச்சோர்வு போன்ற சூழ்நிலைகள் ஒருவரை வாழும் ஆசையை இழக்கச் செய்யும். மேலும் மது, போதைப் பொருள் போன்ற பழக்கங்களும் தற்கொலைப் போக்கை அதிகரிக்கும். சிலருடைய ஆளுமைப் பண்புகள், அதாவது ஒருவரிடம் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், வாழ்க்கையைப் பற்றிய அணுகுமுறை எதிர்மறையாக இருந்தால், பிரச்சினைகள் ஏற்படும்போது உயிரை மாய்த்துக் கொள்ள நினைக்கலாம்.

'நான் சோர்வாக இருக்கிறேன், நான் இறந்துவிடுவேன், வாழ விரும்பவில்லை" என்று யாராவது இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால், வழக்கமான தோற்றம் மாறிவிட்டால், அவர்கள் விரக்தியடைந்து மகிழ்ச்சியற்றவர்களாக இருந்தால் அவர்கள் தற்கொலை செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்று நினைக்கலாம்.

குறிப்பாக குழந்தைகள் விடயத்தில் நாம் அதிக அக்கறை காட்ட வேண்டும். குழந்தை பேசும் விதம் மற்றும் நடந்து கொள்ளும் விதம் வித்தியாசமாகவிருந்தால், நீங்கள் அதில் கவனம் செலுத்த வேண்டும். சில குழந்தைகள் எதுவும் பேச மாட்டார்கள். குறைந்தபட்சம் என்ன கேட்டாலும் பதில் சொல்வதில்லை. விரும்பிய காரியங்களைக் கூட செய்யாமல் ஒதுங்கி உட்கார்ந்திருந்தால், மனச்சோர்வடைந்தால், தனிப்பட்ட சுகாதாரத்தைப் பற்றி யோசிக்காமல் அசுத்தமாகவும் அழுக்காகவும் இருந்தால், அது ஒரு தீவிரமான நிலை. குழந்தையில் இதுபோன்ற நடத்தையை நீங்கள் கண்டால், நீங்கள் உடனடியாக ஒரு மருத்துவரை அணுக வேண்டும். ஒரு சிறப்பு மனநல மருத்துவரைப் பார்க்குமாறு அந்த மருத்துவர் பரிந்துரைத்தால், உடனடியாக அந்த ஆலோசனையைப் பின்பற்றுங்கள். தேசிய மனநல மருத்துவ மனையின் 24 மணி நேர 1926க்கு அழைத்து தேவையான ஆலோசனைகளைப் பெறலாம். அங்கு இரகசியம் பேணப்படும்.

குறிப்பாக 12 –15 வயது குழந்தைகள் மற்றும் 20 – 25 இளைஞர்கள் மத்தியில் தற்கொலை செய்து கொள்ளும் போக்கு அதிகமாக காணப்படுகின்றது.

மேலும், ஒருமுறை தற்கொலைக்கு முயற்சித்தவர்களிடம் தொடர்ந்து கவனம் தேவை. ஒரு நபர் வாழ்க்கையை வாழ முடியாது எனச் சோர்வடையும் போது அதை உணர்ந்து உதவுவது நம் அனைவரின் சமூகப் பொறுப்பாகும்.

2022 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டதிலிருந்து அக்டோபர் 6, 2024 வரை தாமரை கோபுரத்தைப் பார்க்க 2,251,868 உள்ளூர் பார்வையாளர்களும் 93,958 வெளிநாட்டுப் பார்வையாளர்களும் வந்துள்ளனர்.

விபத்துக்களை தவிர்க்கும் வகையில் கட்டடத்தின் கண்காணிப்பு அறையில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி சர்வதேச தரத்திற்கமைவாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மாணவியொருவர் கண்காணிப்பு அறையிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டமை தொடர்பில் நிர்வாகத்தினர் வருத்தம் தெரிவித்துள்ளனர்.



**வசந்தா அருள்ரட்ணம்...**

---




## காங்கிரஸ் — பா.ஜ.க

# வெற்றி தோல்வியில் மக்களின் மனநிலை என்ன?

இந்திய அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை உண்டாகிய ஹரியான, ஜம்மு – காஷ்மீர் மாநிலங்களில் நடைபெற்ற சட்ட மன்ற தேர்தலில் ஹரியானாவில் பா.ஜ.கவும். ஜம்மு – காஷ்மீரில் காங்கிரஸ் கூட்டணியும் வெற்றி பெற்றுள்ளன. ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் காங்கிரஸ் கூட்டணியே அதிக இடங்களைக் கைப்பற்றும் என்ற தேர்தலுக்கு முந்திய எதிர்பார்ப்பின்படி மக்கள் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

ஜம்மு – காஸ்மீரில் 10 ஆண்டுகளுக்கு பின் நடத்தப்பட்ட சட்டப்பேரவை தேர்தல் என்பதாலும். கடந்த 2019ஆம் ஆண்டில் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு இரு யூனியன் பிரதேசங்களாக (ஜம்மு – காஷ்மீர், லடாக்) பிரிக்கப்பட்டதற்கான முதல் சட்டப்பேரவை தேர்தல் என்பதாலும் அதன் முடிவுகள் குறித்து பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இங்கு காங்கிரஸ் தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணியாகவும் பா.ஜ.க, மக்கள் ஜனநாயக கட்சி (பிடிபி) ஆகியவை தனித்தும் போட்டியிட்டிருந்தன மொத்தம் 873 வேட்பாளர்கள்.

மொத்தமுள்ள 90 தொகுதிகளில் தேசிய மாநாட்டுக் கட்சி காங்கிரஸ் மார்க்சிஸ்ட் கூட்டணி 49 இடங்களில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதில் தேசிய மாநாட்டுக்கட்சி 42 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. பெரும்பான்மைக்கு நான்கு இடங்களே குறைவாகும். தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவர் ஒமர் அப்துல்லா, தான் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் (புத் காம், கந்தர் பால்) வெற்றி பெற்றுள்ளார். காங்கிரஸ் 6 இடங்களிலும் மார்க்சிஸ்ட் ஓரிடத்திலும் வென்றுள்ளன.

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பத்து வருடமாக ஆட்சியில் இருக்கும் பா.ஜ.கவை வீழ்த்தி காங்கிரஸ் வெற்றி பெறும் என்று எதிர்பார்த்த நிலையில் பா.ஜ.க தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸின் பிரிவினைவாத அரசியலை ஹைரியானா மக்கள் நிராகரித்து விட்டார்கள். மக்களை ஜாதி, மத ரீதியாகப் பிரித்து தேர்தலில் வெற்றி பெற காங்கிரஸ் முயற்சித்து வந்தது. ஆனால், கடந்த பத்தாண்டு கால பா.ஜ.க ஆட்சியின் வளர்ச்சித் திட்டங்களும் கொள்கைகளும் தொடர வேண்டும் என்று மக்கள் முடிவு செய்துள்ளனர் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தனது கருத்தை எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு ராகுல் காந்தியின் செயல்பாட்டின் மீதும், அவரது பேச்சிலும் இருந்த தெளிவும் அணுகுமுறையும் இனி இந்தியாவின் எதிர்காலம் ராகுல் காந்தி தலைமையில் தான் என்ற எதிர்பார்ப்பை உண்டாக்கிய நிலையில் ஹரியானா தேர்தல் முடிவு அந்த நம்பிக்கையை பொய்யாக்கிவிடுமோ ? என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தேர்தலில் வெற்றி தோல்வி



என்பது இயல்பான ஒன்று தான் என்றாலும் ஹரியானா தேர்தலில் காங்கிரஸின் தோல்வி பல கேள்விகளை எழுப்புகிறது.

ஹரியானாவில் 90 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடந்த தேர்தலில் பா.ஜ.க 48 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கிறது காங்கிரஸ் 37 இடங்களுடன் இரண்டாமிடம் பெற்றுள்ளது. அபய் சிங் சௌதாலாவின் இந்திய தேசிய லோக் தளம் கட்சிக்கு 2 இடங்களிலும் சுயேட்சைகள் 3 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 90 இடங்களில் போட்டியிட்ட ஆம் ஆத்மி கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

காங்கிரஸின் தோல்விக்கு கூட்டணி பலம் இல்லை, வேட்பாளர்கள் தேர்வில் சரியானவர்களை தேர்வு செய்யவில்லை. பரப்புரையிலும் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கவேண்டும் என்ற குற்றச்சாட்டுகள் இருந்தாலும் 37 தொகுதிகளில் மக்கள் காங்கிரஸ் மீது நம்பிக்கை வைத்து வாங்களித்துள்ளதையும் அவதானிக்க வேண்டியுள்ளது. அதேநேரத்தில் அடுத்து வரும் தேர்தல்களில் இன்னும் கூடுதல் கவனத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற படிப்பினையையும் கொடுத்திருக்கிறது. ஹரியானா சட்டப்பேரவை தேர்தல் தோல்வியை காங்கிரஸ் ஆராய்ந்து இனி வரும் தேர்தல்களில் இந்தியா கூட்டணி கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா அறிவுறுத்தியுள்ளதையும் காங்கிரஸ் பரிசீலனை செய்ய வேண்டும்.

மக்களவையில் காங்கிரசின் சிறப்பான செயல்பாட்டிற்குப் பிறகு அக்கட்சி மீதான எதிர்பார்ப்புகள் அதிகரித்திருந்தன, ஆனால், ஹரியானாவில் அந்த எதிர்பார்ப்புகளை ராகுல் காந்தியால் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால், அதைச் செய்ய முடியவில்லை என்பதற்காக எல்லாமே முடிந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. அரசியல் ஒரு தேர்தலில் தோல்வி என்பது முடிவல்ல, அது புதிய தொடக்கம்.

காங்கிரஸ் வலுப்பெற்றுவிட்டது, என்ற எண்ணம் இப்போது தகர்ந்து விட்டது. நேரடிப் போட்டியில் பா.ஜ.கவுக்கு முன்னால் காங்கிரஸ் பலவீனமாக இருப்பதாக மக்கள் மீண்டும் கூறத் தொடங்கியுள்ளனர். இருப்பினும் மகராஷ்டிரா தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றால் இந்த பிம்பம் மேம்படும் என்று மூத்த பத்திரிகையாளர் வினோத் ஷர்மா கூறியிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஜம்மு – காஷ்மிர் தேர்தலும் காங்கிரஸ் கட்சிக்கு முழுயையான வெற்றி என்று சொல்லிவிட முடியாது. காங்கிரசுக்கு வலுவான பிடி உள்ள ஜம்மு பிராந்தியத்தில் அக்கட்சி ஒரேயொரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இதற்குக் காரணம் காங்கிரசின் மோசமான செயல்பாடே என்று விமர்சிக்கப்படுகிறது.

தவறான வேட்பாளர்களின் தேர்வு. அல்லது ஆட்சிக்கு எதிரான அலைமீது கவனம் செலுத்தாதது, வெற்றி வாய்ப்பிருந்தும் அதைச் சரியாக பயன்படுத்தத் தவறியது என்று இவையனைத்தும் காங்கிரசின் மோசமான செயல்பாட்டிற்குக் காரணம் என்பது கருத்தாக இருந்தாலும், முழுப்பழியையும் ராகுல் காந்தி மீது சுமத்த முடியாது, என்று பத்திரிகையாளர் பஸீன் கூறியிருப்பதும், நியாமாக இருக்கிறது.

காங்கிரசில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும், அவற்றை முழுமையாக ராகுல் காந்தி மீதே சுமத்த முடியாது. அவர் கட்சியை வழிநடத்துகிறார். அவர் ஒரு நட்சத்திர பிரசாரகரும் கூட. எனவே அவர் இல்லாத இடங்களில், அந்தந்த மாநில கட்சியின் பொறுப்பாளர்களே கட்சியை பலப்படுத்தி, மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எல்லா தோல்விகளுக்கும் ராகுல் காந்தி மீதே பழி போடுவதும் முறையல்ல.

ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க தோல்வியடைந்திருந்தாலும் அதன்வாக்கு சதவீதம் கூடியிருக்கிறது. 29 இடங்களை பா.ஜ.க கைப்பற்றியுள்ளது. பா.ஜ.வின் மக்கள் விரோத கொள்கைகள், உரிமை மீறல், ஒடுக்குமுறை மற்றும் அரசியல் அமைப்புகளை தவறாகப் பயன்படுதல் என்று பா.ஜ.க மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டாலும் 29 இடங்களில் அக்கட்சியை மக்கள் வரவேற்றுள்ளனர். இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதும் முக்கியமானது.

ஹரியானா தோல்விக்குப் பிறகு கங்கிரஸ் மீதான இந்தியா கூட்டணியின் நம்பிக்கை குறையலாம். தனது சொந்த உள் முரண்பாடுகளால் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. வெற்றி பெற வேண்டிய தேர்தலில் தோல்வியடைந்திருப்பது, இது காங்கிரசின் தன்னம்பிக்கையின் மீது கேள்விகளை எழுப்புகிறது. இதனால் காங்கிரஸ் மீது இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நம்பிக்கையும் குறையும் என்று பத்திரிகையாளர் வினோத் ஷர்மாவின் கருத்தை காங்கிரஸ் உற்று நோக்க வேணடும்.

இங்கே எதுவும் நிலையானது இல்லை. அதுவும் அரசியலில் மக்களின் மன நிலையில் மாற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். வெற்றி யாருக்கு என்று உறுதியாக சொல்ல முடியாது என்றாலும் வெற்றி பெறுவதற்கான சூழலை உருவாக்க வேண்டியது, கட்சிகளிடத்தில் இருக்கிறது. இந்திய அரசியல் காங்கிரஸ் பா.ஜ.க இரண்டு கட்சிகளையும் மக்கள் சம அளவில் வைத்துப் பார்க்கிறார்கள் என்பதையே அண்மைக்கால தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

# எமக்கு வாக்களிக்காதவர்களின் ஆதரவை பெறுவதற்காக கூடுதல் கவனம் செலுத்துகின்றோம்!



## தேசிய மக்கள் சக்தியின் அரசியல்சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த அளித்த பேட்டி

**ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காதவர்களின் ஆதரவை பொதுத்தேர்தலில் பெற்றுக் கொள்வது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் அரசியல்சபை உறுப்பினரும், கண்டி மாவட்ட தேர்தல் வேட்பாளருமான கே.டி.லால்காந்த தெரிவித்தார். பொதுத்தேர்தலுக்கான கட்சியின் ஏற்பாடுகள் மற்றும் தங்களது வெற்றிவாய்ப்புகள் குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசாநாயக்கவுக்கு மக்கள் வாக்களித்திருந்தாலும், தேசிய மக்கள் சக்தியினால் பொதுத்தேர்தலில் மாவட்டங்களை வெற்றிகொள்ள முடியாது என சிலர் கூறுகின்றனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: மூன்று சதவீத வாக்கு வங்கியைக் கொண்ட கட்சியால் வெற்றிகொள்ள முடியாது என்று கூறியபோதும், அதனை நாம் வெற்றி கொண்டு காண்பித்துள்ளோம். நாம் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியம் எம்மைவிட்டு ஓடும் என்று பயம் காட்டினார்கள். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. தோற்றவர்கள் புதியவற்றை உருவாக்குகிறார்கள். ஜனாதிபதியின் வெற்றியின் பின்னர் மக்கள் ஒன்றுதிரண்டு வருகின்றனர். மக்கள் பெருமளவில் எங்களுடன் இணைந்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எமது வேலைத்திட்டங்கள் காரணமாக எம்முடன் தொடர்பில்லாத மக்களும் எம்முடன் இணைந்து வருகின்றனர்.

**கே: உங்கள் கட்சியால் பொதுத்தேர்தலில் வெற்றி பெற முடியும் என்கிறீர்களா?**

பதில்: நிச்சயமாக முடியும். தேர்தல் பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். ஒரு பெரிய வெற்றியை மிக எளிதாக அடைய முடியும் என்பது மிகத் தெளிவாக உள்ளது.

**கே: பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல இடமளிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் கூறி வருகின்றனர். தேசிய மக்கள் சக்தியின் வெற்றி நிச்சயம் இல்லையென்பதாலா அவர்கள் இவ்வாறு கூறி வருகின்றனர்?**

பதில்: அவர்கள் தமது தோல்வியையிட்டு வெட்கப்படுகிறார்கள். சில அரசியல்வாதிகளின் பெண்களும் இப்போது வெட்கப்படுகிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் இப்போது அவர்களின் நாடகங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதனை அவர்களால் செய்ய முடியவில்லையென்பதே சோகக் கதையாகும். இவற்றைப் பார்த்து சிரிப்பதைத் தவிர வேறு என்ன செய்வது?

**கே: ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், சில மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்குகள் அதிகமாக இருப்பதாக நாங்களும் உணர்கிறோம். இதுகுறித்து உங்களது கருத்து என்ன?**

பதில்: அது உண்மை. அத்தகைய மாகாணங்களுடன் மீண்டும் நாம் தொடர்புகொள்ள வேண்டும். சில பகுதிகளில் எங்களது வாக்கு வீதத்தில் சிறிய குறைவு இருப்பதை நாங்கள் கவனித்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, குறைவான இடங்களில் நாங்கள் சிறப்பு கவனத்துடன் வேலை செய்வோம்.

**கே: கடந்த காலத்தில் உங்கள் அரசியல் கூட்டங்களில் காணப்பட்ட மக்கள் கூட்டம் தேர்தல் முடிவுகளில் பிரதிபலித்திருக்கவில்லை. ஆனால் இம்முறை 57 இலட்சம் வாக்குகளைப் பெற்றது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பதில்: எங்களுடைய அரசியல் திட்டங்களைப் பற்றியும், எங்களைப் பற்றியும் மக்களிடத்தில் ஏற்பட்ட நம்பிக்கையினால் இந்த முடிவுகளைப் பெற்றுள்ளோம். மற்றைய அனைத்து அரசியல் சக்திகளின் தோல்வி, மக்களின் மற்றைய அரசியல்வாதிகள் மீதான வெறுப்பு, எங்களது பொருளாதார சரிவு மற்றும் அரசியல் பண்பாட்டின் மோசமடைந்த நிலை போன்ற காரணிகளால் இந்த முடிவுகளைப் பெற்றுள்ளோம். மக்களுக்கு எமது தேசிய மக்கள் சக்தி மீது பாரிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது எதிர்வரும் பொதுத்தேர்தலில் மேலும் உறுதிப்படுத்தப்படும்.

**கே: தேர்தல் நெருங்கும்போது கட்சிகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் பற்றித் தொடர்ந்து பேசப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியும் அவ்வாறான ஒப்பந்தங்கள் ஏதாவது செய்துள்ளதா?**

பதில்: தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் எமக்கு இருக்கும் ஒரேயொரு ஒப்பந்தம் நாட்டு மக்களுடனானது. நான் பல்வேறு மக்களுடன் பேசுகிறேன். பிற அரசியல் கட்சிகளுடன் தகவல்களை பரிமாறிக் கொள்கிறேன். அவர்களது தரவுகளை அறிந்து கொள்கிறேன்; அவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்று ஆராய்கிறேன். இதன் மூலம் எங்களுடைய வேலைத் திட்டங்களை, எட்ட வேண்டிய இலக்குகளைப் பற்றிச் சிந்தித்து முடிவு செய்கிறேன். இவ்வாறு பல்வேறு தரப்புகளுடன் தொடர்புகளை உருவாக்குகிறேன், இந்த தொடர்புகளை மக்கள் நலனுக்காக உபயோகப்படுத்துவதே என் நோக்கம்.

**கே: திருடர்களை பிடிப்பது பற்றி எப்போதும் பேசுகிறார்கள்; ஆனால் அந்தப் பேச்சைத் தவிர வேறொன்றும் நடப்பதில்லை. ஜனாதிபதி பதவியேற்ற பிறகும் இதுவரை ஒருவரும் பிடிக்கப்படவில்லையே?**

பதில்: அதற்குத் தேவையான அனைத்துத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. திருடர்களைப் பிடிப்பது குற்றப் புலனாய்வுப் பிரிவினரினதும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினதும் செயற்பாடாகும். இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**கே: புதிய பாராளுமன்றத் தேர்தல் முறை எப்போது அறிமுகப்படுத்தப்படும்.**

பதில்: இந்தத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு அது குறித்த விவாதம் ஆரம்பிக்கப்படும். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால், அந்த மாற்றம் விரைவில் நடைமுறைக்கு வரும்.

**கே: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. பலர் பதவியேற்கும் முன் இவ்வாறு கூறினார்கள். ஆனால் பதவியேற்ற பிறகு அது நடைமுறைக்கு வருவதில்லை. இதுவும் அதே போன்று இருக்குமா?**

பதில்: ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கி, அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒப்புதல் பெற வேண்டும். பின்னர், அதன் மீதான மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன் மூலம் சட்டப்பூர்வமாக, அந்த மாற்றத்தை நிகழ்த்தும் ஆற்றல் இருக்கும். நாங்கள் எதிர்காலத்தில் இதைச் செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

### திருடர்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன!



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

**கே: உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முன்பு சமர்ப்பிக்கப்படாத இரண்டு முக்கிய கோப்புகளை இன்னும் வைத்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இதற்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் எங்களுக்கு எந்த விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. இந்த விசாரணையில் எங்களின் செயல்முறை நியாயமானதாக இருக்கிறது என்பதில் மக்களிடம் தெளிவான நம்பிக்கை உள்ளது. எவரின் குற்றச்சாட்டுகளாலும் எங்கள் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதில்லை. நாங்கள் முறையான செயல்முறைகளை பின்பற்றி இந்த விவகாரத்தை தீர்மானிப்போம் என்பதை அனைவரும் நம்புகின்றனர். மற்றவர்களும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்த்தால் நல்லது.

**கே: வெளிநாடுகளின் வங்கிகளில் இந்த நாட்டின் பணம் இருப்பதாக கூறப்படுகிறது. அந்தப் பணத்தை எப்போது நாட்டுக்குத் திருப்பிக் கொண்டுவரப் போகிறீர்கள்?**

பதில்: இந்த விவகாரங்களைப் பற்றி பேசுவது திருடர்களுக்குத் தேவையான தகவலை அளிப்பது போல் இருக்கும்; அது எடுக்கப்படவேண்டிய சட்ட நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும்.

**கே: அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 18 வீத வரியை குறைப்பதாகக் கூறினாலும், அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை அல்லவா?**

பதில்: ஆம், நாங்கள் அதைச் செய்ய இருக்கிறோம். நவம்பர் 14 ஆம் திததிக்குப் பிறகு, மக்கள் நமக்கு ஆட்சி பொறுப்பை வழங்கியதும், இந்த நடவடிக்கையை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவோம். தற்போது, மக்களின் நலனுக்காக செய்ய முடிந்த அனைத்தையும் மேற்கொண்டு வருகிறோம். மீதமுள்ளவை, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும் செயற்படுத்தப்படும்.

# இன்னுமே குறைவடையாத பா.ஜ.கவின் செல்வாக்கு!

## ஜம்மு காஷ்மீர், ஹரியானா தேர்தல் முடிவுகள் உணர்த்தும் உண்மை!



இந்தியாவில் சட்டமன்றத் தேர்தல் நிறைவடைந்த நிலையில், ஜம்மு – காஷ்மீரில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசிய மாநாட்டு கட்சியும், ஹரியானாவில் பா.ஜ.கவும் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றன. இந்த நிலையில், கடந்த ஓராண்டில் நடைபெற்ற தேர்தல்களில் அதிக வெற்றியை இந்தியா கூட்டணி பெற்றதா? அல்லது பா.ஜ.க பலம் காட்டி இருக்கிறதா? என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று மத்தியில் 3 ஆவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில், தற்போது நடைபெற்றுள்ள ஹரியானா மற்றும் ஜம்மு – காஷ்மீர் சட்டமன்றத் தேர்தலில் ஹரியானாவில் வெற்றி பெற்று பா.ஜ.க மகத்தான சாதனை படைத்திருக்கிறது.

அதேநேரத்தில் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து, காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டது உள்ளிட்ட விவகாரங்களுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் தேசிய மாநாட்டு கட்சி – காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

ஹரியானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 இடங்களில் 48 இடங்களில் பா.ஜ.க வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. 37 இடங்களில் காங்கிரஸும், இந்திய தேசிய லோக் தளம் இரண்டு தொகுதிகளிலும், சுயேச்சைகள் மூன்று தொகுதிகளிலும் வெற்றி பெற்று இருக்கின்றன.

இதேபோல ஜம்மு – காஷ்மீர் தேர்தலில் மொத்தம் உள்ள 90 இடங்களில் தேசிய மாநாட்டு கட்சி 42 இடங்களிலும், காங்கிரஸ் ஆறு இடங்களிலும், பா.ஜ.க 29 இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறது. இதே போல மக்கள் ஜனநாயக கட்சி மூன்று தொகுதிகளிலும், ஜம்மு – காஷ்மீர் மக்கள் மாநாட்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒரு தொகுதியிலும், சுயேச்சைகள் எழு தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு நடந்த இரு சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.கவும் இந்தியா கூட்டணியும் சரிசமமாக அதாவது இரு மாநிலங்களில் தலா ஒரு மாநிலத்தில் வெற்றியை பெற்றிருக்கின்றன.

அதேநேரத்தில் ஜம்மு – காஷ்மீரில் காங்கிரஸ் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வெற்றி பெறவில்லை. 38 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் வெறும் ஆறு தொகுதிகளை மட்டுமே கைப்பற்றி இருக்கிறது. இந்த நிலையில், கடந்த ஓராண்டில் நடந்த தேர்தல்களில் அதிக வெற்றிகளை பா.ஜ.கவே பெற்றிருக்கிறது.

ஜம்மு – காஷ்மீர் சட்டசபைத் தேர்தலில் எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் பா.ஜ.க செயல்பட்டு வந்தது. ஆனால் இப்போதைய தேர்தல் முடிவு பா.ஜ.கவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. ஜம்மு – காஷ்மீரில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடித்துள்ளது.

ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்த பா.ஜ.க தனித்து 29 தொகுதிகளில் வென்ற நிலையில், இந்தத் தேர்தல் அந்த கட்சிக்கு ஓரளவு வளர்ச்சி என்றுதான் கூறவேண்டியுள்ளது.

ஜம்மு – காஷ்மீரில் ஆட்சியைப் பிடிக்க 46 இடங்கள் தேவை என்ற நிலையில், 'இந்தியா' கூட்டணி 49 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 'இந்தியா' கூட்டணியில் ஒமர் அப்துல்லாவின் தேசிய மாநாட்டு கட்சி அதிகபட்சமாக 42 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக மாறி உள்ளது. தேசிய மாநாட்டு கட்சியுடன் இணைந்து காங்கிரஸ் 6 இடங்களிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன. இதன்மூலம் அந்த கூட்டணி 49 தொகுதிகளில் வெற்றிபெற்று கூட்டணி ஆட்சியை அமைத்துள்ளது.

அதேவேளையில் தனித்துப் போட்டியிட்ட பா.ஜ.க 29 தொகுதிகளில் வெற்றி பெற்று 2 ஆவது பெரிய கட்சியாக மாறி உள்ளது. அதேபோல் பிரதான எதிர்க்கட்சியாக பா.ஜ.க செயற்பட உள்ளது. மேலும் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தியின் பி.டி.பி கட்சி 3 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இது அவரது கட்சி சந்தித்த மோசமான தோல்வியாகும்.

ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மொத்தம் 90 தொகுதிகள் உள்ளன. இங்கு ஒரு கட்சி ஆட்சியைப் பிடிக்க 46 இடங்களில் வெற்றிபெற வேண்டும். காங்கிரஸ் கட்சி, முன்னாள் முதல்வர் பாரூக் அப்துல்லாவின் (ஓமர் அப்துல்லாவின் தந்தை) தேசிய மாநாட்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜம்மு – காஷ்மீர் தேசிய பாந்தர்ஸ் கட்சிகளுடன் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இந்தக் கூட்டணி மொத்தம் 49 தொகுதிகளை கைப்பற்றி உள்ளது.

ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்து, யூனியன் பிரதேசமாக்கியது உள்ளிட்ட நடவடிக்கைகள் தங்களுக்கு சாதகமாக அமையும் என்று பா.ஜ.க நம்பியது. ஆனால் தேர்தல் முடிவு பா.ஜ.கவுக்கு சாதகமாக அமையவில்லை.

ஆனால் ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க வளர்ச்சியடைந்துள்ளது என்பது தெளிவாகப் புரிகிறது. அதாவது கடந்த 2014 இல் ஜம்மு – காஷ்மீர் மாநிலமாக இருந்தது. அப்போது ஜம்மு – காஷ்மீருக்கு நடந்த சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.கவின் கூட்டணி ஆட்சி ஜம்மு – காஷ்மீரில் இருந்தது. அதாவது மெகபூபா முப்தியின் பி.டி.பி கட்சி 28 இடங்களில் வெற்றி பெற்றது. பா.ஜ.க 25 இடங்களில் வென்றது. இதையடுத்து இருகட்சிகளும் கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்தன.

கடந்த முறை பா.ஜ.க 25 இடங்களில் வென்றது. அப்போது பா.ஜ.க வாங்கிய வாக்குகளின் சதவீதம் 22.98 ஆகும். அதேபோல் இப்போது வெளியான தேர்தல் முடிவில் தனிக்கட்சியாக பா.ஜ.கவுக்குத் தான் அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. 29 தொகுதிகளில் வெற்றிபெற்ற பா.ஜ.க 25.64 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இது கடந்த முறையுடன் ஒப்பிடும் போது இரண்டரை சதவீதம் அதிகமாகும்.

அதேபோல் காங்கிரஸ் கூட்டணியில் 42 தொகுதிகளை வென்ற தேசிய மாநாட்டு கட்சியின் வாக்குகளின் சதவீதம் கூட பா.ஜ.கவை விட குறைவாகத் தான் உள்ளது. அந்த வகையில் பார்த்தால் பா.ஜ.க கடந்த முறையை விட இந்த முறை கூடுதலாக 4 தொகுதிகளில் வெற்றி பெற்று இரண்டரை சதவீத வாக்குகளை அதிகம் பெற்றுள்ளது. இது பா.ஜ.கவின் வளர்ச்சியைக் காட்டும் வகையில் உள்ளது.

நடைபெற்று முடிந்த தேர்தலைத் தொடர்ந்து தேசிய மாநாட்டுக் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவராக ஒமர் அப்துல்லா தெரிவாகியுள்ளார். இதன் மூலம் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் அடுத்த முதலமைச்சராக அவர் தெரிவாகியிருக்கிறார். 1970 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தவர் ஒமர் அப்துல்லா. இவரது பாட்டனார் ஷேக் அப்துல்லாதான் தேசிய மாநாட்டு கட்சியை தொடங்கியவர். மேலும் அவர் தான் ஜம்மு – காஷ்மீரில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர். அவருக்கு பிறகு ஷேக் அப்துல்லாவின் மகனும், உமர் அப்துல்லாவின் தந்தையுமான ஃபரூக் அப்துல்லா தற்போது வரை கட்சியை வழிநடத்தி வருகிறார்.

### ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க தோல்வியுற்றாலும், கடந்த தேர்தல்களை விட இம்முறை கிடைத்த வாக்குகளின் சதவீதம் அதிகம்!



புதிய முதல்வர் ஒமர் அப்துல்லா

எஸ்.சாரங்கன்...

# அலரிமாளிகை – ரொட்டுண்டா வீதி 19 வருடங்களின் பின் மீண்டும் திறப்பு

## வீதியிலுள்ள பாதுகாப்பு சாவடிகள் அகற்றல்

அலரிமாளிகையை அண்டிய கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலிலிருந்து ரொட்டுண்டா சுற்றுவட்டத்துக்குச் செல்லும் வீதி பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதையடுத்து வீதியின் இருபுறமுமிருந்த பாதுகாப்புச் சாவடிகள் நேற்று முன்தினம் (11) கொழும்பு மாநகர சபையினால் அகற்றப்பட்டன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக 2005ஆம் ஆண்டு முதல் 19 ஆண்டுகளாக இந்த வீதி மூடப்பட்டிருந்தது. நீண்டகாலமாக பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்ட இந்த வீதியை தற்போதைய பாதுகாப்பு நிலைமையை ஆராய்ந்த பின்னர் மீண்டும் திறக்குமாறு புதிய அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த முடிவால் கொள்ளுப்பிட்டியை அண்டியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைவடைதோடு, பொதுமக்களுக்கு அதிக வசதியும் ஏற்படுமென கூறப்படுகிறது.

# இந்தியாவில் ரயில்கள் விபத்து; இருபது பயணிகள் படுகாயம்

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது



இந்தியாவின் திருவள்ளூர் மாவட்டத்தின் கவரைப்பேட்டையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் 20 பேர் படுகாயமடைந்து மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக விசாரணை செய்வதற்காக 05 உயர் அதிகாரிகளை கொண்ட குழுவை தெற்கு ரயில்வே நியமித்துள்ளது.

கவரைப்பேட்டை ரயில் நிலையத்தில் தரித்து நின்ற சரக்கு ரயிலுடன் மற்றுமொரு கடுகதி ரயில் மோதி விபத்து சம்பவித்தது. கர்நாடக மாநிலத்தின் மைசூரிலிருந்து பிஹார் மாநிலத்தின் தர்பங்காவுக்கு சுமார் 2,000 பயணிகளுடன் புறப்பட்ட பாக்மதி கடுகதி ரயில், திடீரென்று அங்கு தரித்து நின்ற சரக்கு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது அந்த ரயிலின் 13 பெட்டிகள் தடம்புரண்டதுடன், ரயில் பெட்டியின் அடியில் தீ பிடித்தது.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு பொன்னேரி, கும்மிடிப்பூண்டி மருத்துவமனை மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ரயிலில் பயணித்த ஏனைய பயணிகளான 1,800 க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த விபத்தை தொடர்ந்து கும்மிடிப்பூண்டி வழியாக செல்லும் 18 ரயில் போக்குவரத்துகள் இரத்துச் செய்யப்பட்டன.

இந்த விபத்து தொடர்பாக உயர் மட்ட குழுவினரும் பொலிஸாரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மிக அவசரமாக

# B Positive வகை சிறுநீரகம் தேவை

யக்கல, சியனே உயன, இல.13/A3/2, என்ற முகவரியில் வசிக்கும் நிமலசிறி வனசிங்க என்பவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு துரிதமாக B Positive (B+) வகை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யுமாறு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நோயாளியின் உயிரைக் காப்பாற்ற சிறுநீரகத்தை தானம் செய்யக்கூடிய எவரேனும் இருப்பின் 0773420489 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பாடசாலை மாணவர்களுக்கு சலுகை;

# விடுமுறை நாட்களிலும் பஸ் சீசனுக்கு அனுமதி



பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சனி, ஞாயிறு மற்றும் ஏனைய அனைத்து விடுமுறை நாட்களிலும் மாதாந்த பருவச்சீட்டை பயன்படுத்தி பஸ்களில் தடையின்றி பயணிக்க அனுமதிக்குமாறு போக்குவரத்து சபைத் தலைவருக்கு போக்குவரத்து அமைச்சர் விஜித ஹேரத் பணிப்புரை விடுத்துள்ளார்.

விடுமுறை நாட்களில் மாணவர்கள் மேற்கொள்கின்ற போக்குவரத்தின் போது பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கிடைக்கப்பெற்றுள்ள பல முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு, அதற்கான ஒரு தீர்வாக மாதாந்த பருவச்சீட்டை பயன்படுத்தி அம்மாதம் முழுவதும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பஸ்களில் பயணிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# எழுவிலை அஹதிய்யா பாடசாலை மீலாத்தின சிறப்பு நிகழ்வு இன்று

பாணந்துறை, எழுவிலை அஹதிய்யா பாடசாலையின் மீலாத் தின சிறப்பு நிகழ்வுகள் இன்று காலை 9:00 மணிக்கு அலவியா முஸ்லிம் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும்

இதில் களுத்துறை மற்றும் பாணந்துறை பிராந்திய அஹதிய்யா சம்மேளன உறுப்பினர்கள், அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகக் குழுவினர், அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள் கலந்து சிறப்பிப்பர்.

நிகழ்வில் அகில இலங்கை அஹதிய்யா சம்மேளன பிரதிச் செயலாளரும் களுத்துறை அஹதிய்யா சம்மேளன செயலாளருமான அல்ஹாஜ் ஹிஷாம் சுஹைல் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். நிகழ்வுகளை எழுவிலை அஹதிய்யா நிர்வாக குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

# இராணுவத்தினர் கட்டிய வீடு பயனாளியிடம் கையளிப்பு

மன்னார் குறூப் நிருபர்



மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருவில்வான் கிராமத்தில் வறுமையில் வாழும் குடும்பமொன்றுக்கு இராணுவத்தினால் கட்டப்பட்ட புதிய வீடு நேற்று அக்குடும்பத்தினரிடம் கையளித்து வைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் 10ஆவது கெமுனு கோவா படைப்பிரிவினால் கட்டப்பட்ட இந்த வீட்டுக்கான திறப்பு விழா தள்ளாடி 54ஆவது படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர்.பி.ஏ.ஆர்.பி. ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இந்த வீட்டை இராணுவத்தின் வன்னி கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜே.பி.சி.பீரிஸ் வைபவ ரீதியாக திறந்து வைத்து உரிய குடும்பத்தினரிடம் கையளித்தார். மேலும் இந்த வீட்டு வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றதுடன், மேற்படி குடும்பத்துக்கு இராணுவத்தினால் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.




கரவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது நூல்கள் பலவற்றை நூலகர் எஸ்.எம்.ஆர்அமீனுதீன், நூலக உதவியாளர் ஜீ.நிஹாரா ஆகியோரிடம் பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கி வைத்தனர். (நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# ஊழல், இனவாத அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அநுர ஜனாதிபதியாவதற்கு கிடைத்த வெற்றி

## பிமல் ரத்நாயக்க



ஊழல் அரசியல்வாதிகள் அரசியலிலிருந்து ஒதுங்குவது அநுர குமார திசநாயக்க ஜனாதிபதியானதற்கு கிடைத்த வெற்றியென தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தோல்வியிலிருந்து தப்புவதற்காக ஊழல் மற்றும் இனவாத அரசியல்வாதிகள் இந்த முறை தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக் கொண்டுள்ளதாக தெரிவித்த அவர்,

அடுத்த தேர்தலில் அவ்வாறான அரசியல்வாதிகள் வேட்பாளர்களாக நிற்காத நிலையை ஏற்படுத்தியமை பொதுத் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெரு வெற்றியென தெரிவித்துள்ளார்.

அநுர குமாரவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததமைக்காக மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும், இது இறுதியில் ஊழல் இனவாத அரசியல்வாதிகளின் அரசியல் வாழ்க்கையை முடித்து வைத்ததென அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் அநுர குமாரவுக்கு வாக்களித்தன் மூலம் மக்கள் சிறந்த செயலை செய்தனர். இது இறுதியில் ஊழல் அரசியல்வாதிகளை அகற்றியது.

தோல்வியை தவிர்ப்பதற்காக இந்த அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருது முச்சக்கரவண்டிகளின் சாரதிகளுக்கு அடையாள அட்டைகள்



சாய்ந்தமருது மட்டுப்படுத்தப்பட்ட பாடசாலை சேவை வழங்குநர் முச்சக்கர வாகன சாரதிகள் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு அங்கத்துவ அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) சீவிரீஸ் தனியார் உணவகத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஏ.எம். இர்பான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்முனை கூட்டுறவு திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.வேல்வேந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அத்தோடு கல்முனை கூட்டுறவு திணைக்களத்தின் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. பரீட், எம்.சி.ஜலால்தீன் மற்றும் கல்முனை அல்ஹிலால் வித்தியாலய அதிபர் ரீ.கே.எம். சிறாஜ் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சங்கத்தின் 52 அங்கத்தவர்களுக்கு அதிதிகளால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன், சங்கத்தின் உயிரிழந்த அங்கத்தவர் ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கு நன்கொடையயும் வழங்கப்பட்டது. இதன்போது சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் அதிதிகளும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். **(ஏ.மொஹமட் பாயிஸ்)**

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# ஐக்கியப்பட பக்குவமற்ற தமிழ் அரசியல் கட்சிகள்!

ஆகவே பாராளுமன்றத்தில் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி, நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் தேசிய மக்கள் சக்தி முனைப்புக் கொண்டுள்ளது.

மறுபுறத்தில், சஜித் பிரேமதாச தலைமையிலான அணியினர் வியூகம் வகுத்துச் செயற்பட்டு வருகின்றனர். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மாவட்ட மற்றும் தொகுதி ரீதியில் சஜித் பிரேமதாச பெற்றுக் கொண்ட வாக்குகளை அடிப்படையாக வைத்து, பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்ற இயலுமென நினைக்கிறது சஜித் தரப்பு.

இத்தகைய சூழலில், தென்னிலங்கையில் இருதரப்புக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவப் போகின்றதென்பதே உண்மை.

தென்னிலங்கை தேர்தல் நிலைமை இவ்வாறிருக்கையில், வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் அரசியல் நிலைமையானது எதிரும் புதிருமான போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது. பொதுத்தேர்தலில் ஒட்டுமொத்த தமிழர் தரப்பும் அதிக ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற இலட்சியம் அங்குள்ள தமிழ்க் கட்சிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாறாக, அங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கிடையில் கடுமையான போட்டாபோட்டியே நிலவி வருகின்றது. கட்சிகள் சிதறுண்டு போய் புதிய அணிகளாக உருவாகி தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் இதேவிதமான காட்சிகளையே காண முடிகின்றது.

தமிழ்க் கட்சிகள் பலவற்றை உள்ளடக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவுண்டு போனது ஒருபுறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதான மூத்த கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும் பிளவுகள் நிலவுகின்றன. அவர்கள் சிதறுண்டு போயுள்ளனரென்பதை அவர்களது அறிக்கைகளே புலப்படுத்துகின்றன.

இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கில் தமிழர் தரப்பின் ஆசனங்கள் இழக்கப்படுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. தமிழர் அரசியல் தரப்பு இத்தனை கூறுகளாகப் பிளவடைந்திருக்கையில், வாக்குகளும் சிதறத்தான் போகின்றன.

இத்தகைய அரசியல் குழப்பமானது பல வினாக்களை எழுப்புகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழர் தரப்பு கூடுதல் ஆசனங்களைப் பெற்றெடுத்தால்தான் தமிழினத்துக்கான உரிமைகளை பெரும்பான்மையிடம் கோருவதற்கு இயலுமானதாக இருக்கும். குறைந்த ஆசனங்களை வைத்துக் கொண்டு எவ்வாறு இனத்தின் உரிமைகளைக் கோர முடியும்?

அது ஒருபுறமிருக்க, தங்களுக்குள்ளேயே ஐக்கியப்படத் திராணியற்ற தமிழ்க்கட்சிகள் தமது இனத்துக்கான தேவைகளை நிறைவேற்றுவதில் எவ்வாறு அக்கறை செலுத்தப் போகின்றன?

## புற்றுநோய் மருந்து...

தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 14 கோடியே 42 இலட்சத்து 93,356 ரூபாவை செலுத்தி பாரியளவில் மோசடி செய்தமை தொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து 'Rituximab' என்ற பெயரில் லேபல் இடப்பட்ட இப்புற்றுநோய் தடுப்பு மருந்து, நோயாளிகளுக்கு வழங்கப்பட்டும் நோயாளிகளுக்கு எந்த முன்னேற்றமும் இல்லாத காரணத்தால் சந்தேகம் கொண்ட தேசிய புற்றுநோய் நிறுவகம், மருந்து குப்பிகளை பரிசோதனை செய்து பார்த்ததில் அவற்றுள் வெறும் தண்ணீர் மட்டுமே கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயாளிகளுக்கான 2,250 தடுப்பூசிக் குப்பிகள், (National Medicines Regulatory Authority) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத நிறுவனத்திடமிருந்து 10,79,11,481 ரூபாவுக்கு (பத்து கோடியே எழுபத்தொன்பது இலட்சத்து பதினோராயிரத்து நானூற்று எண்பத்தொரு ரூபா) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தீவிரமான நரம்பியல் நோயாளிகளுக்கு வழங்கப்பட உள்ளதாகக் கூறி, 'Human Immunoglobulin' என்ற லேபல் இடப்பட்ட 900 தடுப்பூசி குப்பிகள் 03 கோடியே 63 இலட்சத்து 81ஆயிரத்து 875 ரூபாவுக்கு அவசரகால கொள்முதல் விலையில் பெறப்பட்டுள்ளன. அவை தேவைக்கு அதிகமாக இருந்தாலும் அந்த தடுப்பூசிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு இருப்பதாக பொய்யான தகவலை முன்வைத்து இவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த தடுப்பூசி குப்பிகளுக்குள்ளும் வெறும் தண்ணீர் மட்டுமே இருந்ததுடன் இவற்றுள் சில தடுப்பூசி குப்பிகளில் சேலைன் திரவம் இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், இவை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதென குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

## மக்கள் நலன்சார்...

தொழில்நுட்பத்தினூடாக நடைபெற்றது. பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி மற்றும் சமந்தா பவர் ஆகியோருக்கு இடையில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கம் முன்வைத்த கொள்கை அறிக்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் கொள்கைகளுக்கும் இடையிலான ஒற்றுமையை இதன்போது சுட்டிக்காட்டிய சமந்தா பவர், மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் முழு ஆதரவும் வழங்கப்படும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும் அதேபோன்று சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் இந்தச் செயற்பாடுகள் உதவும் எனவும் சமந்தா பவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## தமிழரின் பாரம்பரிய கட்சி...

சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை வடக்கு, கிழக்கில் ஐந்து மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ளது. வேட்பாளர் பட்டியல்களில் அரசியலில் அனுபவம் கொண்ட இளைய சமுதாயத்தினருக்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. இம்முறை தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்துக்கு ஆதரவை வழங்க வேண்டுமென்று கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேட்டுக்கொண்டுள்ளார்.

## சவுதி அரேபியாவின்...

இக்கண்காட்சியின் சந்தைப்படுத்தல் தளத்தில் 'சிலோன் டீ' பிராண்டை விளம்பரப்படுத்தும் நோக்கில் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் மற்றும் நிறுவனத்தின் உரிமையாளர் பாயிஸ் சுலைமான் அல் பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். விஜார் என்பது தூய இலங்கைத் தேயிலையின் சவுதி பிராண்ட் ஆகும். Saudi International Franchise Expo என்பது சாத்தியமான வழிகளில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோருடன் தொடர்பு கொள்வதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பமாக கருதப்படுகிறது. அது மட்டுமன்றி தேயிலை பிராண்ட்களை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் விரிவுபடுத்த வாய்ப்புகளையும் வழங்குகிறது.

## வேட்பாளர்களுக்கான...

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மொத்த 764 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றதுடன் அவற்றில் 74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை நீதிமன்றத்தினூடாக சவாலுக்கு உட்படுத்துவதற்குச் சகல வேட்பாளர்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது.

சுயேட்சை குழுக்களுக்கான சின்னங்களும் விருப்பு எண்ணும் அந்தந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியின் ஊடாக வழங்கப்படும்.

## பொதுத் தேர்தலில்...

எனினும் கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டின் ஆட்சி அதிகாரத்திலும், பாராளுமன்றத்திலும் செல்வாக்குச் செலுத்திய ராஜபக்ஷவினர் எவரும் இம்முறை போட்டியிடவில்லை.

நாமல் ராஜபக்ச, பொதுத் தேர்தலில் போட்டியிடவிருந்த போதிலும், ஜனாதிபதித் தேர்தலில் அவரது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் அவர் கடுமையான பின்னடைவை சந்தித்ததால் தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றிபெற முடியாதென வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அவரும் பின்வாங்கியுள்ளார். என்றாலும், அவரை தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு அனுப்ப அக்கட்சி தீர்மானித்துள்ளது.

அதேபோன்று கடந்த நாடாளுமன்றத்தில் சிரேஷ்ட உறுப்பினர்களாக செயல்பட்ட ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, ஜோன் செனவிரட்ண, சம்பிக்க ரணவக்க, பந்துல குணவர்த்தன, விமல் வீரவங்ச, செஹான் சேமசிங்க, டளஸ் அழகப்பெரும, நாலக கொடஹேவா, லக்ஷ்மன் கிரியெல்ல, அலி சப்ரி, காமினி லொக்குகே, சி.வி. விக்கினேஸ்வரன், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட பலர் போட்டியிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கான அலை நாடு முழுவதும் தொடர்ந்து அதிகரித்து வருவதால் பலர் தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளனர்.

அதன் பிரகாரம் கடந்த மூன்று தசாப்தமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பலர் இம்முறை அமையும் பாராளுமன்றத்தில் இருக்க மாட்டார்கள் அரசியல் கட்சிகளின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

## மாவையிடம் ஆசி பெற்று...

வீட்டில் சந்தித்து மாம்பழம் வழங்கி ஆதரவைக் கோரினர். இலங்கை தமிழரசு கட்சியிலிருந்து திட்டமிட்ட முறையில் ஓரங்கட்டபட்டவர்கள் மற்றும் ஈழ தேசிய கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்ட ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பினர் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் இவ்வாறு மாவை சேனாதிராஜாவை சந்தித்தனர்.

## கொழும்பில் உயிராபத்தை...

ஒரு மரம் ஆபத்தானதா? இல்லையா? என 100 சதவீதம் உறுதிப்படுத்துவதற்கு எந்த உபகரணங்களும் இல்லை. கொழும்பு நகரத்திலுள்ள மரங்கள் ஆபத்தானதாக மாறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. இதனால் மரங்களை பராமரிப்பது மிகவும் அவசியமாகும். எனவே உங்களது பிரதேசங்களில் காணப்படும் ஆபத்தான மரங்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு கொழும்பு மாநகர சபையின் 110 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளலாம்.

## யாழில் ஊடகவியலாளர்...

முடிந்து வீடு திரும்பும் போது கஸ்தூரியார் வீதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தலைக்கவசத்தினால் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## கடலுக்கு செல்வதை...

உயரம் 2.5 3.0 மீற்றர் வரை உயரும் சாத்தியம் காணப்படுவதாகவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மறு அறிவித்தல் வரை இந்த கடற்பரப்புகளுக்கு செல்ல வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் கடல்சார் மற்றும் கடற்றொழிலாளர் சமூகங்களுக்கு அறிவித்துள்ளது.

# இனநலனா சுயநலமா?

தமிழ் மக்களை மேலும் கவலைக்குள்ளாக்கும் வகையில் தமிழ்த்தேசியவாத அரசியலின் சீரழிவு மேலும் வளர்ச்சியடைந்துள்ளது. இதைப் பாராளுமன்றத் தேர்தல் மேலும் நிரூபணமாக்கியிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டகையோடு ஒவ்வொரு தமிழ்த்தேசியவாதக் கட்சிகளும் தமக்குள் உச்சமான முறையில் மேலும் தந்திரங்களைச் செய்யத் தொடங்கி விட்டன. தேர்தலில் போட்டியிடுவதற்கும் வெற்றியடைவதற்குமாகத் தொடரும் குழி பறிப்புகள், அணிப் பிறழ்வுகள், அணி சேர்தல்கள், வெட்டியோடுதல்கள், அநீதியான வெளியேற்றங்கள், தேவையற்ற உட்புகுதல்கள் என ஒரு நீண்ட சீரழிவு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

இதில் எந்தக் கட்சியும் விலக்கல்ல.

இவை இவ்வளவு காலமும் சொல்லி வந்த 'தமிழ்த்தேசியத்தைப் பலப்படுத்துவதற்கான ஒற்றுமை, சர்வதேசத்துக்குக் காட்டுவதற்கான ஐக்கியம், தேசமாகத் திரள்வதற்கான கூட்டு' என்பதெல்லாம் பச்சைப் பொய், சொன்னவை எல்லாமே காற்றிற் பறந்து விட்டன என்பதை இவற்றின் தற்போதைய நடவடிக்கைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின்போது, 'தமிழ் மக்களை ஒருங்கிணைத்து ஒரு தேசமாகத் திரட்ட வேண்டும். தேசமாகத் திரள்வதன் மூலமே தமிழ்த்தேசியத்தைப் பலப்படுத்த முடியும். தமிழர்களின் அரசியற் கோரிக்கையை வலிமையாக்க முடியும். சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் குன்றாத – தளராத அரசியலுணர்வை வெளிப்படுத்திக் காட்ட முடியும். அடுத்து வருகின்ற தேர்தல்களில் சிதைவுகள் ஏற்படாமல் இனத்துக்காகவும் கொள்கைக்காகவும் மக்கள் நிற்கக் கூடிய அரசியற் சூழலை உருவாக்க வேண்டும்' என்றெல்லாம் சொல்லப்பட்டது.

**தமிழ்த்தேசியம் மட்டுமல்ல, எந்தத் தேசியவாதமும் மற்றமைகளை – பிற தேசியவாதத்தை நிராகரித்து – மறுதலித்துத் தன்னை நிலைப்படுத்த முடியாது.**

இந்த நோக்கின் அடிப்படையில் தமிழ் மக்கள் பொதுச்சபை தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு போன்ற திடீர் அமைப்புகள் அவசர அவசரமாக உருவாக்கப்பட்டன, அவை அளவுக்கு அதிகமாக



ஊதிப்பெருப்பிக்கவும் பட்டன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல தமிழ்ப்பொது

**பெருந்தேசியத்தின் பின்னே தமிழ் மக்கள் திரண்டு விடக் கூடாது. அப்படித் திரண்டால் தமிழ் அரசியற் கோட்பாடு பலவீனப்படுத்தப்பட்டு, வீழ்ந்து செத்து விடும் என்று சொல்லப்பட்டதற்கு மாறாக அந்தப் பெருந்தேசியத்தின் பக்கமாக மக்களைச் செல்லத் தூண்டிக் கொண்டிருப்பது இந்தத் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் தலைமைகளுமேயாகும்.**

வேட்பாளராக அரியநேத்திரனும் நிறுத்தப்பட்டிருந்தார்.

இதையெல்லாம் நம்ப வைப்பதற்காகப் பெருமுயற்சி எடுக்கப்பட்டு, இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளும் பெறப்பட்டன. அதாவது இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்தக் கருத்தியலின் மீது நம்ப வைக்கப்பட்டனர்.

இப்பொழுது?

எல்லாமே தலைகீழாகி விட்டன. இந்தக் கட்சிகளைப் பற்றியும் அவற்றின் தலைமைகளைப் பற்றியும் இவை கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கருத்தியலின் மீதான பற்றுறுதி பற்றியும் தெளிவுள்ளவர்களுக்கு இதெல்லாம் எந்த ஆச்சரியத்தையும் அளிக்காது. அவர்கள் தொடர்ச்சியாக இந்தத் தமிழ்த்தேசியவாத நாடகத்தை விமர்சித்தே வந்திருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலின்போதும் தங்கள் கருத்தையும் இது தவறான நிலைப்பாடு என்ற மறுப்பையும் பதிவு செய்திருந்தனர்.

ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் இந்தக் கட்சிகளும் இந்தத் தலைமைகளும் பதவிப்போட்டிக்காகக் கீழ்மையாக நடக்கவில்லை என்றால்தான் அது ஆச்சரியமாக இருக்கும்.

ஆனால், தமிழ்த்தேசியவாதத்தைத் தமிழ்த்தேசியமென மனசார நம்புகின்ற மக்களுக்கு இது கவலைகளையும் ஏமாற்றத்தையும் அளிக்கும் சங்கதியே ஆகும். மட்டுமல்ல, தாம் நம்பியவர்களாலேயே ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று வேதனையடைகிறார்கள்.

அந்த மக்கள் விரும்புகின்ற தமிழ் அரசியற் கூட்டு, தமிழ்த்தேசிய அணியின் பலம், தமிழ்த்தேசியத்துக்கான ஐக்கியம் போன்றனவற்றுக்கு எதிராக நடக்கின்ற காரியங்கள். அவர்களை வேறு என்னதான் செய்ய வைக்கும்? தமக்கு இழைக்கப்படுகின்ற அவமதிப்பும் நம்பிக்கை மோசடியும் இது என்று அவர்களிற் பலரும் வாய்விட்டுச் சொல்கின்றனர். பலர் இதைப்பற்றிச் சமூக வலைத்தளங்களில் எழுதியும் வருகிறார்கள். ஒரு தொகுதி மக்கள் இனிமேல் இவர்களை நம்பிப் பயனில்லை என்று வேறு முடிவுகளுக்குச் செல்கின்றனர்.



பெருந்தேசியத்தின் பின்னே தமிழ் மக்கள் திரண்டு விடக் கூடாது. அப்படித் திரண்டால் தமிழ் அரசியற் கோட்பாடு பலவீனப்படுத்தப்பட்டு, வீழ்ந்து செத்து விடும் என்று சொல்லப்பட்டதற்கு மாறாக அந்தப் பெருந்தேசியத்தின் பக்கமாக மக்களைச் செல்லத் தூண்டிக் கொண்டிருப்பது இந்தத் தமிழ்த்தேசியவாதக் கட்சிகளும் தலைமைகளுமேயாகும்.

இதற்குக் காரணம், இவற்றின் எல்லையற்ற சுயநலமே. இது இரண்டு வகைப்படும். ஒன்று, கட்சிகளுடைய சுயநலாகும்;. தம்முடைய கட்சி மட்டும்தான் முன்னிலை பெற வேண்டும். அவையே வரலாற்றுச் சக்தியாகத் திகழ வேண்டும் என்ற சுயநலன். அதாவது அப்படியான அதிகார விருப்பு. அதற்காக ஏனைய கட்சிகளை உடைப்பது தொடக்கம் என்னென்ன விதமாகத் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தளவுக்கு முயற்சிக்கின்றன. இதில் எந்தக் கண்ணியத்தையும் அவை பார்ப்பதில்லை. குறைந்த பட்ச நேர்மையைக் கூடப் பின்பற்ற முயற்சிப்பதில்லை.

அரசியல் என்பது போட்டிக் களம், அரசியலில் இந்த மாதிரியெல்லாம் நடக்கும். தந்திரமும் சாணக்கியமும் அதனுடைய அடிப்படை என்று சிலர் இதை வியாக்கியானப்படுத்தி, நியாயம் சொல்ல முயற்கிக்கிறார்கள். கீழ்மையான செயற்பாடுகளை எந்த அலங்காரங்களினாலும் மறைத்து விட முடியாது. அவை ஒருபோதும் கண்ணியமானவையாகியும் விடாது. பதிலாக எப்போதும் அவை கீழ்மையாகவே இருக்கும். விளைவுகளும் எதிர்நிலையானதாகவே அமையும். மட்டுமல்ல, என்னதான் தந்திரங்களைச் செய்தாலும் அவற்றினால் வெற்றிகளைப் பெற முடியாது. ஏனென்றால் சூதான காரியங்களுக்கு ஒரு போதுமே அரசியலில் நிரந்தர இடமோ மதிப்போ கிடைக்காது.

இரண்டாவது, தாம் மட்டும் எப்படியாவது வெற்றியடைந்து விட வேண்டும் என்ற அடிப்படையிலான தனிநலன். இது சொந்தக் கட்சிக்குள்ளும் நடக்கிறது. கட்சிக்கு வெளியில் தமிழ்த்தேசிய அடையாள அரசியற் பரப்பிலும் நடக்கிறது. இவற்றின் வெளிப்பாடே தற்போது நடந்து கொண்டிருக்கும் கூத்துகள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது சங்குச் சின்னத்தை முன்னிறுத்திய தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பின் உடன்பாடின்றி, அதில் ஒரு பகுதியாகிய ஈ.பி.ஆர்.எல். எப். ரெலோ, புளொட் உள்ளிட்ட அணி சங்குச் சின்னத்தைக் கையகப்படுத்தித் தேர்தலில் நிற்கிறது. இந்தச் செயல் தவறு என்பதை அந்தத் தரப்பு ஏற்றுக் கொள்ளவே இல்லை. ஒற்றுமையை, தமிழ்த்தேசியத்தின் ஐக்கியத்தை, தேசத் திரட்சியையெல்லாம் வலியுறுத்திப் புனித – புதிய அரசியலுக்கு முன்மொழிவுகளைச் செய்த பொதுச் சபையினரும் அதில் அங்கத்துவம் கொண்டதாகச் சொல்லப்பட்ட 87 பேர் அல்லது 87 அமைப்புகளும் இதைக்குறித்துப் பகிரங்கமாக எதையும் சொல்ல முடியாதவர்களாகவே உள்ளனர். ஆனால், அவர்கள் கனத்த மௌனத்தைத் தொடர்ந்தும் பேணித் தப்ப முயற்சிக்காமல் இந்தத் தேர்தற்காலத்தில் தவறானவர்களையும் மோசடிக்காரர்களையும் இனங்காட்ட வேண்டும். அது இவர்களுடைய தார்மீகப் பொறுப்பாகும். இல்லையெனில் கீழ்மையாளரோடுதான் இவர்களையும் வரலாறு சேர்த்துப் பார்க்கும்.

இதேவேளை இந்தப் பொதுச் சபையிலும் பொதுக்கட்டமைப்பிலும் இணைந்து செயற்பட்டவர்களில் ஒருவரான யதீந்திரா திருகோணமலை மாவட்டத்தில் புளொட்டின் பட்டியலில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறார்.



இதைப்பற்றியும் பொதுச் சபையும் பொதுக்கட்டமைப்பும் இவற்றை ஆதரித்து நின்றோரும் பேச வேண்டும்.

இதொரு பக்கமென்றால், மறுபக்கத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நடக்கின்ற குத்துகளும் கூத்துகளுமாகும்.

தமிழரசுக் கட்சியின் உட்கொந்தளிப்புகள் பிரசித்தமானவை. வழமையாக அது எப்போதும் இரட்டை நிலைப்பாட்டின் ஒரு உத்தியாகக் கொண்டு செயற்பட்டு வந்தது.

இந்தத் தடவை அது சற்று வேறு வடிவத்தையும் வேறு பிரச்சினைகளையும் கொண்டு வந்துள்ளது. 2009 க்குப் பின்னான தமிழரசுக் கட்சியில் அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அரச ஆதரவினரும் இருந்தனர். அரச அல்லது சிங்கள எதிர்ப்பாளர்களும் இருந்தனர்.

அவ்வாறே விடுதலைப்புலிகளை ஆதரிப்போரும் அதற்குள்ளிருந்தனர். அதனை எதிர்ப்போரும் இருந்தனர்.

அண்மையில் கூட தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்போரும் இருந்தனர். அதை எதிர்ப்போரும் இருக்கின்றனர். இப்போதும் அதுதான் நிலைமை. தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவோரும் அதற்குள்ளிருக்கின்றனர்.

வீட்டுச் சின்னத்துக்கு எதிராக மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுவோரும் இருக்கின்றனர். இருதரப்புக்கும் ஆசீர்வாதம் வழங்கும் தலைவராக மாவை சேனாதிராஜாவும் இருக்கிறார்.

தொடர்.. 19ஆம் பக்கம்

கருணாகரன்

---

**கடந்த செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் பெரும்பான்மை மக்களின் ஆணையைப் பெற்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்கா தெரிவாகி பதவியேற்றுள்ளமை தொடர்பில் சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தினகரன் வாரமஞ்சரிக்கு அளித்த பேட்டி**

# மாகாண சபை முறை ஐயம் கொள்ள தேவையில்லை

**சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை நாட்டின் பெரும்பாலான மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருப்பதை இந்து மதகுரு என்ற வகையில் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில்: ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு இறைவன் அருள் புரிந்து, இந்நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்ய அவருக்கு பலமும் சக்தியும் கிடைக்க வேண்டுமென முதலில் பிரார்த்தனை செய்து இந்து மக்கள் சார்பாக ஆசீர்வதித்து வாழ்த்து தெரிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டின் பெரும்பாலான மக்கள் பாரம்பரிய அரசியலில் வெறுப்படைந்துள்ளனர். அதற்கு அண்மைக் காலமாக அதிகரித்திருந்த ஊழல் மோடிகளும், வீண்விரயங்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் அடிப்படைக் காரணங்களாகும். அதனால் பெரும்பாலான மக்கள் கடந்த சில வருடங்களாக மாற்றத்தை வலியுறுத்தி வந்தனர். இப்பின்புலத்தில் கடந்த செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான மக்கள் ஆணை வழங்கி அநுர குமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக்கியுள்ளனர். நாட்டில் மறுமலர்ச்சியும் சுபீட்சமும் ஏற்பட அவர் நிச்சயம் வழிவகுப்பார். அதற்கான நம்பிக்கை எனக்கும் நாட்டின் பெரும்பாலான மக்களுக்கும் உள்ளது.

ஊழல், மோசடிகள் அற்றதும் சிறந்த நிர்வாகத் திறன்மிக்க கட்டமைப்பைக் கொண்டதுமான நாடாக இந்நாடு மலர வேண்டும். அதுவே நாட்டின் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும். அதனால் ஊழலற்ற அரச நிர்வாகத்தை உருவாக்கி மக்கள் மனத் திருப்தியடையும் வண்ணம் அரச கருமங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு முன்பாக உள்ளது. அத்தகைய நிர்வாகத்தை உருவாக்குவது இலங்கைக்கு பெருமை சேர்க்கும் விடயமாக அமையும்.

**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்கு முன்பாக மக்களின் எதிர்பார்ப்பு தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

**அன்று வடபகுதி நிலங்கள் பணப்பயிர்ச்செய்கை நிலங்களாக விளங்கின. அதன் ஊடாக வடபகுதி நாட்டின் விவசாயப் பொருளதாரத்திற்கு பாரிய பங்களிப்பை நல்கியது**

பதில்: ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஏழை மக்களின் மன உணர்வுகளையும் எதிர்பார்ப்புக்களையும் அவர்களது வாழ்க்கை முறைகளையும் நன்கறிந்தவர். அதனால் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் அவர்கள் சிறந்த முறையில் வாழ்வை முன்னெடுப்பதற்கு அவசியமான அடிப்படைத் தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்யவும் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

குறிப்பாக நாட்டின் வறுமை ஒழிப்பு, மக்களின் சுபீட்சத்திற்கான சிறப்பம்சமாக அமைய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பு நிச்சயம் ஈடேறும்.

**ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை தமிழ் மக்கள் எவ்வாறு நோக்குகிறார்கள்?**

பதில்: ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் வட மாகாணத்திற்கான ஆளுநராக தமிழ் சமூகத்தைச் சேர்ந்த நாகலிங்கம் வேதநாயகன் என்பவரையும் மேல் மாகாணத்திற்கான ஆளுநராக முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த ஹனீப் யூஸுப் என்பவரையும் நியமித்துள்ளார். அதேபோன்று அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனத்திலும் இரு சமூகங்களையும் சேர்ந்த இருவரை இரு முக்கிய அமைச்சுகளுக்கு செயலாளர்களாக நியமித்துள்ளார். அத்தோடு பொதுத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட மட்ட வேட்பாளர் பட்டியல்களிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிய இடமளிக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கைகள் தேசிய மக்கள் சக்தி தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களை வெல்ல பக்கபலமாக அமையும். அதேநேரம் தமிழ் மக்கள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். என்கின்றனர்.

மாகாண சபையின் கருமங்கள் கிரமமாக முன்னெடுக்கப்பட வேண்டும். தங்கள் சமய, கலாசார விடயங்களை கடந்த காலங்களைப் போன்றல்லாது இடையூறுகள் இன்றி முன்னெடுக்க வசதி அளிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை கொண்டுள்ளனர். அத்தோடு வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மன வலிமையை அளிக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியம்.

வீட்டுத்திட்டங்கள், தொழில் வாய்ப்புகள், கைத்தொழில் முயற்சிகள் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். மேலும் வடக்கில் விவசாய மக்களின் பயிர்ச்செய்கை நிலங்களை உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை பெரும்பாலான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

**இலங்கை மக்களை ஒருதாய் மக்களாக நோக்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பது குறித்து குறிப்பிடுவதாயின்?**

பதில்: பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவரின் அறிவிப்பு, பார்வை எவ்வாறு அமையுமோ அதனையே ஜனாதிபதியின் அறிவிப்பு பிரதிபலிக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, 'நாட்டின் சகல மக்களையும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளாக நிச்சயமாக நோக்கி செயற்படுவேன். இன, மத பேதங்கள் இன்றி அனைவரையும் சம நோக்குடன் நோக்குவதோடு, ஒரு தாய் வயிற்று மக்கள் என்ற உணர்வைக் கட்டியெழுப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பேன். இதற்கு தேவையான ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதோடு, இந்நாடு இங்கு வாழும் எல்லா மக்களுக்கும் உரியது என்ற எண்ணத்தையும் கட்டியெழுப்புவேன். இது எங்கள் நாடு என மக்கள் பார்க்கும் நிலையை எனது பதவிக்காலத்துக்குள் உருவாக்குவேன். இதன் நிமித்தம் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவேன்' என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் இன்றியமையாத விடயமே இதுதான். அதனையே ஜனாதிபதி ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இதன் ஊடாக அவர் அனைத்து மக்களது நம்பிக்கையை வெல்வார் என உறுதிப்படக்கூறுகிறேன். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை நாட்டின் மீது உண்மையான பற்றையும் அன்பையும் கொண்டுள்ள மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

**கேள்வி: ஒரிரு தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்துள்ளனரே?**

பதில்: அது அவர்களது கோரிக்கை. எவரும் கோரிக்கையை முன்வைக்கலாம். ஆனால் ஜனாதிபதி, நாட்டு மக்களின் எண்ணங்களை அறிந்து கொண்ட ஒருவர். அதனால் நாடு பிளவுபட இடமளிக்காமல் அந்தந்த மக்கள் மத்தியில் மனக்கிலேசங்கள் ஏற்படாத வகையில் எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு தேவையான தீர்வை ஒன்றுபட்ட இலங்கைக்குள் அவரவர் தம் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை நிச்சயம் முன்னெடுப்பார் என்பதில் ஐயமில்லை. என்றாலும் அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகக் கூட சமஷ்டி போன்ற கோரிக்கை முன்வைக்கப்படலாம்.



ஆனால் பிரிவினைவாதம் இல்லாத ஒற்றுமை வாதத்துடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போன்று வாழ்வதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

**வடபகுதி மக்களைப் போன்று சிங்கள மக்களும் விவசாயத்தில் முனைப்பானவர்கள். உறுதிப்பாடு மிக்கவர்கள்.**

**தமிழ் மக்களின் அரசியலில் முக்கிய பேசுபொருளாக விளங்கும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் குறித்து உங்களது கருத்து?**

பதில்: அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் என்பது மாகாண சபை முறைமையைக் கொண்டதாகும். அந்த முறைமையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதென்று ஜனாதிபதி உறுதியாக தெரிவித்துள்ளார்.

அதனைப் பிரதமரும் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் 13வது திருத்தம் கொண்டுள்ள மாகாண சபை முறை முன்னெடுக்கப்படுவது குறித்து ஐயமும் கொள்ளத் தேவையில்லை.

**விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதே?**

நான் சிறு பிள்ளையாக இருக்கும் போது அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் மிளகாய், உருளைக்கிழங்கு உற்பத்தி செய்து விவசாயிகள் பெரும் பணக்காரர்களாக மாறினார்கள். அன்று வடபகுதி நிலங்கள் பணப்பயிர்ச் செய்கை நிலங்களாக விளங்கின. அதன் ஊடாக வடபகுதி நாட்டின் விவசாயப் பொருளதாரத்திற்கு பாரிய பங்களிப்பை நல்கியது. வடபகுதி மக்களைப் போன்று சிங்கள மக்களும் விவசாயத்தில் முனைப்பானவர்கள். உறுதிப்பாடு மிக்கவர்கள். அதனால் ஜனாதிபதி விவசாயிகளுக்காக அறிவித்துள்ள திட்டங்களின் ஊடாக நாடு விவசாயத்தில் தன்னிறைவு அடையும் காலம் வெகுதொலைவில் இல்லை எனலாம்.

**நிறைவாக நீங்கள் குறிப்பிட விரும்புவதென்ன?**

பதில்: ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஒரு யதார்த்தவாதி. இதனை அவரே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

'நான் மந்திரவாதியோ அல்லது மாயாஜாலம் காட்டுபவனோ அல்ல. உண்மைகளைக் கூறி உண்மையாகவே செயற்பட விரும்புபவன். உண்மையான பிரஜையாக வாழ விரும்புபவன். ஜனாதிபதி என்பதற்காக மகுடம் அணிந்து மன்னராகச் செயற்படப் போவதில்லை' என்றுள்ளார் அவர். அதனால் இலங்கை அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி அநுர நிச்சயம் ஒரு மைல் கல்லாக அமைவார். அவரது பதவிக்காலம் நாட்டுக்கும் மக்களுக்கும் நிச்சயம் மறுமலர்ச்சியையும் கொண்டு வருவதோடு வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும். இதில் எவ்வித ஐயமும் இல்லை.

பேட்டி கண்டவர்: மர்லின் மரிக்கார்

**தேர்தல் வருடமாக அமைந்துள்ள 2024ஆம் ஆண்டின் மற்றுமொரு தேசிய தேர்தல் இன்னும் சுமார் ஒரு மாத காலத்தில் நடைபெறவுள்ளது. பொதுத்தேர்தலுக்கான பரபரப்பு ஏற்கனவே தொடங்கி விட்டது.**



# ஓரணியில் ஒன்றுபட முடியாததால் சிதறுண்டு போன தமிழ்க்கட்சிகள்!




## இரண்டாகப் பிளவடைந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி!









**மூத்த அரசியல்வாதிகள் பலர் ஓய்வு பெற வேண்டிய பரிதாபநிலை!**

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றதையடுத்து உடனடியாகவே பொதுத்தேர்தலும் நடத்தப்படுவதால், அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி அரசியல்வாதிகள் பலருக்கும் இத்தேர்தல் வாழ்வா சாவா என்ற போராட்டமாக மாறியுள்ளது.

அநுர அலைக்கு எதிராக தாக்குப்பிடிக்க முடியாமல் துவண்டு போயுள்ள அரசியல்வாதிகள் பலரின் அரசியல் வாழ்க்கை அஸ்தமிக்கப் போவதுடன், புதிய எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள இளம் தலைமுறையினர் பலருக்கான அரசியல் பாதை திறக்கப்படவும் போகின்றது என்பது உறுதியாகி விட்டது.

இன்றைய புதிய அரசியல் சூழ்நிலையில், தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**வடக்கில் பிரிந்து நிற்கும் தமிழ்த் தரப்புக்கள்:**

ஜனாதிபதித் தேர்தலில் ஆரம்பித்து இதுவரை வடக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன. கடந்த பொதுத்தேர்தலில் வடக்கிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து நான்கு கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, சுதந்திரக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் சார்பில் உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர்.

எனினும், இம்முறை தேர்தல் களம் முற்றிலும் வித்தியாசமாக மாறியுள்ளது. அது மாத்திரமன்றி, சனத்தொகையின் அடிப்படையில் இம்முறை யாழ்மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஒன்றினால் குறைந்துள்ளது. ஒரு பிரதிநிதித்துவம் குறைந்திருக்கும் பின்னணியிலும் அரசியல் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு மக்களின் வாக்குகளை மேலும் சிதறடிக்கும் வகையில் செயற்படுகின்றன.

வடக்கு, கிழக்கை இதுவரை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அநுர அலையின் தாக்கத்திலிருந்து விதிவிலக்குப் பெறவில்லை. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கடந்த சில வருடங்களாகவே அதன் தலைமைப் பதவிக்கான போட்டியினால் கட்சிக்குள் பிரிவுகள் ஏற்பட்டு விட்டன.

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கும் ஏனைய பதவிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு புதியவர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவற்றை இரத்துச் செய்து மீண்டும் புதிய தெரிவுகளை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த இழுபறிக்கு மத்தியில், கடந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இக்கட்சியில் இருந்தவர்கள் வெவ்வேறு தரப்பினருக்கு ஆதரவு வழங்க தீர்மானித்திருந்தமை கட்சியின் ஒற்றுமை குறித்த கேள்வியை எழுப்பியிருந்தது.

மத்திய குழு கூடி சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுத்ததாக சுமந்திரன் அறிவித்தார். எனினும், குறித்த கூட்டத்திற்குத் தான் செல்லவில்லையென்பதால் கட்சி எடுத்த முடிவு பற்றித் தனக்குத் தெரியாது என கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா கூறியிருந்தார். மறுபக்கத்தில் சில அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் இணைந்து களமிறக்கிய பொதுவேட்பாளர் அரியநேத்திரன் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் என்பதுடன், அவருக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சிறிதரன் எடுத்திருந்தார்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம் போன்றவர்கள் எடுத்திருந்தனர்.

இது இவ்வாறிருக்க, வாக்களித்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த மாவை சேனாதிராஜா, தான் சஜித்துக்கும், ரணிலுக்கும் வாக்களித்திருந்ததாகக் கூறியிருந்தார்.

இவ்வாறு தமிழரசுக் கட்சி ஒரு உறுதியான நிலைப்பாடு இன்றி ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டிருந்தது.

மறுபக்கத்தில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் தெரியப்படுத்துவதற்காக தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என்ற கோஷம் வலுப்பெற்றது.

இதன் பலனாக தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்ற ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து பொது உடன்படிக்கையை ஏற்படுத்தி பொதுவேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனை களமிறக்கியிருந்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருந்தது. இது பொதுவேட்பாளரை ஆதரிக்கவுமில்லை, ஏனைய வேட்பாளர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கவுமில்லை.

அதேநேரம், அமைச்சராகவிருந்த டக்ளஸ் தேவானந்தா, சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவிருந்த அங்கஜன் இராமநாதன் ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இவ்வாறு ஒவ்வொரு கட்சியும் பிரிந்துநின்று தீர்மானங்களை எடுத்திருந்தன.

**சிதறடிக்கப்படும் மக்கள் நம்பிக்கை:**

இவ்வாறான பின்னணியில் பொதுத்தேர்தலுக்குத் தயாராகும் தமிழ்க் கட்சிகள் மேலும் பல பிரிவுகளாகப் பிரிந்து வாக்குகளைச் சிதறடிக்கும் கைங்கரியத்திற்குத் தயாராகி வருகின்றன. தமிழரசுக் கட்சி வீடு சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றது. வேட்பாளர் தெரிவு விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் கடுமையான குழப்பம் ஏற்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டை சுமந்திரன் வைத்திருப்பதாகப் பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். தனக்கு ஆதரவானவர்களையே அவர் வேட்பாளர்களாகக் களமிறக்கியிருப்பதாகவும் கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

இம்முறை தேர்தல் மாத்திரமன்றி கடந்த காலத் தேர்தல் காலத்திலும் சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுக்களே அதிகம் முன்வைக்கப்பட்டிருந்தன. எந்தக் கட்சியினரைப் பார்த்தாலும் சுமந்திரன் மீதே விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

சுமந்திரனின் செயற்பாட்டைக் காரணம் காட்டி தமிழரசுக் கட்சியில் உள்ள சிலர் ஜனநாயக தமிழரசுக் கட்சியென்ற பெயரில் சுயேச்சையாகக் களமிறங்கவுள்ளனர். தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவராக இருந்த கே.வி.தவராசா மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபன் உள்ளிட்ட சிலர் இணைந்து சுயேச்சையாகப் போட்டியிடவிருக்கின்றனர். இதனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டாகப் பிளவடைந்துள்ளது.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகக் களமிறங்கிய கட்சிகள் இம்முறை இரண்டு தரப்பாகியுள்ளன. தமிழரசுக் கட்சி தனித்தும் ஏனைய கட்சிகள் ஒன்றாகவும் களமிறங்குகின்றன. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ உள்ளிட்ட கட்சிகள் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்துக் களமிறங்குகின்றது.

இவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்குப் பயன்படுத்திய சங்கு சின்னத்தை தமது சின்னமாக எடுத்துள்ளனர். இந்தச் சின்னத் தெரிவும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காகவே பொதுவேட்பாளர் களமிறக்கப்படுவதாகக் கூறியிருந்தனர். இதற்காக சிவில் அமைப்புடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் குறித்த விடயத்தை எந்தவொரு தரப்பும் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்துவதில்லையென இணக்கம் காணப்பட்டிருந்தது.

எனினும், சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கபளீகரம் செய்தது மாத்திரமன்றி, ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காக வாக்களித்த ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஏமாற்றியுள்ளது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதாவது, தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தும் நோக்கிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது. இது மக்களின் நம்பிக்கையை சிதறடிக்கச் செய்துள்ளது.

பொதுவேட்பாளர் விடயத்தில் ஒன்றிணைந்திருந்த சி.வி.விக்னேஸ்வரனின் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் தனித்துக் களம் காண்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பார் பெர்மிட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு எழுந்திருந்தது.

இவ்வாறு பெர்மிட்டைப் பெறுவதற்கு விக்னேஸ்வரனும் சிபாரிசுக் கடிதமொன்றை வழங்கியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ஏழைப் பெண் ஒருவருக்கு உதவும் வகையில்தான் இந்த சிபாரிசுக் கடிதத்தை வழங்கியதாக அவர் கூறியிருந்தார். இதனால் அவர் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்த நிலையில், இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்ற அறிவிப்பை வெளியிட்டார்.

இருந்தபோதும் அவருடைய கட்சி போட்டியிடுகின்றது. யாழ் மாநகரசபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் தலைமையிலான குழுவொன்று யாழ் மாவட்டத்தில் போட்டியிடுகின்றது.

மறுபக்கத்தில், கஜேந்திரகுமார் அணி வடக்கு, கிழக்கில் போட்டியிடுகின்றது. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி அவர்களுக்கே உரிய வீணைச் சின்னத்தில் வடக்கு, கிழக்கில் போட்டியிடுகின்றது.

இதற்கும் அப்பால் தேசிய மக்கள் சக்தி, ஐ.தே.க இணைந்த கூட்டணி, பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி போன்ற பிரதான அரசியல் கட்சிகளும் வெவ்வேறாகப் போட்டியிடுகின்றன. அத்துடன், தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு, கிழக்கு மற்றும் அதற்கு வெளியேயும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடப் போகின்றது.

இவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக தனித்துப் போட்டியிடுவதால் இம்முறை மக்கள் குழப்பம் அடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். அது மாத்திரமன்றி, மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகள் பல இருக்கும் நிலையில், தமிழ்த் தேசியம் என்றதொரு விடயத்தை மாத்திரம் தேர்தல் காலத்தில் பயன்படுத்தி மக்களைத் திசைதிருப்பும் அரசியல் காய்நகர்த்தலே தொடர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றது.

பல்வேறு விடயங்களில் தெளிவு பெற்றுள்ள தமிழ் மக்கள் இம்முறை சுயநலம் கொண்ட அரசியல் கட்சிகளுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள் என்றே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

---

# ஆன்மிக ஞானி முஹ்யத்தீன் அப்துல் காதிர் ஜீ லானி (ரலி) அவர்கள்

பேருவளை சீனன் கோட்டை குட்டிமலை ஜாலிய்யா தர்கா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்த காதிரிய்யா மனாகிப் மஜ்லிஸ் தமாம் வைபவம் இன்று (13.10.2024) அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பமாகவுள்ளது.

கலி பதுஷ்சாதுலிகளான மௌலவி எம்.எம்.செய்னுலாப்தின் (பஹ்ஜி) அஷ்ஷேய்க் இஹ்ஸானுதீன் அபுல்ஹசன் (நளீமி) ஆகியோர் நிகழ்வுக்கு தலைமை வகிப்பர். பிரபல பேச்சாளர் கலி பதுல் அருஸி மௌலவி முஹம்மத் முஸ்தகீம் (நஜாஹீ) விஷேட பேச்சாளராக கலந்துகொள்வார். நேற்றிரவு (12) திக்ர் மஜிலிஸ் நடைபெற்றது.


ரஸல் (ஸல்) அவர்களின் மறைவுக்கு பின்னர், அன்னவர் வழிவந்த கலீபாக்கள் ஸஹாபா தோழர்கள், இமாம்கள் வழிமார்கள் என்று வழித்தோன்றல்கள் பலரும் புனித இஸ்லாம் மார்க்கத்தைப் பேணி வளர்த்து வந்தார்கள். உலகின் நான்கு பக்கங்களிலும் இஸ்லாம் பரவ வழிகோலினர்.

இஸ்லாம் தோன்றி ஏறத்தாழ 500ஆம் ஆண்டளவில் அரேபியாவைச் சூழவுள்ள சில நாடுகளில் வாழ்ந்த மக்கள் மனங்களில் இஸ்லாமிய வழிமுறை மங்க ஆரம்பித்தது. பெயரளவில் இஸ்லாமியர்களாகவும் பழக்க வழக்க நடைமுறைகளில் இஸ்லாத்துக்கு புறம்பாகவும் வாழத் தலைப்பட்டனர்.

இதனைக் கண்ட இமாம்கள் ஸூபியாக்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். இக்கால கட்டத்தில் தான் மகான் ஆத்மீக ஞானி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் பாரசீகத்தில் வடமேல் மாகாணத்திலுள்ள ஜீலான் என்ற ஊரில் ஹிஜ்ரி 470 இல் கி.பி 1077 இல் பிறந்தார்கள். இறைத்தூர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பரம்பரையில் பிறந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவயதிலையே தந்தையை இழந்த முஹ்யித்தீன் அப்தில் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் அன்னையின் அரவணைப்பிலே வாழ்ந்தார்கள். அன்னை உம்முல் ஹைர் பாதிமா அவர்கள் அருமை மகனை கண்ணின் மணி போன்று பேணி வளர்த்தார்கள். பிஞ்சு நெஞ்சிலே தீனின் விதையை விதைத்தார்கள் கல்வி அறிவூட்டி சன்மார்க்க நெறியோடு அறிவு ஞானமிக்கவராக வளந்தார்கள்.

முஹியத்தீன் அப்தில் காதர் ஜீலானி ரலி அவர்கள் தன் ஊர் மத்ரஸாவிலே ஆரம்ப கல்வியைப் பெற்றார்கள். சிறுவயதிலையே அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தார்கள். சரீஆ சட்டங்களை சரியாக கற்று அதன்படி பேணி நடந்தார்கள். தனது 18 ஆவது வயதிலேயே மேற்படிப்பை நாடி இஸ்லாமிய கல்வி ஞானத்திலே பிரசித்தி பெற்று விளங்கிய பக்தாத் நகருக்குச் சென்றார்கள். அங்கு இஸ்லாமிய பிக்ஹூ, குர்ஆன் விளக்கம், ஹதீஸ் கலை போன்றவற்றை கற்றுத் தேர்ந்தார்கள் அத்துடன் அறிவியல் நூல்களையும் எழுத ஆரம்பித்தார்கள். அவற்றுள் பத்குத் தைய்யான், பத்ஹூர் ரப்பானி, பத்ஹூல் கைப் இன்று வரையும் மிகவும் பிரபல்யம் மிக்க நூல்களாக திகழ்கின்றன.



அன்று ஸூபித்துவத்தில் மிகவும் பிரசித்திபெற்றுத் திகழ்ந்த அப்துல் காதர் ஹம்மாத் என்ற ஞான மகானின் கருத்துக்களாலும் கொள்கையாளும் மிகவும் கவரப்பட்டார். அவரிடம் கற்று ஸூபித்துவத்தில் தலைசிறந்த ஞானியாகத் தன்னை வளர்த்துக் கொண்டார்கள். இறைநேசராக உயர்வடைந்தார். அன்னாரின் ஆத்ம ஞானத்தையும் இறை நேசத்தையும் கண்ட பெறும் திரலான மக்கள் அன்னாரை பின்பற்றலானார்கள்.

ஆன்மிக வழிகாட்டியாக பின் தொடர்ந்தார்கள் ஆன்ம ஞானத்தோடு கல்வி புகட்டும் பணியைத் தொடர்ந்த அன்னாரிடம் பெருந் தொகையான மாணவர்கள் இணைந்து கற்று தேறலானார்கள். தான் கற்றுத் தேர்ந்த அத்தனை கல்வி அறிவுத்துறைகளையும் தன் சிஷ்யர்களுக்கு ஊட்டி அவர்களையும் நல்ல தேர்ச்சியாளர்களாக்கினார்கள்.

அத்துடன் நில்லாது வழி தவறிச் சென்றவர்களை நேர்வழியின் பால் அழைத்துச் சென்றார்கள். சன்மார்க்க போதனையில் சளையாது உழைத்து தீனுக்கு புத்துயிர் ஊட்டினார்கள். இதனாலையே தீனை உயிர்ப்பித்தனர் என்ற பொருள்படும் முஹியத்தீன் என்ற சிறப்புப் பெயர் பெற்றார்கள்.

நாவன்மையால் மக்களை நெறிப்படுத்திய அன்னார் அறப்போதனைக்காக தன் எழுத்தாற்றலையும் பயன்படுத்த தவறவில்லை. தீன் வழியில் நடக்கும்படி அறிவுரை பகரும் அரிய நூல்களையும் எழுதினார்கள்.

(19 ஆம் பக்கம் பாரக்க)

பேருவளை பீ.எம் முக்தார் ...

**2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சுமார் ஒரு மாதகாலமே எஞ்சியிருக்கும் நிலையில், இலங்கைப் பாராளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களுக்கு நாடு முழுவதிலுமிருந்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 690 குழுக்கள் போட்டியிடுகின்றன.**



# ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ளுமா தேசிய மக்கள் சக்தி?

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுடன் முடிவடைந்த நிலையில், 690 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 74 வேட்புமனுக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் திகாமடுல்ல அதாவது அம்பாறை மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான 64 குழுக்கள் போட்டியிடுகின்றன.

15 குழுக்களைக் கொண்ட ஆகக் குறைந்த குழுக்கள் போட்டியிடும் மாவட்டங்களாக பொலனறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்கள் காணப்படுகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலே இம்முறையும் பயன்படுத்தப்படவிருப்பதால், 225 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 17 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

## பொதுத்தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றாலேயே, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அரசுக்கு வெற்றி கிட்டும்!





இலங்கை அரசியல் வரலாற்றில் பாரியதொரு திரும்புமுனையாக இதுவரை ஆட்சிக்கு வராததொரு கட்சியான ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி அதிகாரத்திற்கு வந்துள்ள பின்னணியில், எதிர்கொள்ளப்படும் பொதுத்தேர்தலாக இது அமைந்துள்ளது.

இதுவரை பாரம்பரியமாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவையே மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்தன. இதில் விதிவிலக்காக அரசியல் பயணத்தைத் தொடங்கி குறுகிய காலத்திற்குள்ளேயே ஆட்சியைக் கைப்பற்றிய கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விளங்கியது.

இந்தக் கட்சி குறுகிய காலத்திற்குள் வெற்றி அடைந்ததைப் போல குறுகிய காலத்திற்குள்ளேயே மக்களால் நிராகரிக்கப்பட்டும் விட்டது.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் பாரியதொரு எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

**ஜனாதிபதித் தேர்தலின் தாக்கம்:**

அமைப்பு மாற்றம் அதாவது 'சிஸ்டம் சேஞ்ச்' என்ற அடிப்படையில் பலரும் இந்தத் தேர்தலை நோக்குவதால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற தேசிய மக்கள் சக்திக்கான வாய்ப்புகள் இத்தேர்தலில் அதிகம் இருப்பதாகத் தென்படுகின்றது.

இருந்தபோதும், இது அவர்களுக்கு இலகுவானதொரு இலக்காக அமைந்துவிடப் போவதில்லை. நடைமுறையில் எடுத்துக் கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதால், பொதுத் தேர்தலிலும் அவருடைய கட்சி வெற்றிபெற்றாலேயே நாட்டில் சுமுகமான ஆட்சியைக் கொண்டுசெல்ல முடியும்.

பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை நாடு சந்தித்திருக்கும் இந்நிலையில், அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையற்ற அரசாங்கமொன்று மத்தியில் இருப்பது நாட்டின் எதிர்காலத்திற்குச் சாதகமாக இருக்காது. எனவே, தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைப்பதே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல சிறந்த தீர்வாக அமையும்.

மாறாக பாராளுமன்றத்தின் பெரும்பான்மையானது பிறிதொரு கட்சியிடமும், ஜனாதிபதி வேறொரு கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது அதிகாரக் கயிறிழுப்பாகவே இருக்கும். இதற்கான அனுபவங்கள் எமது நாட்டில் முன்னர் இருந்துள்ளன.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்திருந்தபோது, ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க இருந்தார். இக்காலப் பகுதியில் ஏற்பட்ட இழுபறிகள் எமக்கு சிறந்த படிப்பினையை வழங்கியுள்ளன.

அவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்பட்டால், ஏற்கனவே பொருளாதாரத்தினால் பாதிக்கப்பட்ட நாடு இதனைத் தாங்கும் நிலையில் இல்லை. எனவே, தேசிய மக்கள் சக்தியினரே பாராளுமன்றத்தின் பெரும்பான்மையையும் பெற்றுக் கொள்வதே சுமுகமான நகர்வுக்கு சிறந்த தெரிவாக இருக்கும்.

## பாராளுமன்றத் தேர்தலில் புதிய முகங்களின் வருகையும், காணாமல் போயுள்ள பழைய முகங்களும்!

இதற்கான வாய்ப்புகளும் ஓரளவுக்கு சாதகமாக இருப்பதாகவே தெரிகின்றது. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் பாரியதொரு மாற்றத்தை வேண்டி மக்கள் வாக்களித்திருப்பதுடன், புதிய ஜனாதிபதிக்கு நிர்வாகத்தை சீர்செய்ய காலஅவகாசமும், அதற்கான பாராளுமன்ற பெரும்பான்மையும் வழங்கப்பட வேண்டும் என்ற செய்தியை தேசிய மக்கள் சக்தியினர் மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கும், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் காலஅவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து அரசியல்வாதிகள் மத்தியில் அதிகளவில் நிலவுகின்றது. எனவே, மக்கள் மீதான நம்பிக்கையை வென்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை தேசிய மக்கள் சக்தியினர் முன்னெடுப்பதே உகந்ததாகும்.

இது அவர்களுக்கு இலகுவான விடயமாக இருந்துவிடப் போவதில்லை. ஏனெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான போட்டியாளராக இருந்த சஜித் பிரேமதாச கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தார். அது மாத்திரமன்றி, அநுர குமார வெற்றிபெற்ற சில தொகுதிகளில் சஜித்திற்கும் அவருக்கும் இடையிலான வித்தியாசம் மிகவும் குறைவாகவே இருந்தது.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, தேசிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலேயே மீண்டும் போட்டியொன்று இருக்கப் போகின்றது. இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தல் களமும் பொதுத்தேர்தல் களமும் முற்றிலும் வேறுபட்டவை.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான நபர்கள் பொதுவாகப் பார்க்கப்படுவர். எனினும், பொதுத்தேர்தல் என வரும்போது தமது மாவட்டத்தைச் சேர்ந்த, நன்கு அறியப்பட்டவர்கள் போட்டியிடுவதால், ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாத்திரம் வைத்துக் கொண்டு மக்கள் ஆதரவு யாருக்கு என்பதை கணித்துவிட முடியாது.

இதனால், பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று பெரும்பான்மையை அமைப்பது தேசிய மக்கள் சக்திக்கு அவ்வளவு இலகுவானதொன்றாக இருக்காது என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

**ஒதுங்கிய அரசியல் பிரபலங்கள்:**

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலானது கட்சிகளுக்கு சவாலானதாக அமைந்திருக்கும் அதேநேரம், தனிப்பட்ட ரீதியில் பல்வேறு அரசியல்வாதிகளுக்கும் சவாலானதாக அமைந்துவிட்டது எனலாம்.

இதுவரை அரசியலில் முக்கியமானவர்களாக இருந்த, குறிப்பாக பல தசாப்தங்களாக அரசியலில் இருந்த பலர் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிக் கொண்டுள்ளனர். இதற்குப் பிரதான காரணம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளேயாகும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

# லெபனான், சிரியா பேஜர் வெடிப்பு சம்பவங்களால் உருவான புதிய பீதி!



## பேஜர், வோக்கி டோக்கி சாதனங்களுக்கு தடை எமிரேட்ஸ் எயார் விமானங்கள்!

லெபனானின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை விமானங்களில் பேஜர் மற்றும் வோக்கி டோக்கி உள்ளிட்ட வயர்லெஸ் தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டுக்கு கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் எமிரேட்ஸ் எயார் விமானங்களும் இச்சாதனங்களைச் தடை செய்திருக்கின்றன.

எமிரேட்ஸ் எயார் நிறுவனம் கடந்த 07 ஆம் திகதி விடுத்துள்ள அறிக்கையில், துபாயிலிருந்து அல்லது துபாய் வழியாக விமானங்களில் பயணிக்கும் அனைத்துப் பயணிகளும் பேஜர்கள், வோக்கிடோக்கி உள்ளிட்ட வயர்லெஸ் தொடர்பு சாதனங்களை கையில் வைத்தபடியோ அல்லது லக்கேஜில் பொருட்களுடன் வைத்து எடுத்துச் செல்லவோ முடியாதென குறிப்பிட்டு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இது உலகளாவிய மட்டத்தில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த செப்டம்பரின் நடுப்பகுதியில் (17, 18 ஆகிய தினங்களில்) லெபனானின் பல பிரதேசங்களிலும் சிரியாவின் சில இடங்களிலும் பேஜர், வோக்கி டோக்கி உள்ளிட்ட வயர்லெஸ் தொடர்பு சாதனங்கள் மாலை வேளையில் சில நிமிடங்களுக்குள் திடீர்திடீரென வெடித்தன. இதனால் லெபனானையும் சிரியாவையும் சேர்ந்த 37 பேர் கொல்லப்பட்டதோடு, 3500 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலர் கண்பார்வையை இழந்துள்ளதோடு, இன்னும் சிலர் கைகள், விரல்கள் உள்ளிட்ட அவயவங்களில் கடும் பாதிப்புகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இந்த வயர்லெஸ் தொடர்பு சாதனங்களின் வெடிப்பு சம்பவத்திற்கு லெபனான் பிரதமரும் ஹிஸ்புல்லாஹ்வும் இஸ்ரேலைக் குற்றம் சாட்டியுள்ள போதிலும், இஸ்ரேல் எவ்வித பதிலும் அளிக்காது மௌனம் காத்து வருகிறது.

இவ்வயர்லெஸ் சாதனங்களில் அதிகம் செறிவூட்டப்பட்ட வெடிமருந்தானது கண்டுபிடிப்பு சாதன பரிசோதனைகளிலும் பதிவாகாதபடி இரகசியமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு ஹிஸ்புல்லாஹ் அங்கத்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.



இதன் விளைவாக சுமார் 3500 ஹிஸ்புல்லாஹ் உறுப்பினர்கள் போர்க்களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என லெபனானிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் லெபனானில் வெடித்த பேஜர்கள் தாய்வான் நிறுவனத்தின் இலச்சினையைக் கொண்டிருந்தன. அதனால் இவை தாய்வானில் உற்பத்தி செய்யப்பட்டவையாக நம்பப்பட்ட போதிலும், அதனை மறுத்த தாய்வான் நிறுவனம் தமது இலச்சினையைப் பயன்படுத்த ஹங்கேரி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியதாகக் குறிப்பிட்டது,



இந்நிலையில் ஹங்கேரி ஊடகங்கள், பல்கேரியாவை தளமாகக் கொண்ட நோர்டா குளோபல் நிறுவனம்தான் ஹிஸ்புல்லாஹ்வுக்கு பேஜர்களை விற்பனை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளன. குறித்த நிறுவனம் நோர்வே பிரஜைக்குச் சொந்தமானதாகும். அதனால் அவருக்கு எதிரான விசாரணைகளை நோர்வே ஆரம்பித்திருக்கிறது. எனவே இந்த பேஜர் வெடிப்பு விவகாரம் தாய்வான், ஹங்கேரி, பல்கேரியா மற்றும் நோர்வே என விரிவடைந்துள்ளது.

இந்நிலையில் பேஜர், வோக்கிடோக்கி போன்ற வயர்லஸ் தொடர்புசாதங்களைப் பயன்படுத்தவே அச்சம் கொள்ளும் நிலை லெபனானிய மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு இச்சாதனங்களை இறக்குமதி செய்வது குறித்தும் பயன்படுத்துவது குறித்தும் உலகம் திகிலடைந்துள்ளது.

லெபனான் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இத்தகைய வயர்லெஸ் சாதனங்களை விமான நிலையத்திற்குள் கொண்டு செல்வதற்கு தடை விதித்திருக்கிறது. இதேநேரம் எமிரேட்ஸ் எயார் நிறுவனம் இச்சாதனங்களை தங்கள் விமானங்களில் பயன்படுத்துவதையும் எடுத்துச் செல்வதையும் தடை செய்திருக்கிறது.

## டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீதான அதிகாரத்தை கட்டுப்படுத்த உலகளாவிய ஒழுங்கு விதிகள் அவசியம்!

வயர்லெஸ் சாதனங்கள் லெபனானில் தாக்குதல் உபகரணங்களாகப் பயன்படுத்தப்பட்டதையடுத்து ஈரான் இஸ்லாமிய புரட்சி காவலர்படை அனைத்து உறுப்பினர்களும் எந்த வகையான தகவல் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்துவதை நிறுத்துமாறு உத்தரவிட்டது. ஆனால் ஈரான் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தும் பெரும்பாலான வயர்லெஸ் தொடர்பு சாதனங்கள் உள்ளூர் உற்பத்திகளாகவும் சீன மற்றும் ரஷ்ய தயாரிப்புகளாகவும் உள்ளன. அப்படியிருந்தும் அவற்றின் பயன்பாட்டுக்கு உடனடியாகத் தடைவிதித்த ஈரானிய படையினர், அனைத்து சாதனங்களையும் பரிசோனைக்கு உட்படுத்தினர்.

இதேவேளை ஈரானிய முன்னாள் ஜனாதிபதி இப்றாஹிம் ரைசி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பயணித்த ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலையினால் விபத்துக்குள்ளாகி உயிரிழந்ததாக விசாரணை அறிக்கைகள் தெரிவித்திருந்தன. ஆனால் லெபனான் மற்றும் சிரியாவில் பேஜர்கள் தாக்குதல் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இவர்களது மரணத்துக்கும் பேஜர் காரணமாக அமைந்திருக்கலாமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ஏனெனில் ஈரானின் முன்னாள் ஜனாதிபதி ரைசியும் பேஜர் பயன்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் துருக்கி கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மெஹ்மட் படிஹ் கசிர், 'லெபனானில் வயர்லெஸ் சாதனங்களப் பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதல் ஒவ்வொரு நாடும் தேசிய தொழில்நுட்ப இயக்கத்தை நோக்கி செல்வதன் அவசியத்தை மீண்டுமொரு தடவை வலியுறுத்தியுள்ளது. அதனால் உள்நாட்டு வளங்களை பயன்படுத்தி முக்கியமான தொழில்நுட்ப சாதனங்களை உருவாக்குவதும் உற்பத்தி செய்து கொள்வதும் ஒரு முக்கியமான தேவை' என்றுள்ளார்.

துருக்கியின் சைபர் பாதுகாப்பு கொத்தணியின் (டி.சி.எஸ்.சி) பொது ஒருங்கிணைப்பாளர் அல்பஸ்லான் கெசிசி, 'வெளிநாட்டு தொழில்நுட்பத்தைச் சார்ந்திருக்கும் போது, வேண்டுமென்றே வீணான பிரச்சினைகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுக்கும் அச்சுறுத்தல் காணப்படுகிறது. குறிப்பாக முக்கியமான உட்கட்டமைப்புகள், பாதுகாப்பு, எரிசக்தி அமைப்புகள், சுகாதாரம், தகவல் தொடர்பு உள்ளிட்ட மூலோபாயத்துறைகள் இத்தகைய அச்சுறுத்தலை எதிர்கொள்ளலாம்' எனக் கூறியுள்ளார்.

அங்காராவின் ஒ.எஸ்.ரி.எம் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் முக்கிய கல்வியியலாளர் ஒருவர் கூறுகையில், இந்த வயர்லெஸ் சாதனங்கள் வெடிப்பின் உடனடித் தாக்கமாக இலத்திரனியல் மற்றும் இரசாயனப் பொருட்களின் இறக்குமதி அதிக கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகலாம். அதனால் மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுசீரமைக்க வேண்டிய அவசரத் தேவைக்கு உள்ளாகியுள்ளன என்றுள்ளார்.

அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இத்தகைய அபாயங்களைக் குறைக்கவென குறைக்கடத்திகள் போன்ற உயர்தொழில்நுட்ப உபகரணங்களை அதிகளவில் உற்பத்தி செய்வதோடு, பயன்படுத்தவும் செய்கின்றன. இருப்பினும், குறைந்த வருமானம் பெறும் வளரும் நாடுகள் இன்னும் முக்கியமான தொழில்நுட்பங்களுக்காக இறக்குமதியையே பெரிதும் நம்பியுள்ளன.

அதேநேரம் நிலம், கடல், காற்று, விண்வெளியுடன் சைபர்ஸ்பேஸை போரின் ஐந்தாவது களமாக நேட்டோ அமைப்பு அங்கீகரித்துள்ளது. இது இராணுவம், சிவிலியன் என்ற இரு தரப்பினரதும் உட்கட்டமைப்பை ஆழமாக பாதிக்கலாம் என்கிறனர் போரியல் ஆய்வாளர்கள்.

அதனால் பெரும்பாலான நாடுகள், தங்கள் சொந்த இணைய பாதுகாப்பு தீர்வுகளை தாங்களே உருவாக்கிக் கொள்வதோடு, முழுமையான உரிமையையும் கட்டுப்பாட்டையும் பேணிக் கொள்கின்றன. ஆனாலும் இறக்குமதி செய்யப்படும் தொழில்நுட்ப சாதனங்களின் ஊடாக முக்கியமான தரவுகள் ஏனைய நாடுகளின் கைகளுக்கு செல்லக்கூடிய அபாயமும் நிலவவே செய்கிறது. அத்தோடு பராமரிப்பு, சீரமைப்பு உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளுக்காக வெளித்தரப்பில் முழுமையாக தங்கியிருப்பதும் அச்சுறுத்தல் மிக்கதாகவே அமையும்.

அதனால்தான் ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மரியா ஜகரோவா, 'பேஜர் வெடிப்பைத் தொடர்ந்து டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீதான தொழில்நுட்ப நிறுவனங்களின் அதிகாரத்தை கட்டுப்படுத்தவென உலகளாவிய ஒழுங்குவிதிகள் அவசியம். ஏனெனில் அமெரிக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளது புலனாய்வு அமைப்புகளுக்கும் ஒத்துழைப்பு அளிக்கின்றன, அவை மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடவும் உளவு பார்க்கவும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

அதனால் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீதான தொழில்நுட்ப வல்லுனர்கள் தங்கள் கட்டுப்பாட்டை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க உலக சமூகத்தை சட்டப்பூர்வமாக பிணைக்கும் சர்வதேச வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேற்கத்திய நிறுவனங்கள் முக்கிய தகவல் தொழில்நுட்ப உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதிகாரத்தை தங்கள் கைகளில் குவித்திருக்கின்றன. ஆனால் நாடொன்றின் இறைமை மற்றும் பாதுகாப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. அதனால்

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தங்கள் தயாரிப்புகளுக்குப் பொறுப்பேற்க வைப்பது மிகவும் முக்கியமானது, மென்பொருளில் தீங்கு விளைவிக்கும் கதவுகளை அறிமுகப்படுத்துவதை நிறுவனங்கள் தடுத்திருப்பதை உறுதிசெய்வதும் அவசியமானது என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே பேஜர், வோக்கி டோக்கி உள்ளிட்ட சாதாரண வயர்லெஸ் சாதனங்கள் லெபனான், சிரியாவில் தாக்குதல் உபகரணங்களாகப் பயன்படுத்தப்பட்டமையே உலகளாவிய ரீதியில் இத்தகைய திகில் நிலையை தோற்றுவித்திருக்கிறது.



மர்லின் மரிக்கார்...









லேக் ஹவுஸ் இந்துமன்றம் நடத்திய நவராத்திரி விழா நேற்று தினகரன் ஆசிரியர் பீடத்தில் நடைபெற்றது. லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் காமினி வருஷமான, ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர யாப்பா, நிதிப் பணிப்பாளர், சன்ன கெவித்தியாகல, டெய்லி நியூஸ் ஆசிரியர் கேசர அபேவர்தன. தினமின ஆசிரியர் மனோஜ் அபேவீர, சிலுமின ஆசிரியர் ஷிரோமி அபேசிங்க மற்றும் தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட ஆசிரிய பீடத்தினர் மற்றும் இந்து மன்ற அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். பிரம்மஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா பூஜைகளை நடத்தினார்.

**படங்கள்: துஷ்மந்த மாயாதுன்ன**

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 127 வாகன உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகள் விற்பனைக்கு

சேவை நிலைய உபகரணங்கள் (Service) இலகு வாகனம், கனரக வாகனம், வொயிஸ் கம்பிரசர், ஹைபிரசர் பம்ப் உட்பட சகல உபகரணங்களுக்கும் 05 வருட உத்தரவாதம். 0772447226, 0765745380 ஆரியதாச இன்டஷ்ரீஸ், கலகெடிஹேன வீதி, வெயன்கொட 069613

## வர்த்தகம்

### 210 வியாபார ஸ்தலம் தேவை

20 அடி கொள்கலன் பிரவேசிக்கக் கூடிய 3000 - 4000 சதுர அடி பரப்பில் பொரளை - ராஜகிரியவுக்குள் களஞ்சியம் அல்லது தரைமாடி வீடு வாடகை அடிப்படையில் தேவை. அழையுங்கள் - 0704323558 070016

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதிநவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக்கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங்கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ.55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு : 0112201700 070034

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

அம்பலங்கொடைக்கு அருகில் ஃபுட் சிட்டிக்கு ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கெள்ளப்படுவர். சிங்களம் பேசக் கூடிய தமிழ் ஊழியர்கள் விரும்பத் தக்கது. தொடர்பு - 077 6839039, 076 9763456. 069275

### 310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

கொழும்பில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணனி அறிவுடைய கணக்கு இலிகிதர் தேவை. 070 7394505. 069450

வத்தளையில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் பணிபுரிய அலுவலக எழுத்தாளர் (Office Clerk) உயர்தர வர்த்தக (commerce) பிரிவில் சித்தியடைந்த ஆங்கில, சிங்களம் மற்றும் கணினி அறிவுடையவர்கள் தேவை. திங்கள் முதல் வெள்ளி வரை நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும். Cliftex Industries (Pvt) Ltd.இல.18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை.தொ.பே. இல. 0 76 - 62003 00மின்னஞ்சல் : hr@cliftextiles.com 070072

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

தற்போது நடைபெற்று வரும் திட்டத்திற்கு கட்டிடத் துறையில் மின்சார வல்லுநர்கள் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள். (கொழும்பு) உடனடியாக அழைக்கவும். - 0726888600. 068763

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு, LED BULB ELEC TRONIC CARD TV REPAIR, உபகரணங்கள் REPAIR (PCB AND EQUIPMENT REPAIR) NVQ LEVEL 04 அல்லது அதற்கு சமமான தகுதி- கூடுதல் தகுதியாக MARKETING & ELECTRICAL இத்துறையில் குறைந்தபட்ச 05 வருட அனுபவம் கொண்டவர்கள் தேவை.இலவச தங்குமிடம் பின்வரும் முகவரிக்கு நேரில் வரவும்.இல. 18 வெலியமுன வீதி,ஹேகித்த வத்தளை, தொடர்பு : 0766200300Email : hr@cliftextiles.com 070068

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

அனுபவமுள்ள பூங்கா பராமரிப்பாளர் தேவை. கன்றுகளைப் பராமரித்தல் மற்றும் மண் பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். 45 வயதிற்குக் குறைந்த நபர்கள் மிகவும் பொருத்தமானது. தங்குமிட வசதிகளுடன் மாதாந்த சம்பளம் ரூ.45, 000/ -அழையுங்கள் - 077 7875440/ 0773541640 070075

### 325 தொழில்துறை பொது

கொழும்பு -12 ஆமர் வீதியில் நடத்திச் செல்லப்படும் பிரபல நீர்க்குழாய் துணைப்பாகங்கள் கம்பனிக்கு களஞ்சிய உதவியாளர்கள்/ தொழிலாளர்கள் தேவை. வயது 25 இற்கு மேல். நாளாந்த சம்பளம் 1500 முதல் அதற்கு மேல். கொழும்புக்கு அருகில் உள்ளவர்கள் மட்டும். 011-2331670, 076 9973978, 011 - 7397777. (இல. 301, பழைய சோனகத் தெரு. கொழும்பு -12) 069333

தெஹிவளையில் உள்ள மதிப்புமிக்க குடும்ப உணவகத்திற்கு வளிச்சீராக்கி மற்றும் சமையலறை உபகரணங்களில் அனுபவமுள்ள ஓர் பொது பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் உடனடியாகத் தேவை. சிறந்த சம்பளப் பொதி. ரூ. 90,000 + சேவைக் கட்டணம். அனுகூலங்கள் இலவச உணவு, போக்குவரத்து கொடுப்பனவுகள் உள்ளடக்கம். தொடர்பு 0777 307868. 069500

நீர்கொழும்பு பிரதேசத்தில் நடத்திச் செல்லப்படும் எமது நிறுவனத்திற்கு களஞ்சிய உதவியாளர் (Store Helper) மற்றும் 'கோல்சென்டர்' (Call Center) ஒன்றில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் மிக அவசரமாகத் தேவை. களஞ்சிய உதவியாளர்கள் நிறுவனத்தில் தங்கி வேலை செய்வதற்கு விரும்பும் ஆண்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு.077 - 2081528071 - 1336494 069700

வெல்டர்கள் அனுபவமுள்ள வெல்டர்கள் கொழும்பு -12 ஆமர் வீதியில் அமைந்துள்ளபைப் துணைப்பாகங்கள் நிறுவனத்திற்கு தேவை. வயது 25 முதல் அதற்கு மேல் நாளாந்த சம்பளம் ரூ. 3000/ - முதல் அதற்கு மேல் காலை 9 முதல் மாலை 5. 30 வரை. 011 7397777, 011 233 1670, 076 9973978. 068930

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

ikman.lk
it's what you want
The Trusted Market place for Buying & Selling

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

காணி விற்பனைக்கு - எத்துல்கோட்டே மாளிகாவ வீதி 20 பேர்ச் காணி வீட்டுடன் உடனடியாக விற்பனைக்கு. 076 - 4722658 067322

நுகேகொடை சிறந்த வீட்டுடன் 25 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. உயர் குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ளது. 0785505359. 068485

மாலபே அத்துருகிரிய வீதி 10 பேர்ச் காணி glomark இற்கு பின்னால் ஒரு பேர்ச் 1.5 mn. 077 0261563. 069402

ராஜகிரிய 02 வீடுகளுடன் 13.3 பேர்ச் காணி விற்பனைக்கு. காணிக்கு 12 அடி வீதி உண்டு. 0773906621 069564

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

ஸ்ரீ பாத மற்றும் நல்லதண்ணி மலையின் அருகாமையில் காணப்படும் ஹட்டன் வட்டவல குளிர்ச்சியான பகுதிகள் ஏக்கருக்கு ரூ. 3.6 இலட்சத்தில் இருந்து வசதியான கட்டண முறைகளுடன்இதோ உங்களுக்காக மேலும் தகவல்களுக்கு - 0716282307 069636

(1) ஹட்டன் பகுதியில் அழகான மலையினால் சூழப்பட்ட கண்கொள்ளாக் காட்சிகளைக் கொண்ட நிலங்கள், குடியிருப்பு மற்றும் விடுமுறை இல்லங்களுக்கு ஏற்றதாக 40 பேர்ச்சஸ் காணிகள், வசதியான கட்டண முறைகளுடன் இதோ உங்களுக்காக. மேலும் தகவல்களுக்கு இந்து - 071 6282307. 069641

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

களுபோவில ஹொஸ்பிட்டலிலிருந்து 300m பீரிஸ் மாவத்தை அம்பகஹவத்தையில் மூன்றாவது வீடு இரு புறமும் வாகன பார்க்கிங் வசதியுடன் மொத்தமாக 4 அல்லது 5 வாகனங்கள் பார்க் பண்ண முடியும். தரை முற்றாக டைல் பதிக்கப்பட்டுள்ளது. 03 ரூம்ஸ், 01 கிட்சன், 02 லிவிங் ரூம்ஸ்களுடன் உள்ளே 01 பாத் ரூமுடன் கொ ம்மோட்டும். வெளியே தனித்தனியே பாத்ரூமும் கெம்மோட்டும் உள்ளது. கம்பனிகள் நடத்து வ தற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். - தொடர்பு - 0712492349, 0 7 72492349 & 0716810879. 069157

### 671 வீடு சொத்து தேவை

கொழும்பு - 08 இல. 3/ 4 படுக்கையறை தொடர்மாடி அல்லது வீடு தேவை. அழையுங்கள் - 0704323558 070012



# இலங்கை வங்கி

## பெறுமதிமிக்க ஆதனங்கள் விற்பனைக்கு

| ஆதன இல. | ஆதனம் அமைந்துள்ள நகரம் | காணியின் விபரமும் அமைவிடமும் | ஆதனத்தின் வகையும் பரப்பளவும் | மதிப்பிடப்பட்டுள்ள சராசரி விலை (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|---|
| 180 | மினுவாங்கொட | "ஹிக்கஹவத்த" என அழைக்கப்படும் காணி. இல. 82, கொழும்பு வீதி, மினுவாங்கொட | வெற்றுக் காணி 1R 2.0P | 10.0 |
| 351 | வெல்லவ | புவக்கஹகொட்டுவ, இஹல அஸ்ஸெத்தும, வெல்லவ என்ற இடத்தில் அமைந்துள்ள "கூன்கஹவத்த" என்று அழைக்கப்படும் காணி | வெற்றுக் காணி 1A 2R | 1.6 |
| 380 | கடுவெல | முன்னாள் வரையறுக்கப்பட்ட சன்வோ குளோபல் (தனியார்) நிறுவனம். இல. 46/2, லனரோல் மாவத்தை, பஹல பொமிரிய என்ற இடத்தில் அமைந்துள்ள "தேவத்த ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணி | காணியும் கட்டடமும் 1A | 65.0 |
| 413 | மாவனல்லை | அல் முபாரிஸ் (தனியார்) நிறுவனம் "கொடதெனிய கும்புர இப்போது ஹைலண்ட்" இல. 4, ஹசன் மாவத்தை, மாவனல்லை | காணியும் வணிகக் கட்டடமும் | 490.0 |
| 468 | சிலாபம் | கப்றி ஹொட்டேல் "ஜயவத்த என அழைக்கப்படும் பறங்கித்தோட்டம்" மைக்குளம், சிலாபம் | ஹோட்டல் ஆதனம் 32.0P | 72.0 |
| 475 | தொம்பே | இல.387/B, தெகவத்த என்ற இடத்தில் அமைந்துள்ள "தொடமகஹவத்த" என்றழைக்கப்படும் காணி | காணியும் கட்டடமும் 1R 1.49P | 14.0 |
| 477 | அநுராதபுரம் | மான்கடவல என்ற இடத்தில் அமைந்துள்ள "மான்கடவல கெலே" என்றழைக்கப்படும் காணி | காணியும் கட்டடமும் 3R 3.2P | 30.0 |
| 500 | ஆனைமடு | ஆனைமடுவின் தென்னக்குறியாவ கிராமத்தில் அமைந்துள்ள "தென்னக்குறியாவக் கெலே மற்றும் தென்னக்குறியாவஹேன" என்றழைக்கப்படும் காணி | காணியும் கட்டடமும் 1R | 50.0 |
| 513 | வெலிகம | "கொலுகே வத்த எனப்படும் தெஹிகஹஹேன" இல. 41, கப்பறத்தோட்ட வீதி, சங்கானந்த மாவத்த, வல்லிவல, வெலிகம | காணியும் வீடும் 25.97P | 17.0 |
| 516 | கிளிநொச்சி | கிளிநொச்சி கரச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள "கிளிநொச்சிக்காடு" என்றழைக்கப்படும் காணி | காணியும் கட்டடமும் 3.45P | 40.0 |
| 517 | இரத்தினபுரி | இல. 122/3, அங்கம்மான வீதி, இரத்தினபுரி என்ற இடத்தில் அமைந்துள்ள "தெனியேவத்த" என்றழைக்கப்படும் காணி | காணியும் வீடும் 19.2P | 15.0 |
| 523 | நாவலப்பிட்டிய | தேக்கிந்த வீதி, பவ்வாகம, நாவலப்பிட்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள "இம்பூல்பிட்டிய தோட்டத்தின் பிரிக்கப்பட்ட பாகம்" என்றழைக்கப்படும் காணி | வெற்றுக் காணி 10.15P | 3.0 |
| 526 | யாழ்ப்பாணம் (சுழிபுரம்) | வரையறுக்கப்பட்ட கே.எம்.கே. சீ ஃபூட்ஸ் (தனியார்) நிறுவனம் "நொச்சிக்குழி" இல. 343, காரைநகர் வீதி, மூளாய், சுழிபுரம், யாழ்ப்பாணம் | காணியும் தொழிற்சாலைக் கட்டடமும் 1R 10.52P | 50.0 |
| 531 | பியகம | பட்டிவில, பொல்லேகல, பியகம என்ற இடத்தில் அமைந்துள்ள "கொஸ்கஹவத்த (காணித்துண்டு 01)" என்றும் "கொஸ்கஹவத்த மற்றும் ஹீன்பெந்தல கும்புர (காணித்துண்டு 02)" என்றழைக்கப்படும் காணி | வெற்றுக் காணி கா.து1- 1A 0R 25.0P கா.து 2- 15.0P | 45.0 |
| 535 | நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டியவில் அமைந்துள்ள "கொன்கஹமுலஹேன" என்றழைக்கப்படும் காணி | வெற்றுக் காணி 2A 0R 6.0P | 30.0 |
| 537 | வரக்காப்பொல | வரக்காப்பொலவில் அமைந்துள்ள "இப்போது வத்தை எனப்படும் பாலமகாவ அஸ்வெத்துமே கும்புர" என்றழைக்கப்படும் காணி | காணியும் இரண்டு மாடி வீடும் 1R 14.52P | 40.0 |

ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து (முதன்மைக் கொள்வனவாளர்கள் மட்டும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களுக்கான விலைகூறல்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மீளளிக்கப்படாக் கொடுப்பனவாக 2000 ரூபாயையும் (மேலதிகமாக பெ.சே.வரி @18% + SSCL @2.5% அறவிடப்படும்) மீளளிக்கப்படக்கூடிய கொடுப்பனவாக 50,000 ரூபாயையும் செலுத்தி 2024.10.25 வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைகூறுவோர், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தொடர்புடைய ஆதன இலக்கத்துடன் **'PROP/07/2024'** எனக் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையினுள் இட்டு 2024.10.28 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் 2024.10.28 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த அலுவலகத்தில் நடைபெறவுள்ள விலைகூறல் திறப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைகூறுவோரால் அனுப்பப்படும் விலைகூறல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.**

முகவரி :
**இலங்கை வங்கி,**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு - கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள் அலகு**
**3ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01**

**தொலைபேசி :**
உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன அறவிடல்) - 011-2386080 / 011-2203410
சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011-2203429 / 076 9627068
உதவி முகாமையாளர் - 011 220 3470 / 071 8418898

மின்னஞ்சல் : mgrforeclosed@boc.lk

- **www.boc.lk என்ற இணையதளத்தில் விசேட அறிவித்தல்களின் கீழுள்ள விற்பனைக்குள்ள ஆதனங்கள் பகுதி மற்றும் இலங்கை வங்கி முகநூற் பக்கம் என்பவற்றைப் பார்வையிடவும்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

**தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.**

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


Special Offer
STOCK Clearance SALE 25% OFF
KECT
KECT IMPEX (PVT) LTD
GLASS JARS
Round Jar 450gms
Diamond Jar 370ml
Fudkor Jar 400gms
Limited Time Only
Contact Us :
+94 704 323 558
+94 705 993 113
No 110/1A, Cotta Road, Colombo 08

Servisco
THE ULTIMATE SERVICE PROVIDER
077 385 35 40
011 4 367 267
මළ අපද්‍රව්‍ය ප්‍රවාහනය
Domestic & Industrial Sewage/ Waste Water Disposing

395, කඩුවෙල පාර, මාලබේ.

IMPORT
உங்களுடைய வியாபாரத்துக்காக எந்தப் பொருட்களையும் இந்தியா மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுங்கள்.
விபரங்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்
whatsapp
0706 723 953

ஜூகி மெஷின் ஆபரேட்டர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள்
(பயிற்சி பெற்றவர்கள் மற்றும் / பயிற்சி பெறாதவர்கள் விண்ணப்பிக்கலாம்)
பிலியந்தலையில் அமைந்துள்ள முன்னணி ஆடை தொழிற்சாலை ஒன்றில் Juki Machine Operators ஆண்கள் மற்றும் பெண்கள் 10 பேருக்கான வெற்றிடங்கள் உள்ளன.
தகுதி - சாதாரண தர பரீட்சை தேர்ச்சி போதுமானது.
ஆண்டுக்கு இரு முறை போனஸ் உட்பட பல சலுகைகள் வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி வழங்கப்படும். அனுபவ அடிப்படையில் அதிக சம்பளம்.
011 713 3080

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

Special Offer
STOCK Clearance SALE 25% OFF
KECT
IMPORTED FROM INDIA
ALUMINIUM MILK CANS
Limited Time Only
10 L 20 L
Contact Us :
+94 704 323 558
+94 705 993 113
No 110/1A, Cotta Road, Colombo 08


හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මගින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721


Nissan Fork Lift FOR SALE
3153 CC - Diesel
Made in Japan
Model - 2011
Loading Capacity 2.5T
with Tilt/Lift/Side Horizontal Movement
Contact: 0777699958

Sun Lanka
SANY

Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

VICTORIAN GUEST
Bandarawela victorianbungalow.lk
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
2km Away from Railway Station & Bandarawela Town
077 3 711 196 | 070 2 536 896



කොහුබත් වේලන කමත් සකස් කිරීම සඳහා
දැන්ම අමතන්න
APSARA GLOBAL HOLDINGS
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ.
0778 383 834
Email - asankasameera417@gmail.com



FOR HIGHEST OFFER
Mahindra Single Cab
Model - B M T PLUS VX
Year - 2014
Colour - lack White
Contact: 0777699958

ப்ளாஸ்டிக் கான்கள், வாழிகள் மற்றும் போத்தல்கள் உற்பத்தியாளர்கள்

விலை ரூ. 30/- இல் இருந்து
Conditions Apply
COMMERCIAL LINK
100. விஜய மாவத, பொருபன ரோட்டில் திரும்பி, ரத்மலான.
Email - commercialplastic@yahoo.com
0777 718 541 , 0777 718 542

LUXURY TWO STOREYED HOUSE ON 20 PERCHES LAND FOR SALE AT GALAWILAWATTA, HOMAGAMA
5 Bedrooms with 3 attached bathrooms, large sitting room, Store Room, Servant room & toilet, Huge Balcony with open terrace, Large Car park for 8 vehicles, Three-phase electricity, Well, Solar hot water, 200m to high-level road & Homagama Hospital, 700m to highway entrance & 100m to Galawilawatta Railway station.
Tel: 0771 199 678, 0712 327 740

"Pure Air" By Sebim
SEBIM
VISIT OUR STALL B 13, TECHNO 2024 AT BMICH ON 11TH, 12TH & 13TH OCTOBER 2024 FROM 9.00AM TO 9.00PM
PROFESSIONAL DUCT CLEANING SERVICE
- Garment & Other Industrial Factories
- Hotels & Restaurants
- Offices
- Warehouses & Carparks
- Embassies and High Commissions
Get your Air Conditioning. Exhaust & Fresh Air Ducts Professionally Cleaned For a Healthy Work Environment.

Hot Line : 077 105 0554/ 071 272 9259

LAND FOR SALE NEAR THE HIGH-LEVEL ROAD (WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA, NUGEGODA) EGODAWATTA ROAD, BETWEEN 2ND LANE AND WEERA MAWATHA. FACING A PADDY FIELD 8 PERCH BARE LAND FOR SALE.

2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to high-level road and Sri Jayawardenapura Campus, Close proximity to all convenience. Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

தார் பதித்தல்
காபட் பதித்தல்
உங்களது வீட்டில் அல்லது நிறுவனத்தில் அனைத்து நிர்மாணப் பணிகளும் ஒரே இடத்திலிருந்து
அனைத்து மூலப்பொருட்களுடன்
- ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම
- පෞද්ගලික පාරවල්
- කර්මාන්තශාලා පාරවල්
- ලෑන්ඩ්සේල් පාරවල් කාපට් ඇතිරීම හා තාර යෙදීම
- බොරළු යොදා පාරවල් සකස්කිරීම හා කොන්ක්‍රීට් කිරීම
- කාර් පාර්ක් කොන්ක්‍රීට් කිරීම හා කාපට් කිරීම
அப்சரா குளோபல் ஹோல்டிங்ஸ்
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ.
0778 383 834
Email - asankasameera417@gmail.com

The Towel Factory
PROUDLY INTRODUCING OUR "HOTEL & SPA COLLECTION"

Embroidery AVAILABLE ON THIS ITEM
BEST PRICE
765, Galle Road, Nalluruwa, Panadura.
0769909554 / 0722887755
www.thetowelfactoryshop.com | thetowelfactory@gmail.com

கண்டி மாவட்டம், நாவலபிட்டியில் (Hyndford) 160 பேர்ச்சஸ் சொத்து விற்பனைக்கு
நகரப் பிரதேசம் 1750 சதுர அடிக்குள் கட்டப்பட்ட 4 படுக்கையறை வீட்டுடன் சிறிய வீடு, 160 பேர்ச்சஸ் காணி.
காணியின் ஒரு பகுதியில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. கருவா, மிளகு மற்றும் ஏனைய பயிர்களை நடலாம். சேர்கியூட் பங்களா அல்லது சுற்றுலா அரங்கிற்கு மிகவும் பொருத்தமானது.
ஓக்வின் ஹோட்டல் மற்றும் கலபொட நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில், ரயில் நிலையம், பிரதான பஸ் தரிப்பிடம், ஆதார வைத்தியசாலைக்கு 15 நிமிட பிரயாணம். அத்துடன் கண்டி மரபுரிமை நகர கோலுக்கு 1 மணி நேர பிரயாணம். சொத்திலிருந்து நுவரேலியா – சிறிய இங்கிலாந்துக்கு 1 1/2 மணி நேரம்.
குழாய் நீர், மின்சாரம், ஊற்று கிணற்று நீர் போன்ற ஏனைய வசதிகள்.
கொள்வனவு செய்பவருக்கு காணித்துண்டுகளாக விற்பனை செய்யலாம்

ஒரு பேர்ச் 170.000.00. இரு வீடுகளுடன். விலை பேசித் தீர்க்கப்படலாம்.
விலை நேர்மையான கொள்வனவாளருக்கு மாத்திரம்
தொடர்புகள்: தொலைபேசி இல. 0714 096 484

KALUTARA
2-STOREY HOUSE FOR SALE

Land Size : 20 Perches
House Size: 2000 Sq.ft., 2-storey house + rooftop area
03 Bedrooms, 1 Bathroom
Living and dining areas, pantry, parking for 1 vehicle
Price: 9.5 Million (95 lakhs) - Negotiable
LOCATION :
- 4 KM TO KALUTARA TOWN
- 10 KM TO GALANIGAMA HIGHWAY ENTRANCE
- 6 KM TO KALUTARA NAGODA GENERAL HOSPITAL
- 11 KM TO DODANGODA HIGHWAY ENTRANCE
NOTE : URGENT SALE DUE TO MIGRATION
CONTACT DETAILS :
WhatsApp: +61 460 620 788
Email: pamodas.pm@gmail.com


Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# ஈரான் அணு உலைகள் மீது தாக்கத் திட்டமிடும் இஸ்ரேல்?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக அரசியலில் மேற்கு ஆசியா எப்போதும் தனித்துவமான இடத்தை அதன் எண்ணெய் வளத்தினால் கொண்டிருக்கின்றது. தற்போது இஸ்ரேல் நடத்தும் போரானது அத்தகைய வளம் கொண்ட மேற்காசியாவில் தனது நீண்ட இருப்பை உறுதி செய்வதாகவும் மேற்குலகத்தின் நலன்களை முழுமைப்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது. காசாவில் தொடங்கிய யுத்தம், லெபனான் நோக்கி விரிவடைந்திருப்பதோடு லெபனான் நாட்டின் எல்லைக்குள் ஊடுருவி இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

லெபனானின் தலைநகரில் கணிசமான பகுதிகளை வான்வழித் தாக்குதலூடாக அழித்து வரும் இஸ்ரேல், ஈரானின் அணு உலைகளை தாக்கியளிக்க வேண்டும் என்ற கோரிக்கை யூதர்களால் மட்டுமின்றி அமெரிக்க புலனாய்வுத் துறையினராலும் கூறப்பட்டு வருகிறது. இக்கட்டுரை ஈரான் அணு உலை மீதான தாக்குதலின் யதார்த்தத்தை தேடுவதாக உள்ளது.

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நப்லாலி பெனற் ஈரான் மீதான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொள்ள வேண்டும் எனவும், குறிப்பாக ஈரானின் அணு உலைகளை தாக்கியழிக்க வேண்டும் எனவும், கூறியுள்ளது. மிகநீண்ட காலத்துக்கு பின்னர் இத்தகைய வாய்ப்பு இஸ்ரேலுக்கு கிடைத்துள்ளது. அதனை சரியாக பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம் அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோபைடன் அவ்வகை தாக்குதல் ஒன்று நிகழ்த்தப்படுமாக இருந்தால், அது பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை செய்ததோடு,. இஸ்ரேல் இத்தகைய தாக்குதலை மேற்கொள்ளக் கூடாது எனவும் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இதனை ஆழமாகத் தேடுவது அவசியமானது.

ஒன்று மேற்காசிய இஸ்லாமிய அரசியலில் மேற்குலகம் எப்போதுமே விழிப்பாக இருந்துள்ளது. தனது அரசியல் பொருளாதார நலன்கள் மட்டுமன்றி, இராணுவ நலனையும் ஒன்று சேர்த்து மேற்காசிய அரசியலை கையாள விரும்புகிறது. கடந்த கால வரலாறு முழுவதும் அதனையே அமெரிக்காவும் அதன் தலைமையிலான மேற்கு நாடுகளும் வெளிப்படுத்தியுள்ளன.

1979ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட புரட்சி அமெரிக்காவை அதீத நெருக்கடிக்கும் அவமதிப்பிற்கும் தள்ளியிருந்தது. இதன் பின்புலத்திலிருந்து ஈரானையும் ஈரானிய புரட்சியாளர்களையும் அழித்து ஒழிப்பது என்ற திட்டமிடலோடு பல போர்களையும், பொருளாதாரத் தடைகளையும் நடத்தியது. அணு விஞ்ஞானிகளையும் இராணுவ தளபதிகளையும் ஆட்சியாளர்களையும் மேற்கு இஸ்ரேலியக் கூட்டு இதன் மூலம் அழிவுக்கு உள்ளாக்கியிருந்தது.

இதன் இன்னொரு கட்டமாகவே தற்போதைய போரின் முனைப்பு விளங்குகிறது. ஹமாஸ் மீதான தாக்குதலை தொடங்குகின்ற போது இஸ்ரேலிடம் தெளிவான, ஈரான் மீதான தாக்குதலுக்குரிய உத்தி காணப்பட்டது. அதன் பின்புலத்தில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஒன்றிணைந்து கொண்ட போதும், அவ்வப்போது உலகத்தின் கண்களை மறைத்துக் கொள்வதற்கு தாராள ஜனநாயக வடிவத்தை காட்டும் விதத்தில் இஸ்ரேல் மீது எச்சரிக்கைகளையும் போர் நிறுத்த உடன்படிக்கைகளையும் பேச்சுவார்த்தைகளையும் சமாதான உரையாடல்களையும் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்துள்ளது.

ஆனாலும் ஈரானுடைய அணு ஆற்றலே இஸ்ரேல் அமெரிக்க கூட்டின் இலக்காக உள்ளது. அத்தகைய இலக்கை அடைவது தற்போது ஏற்பட்டிருக்கும் முக்கியமான இராணுவ தந்திரோபாயமாகும்.

**" ஈரானின் அணு உலைகளை தாக்கியளிக்க வேண்டும் என்ற கோரிக்கை யூதர்களால் மட்டுமின்றி அமெரிக்க புலனாய்வுத் துறையினராலும் கூறப்பட்டு வருகிறது. "**



ஈரானை அழிப்பது என்பது ஈரானின் மண்ணின் மேற்கொள்ளப்படும் அழிப்புக்களாக அமைவது பொருத்தமானது என இஸ்ரேல் கருதுகிறது. அதற்கு அமைவாகவே ஈரானின் நிலப்பரப்பில் தனது புலனாய்வு உத்திகளைக் கொண்டு அழிவுகளையும் சிதைவுகளையும் மூர்க்கத்தனமாக நிகழ்த்தி வருகின்றது.

இதனுடைய அடிப்படைகளுக்குள்ளேயே ஈரானின் அணு உலை மீதான தாக்குதலில் ஈரானின் ஆதரவு பெற்ற ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கள் அழிக்கப்பட்ட நிலையில் ஈரான் பாரிய நெருக்கடியை இஸ்ரேலிடமிருந்து எதிர்கொள்ள தொடங்கியிருக்கிறது. ஈரானை நோக்கிய வான்வழித் தாக்குதலும் ஏவுகணை தாக்குதலும் துல்லியமாக அதிகரிக்க தொடங்கியுள்ளன. இதனால் ஈரான் மீதான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையிலேயே ஈரான் அணு ஆயுதத்தை கையிருப்பில் கொண்டிருக்கின்றது என்ற உரையாடல்களும் அதன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த வழிவகுக்குமென இஸ்ரேல் கருதுகிறது.

**"ஹமாஸ் மீதான தாக்குதலை தொடங்குகின்ற போது இஸ்ரேலிடம் தெளிவான, ஈரான் மீதான தாக்குதலுக்குரிய உத்தி காணப்பட்டது. "**

அதற்கான இலக்குகளை கட்டமைத்துக் கொண்டு நகர திட்டமிடும் இஸ்ரேல், ஈரானின் எல்லைக்குள் தாக்குதலுத்திகளை தொடக்கியுள்ளதாகவே தெரிய வருகின்றது. அணுகுண்டுகளும் அதன் பரிசோதனை நிலையங்களும் அதனை அண்டிய பிரதேசங்களும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாக செய்திகளை மேற்கும் இஸ்ரேலும் பரப்பி வருகின்றன. மேற்குலகத்தினுடைய ஊடகப் பிரசாரம் ஈரானுக்கு எதிராக பாரிய அளவில் திரும்பி உள்ளது.

இதனால் இஸ்ரேலின் தாக்குதல் வாய்ப்பான சூழலை நோக்கி நகர்கிறது. இதே உத்தியையே ஈராக்கின் அணு உலைகளை தாக்க இஸ்ரேல் முனைந்து, வெற்றி கண்டது. ஈராக்கின் ஓசிராக்கை 1981ஆம் ஆண்டு எவ்வாறு இஸ்ரேல் தாக்கி அழித்ததோ, அதேபோன்று ஈரானின் அணு உலைகள் மீதும் தாக்கி அழிக்க திட்டமிடுவதாக தெரிய வருகின்றது.

இதனை எதிர்கொள்ளும் விதத்தில் ஈரானும் ஈரானுடைய ஆட்சியாளர்களும் தயாராக இருந்தாலும், அவர்கள் ஒரு பதற்றமான சூழலில் காணப்படுவதும், தமது தலைமைகளை பாதுகாப்பதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளும் இஸ்ரேலின் தாக்குதலை பெரிய அளவில் தடுக்கும் ஆற்றல் கொண்டவர்களாக இல்லை என்பதை காட்டுகிறது. ஆனால் ஈரானின் அணு உலைகள் மீதான தாக்குதலை தடுப்பது மட்டுமல்ல ஈரானிய தலைவர்களை பாதுகாக்கின்ற செய்முறைக்கும் இராணுவ ரீதியான ஒத்துழைப்பை சீனா வழங்குவதாகவும் ரஷ்யா அதற்கான ஒப்புதலை கொடுத்திருப்பதாகவும் இரு நாடுகளும் ஈரான் மீதான தாக்குதலையும் அணு உலை மீதான தாக்குதலையும் தடுக்கும் விதத்தில் இராணுவ ரீதியில் செயல்பட முனைவதாகவும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. அதனால் இப்போது அது புதியதொரு தளத்தை நோக்கி நகரும் என்ற இராணுவப் புலனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் இலகுவானதாகவோ வெற்றிகரமானதாகவோ அமைவதற்கான வாய்ப்புகளை பலவீனப்படுத்தி இருக்கிறது. சீனாவின் ரஷ்யாவின் இராணுவ ரீதியான ஒத்துழைப்பும் போரின் திசையை புதிய வடிவத்தில் கொண்டு செல்வதற்கான வாய்ப்பினை கொடுக்க முடியும். அதனை சீனா முழுமையாக வெளிப்படுத்துமா என்பது சந்தேகமானதே. எனவே ஈரான் மீதான இலக்கு என்பது இஸ்ரேலுக்கு அவசியமானதாக இருந்தாலும் அதன் நடைமுறை ரீதியான நெருக்குவாரங்கள் அதிகமான விளைவுகளை மேற்காசிய அரசியலில் ஏற்படுத்த விளைவதாகவே தெரிகிறது.

ஒரு நீண்ட போராக மட்டுமின்றி உலக வல்லரசுகள் பங்கெடுக்கின்ற ஒரு போராக இப்பிராந்திய போர் மாறுவதற்கான சூழல் காணப்படுகிறது. இஸ்ரேலுக்கு பின்னால் அமெரிக்க வல்லரசும் ஐரோப்பிய அரசுகளும் செயல்படுவது போன்று ஈரானுக்கு பின்னால் சீனாவும் ரஷ்யாவும் ஒன்றிணையுமானால் வல்லரசுகளின் போர் உத்திகள், ஆயுத தளபாட அரசியலுக்கான போராகவும், இஸ்லாமியர்கள் பலியிடலுக்கான போராகவும் அமையும்.

# உயிர்காத்த போராளி எச்.எச்.விக்கிரமசிங்க

**மலையக சமூக அரசியல் செயல்பாட்டாளரும் முன்னாள் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான (1971 – 1983) எச்.எச். விக்கிரமசிங்கவின் பவள விழாவுக்கு, மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அரசியல் பீட உறுப்பினரும் பொதுச் செயலாளருமான லயனல் போபகே அவுஸ்திரேலியாவிலிருந்து அனுப்பிய குறிப்புகள்.**



1990 பெப்ரவரி 28 ஆம் திகதி நீர்கொழும்பு கொச்சிக்கடையில் இருந்து கடல் வழியாக படகு மூலம் தமிழ்நாடு திருச்செந்தூர் சென்று, மீண்டும் விமான மூலம் இலங்கை திரும்பிய ஜே.வி.பி. முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அவர் தமிழ்நாடுசெல்ல உதவிய அவரது நண்பர் எச்.எச். விக்கிரம சிங்கவை கொட்டாஞ்சேனையில் அவரது இல்லத்தில் சந்தித்தபோது.....



ஜே.வி.பி. முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இலங்கை திரும்பியபோது இந்திய இல்லத்தில் நடைபெற்ற விழாவில், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அசோக் காந்தா மற்றும் எச்.எச். விக்கிரமசிங்க வுடன்....

1970களின் இறுதியில் ஆரம்பமான எங்கள் தொடர்பு, நீண்டகால இடைவெளியில் தோழராகவும் நண்பராகவும் நீடித்தது. உங்களின் முக்கால் நூற்றாண்டு வாழ்வு வியக்கத்தக்க நினைவுகளால் நிறைந்தது. உங்களின் 75ஆவது பிறந்த நாளையொட்டி எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எங்கள் இளமை வாழ்வில் மிகப்பல. துயர் நிறைந்த பல தருணங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். எங்களின் மறக்கமுடியாத அரசியல் வாழ்வு ஜேவிபி யின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பமானது. கொழும்பு 13, கே.சிறில் பெரேரா மாவத்தையில் அமைந்திருந்த வீரசிங்க மரக்காலையில் ஒரு சிறு அறையில் கூட்டு வாழ்க்கையாக அந்த வாழ்வு இருந்தது. முற்போக்கான அரசியலில் நாங்கள் அனைவரும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தோம். நீதியானதும் நேர்மையானதுமான உன்னத இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றும், அங்குதான் சகல இனங்களும் இணக்கத்தோடு வாழமுடியும் என்றும் நாங்கள் நம்பியிருந்தோம். அந்தக்கனவு இன்னும் அடைந்துதீர வேண்டிய கனவாகவே இருக்கிறது. எங்களின் வாழ்நாளில் அந்தக்கனவை அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

1970 தோழர் பிரின்ஸ் குணசேகரவும் ஏனைய தோழர்களும் முன்னின்று நடத்திய அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டத்தின்போது, இயக்கத்தில் நீங்கள் இணைந்தீர்கள். வீரகேசரி பத்திரிகையில் மிக நீண்ட நேரம் வேலை பார்த்துவிட்டு, பின்னர் கட்சி அலுவலகத்திற்கு வந்து, அன்றைய சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள் பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடிச் சென்ற நாட்கள் என் நினைவில் பசுமையாக உள்ளன. அக்காலத்தில் மாத்தளை செல்வா என்று நீங்கள் அழைக்கப்பட்டதையும், ஜேவிபி யின் செயற்பாடுகளுக்கு தமிழ்ப் பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து உதவியதையும் நான் அறிவேன். அங்கொடவில் கொகிலவத்தையில் அமைந்திருந்த ஜேவிபி யின் சக்தி அச்சகத்தில் ஊடகம் சார்ந்த பல வேலைகளுக்கு உதவியிருக்கிறீர்கள்.

ஜேவிபி நடத்திய 'செஞ்சக்தி' என்ற இயக்கத்தின் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ்க் கட்டுரைகளை ஒப்புநோக்கிப் பார்த்துத் திருத்தி உதவியிருக்கிறீர்கள். எனது 'தேசிய இனப்பிரச்சினை பற்றிய ஒரு மார்க்சிய ஆய்வு' என்ற கட்டுரையை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறீர்கள். இந்தக் கட்டுரையை நான் 1973 இல் மேகசின் சிறைச் சாலையில் இருந்தபோது எழுதியிருந்தேன். ஜேவிபி யின் முன்னணித் தலைவர்கள் மாத்தளை செல்லும்போதெல்லாம், உங்கள் பெற்றோரின் வீட்டிற்குச் சென்று, மறைந்த உங்கள் அன்னையின் விருந்தோம்பலில் மகிழ்ச்சி அடைந்திருக்கிறோம்.

கறுத்த ஜூலை இன சங்காரத்தினதும், 1983 ஜூலை மாதத்தில் ஜேவிபி இயக்கம் தடை செய்யப்பட்டதின் பின்னரும் நிலைமை முற்றாகவே மாறிவிட்டது. பல்வேறு காரணிகளால், குறிப்பாக 1983இன் நடுப்பகுதிக்குப்பின் இலங்கையின் தேசியப்பிரச்சினை பற்றி ஜேவிபி கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கெதிராக ஜேவிபியை விட்டு நான் விலக நேர்ந்தது. அதன் பின்னர் எங்களின் உயிர்ப் பாதுகாப்பிற்காக எங்கள் எங்கள் வழிகளில் போராடவேண்டியதாயிற்று. இந்த ஆபத்தான வேளைகளில் கட்சித் தோழர்களுக்கு நீங்கள் தொடர்ந்து உதவிக் கொண்டிருந்தீர்கள். ராகம சோம, சோமவன்ச அமரசேகர போன்ற தோழர்களுக்கு நிதிஉதவியுடன் ஏனைய உதவிகளையும் செய்தீர்கள்.

பிலியந்தலையில் உள்ள பண்ணைக்குச் செல்ல வேண்டாம் என்ற உங்களின் ஆலோசனையைக் கேட்டிருந்தால், கேகாலையைச் சேர்ந்த தோழர் ரஞ்சிதம் குணரத்தினம், மாத்தளையைச் சேர்ந்த பெரியகருப்பையா தங்கராஜா போன்ற தோழர்களை நாம் இழந்திருக்கமாட்டோம். உங்கள் யோசனையைக் கேட்காமல், அங்கு சென்ற அந்தத் தினத்திலேயே அவர்கள் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் தோழர் சோமவன்ச அமரசிங்கவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் பெரும் உயிராபத்து காத்திருந்த வேளையில், அவர்களின் குடும்பம் பாதுகாப்பாக இந்தியா செல்வதற்கு, உங்கள் உயிரையும் பணயம் வைத்து நீங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டீர்கள். இந்தியாவிற்கு அவர்களுடன் சென்று, அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறவும் தனிப்பட பேருதவி புரிந்தீர்கள். ஓர் இராணுவ கேப்டனின் உதவியுடன் அமரசிங்க கொச்சிக்கடை வரை சென்று, அங்கிருந்து அவர் படகினூடாகத் தமிழகத்தின் திருச்செந்தூர் சென்று சேர்ந்தார். அதேவேளை அமரசிங்கவின் மனைவியும் மகனும் பம்பாய்க்கு விமானம் மூலம் சென்று, அங்கிருந்து கேரளாவின் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தனர்.

அதேசமயம் நீங்கள் கட்டுநாயக்கவிலிருந்து விமானம் மூலம் இந்தியா சென்று, திருச்செந்தூரிலிருந்து அமரசிங்கவை திருவனந்த புரத்திற்குக் கூட்டிச்சென்று, அங்கு உங்களுக்குத் தெரிந்த ஒருவர்மூலம் வாடகைக்கு வீடு எடுத்துக்கொடுத்து, அமரசிங்க குடும்பத்தினரை அங்கு குடியமர்த்தினீர்கள். அங்கு சில காலம் அவர்கள் தங்கியிருந்து லண்டன் சென்றடைந்தனர். துபாயிலிருந்து தோழர் ரணசிங்க இந்தப்பிரயாணச் செலவுகளுக்கு உதவியிருந்தார்.

உங்களின் ஈடுபாட்டின் மீதான நம்பிக்கை, ஆளுமை, கைக்கொண்ட கொள்கையின் மீது நீங்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பு என்பனவற்றிற்கு இது ஒரு குறிகாட்டி. 1980களின் இறுதிப்பகுதியில் நம்மிருவருக்கும் ஏற்பட்ட உயிராபத்துகளிலிருந்து நாம் தப்பித்திருக்கிறோம். 1990ஒக்டோபர் மாதத்தில் நீங்கள் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு 1992இல் நீங்கள் விடுதலை அடைந்தீர்கள்.

அந்த ஆபத்தான நாட்களின் பின், நாங்கள் வெவ்வேறு பாதைகளில் பயணிக்க வேண்டியதாயிற்று. உங்களை எதிர் நோக்கியிருந்த கஷ்டங்களை வென்று, உங்களால் இயன்ற அளவு

20 பக்கம் பார்க்க...



லயனல் போப்பகே, அவுஸ்திரேலியா

# மீண்டும் தபால் திணைக்கள வசமான நுவரெலியா தபாலகம்

உலக அஞ்சல் தினத்தில் நுவரெலியா தபாலகத்தையும் அதனுடைய சொத்துக்களையும் எவருக்கும் அல்லது எந்த நிறுவனத்துக்கும் விற்பனை செய்வதில்லை என்ற வரலாற்று முக்கியத்துவமிக்க தீர்மானத்தை அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்திருந்தார்.

இது இலங்கையின் பழமையான வரலாற்றை கொண்ட தபால் திணைக்களத்துக்கு கிடைத்த ஒரு பெருமையும் அங்கீகாரமுமாகும்.

தபால் சேவை என்பது பழமையான அரச துறைகளில் ஒன்றாகும். இலங்கையில் சுமார் 224 வருட நீண்ட வரலாற்றை கொண்டது. புறாக்கள் தபால் சேவை, குதிரைவண்டித் தபால் சேவை பின்னர் ரயில் தபால் என இலங்கையில் தபால் சேவை வளர்ச்சியடைந்தது. 1500களில் ஆண்ட போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் தபால் சேவை போதிய வளர்ச்சியடைவில்லை. 1815 ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் தபால் சேவையை மறுசீரமைத்து, இலங்கையின் முதல் நிரந்தர தபால் அலுவலகத்தை 1882 ஆம் ஆண்டு கொழும்பில் அப்போதைய ஆளுநரின் இல்லத்திற்கு எதிரே, கொழும்பு கோட்டையில் (தற்போதைய ஜனாதிபதி மாளிகைக்கு எதிரே) அமைத்தனர். இதன் கட்டுமான பணிகள் சுமார் 5 ஆண்டுகள் நடைபெற்றதாக கூறப்படுகின்றது. இதுவே இலங்கையின் முதல் தந்தி மற்றும் தொலைபேசி பரிமாற்ற நிலையமாகவும் செயற்பட்டது.



அதனைத் தொடர்ந்து படிப்படியாக காலி, மாத்தறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கண்டி, நுவரெலியா என தபாலகங்களின் எண்ணிகை அதிகரித்தது. குறிப்பாக மலையகத்தில் பெருந்தோட்டகைத்தொழில் வளர்ச்சி காரணமாக தபால் நிலையங்கள் பல முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டன. இன்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட தபால் நிலையங்களை அந்நகரங்களில் காணலாம்.

அந்தவகையில் நுவரெலியா தபால் நிலையம் தபால் சேவை வரலாற்றின் பெருமைக்குரிய நினைவுச்சின்னமாக விளங்குவதுடன் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நகரின் மத்தியில் அமைந்துள்ளது. நுவரெலியா நகருக்குச் சென்றால், பிரதான பஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள கவர்ச்சியான சிவப்பு நிறக் கட்டடத்தை காணலாம். காலையிலும் மாலையிலும் நகரத்தை குளிர்ச்சியாக வைத்திருக்கும் அடர்ந்த பனிமூட்டத்தில் இக்கட்டடம் தெரியும் போது பிரித்தானியாவின் சுற்றுச்சூழலைப் போல காட்சியளிக்கும். அதுமட்டுமின்றி பிரித்தானிய பாரம்பரிய கட்டடக்கலையின் சிறப்பம்சங்களை இத் தபாலகத்தில் காணலாம்.

ஆங்கிலேய Tudor கட்டடக்கலை நுட்பத்தில் சிவப்பு நிற செங்கற்களை கொண்டு 1882ஆம் ஆண்டு இக்கட்டடம் அமைக்கப்பட்டது. இரண்டு மாடிகளைக் கொண்ட கடிகார கோபுரம் பிரமிட்டு வடிவ கூரையுடன் முடிவடைகின்றது. இங்குள்ள நிர்மாணங்களுள் மணிக்கூட்டு கோபுரம் முக்கியத்துவம் வாய்ந்தது. கடிகாரம் இன்றும் இயங்கும் நிலையில் உள்ளது. 40 அடி உயரமுள்ள இந்த கடிகார கோபுரத்தின் கடிகாரம் பித்தளை மற்றும் எஃகினால் செய்யப்பட்டுள்ளதுடன் அது கனமான கயிற்றுக் கப்பிகளால் இயக்கப்படுவது சிறப்பம்சமாகும்..

வரலாற்று ஆர்வலர்கள் அல்லது முத்திரை சேகரிப்பாளர்களுக்கு இதுவொரு வரப்பிரசாதம். தபால் அலுவலகத்தில் ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தபால் பெட்டி, அலுவலக உபகரணங்களை காணலாம்.

மேற் தளத்தில், தபால் அதிபருக்கான விடுதி காணப்பட்டது. தற்போது அது சுற்றுலா விடுதியாக இயங்குகின்றது..

நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தபால் அட்டைகள் மற்றும் கடிதங்களை நினைவுப் பரிசாக இந்த தபால் நிலையத்தின் ஊடாக அனுப்ப விரும்புகின்றனர்.

2007ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தின் பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் நினைவுச்சின்னங்களின் பட்டியலில் இத்தபாலகம் இடம்பிடித்தது.

1990 ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி உலக தபால் தினத்தை நினைவு கூரும் வகையில் நுவரெலியா தபாலகத்தின் புகைப்படத்துடன் கூடிய ரூ.10 முத்திரை வெளியிடப்பட்டது.

எனினும் அதனுடைய அழகு, நேர்த்தி, மற்றும் பழமை என்பவற்றுக்கு ஆபத்து ஏற்பட்டது. இதனை சுற்றுலா விடுதியாக மாற்றுவதற்கான யோசனைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தன. 2012ஆம் ஆண்டு தபால் அதிபருக்கான விடுதி சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதனை சுற்றுலா மையம் என்ற பெயரில் தனியார் நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்வதற்கு அப்போதிருந்த அரசாங்கத்தால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.


ஆனால் பல தரப்பினரின் எதிர்ப்பு மற்றும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அம்முயற்சி கைகூடவில்லை. ஆனால் கடந்த 2023ஆம் ஆண்டு மீண்டும் அப்பொக்கிஷத்துக்கு ஆபத்து ஏற்பட்டது. கண்டி, காலி கோட்டையிலுள்ள பாரம்பரிய கட்டடங்கள் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.






நுவரெலியா தபாலகத்தை வெளிநாட்டு நிறுவனமொன்று.ஹோட்டல் அமைக்கும் திட்டத்துடன் கையகப்படுத்த முயன்றது. அதற்கான ஒப்புதல்கள் இடம்பெற்று தபாலகம் கிட்டத்தட்ட பறிபோகும் நிலைமை ஏற்பட்டது. இதற்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்ட போதும் அவர்களின் குரல்கள் அடக்கப்பட்டன.

எனினும் ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்றதை தொடர்ந்து நிலைமை தலை கீழாக மாறியது.




தபால் திணைக்களத்தின் 150 வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் விஜித ஹேரத் நுவரெலியா தபாலகம் மற்றும் காணி என்பன தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அன்றி வேறு எந்தவொரு நடவடிக்கைக்கும் வழங்கப்படமாட்டாது என்ற அறிவிப்பை விடுத்திருந்தார்.

இது இலங்கையின் பழமையான வரலாற்றை கொண்ட தபால் திணைக்களத்துக்கு கிடைத்த ஒரு பெருமையும் அங்கீகாரமுமாகும்.

எனவே தபால் சேவை வரலாற்றின் பெருமைக்குரிய நினைவுச்சின்னமாகவும் சிறந்த கட்டடக்கலை அம்சமாகவும் காணப்படும் நுவரெலியா தபாலகத்தை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். பல மேற்கத்திய நாடுகளில் மக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாப்பதிலும், அதன்.பழமையை பேணுவதிலும் உணர்வு பூர்வமாக செயற்படுவதை காண முடியும்..

அதற்கான சட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும் முன்னோர்களின் அரும்பொக்கிஷங்களை பாதுகாப்பது தமது கடமையென வாழ்கின்றனர்.

எனவே நுவரெலியா தபாலகத்தை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவைரினதும் கடமை.

இதேசமயம் 224 வருட தபால் சேவை வரலாற்றை கொண்ட இலங்கையில் மலையக தோட்டப்புற மக்களுக்கு உரிய முறையில் கடிதங்கள் கூட கிடைப்பதில்லை என்பது இன்று வரை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருந்துவருகிறது.

பல வருடங்களாக இதுதொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நேர்முகத் தேர்வுகளுக்கான கடிதங்கள், நீதிமன்ற கட்டளைகள், நகை அடகு மீட்டல் போன்ற முக்கிய ஆவணங்கள் காலம் முடிவடைந்த பின்னரே கைகளில் கிடைப்பதால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு பிரதான காரணம் தோட்டங்களில் லயன் வீடுகளுக்கு இலக்கங்கள் கிடையாது.

இதனால் தோட்ட அலுவலகம், தேயிலை கொழுந்து நிறுக்கும் இடங்களிலுள்ள அலுவலகங்களிலேயே கடிதங்கள் வருகின்றன. இதனால் இவை தாமதித்தே கிடைப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பலர், கஷ்டப்பட்டு உழைத்து சேர்ந்த நகை, வேலைவாய்ப்பு கல்வி என அனைத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே புதிய அரசாங்கம் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வசந்தா அருள்ரட்ணம்**

# தோட்டத்தொழிலாளர்கள் புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டும்

ஜனாதிபதி தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வெற்றியீட்டி ஜனாதியாக தெரிவு செய்யப்பட்டமைக்கு, இலஞ்சம், ஊழல், முறைக்கேடுகள் முற்றாக ஒழிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களே ஆகும்.

அந்த அறைக்குள், இந்த நாட்டில் இலஞ்சம், ஊழல், முறைக்கேடுகள் இடம்பெற்றமையை நாட்டு மக்களும் நன்கறிந்த விடயமும் கூட. எனவேதான் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த மக்களில் ஏறத்தாழ 43 சதவீத மக்கள் அநுர குமார திசாநாயக்கவுக்கு வாக்களித்து அவரை வெற்றியடையச் செய்துள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் இந்த நாட்டின் வரலாற்றில் முன்னொரு காலத்தில் இடம்பெறாத விதத்தில் மிக அமைதியாக நடைபெற்றமை மகிழ்வுக்குரியது.

தற்போதைய ஜனாதிபதிதான் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த தற்கிணங்க, வீண் விரயங்களை, ஊழல்கள், இலஞ்சம் ஆகியவற்றை ஒழிக்கும் விதத்தில் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளார். அவரின் இந்த செயற்பாடுகள் இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களையும் மகிழ்வுறச் செய்துள்ளது.

இந்த நாட்டில் இதுவரை காலமும் மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகமாக தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதியினால் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்கப்படும் என தன்னிச்சையாக அறிவிக்கப்பட்ட போதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1350 ரூபாவே வழங்கப்படுகிறது. இந்த தொகை முன்னைய சம்பளத்தை விட 450 ரூபா மாத்திரமே அதிகம்.

தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களில் கணிசமான தொகையினர் தமது வாழ்க்கையை உரிய முறையில் திட்டமிடாதவர்களாக அல்லது திட்டமிடத் தெரியாதவர்களாக வாழ்வதனால்தான் அவர்களின் வாழ்க்கை துயரம் நிறைந்ததாக திகழ்கிறது.



இதேவேளை, கொவிட் 19 தொற்றினால் இந்த நாடு முடக்கப்பட்டு மீளவும் திறக்கப்பட்டபோது மலையக பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் சாராய தவறணைகளுக்கு முன்பாக முண்டியடித்துக் கொண்டு, வரிசையில் நின்ற காட்சிகளை தொலைக்காட்சி செய்திகளினூடாக அறியக்கூடியதாக இருந்தது.

தோட்டத் தொழிலாளர்கள் தமது கடுமையான உழைப்பின் மூலம் ஏற்படும் உடல் அசதியைப் போக்க, வேறு மாற்று வழிகளை கைக்கொண்டிருந்தால், மதுவுக்கு செலவு செய்த பணத்தை மிகுதிப்படுத்தி அந்த பணத்தை தமது குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்படுத்தி இருக்கலாம். எனவே, இனிவரும் காலங்களிலாவது தோட்டத் தொழிலாளர்கள் புதிய கோணத்தில் சிந்தித்து செயற்படவேண்டும். இந்த நாடு கொவிட் 19 கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த கால கட்டத்தில் கொழும்பு மாநகரில் அமைந்துள்ள பழக்கடைகள், உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் சிற்றூழியர்களாக வேலை செய்த மலையக இளைஞர், யுவதிகள் உணவு கிடைக்காது மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக நடை பயணிகளாக தமது இருப்பிடங்களுக்கு மீளச் சென்றமையை செய்தி அறிக்கைகளினூடாக அறியக் கூடியதாக இருந்தது.

மலையக இளைஞர்கள், யுவதிகள் வாழும் மலையக பகுதிகளில் மரக்கறி பயிர்ச்செய்கை, பழவகை பயிர்செய்கை, மலர் வளர்ப்பு ஆகியவற்றிற்கு உகந்த வளமுள்ள காணிகள் இருக்கின்றன. அந்த காணிகளில் அந்தந்த சீதோஷ்ணத்துக்கேற்ப பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டால் அதிகளவு வருமானத்தை பெறமுடியும். ஏனைய நேரங்களில் சுய கைத்தொழில்கள், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அதிக வருமானத்தை தேடிக் கொள்ளமுடியும். தமது வீடுகளில் வசித்தவாறே வருமானத்தை தேடிக்கொண்டு சுதந்திரமாக வாழ முடியும். வெளியிடங்களுக்கு செல்ல வேண்டியதில்லை.

உண்மை இதுவாக இருக்கும்போது, மலையக இளைஞர், யுவதிகள் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் முயற்சிகளை இழிவாக நினைத்து வெளி மாவட்டங்களிலுள்ள நகரங்களுக்குச் சென்று சிற்றூழியர்களாக தொழில் செய்கிறார்கள்.

இதனால் அவர்கள் உணவுக்கும், தங்குமிடங்களுக்கும் தமது வருமானத்தில் கணிசமான தொகையை செலவிடக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள்.

எனவே, போதிய கல்வித் தகைமைகளை கொண்டிராத கல்வி கற்காத மலையக இளைஞர், யுவதிகள் எதிர்காலத்தில் கல்வி அறிவுக்காக தொழிலுக்காக அல்ல என புதிய கோணத்தில் சிந்தித்து தாம் வாழும் இடங்களிலேயே தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு சுதந்திர காற்றை சுவாசித்து நல்ல வருமானத்தை தேடிக்கொண்டு சுய கௌரவத்துடன் வாழ முற்படவேண்டும்.

மேலும், இந்த நாட்டிலுள்ள வட, கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளுக்கு சென்று அவதானித்தால் தொழில் ரீதியாக வைத்தியர்கள் இயந்திரவல்லுநர்கள் (பொறியியலாளர்கள்) நில அளவையாளர்கள் மற்றும் உயர் பதவி வகிப்பவர்கள் தமது வயல் காணிகளில் இறங்கி வேலை செய்வதை அவதானிக்க முடியும்.

அவ்வாறானவர்களே இவ்வாறு செயற்படுகிறார்கள் எனில், நாம் எம்மாத்திரம் என மலையக இளைஞர்கள், யுவதிகள் இனியாவது சிந்தித்து செயற்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளும் தமது வருமானத்தில் கணிசமான தொகையை அநாவசியமான வழிகளில் செலவு செய்கிறார்கள். வருமானம் கைக்கு கிடைத்ததும் அந்த வருமானத்தில் பெரும் பகுதியை மது, கைத்தொலைப்பேசிகளில் அழைப்பு எடுக்க உல்லாச பயணங்கள் செல்லல், ஆடம்பர பொருட்கள் கொள்வனவு செய்ய என அநாவசியமாக செலவு செய்கிறார்கள். இவ்வாறு செயற்படுவதனால் அவர்களின் வாழ்வு வறுமைக்கு முகங்கொடுப்பதுடன், கடனாளிகள் என்ற நிலைக்கும் தள்ளப்படுகின்றார்கள். எனவே, மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்திற்கொண்டு தோட்டத் தொழிலாளர்களும் அவர்களின் பிள்ளைகளும் எதிர்காலத்தில் உயர்ந்த நிலைக்குச் செல்லக்கூடிய விதத்தில் செயற்பட வேண்டும்.

(தொடர் 19 ஆம் பக்கம்)

**இவதன்**




# இலக்கியத் திறனாய்வுத் துறைக்கு புதிய ஒளிபாய்ச்சிய பேராசிரியர் க. கைலாசபதி

'இலக்கியத் திறனாய்வுத் துறைக்கு புதிய ஒளிபாய்ச்சியவர் என்ற ரீதியில் பேராசிரியர் க. கைலாசபதி முக்கியத்துவம் பெறுகிறார். அவரது திறனாய்வுப் போக்குகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் (1) தமிழ் இலக்கியப்பரப்பில் ஏறத்தாழ எல்லாக் காலகட்ட இலக்கியங்களையும் சங்ககாலம் தொடக்கம் இக்காலம்வரை கருத்தில் கொண்டு ஆய்வில் ஈடுபட்டார். (2) மார்க்சிய அறிவியல் தளத்தில் நின்று தமிழ் இலக்கியங்களையும் அவற்றின் சமுதாயச் சூழலையும் காலகட்டங்களாக வகைப்படுத்தினார். (3) இலக்கியத்தில் சமூகவியல் நோக்கிற்கு அழுத்தம் கொடுத்தார். (4) ஒப்பியல் இலக்கிய ஆய்வினை மேற்கொண்டார். (5) இலக்கியங்களை வரலாற்றுச் சூழலில் பொருத்தி நோக்கினார். (6) ஈழத்தில் தேசிய இலக்கியம் என்னும் கருதுகோளை முன்வைத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தார். இவ்வாறு இலக்கியம், இலக்கியத் திறனாய்வுத் துறைகளில் அவரின் பங்களிப்பு மகத்தானது என்பதை மறக்கமுடியாது. தமிழில் மார்க்சிய அடிப்படையிலான பார்வையை ஒரு திட்டப்பாங்கான முறையில் தமிழ் நூற்பரப்பு முழுவதையும் கருத்தில் கொண்டு கட்டமைத்து வெளியிட முற்பட்டவர்களுள் முதல்வர் என்று கைலாசபதியைக் கூறலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி முல்லைமணி வே. சுப்பிரமணியம். (ஞானம் ஒக்ரோபர் 2003 பக்:21)

பேராசிரியர் கைலாசபதி மலேசியா கோலாலம்பூரில் 05-04-1933இல் கனகசபாபதி. தில்லைநாயகி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் பெற்ற இவர் 1945இல் இலங்கை வந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பயின்றவர். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழும் மேலைத்தேய வரலாறும் ஆகியவற்றைப் பாடமாகக் கொண்டு இளங்கலை (சிறப்பு) பட்டத்தை 1957இல் பெற்றார். அக்காலத்தில் பெயர் பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன் ஆகியோருடைய வழிகாட்டல் இவருக்குக் கிடைத்தது.

பட்டம் பெற்றபின் கொழும்பில் புகழ்பெற்ற "லேக்ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தில் இணைந்து பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். இந்நிறுவனம் வெளியிட்டுவந்த தமிழ் நாளேடான தினகரனிலேயே இவர் பணிபுரிந்தார். இவரது திறமை இவருக்கு அப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது. தினகரன் பத்திரிகையில் பொறுப்பாசிரியராக 1957முதல் 1961வரை பணியாற்றினார். அக்காலத்தில் தினகரனை ஓர் இலக்கிய இதழாக ஆக்கிய பெருமை பேராசியருக்கே உரியது.

பின்னர் அங்கிருந்து விலகிய அவர் கல்வித் துறையில் புகுந்தார். கலாநிதிப் (முனைவர்) பட்டம் பெறுவதற்காக பர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, ஆய்வு செய்து பட்டம் பெற்றார்.



பின்னர் இலங்கை பல்கலைக் கழகத்தின் வித்தியலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமய பீடத்துக்குத் தலைவராகப் பணியாற்றினார்.

பேராசிரியர் 1964இல் மாணிக்க இடைக்காடரின் மகள் சர்வமங்களத்தைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு சுமங்களா, பவித்திரா ஆகியோர் புதல்விகளாவர்.

1974ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் தலைவராக 19 ஜூலை 1974இல் நியமனம் பெற்றார். 31,ஜூலை 1977வரை இப்பதவியில் இருந்து திறம்படப் பணியாற்றினார்.



கைலாசபதி பல்கலைக்கழகத்தில் இருக்கும்போதே முற்போக்கு இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். 1956இல் இலங்கையில் ஒரு பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் உதவியுடன் தேசிய மத்தியதர வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இடதுசாரிக் கொள்கைகளை அரசாங்கம் ஆதரித்தது. இடதுசாரிக் கருத்துகள் மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றன. இக்காலகட்டத்திலேதான் கைலாசபதியும் ஒரு பட்டதாரியாக சமூகத்தில் காலடி எடுத்து வைக்கிறார்.

இடதுசாரி இயக்கங்கள் தோன்றின. இதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஒன்றாகும். இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களை இவ்வியக்கம் ஆதரித்தது. மக்களுக்காக இலக்கியம் படைத்தார்கள். இலக்கியத்தில் ஓர் உத்வேகம் கிளம்பியது. முற்போக்கு எழுத்தாளர்களின் தத்துவ மேதையாக விளங்கினார். கைலாசபதி. இவர், பல்கலைக்கழக விரிவுரையாளராக பதவியேற்றபின் பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும் முற்போக்கு கருத்துக்களையும் எண்ணங்களையும் பரப்பினார்.

தமது கருத்துக்களைப் பரப்புவதற்கு தேசிய ஜனநாயக் முற்போக்குச் சக்திகளை அரவணைத்துச் செல்வது பேராசிரியரின் முக்கிய பண்புகளில் ஒன்றாகவிருந்தது. அவர் பத்திரிகையாளராகத் தொழிற்பட்ட காலத்திலும்சரி பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றிய காலத்திலும்சரி தன்னைச்சுற்றி ஓர் இலக்கியக் குழுவை அமைத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்தி வந்துள்ளார்.

பேராசிரியரின் தமிழ் இலக்கியம் குறித்த ஆய்வு முயற்சிகளை நோக்குகின்றபோது, அவற்றினை அவர் வரலாற்று அடிப்படையிலும் சமூகவியல் அடிப்படையிலுமே ஆய்வு செய்தார் என்பது புலனாகிறது. அவரது ஆய்வுப் போக்கின் அடிநாதமாக இயக்கவியல் பொருள் முதல்வாதக்கண்ணோட்டம் திகழ்ந்தது. பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயமும் நவீன இலக்கிய நோக்கும் பேராசிரியரிடம் தெளிவாகக் காணப்பட்டமையே அவரால் தமிழ் இலக்கிய வராலற்றின் மாற்றப் போக்கினை இனங்கண்டு ஆய்வு செய்யக் கூடியதாக இருந்தது. அவை சமகாலச் சமூகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆதர்சனமாக அமைந்தன எனலாம்.

இவர் கலாநிதிப் பட்டத்துக்காகச் செய்த ஆய்வு நூலாக வெளியிடப்பட்ட நூல், பழந்தமிழ் இலக்கியம் பற்றிய மிக முக்கியமான நூலாகும். கைலாசபதியின் சாதனைகளில் சிகரமாகத் துலங்குவதுதான் Tamil Heroic Poetry – தமிழிலக்கியத்தில் வீரயுகப் பாடல்கள் என்ற ஆங்கில நூல். இவ்வாய்வில் சங்கப் பாடல்களை பண்டைய கிரேக்க இலக்கியங்களுடன் ஒப்புநோக்கியுள்ளார். இந்த ஒப்புநோக்கின் ஊடாக சங்கப்பாடல்கள் எழுந்த காலப்பகுதியை தமிழரின் வீரயுகம் என்றும் அப்பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக உருவானவை என்றும் முடிவு செய்தார். வரலாற்றுப் பார்வை, வர்க்கச்சார்பு, அழகியல், அக்கறை என்ற நிலைநின்று அவர் ஆய்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கைலாசபதிக்கு முன், தமிழிலக்கியத்தை ஆராய்ந்தவர்கள் பெரும்பாலும் இலக்கியத்தை ஒரு கலையாக்கம் என்ற வகையில் கண்டு அதன் அழகியற் கூறுகள், அவை வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்தும் அனுபவம், உணர்ச்சி என்பவற்றைப்பற்றிய கருத்தையே கொண்டிருந்தனர். கவிதையில் கற்பனை உத்தி, நடை கட்டமைப்பு இலக்கிய வகைமைகள் என்பன பற்றிப் பேசுவதையே திறனாய்வின் செயற்பாடு என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். தமிழ்த் திறனாய்வில் அழகியலுக்கு நிகராக அரசியலுக்கு, உள்ளடக்கத்திற்கு முக்கியம் வழங்கப்படல்வேண்டும் என்ற கருத்தை பேராசிரியர் கைலாசபதி கொண்டிருந்தார். அதற்கமைய பண்டைய இலக்கியங்களை சமுதாய வரலாற்றுப் பகைப்புலத்தில் பொருத்திப்பார்க்க முற்பட்டார். தமிழிலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள உறவை விஞ்ஞான ரீதியாக, தர்க்க ரீதியாக ஆய்வு செய்தவர்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறார் கைலாசபதி. கலை, இலக்கியம் என்பவற்றின் சமுதாய உறவு நிலை, சமுதாய வரலாற்றியக்கத்தில் அவற்றின் பங்கு, படைப்பாளிகளின் வரலாற்றுப் பாத்திரம் என்பன தொடர்பாக அவர் ஆழமாகச் சிந்திப்பதற்கு அவருடைய மார்க்சியத் தளம்தான் காரணம்.

பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயம் கொண்டிருந்த பேராசிரியர், இருபதாம் நூற்றாண்டின் நவீன இலக்கிய முன்னோடியாகவும் திகழ்ந்தார். நவீன கால இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பினை பின்வருமாறு வகுத்துக் கூறலாம் (1) இலக்கியத்தில் தூய அழகியல்வாதத்திற்கு எதிரான போராட்டத்தைமுன்னெடுத்தமை (2) பண்டிதவாதத்திற்கு எதிரான போராட்டத்தை, தேசிய இலக்கியக் கோட்பாட்டுத் தளத்தை நிறுவியமை (3) ஒப்பியல் நோக்கின் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்தமை (4) மக்கள் இலக்கியத்துக்கான ஒரு புதிய தலைமுறையை உருவாக்கியமை ஆகியன பேராசிரியர் கைலாசபதி நவீன இலக்கியத்திற்கு ஆற்றிய முக்கிய பங்களிப்புகளாகத் திகழ்கின்றன.

தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலே இவராற்றிய பணி ஈழத்துக்கு மட்டுமன்றித் தமிழுலகம் முழுவதற்குமே முன்னோடியாகக் கருதப்படுகின்றது.

இவர் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள், தமிழ் இலக்கியத் துறையை மட்டுமன்றி, சமயம், பண்பாடு, சமுதாயம், அரசியல் போன்ற பல துறைகளையும் சார்ந்திருந்தது.

பாரதிமீது மிகுந்த ஈடுபாடுகொண்டவராகத் திகழ்ந்த கைலாசபதி அவர் பற்றிய ஆய்விலும் அதிக அக்கறை செலுத்தினார். 'பாரதியியல்' என்ற சொல்லினைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியவராகவும் கைலாசபதி விளங்கினார்.

மிக இளம் வயதிலேயே மாணவர்கள், அறிஞர்கள் மத்தியில் மட்டுமன்றிப் பொதுமக்கள் மத்தியிலும் புகழ்பெற்ற இவர், 49ஆவது வயதில் 1982 டிசம்பர் மாதம் 6ஆம் திகதி காலமானார்.




# நாடு அனுரவோடு

இலங்கை எமது தாய் நாடு இன்று
நாடு அனுரவோடு
தம்புத்தேகமவில் உன் வீடு அதில்
உன் தாயும் உன்னோடு தன்
தனயன் நாட்டின் தலைவன் என்ற
ஆனந்த கண்ணீரோடு

தம்புத்தேகம ஒரு சிறிய ஊரு இன்று
உன்னால் அது
மிளிர்கிறது பெருமையோடு

நாடு அனுரவோடு அவர்
கையொப்பமிட்ட கையோடு
மாற்றினார் புதுக் கோடு
நாட்டில் இருந்தது சில கேடு இன்று அவை
விலகுது அவர் துணிவோடு.

மக்கள் அனைவரும் பெரும் கனவோடு
வாக்களித்தனர் பெரு மாற்றதோடு

நீ சொன்ன
"ஊழல் அற்ற நாடோடு
வெற்றி பெறுவோம்
புது விடியலோடு"
இந்த நம்பிக்கையோடு
இணைந்தனர் மக்கள் உன்னோடு

தலைநகரில் இன்று நீ
திறந்தாய் வருட கணக்கில்
மூடப்பட்ட சில
ரோடு (road) அதுவே
தலைப்புச் செய்திகளில்
சக்கை போடு

தோழா
மேலும் மேலும்
உன் பணி சிறக்க போராடு
நம்பிக்கையோடு என்றும்
இம் மக்கள் உன் தோளோடு

வெற்றி நடை நீ போடு நல்ல
தலைவன் என்ற வாகை நீ சூடு



சரித்திரம் உன் புகழ் பாடும்
உலக நாடே உன் பெயர் கூறும்
வாழ்த்துகிறோம் நாமும்
நாடு அனுரவோடு!

நுஷ்ஹா

# விதையொன்று புதைந்து மரமொன்று முளைத்தது

விதை
ஆணி வேராகி
மண்ணின் ஆழத்திற்குள்
ஊடுருவியதால்
மரம்
பெரும் விருட்ஷமாகி
விண்ணைத் தொட்டது

ஆணி வேர்
மண்ணுக்குள் புதைந்து
உறிஞ்சிய வளத்தையெல்லாம்
மரத்தின் வளர்ச்சிக்கு
உரமாக்கியது.

ஆணி வேரின்
அர்ப்பணிப்பில்
பக்க வேர்கள்
பலம் அடைந்ததால்
அந்த சமூக மரம்
சத்திய காய்களை பிரசவித்தது

வேரின் உறுதியில்
வைரமாக்கப்பட்ட
விழுதுகள்
பசுமையை
உடுத்திக் கொண்டு
பார்ப்போரை
வசீகரம் செய்தன

ஆணி வேர்
உரிமைக்
குரல்
உடைக்கப்பட்டு
ஓரங்கட்டப்பட்ட

அங்கே
கல்வி மொட்டவிழ்ந்து
கல்விமான்கள் பூத்தார்கள்
அதனால்
உரிமை காய்த்து
விடுதலை கனிந்தது

ஆதறவற்ற
அநாதைச் சமூகத்தை
இந்த மரக்கை
அணைத்துக் கொண்டது

அதிகார கால்களால்
மிதிக்கப்பட்ட
அடிமைக் குருவிகள்
இந்த மரத்திலேதான்
சுதந்திர கூடு கட்டின

மரத்தின் அசுர வளச்சி
சூரிய குடும்பத்தில்
குழப்பத்தை உருவாக்கியது
இதனால்
ஆணிவேரை அழிப்பதற்கு
அதிகாரம் சதி செய்தது


ஒற்றை
மரத்தை
கோடரிக்
காம்புகள்
குறி வைத்தன

அடி மரம்
நடு மரம்
நுனி மரம் என
பக்க வேர் போராளி
கள்
பங்கு போட்டதால்
அந்த மரம்
மரத்தின் அடிச்சுவடுகளும்
அழிக்கப்பட்டு
ஒரு ஊனச் சமூகம்
உருவாக்கப்படுகிறது

பாவம்
அந்த விதை
சமூகம் தளைப்பதற்காய்
அது
தன்னைப் புதைத்தது.

ஆனால்
வேரின் விருட்சத்தில்
தளைத்த கிளைகளோ
தமது பசுமைக்காய்
அந்த சமூகத்தை புதைத்தன

நிழல் கொடுத்த
அந்த மரம்
இன்று
நிஜமிழந்து போனது
அதனால்
உஷ்ணத்தைச் சுமந்த
இந்த சமூகம்
மெது மெதுவாய்
கருகிக்கொண்டி
ருக்கிறது.



மேலும் மேலும்
மண்ணுக்குள் அமிழ்ந்தது
அதனால்
அந்த மரம்
மேலெழுந்து வளர்ந்தது

கிளை பரப்பி
இலை பரப்பி
உரிமை நிழல் மேவிய
மரத்தடியிலே
மறுக்கப்பட்ட
சமூகமொன்று
இளைப்பாறியது

ஒரே நாளில்
ஆணிவேர்
அறுந்து போனது

பக்க வேர்கள்
பலவீனப்பட்டு
ஆணிவேரின்
அர்ப்பணிப்புகளை
அசிங்கப்படுத்தின

வரக்காமுறையூர்
ராசிக்

# சிறுவர் தினம்



பூவிதழில் புன்னகையும்
பட்டறியா தேன்சுவையும்
'நா"' வசைவில் கொட்டிவிடும்
நானிலத்தின்
பூக்களான- சிறுவர்கள்
நாளைய இராச்சியத்தின்
நவரத்தின முத்துக்களாய்
மின்னிடவே
குவலயத்து சொத்துகளான
குழந்தைகளைக்
கொண்டாடி மகிழ்வோம்
என்றும் மாறிடாப்பற்றுடனே

ஏரூர் றமீஸ்
ஏறாவூர்

# லாஸ்ட் சீன்

திறக்க முடியாத ஒரு கதவினை
திறப்பதற்கான சாவியொன்றை
நீ வைத்திருப்பதாய்
இந்தக் கவிதையைத் தொடங்குகிறேன்
ஒரு வட்சப் ஒன்லைன் போல
மகிழ்வுகளை அந்தப்பக்கமிருந்து சேமிக்கிறாய்
லாஸ்ட் சீன் என்னவோ
குழப்பகரமான நேரமாகவே இருக்கிறது.

இப்போது சாவியை எங்கே வைத்திருக்கிறாய்.?
சமூக வலைத்தளமொன்றின்
பாஸ்வேர்ட்டில் என்கின்றாய்
நான் எதில் தேடுவது
இன்ஸ்ராகிராமிலா,ரெலிகிராமிலா?
எனக்குத்தெரிந்ததில் நீ இல்லையென்கின்றாய்

நீ இணைந்திருக்கும் ஒவ்வொரு சமூக வலைத்த
ளங்களிலும்
நான் அழைப்பாளனாகிறேன்
கண்டு கொள்ள முடியாத பாஸ்வேர்ட்
எதிலுள்ளது
கதவைத் திறந்தாக வேண்டும்
சாவிவை தந்து விடு

உரையாடலை நிறுத்திவிட்டுகோபப்படுகிறாய்.
புரியாத நான்
நாக்கை அழுத்தி கடித்து துண்டாக்குகிறேன்
இரத்தம் படுக்கையறை முழுதும் பரவுகிறது.
இப்போது இது கனவு என கவிதையை முடித்
துக்கொள்ள பிரதியில் பயணம் பண்ணும்
யாரோ ஒரு வாசகன் கதறி அழுதால் போதும்
நான் விழித்துக் கொள்ள

ஜே.பிரோஸ்கான்

# புதிய சனாதிபதி

இலங்கை நாடு
இன்பத்தில் துள்ளுகிறது
இன்னல் களைந்தே
இதயம் மகிழ்கிறது
இனித்திடும் செய்திகள்
பரவசப் படுத்துகிறது
இனி அனைவரும்
சமமென கூவியழைக்கிறது

புதிய சனாதிபதியின்
பேச்சே எங்கும்
புதுயுகம் படைக்கும்
எண்ணங்கள் மேலோங்கும்
புரிதல் கொள்வதில்
அநுரகுமாரயே வல்லவர்
புனிதம் காப்பதில்
அவரே நல்லவர்

ஏழை பணக்காரனென்ற
வேறுபாடு மறையும்
எல்லோரும் ஒன்றாகி
புன்னகை நிறையும்
ஏற்றத் தாழ்வும்
இல்லாமல் போகும்
ஏனிந்த நிலையென்ற
எண்ணம் சாகும்

மாண்புமிகு சனாதிபதி
மாசற்ற தலைவர்
மானிடம் காத்திடும்
தேசத்தின் உயிரவர்
மாற்றம் கண்டிடும்
இலங்கையின் உயர்வானவர்
மனிதரில் மாணிக்கம்

இவரே உன்னதமானவர்

மகுடம் சூட்டியே
மகிழ்ந்தோம் நாம்
மலர்களைப் பறித்தே
மாலையாக்கிச் சூடினோம்
மதகுருமார் முன்னிலையில்
பதவிப்பிரமாணம் செய்தீர்
மதிப்பிற்குரியத் தலைவராய்
வலம் வருகிறீர்

நாட்டின் பஞ்சமெல்லாம்
நீங்க வேண்டும்
நாளும் நல்லவையே
நடந்திட வேண்டும்
நாமெல்லாம் ஓரணியில்
நின்றிட வேண்டும்
நாளைய சந்ததியும்
நல்லாட்சியை

ஏரூர் கவிமாமணி
எம் ரி எம் அன்ஸார்

# கண்ணீர் இரத்தம்...



அன்புக்கு ஆணவம் என்பது இல்லை
அடிமையாதலையே
அரசகிரீடமெனச் சூடிக் கொள்ளும்

அன்புக்கு ஏமாற்றங்கள்
ஒரு பொருட்டே அல்ல
அதற்கு வெட்கம் என்பதே கிடையாது

மீண்டும் மீண்டும்
உன் வாசலை நோக்கியே அது பார்க்கிறது
மீண்டும் மீண்டும்
உன் பக்கமே சரிந்து திரும்புகிறது

மென்மையின் நேசத்தை
முடிவின்றிப் பிரசவிக்கிறது
மிதந்தலையும் மேகமாய்த்
ததும்பி வழிகிறது

அனுமதிக்காக காத்திருக்க
அதற்குத் தோன்றுவதில்லை
அழைப்பு வரும்வரையது
அமைதியாயிருப்பதில்லை

ஆழ்கடலின் அமைதியுள் பெருஞ்சுழி
கருக்கொண்டது நகர்ந்து செல்லும்
அழுகை விழுங்கி
அந்தரத்தில் தொங்கியது மூச்சடக்கி நிற்கும்

வாயிற்கதவைத் தட்டிவிடவே
அது எத்தனிக்கிறது
தொடர்பு எல்லைக்கு அப்பாலும்
தொட்டுவிடத் துடிக்கிறது

திறந்தாலது கொண்டாடித் தீர்க்கும்
ஆகாயம் வரை தன் சிறகுகள் வளர்க்கும்

திறக்கா விட்டாலும்
கொண்டாடித் தீர்க்கும்
தீராக்கனவுகளோடு வாழ்ந்து நிற்கும்

புறக்கணிப்பு
கொல்கின்ற வலிதான் ஆயினும்
சட்டென மறந்து உன் புன்னகை தேடும்
குழந்தையாகிறது அது

கொட்டிய நேரமருகியதும்
கொண்டாடிய நேசம் கசந்ததும்
ஈரலித்த நெஞ்சில் வெப்பக்காற்றின்
பாலைமணலை அறையும்

வலிந்து நேசத்தைக் காண்பித்து
பின்னொரு நாளில்
வலித்து விலகுவது குறித்த
உறுத்தல்களின்மை
மௌனக்கிடங்கில்
தள்ளி மரணம் நிகழ்த்தும்

இதயத்தைக் கொத்திக் கொண்டு போய்
எரிகின்ற தீக்கங்கில்
வீசி விழுத்தியது போலும்
பொசுங்கிய வாடை எழும்

பிரதியற்ற ஒன்று என
அறிந்தும் அறியாதது போலும்
அரிதாரம் பூசுவதை அறிந்ததன் பலனாய்
என் சாலையில் கண்ணீர் இரத்தம்

இரண்டு தடவை பாடம்
படித்திருக்கிறேன்....
மூன்றாம் தடவையும்
உன்னிடம் ஏமாறவே
பிடித்திருக்கிறது

இந்தக் கவிதையும்
என் நேசமும் ஒன்று,
தொடங்கிய இடத்தை அடைந்ததும்
முடிந்து விடுகிறது

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

# ஒரு வலியின் உச்சம் முதல் நாள்..

உச்சம் தலையில் இருந்து
உள்ளம் கால்வரை
இதயத்தோடு
இறுகிப்பிடித்துக் கொண்டு..
கண்ணீரும் உறங்காவிழிகளும் என
ஆழ்ந்த சிந்தனையில்
உயிர் தாக்குப்பிடித்துக்
கொண்டு இருக்கும்..

இரண்டாம் நாள்
சற்று கண்ணீர் ஓய்வாகி
உள்ளத்து வலியில்
அமைதியின் தியானத்தில்
உருக்கிக்கொண்டிருக்கும்..

மூன்றாம் நாள்
எல்லாம் கடந்து விட
வேண்டும் என்ற
மனநிலையில் கொஞ்சம்
கொஞ்சமாக
மனதை தைரியப்படுத்தி
மனவலியில் இருக்கும்..

ஒரு வாரம்
ஒரு மாதம்
என நாட்கள் நகர
எல்லா நினைவுகளையும்
மனதில் சுமந்து கொண்டு
தன் வேலைகளோடு இருக்கும்

அவ்வப்போது
நினைவுகள் மனதில் எழும்
தருணத்தில்
தனக்கு தெரியாமலே
கண்ணீரோடு அழுது
தீர்த்து விடுவோம்

எப்படியும் ஒரு மனிதன்
நம்மோடு வாழ்ந்தற்கான
நினைவுகள்
நாம் மரணிக்கும் வரை
நம்மோடு ஏதோவொரு வகையில்
உள்ளத்திலும் உணர்வுகளிலும்
சிந்தனைகளிலும் சூழலிலும்
ஒருதுளியாவது
சஞ்சரித்துக்கொண்டே இருக்கும்

இவ்வுலக வாழ்வில்
உணர்வுகளோடுதான்
மனிதன் அதிகம்
வாழ்ந்து கொண்டு இருக்கிறான்

பஹ்ரியா பாயிஸ்
ஹெம்மாதகம



# அண்ணல் நபிநாதர்

அல்லாஹ்வின்
இறுதித்தூதர் நபிநாதரே
அருளாலனின்
கொடையாய் பிறந்தாரே!
அமைதியெங்கும்
மேவும் மதீனாவிலே
அண்ணல்
நபிபெருமானார் மலர்ந்தாரே!

ஆமினா ஈன்றெடுத்த
அன்புப் புதல்வரே
அலீமாவின் பால்
குடித்தே வளர்ந்தாரே!
அண்ணலார் திருவதனம் அழகிலுமே
அந்த நிலவைவிட
பிரகாசம் ஒளிவீசுமே!

அறிவின்றி அரபுலகம்
அன்று கிடந்ததே
அறியாமை பிணி போக்க பிறந்தாரே!
அரபு அவனியில் அவதரித்த நிலவே
ஆட்சியில்
சமதர்மம் கற்பித்த தலைவரே!

அகிலம் சிறந்திடவே வந்துதித்தாரே
அன்பிலும் பண்பிலும் மிகைத்தாரே!
அற்புதமாய் சிந்திக்க
ஆற்றல் பெற்றவரே
அடிமையென்ற
விலங்கை உடைத்தாரே!

அன்னை பாதமடியே
சுவனமென்றாரே
அன்பை போதித்தே நிலம்
வாழ்ந்தாரே!
அண்டை வீட்டார் பசித்திருந்தாலுமே
அகமகிழ்ந்து கொடுத்து
உண்ணென்றாரே!

அல்அமீன் நம்பிக்கை யென்றவரே
அல்லாஹ்வின்
அருட்கொடை நபியவரே!
அகிலத்தில் சிறந்த மாமனிதரவரே
அனைவரின் வழிகாட்டி
சர்தார் நபியவரே!

அண்ணல் நபிவழியே நேர்வழியே
அதுவொன்றே எங்கள் சுவனவழியே!
அவ்வழியே ஈருலகத்தின் ஒளியே
அண்ணலார் காட்டிய இறைவழியே!

அளவற்ற அருளாளன்
அல்லாஹ்வுமே
அன்பான நபிமீது ஸலாம்
மொழிந்தானே!
அண்ணல் நபி
எங்களுயிரில் மேலானோரே
அவர்மீது எங்கள் ஸலாமும்
உரித்தாகட்டுமே!

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

# நீர் தேடும் பூமி !



அலையாத முகில் தொட்டு
அழைக்கின்ற காற்றேகி,
பிழையாகிச் செல்கின்ற மேகம்,
தளிர் கொண்ட பூமித்தாய்
தழைக்கின்ற மழையானால்
தகையொன்றே நிலையான யோகம்!

நீர் தேடும் பூமிக்கு
நிலைகொண்ட ஒரு சேதி
உளமுற்று வழங்காதோ மேகம் !
தழைகொண்ட பசுமைகள்
தளிர்க்கின்ற இளமைகள்
நிலைகொள்ள முடியாத சோகம் !

அசைவில்லா வானத்தில்
விசையான மேகங்கள்
திசைமாறிச் செல்கிற பாகம்,
கசிகின்ற மழைத்தூறல்
காற்றாடும் மோகத்தில்
இசைவின்றிப் பொழியாத வேகம் !
விழி தோயும் ஆகாயம்
வீழ்ந்தேகும் சிறுதூறல்

மழையானால் பூமிக்கு ஆகும் !
நிலைகொள்ளும் மேகங்கள்
நிறம்மாறி முகிலாகத்
தலைகாட்டும் மழைத்தூறல் ஏகம் !

காவியக் கவியரசு
எம்.எஸ்.அப்துல் ஹை

# SLPP தேசிய பட்டியலில் மீண்டும் மர்ஜான் பளீல்

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் SLPP (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின்) தேசியப் பட்டியல் வேட்பு மனுவில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் இம்முறையும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இவர் , ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரேயொரு முஸ்லிம் பிரதிநிதியாக கட்சியின் தேசியப்பட்டியல் வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஏற்கனவே இருந்துள்ளதும் விசேட அம்சமாகும்.

இலங்கையின் முன்னணி மாணிக்க வர்த்தகர்களில் ஒருவரான மர்ஜான் பளீல், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் மர்ஹூம் எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியாரின் புதல்வராவார்.





நாட்டிய கலாமந்திரின் இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகள் வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி தத்துவ திருக்கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் 8ஆம் நாள் உற்சவத்தில், வழங்கிய நாட்டிய அரங்க நிகழ்வுகளை காணலாம்

சிறுவர் தினத்தை கொண்டாடியது

# பேராதனை பல்கலை பழைய மாணவர் கொழும்பு பிரிவு



பேராதனை பல்கலை பழைய மாணவ சங்க கொழும்பு பிரிவு வடமேல் மாகாணத்தில் குளியாப்பிட்டிய படுவஸ்நுவர பிரிவில் உள்ள கனத்தேவெவ கடுமுலுவ கனிஷ்ட பாடசாலையில் சிறுவர் தினத்தை அண்மையில் கொண்டாடியது. இதனை பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் முகாமைத்துவ சபை, தெரிவு செய்தது.

அதன் கொழும்பு பிரிவு 450 புத்தகங்கள், எழுதுபொருட்கள் மற்றும் பள்ளிப் பொருட்களை பள்ளி நூலகம் மற்றும் மாணவர்களுக்காக நன்கொடையாக வழங்கியது.

எதிர்வரும் அகில இலங்கை பாடசாலை ஏரோபிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் வடமேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிக்கு இரண்டு ஜிம்னாஸ்டிக் மெத்தைகள் நன்கொடையாக வழங்கப்பட்டது.

01 அக்டோபர் 2024 அன்று பாடசாலையில் நடந்த உலக குழந்தைகள் தினக் கொண்டாட்டத்தில், சங்கத்தின் உறுப்பினர்கள் பிரதிநிதிகள், அதிபர், ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரால் நன்கொடைகள் வழங்கப்பட்டன. பாடசாலையில் மரக்கன்று நடப்பட்டது.

# கம்மல்துறை அல்–பலாஹ் கல்லூரியின் 'மீண்டும் பாடசாலைக்கு' (back to school)











கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் பழைய மாணவர்கள் கலந்து கொண்ட 'மீண்டும் பாடசாலைக்கு' (back to school) ஆண்களுக்கான நிகழ்ச்சி கடந்த 06 ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.யூ.பாயிஸ் (நளீமி) மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், முன்னாள் அதிபரான ஏ.எஸ்.எம்.முஹம்மத் அதிபராகப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, பெண்களுக்கான 'மீண்டும் பாடசாலைக்கு' நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (05)நடைபெற்றது. இதன்போது, பாடசாலை காலை கூட்டம் நடைபெற்றபோது பழைய மாணவர்கள் அனைவரும் 'அகிலமாய் ஜோதியே'என்ற பாடசாலை கீதத்தை இசைத்தார்கள்.

இந் நிகழ்வுகளுக்கு முன்னாள் அதிபர் எம்.எஸ்.எம். முனவ்வர் பொறுப்பேற்றதுடன், முன்னாள் அதிபர் ஏ.எஸ்.எம். முஹம்மத் மற்றும் ஆசிரியர்களான சக்கரியா, இர்ஷாத் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். பழைய மாணவர்கள் வகுப்பறைகளில் ஒன்றுகூடி சுவாரஸ்யமான தமது பழைய நினைவுகளை மீட்டி மகிழ்ந்ததுடன், குழுக்களாக இணைந்து பாடசாலைச் சுற்றாடலையும் தூய்மைப்படுத்தினர்.

இப்பாடசாலையின் பழைய மாணவர் எம்.ஜே.எம். தாஜுதீன் தலைமையில் நடைபெற்ற மாணவர் மன்றத்தில் பல்சுவை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

தோப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை அதிபர் எம்.சி.இர்ஷாத் மற்றும் அறிவிப்பாளர் சல்மான் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.

இதன்போது, எமது எதிர்கால கனவுகள் என்ற தலைப்பில் பாடசாலையின் முக்கிய தேவைகள் வீடியோ திரைகள் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சி முடிவில் முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோருக்கு பழைய மாணவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**எம்.ஜே.எம். தாஜுதீன்**

இலங்கையின் சட்டத் தொழிலை

# 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில் உருவாக்குவதே எதிர்கால நோக்கம்

## சட்டத்துறையில் 38 வருட கால அனுபவத்தைக் கொண்ட கலாநிதி சுனில் அபேயரத்னவுடனான சந்திப்பு

**“நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்கும் உலகளாவிய நிலைகளிலிருந்து வழிகாட்டுதல்களை பெற்று, இலங்கையின் சட்டத் தொழில் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றதாக இருப்பதை உறுதி செய்வதற்கும் சட்ட தொழிலுக்கு புதிய வழிகளை திறப்பதற்கும் அவர் முனைப்புடன் பணியாற்றவுள்ளார்.**

**அத்துடன், சங்கத்தின் இளைய உறுப்பினர்களுக்கு இந்த உன்னதமான தொழிலில் முன்னேறுவதற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் அவர் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்”**

சட்டத்துறையில் 38 வருட கால அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் கலாநிதி சுனில் அபேயரத்ன இம்முறை நடைபெறவுள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளார். இலங்கையின் சட்டத்துறைக்கு அளப்பரிய சேவை செய்துள்ள அவர், பல்வேறு சர்வதேச நாடுகளிலும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். சட்டத்துறையில் அவரின் சேவை தொடர்பாக அவருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் இது.

சட்டத்துறையில் தொடர்ச்சியாக பணியாற்றி வரும் கலாநிதி சுனில் அபேயரத்ன, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் (BASL) 2025 2026 ஆம் ஆண்டுக்கான தலைவர் பதவிக்காக போட்டியிடவுள்ளார்.



சுனில் அபேயரத்ன கடந்த 2006 2008 காலத்தில் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனையடுத்து வலயத் துணைத் தலைவர், நிறைவேற்றுக்குழு உறுப்பினர், செய்தி மடல் ஆசிரியர் மற்றும் சட்ட இதழ் உதவி ஆசிரியராகவும் 1997 - 2006 வரையான காலத்தில் பணியாற்றியுள்ளார்.

பார் கவுன்சில் உறுப்பினராக கடந்த 36 வருடங்களில் தொடர் சட்டக்கல்வி, தேசிய சட்ட மாநாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டக் குழு ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் முன்னோடியாகத் திகழும் கலாநிதி அபேயரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் முதலில் கலாநிதி பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் பல்வேறு கல்வி சார் சாதனைகளையும் படைத்துள்ளார்.

அவர், லண்டன் பல்கலைக்கழகத்தின் குயின் மேரி கல்லூரியில் LLM பட்டத்தையும் இந்திரா காந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகத்தில் MBA பட்டத்தையும் கொழும்பு மருத்துவ பீடத்தில் தடயவியல் மருத்துவம் அறிவியல் மற்றும் நச்சியல் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

கலாநிதி அபேயரத்ன 1986 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக பதிவு செய்துள்ளதுடன் சிவில் குற்றவியல் வர்த்தக மற்றும் பொதுச் சட்டங்களை மேன்முறையீட்டு மற்றும் முதல் நிலை நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்துவதில் புகழ் பெற்றவராக திகழ்ந்துள்ளார்.

நிமல் சேனநாயக்க பி.சி. (BASLஇன் முன்னாள் தலைவர்) தயா பெரேரா பி.சி மற்றும் திவங்க விக்கிரமசிங்க பி.சி உட்பட சட்டத்துறையில் குறிப்பிடத்தக்க நபர்களின் கீழ் அவரது சட்டப் பயணம் ஆரம்பித்தது.

அவரது கல்வி சாதனைகள் லண்டனிலுள்ள வணிகச்சட்ட ஆய்வுகள் மையத்திலிருந்து தகுதி வாய்ந்த சர்வதேச வர்த்தக நடுவராக விரிவான நீதிமன்ற அனுபவத்தை நிறைவு செய்கின்றன.

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக செயற்பட்ட காலத்தில் ஒரு தேசிய திட்டமான 'சட்ட வாரம்' என்ற நிகழ்ச்சியை தொடங்குவதில் முக்கிய பங்கு வகித்தார். அதற்கு மேலதிகமாக சட்டத்தரணிகள் சங்கத்தின் IT சட்டக் குழுவை அமைத்தல் மற்றும் ஒரு புத்தம் புதிய பாடமாக IT சட்டத்தில் உறுப்பினர்களுக்கு கல்வி கற்பிக்க நாடு தழுவிய தொடர் கல்வி திட்டங்களை நடத்துதல் போன்றவற்றையும் மேற்கொண்டார்.

**லோரன்ஸ் செல்வநாயகம்...**

வவுனியா த.ம.ம.வித்தியாலயத்தின்

# 2002 உயர்தர பழைய மாணவர்களால் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு







வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) 2002 ஆம் ஆண்டு உயர்தரம் கல்வி பயின்ற பழைய மாணவர்களால், துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்வு, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப் பாடசாலையில், கடந்த 2002 ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 101 மாணவர்களுக்கு இவ்வாறு துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்பு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர்கள், வவுனியா நகர கிராம சேவகர், பாடசாலையின் அபிவிருத்தி குழு செயலாளர், பழைய மாணவர் சங்க செயலாளர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

இதேவேளை, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் நுழைவாயிற் கோபுரமும் இந்த 2002 உயர்தர பழைய மாணவர்களால் அமைத்துக்கொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 'உள்ளத்தின் குரல்' நூல் அறிமுகம் இன்று

புகழ்பெற்ற கல்வியியலாளரும் எழுத்தாளருமான பிரேம் ராவத் எழுதிய “உள்ளத்தின் குரல்” புத்தக்கத்தின் அறிமுகம் கொழும்பு 06 சவோய் திரையரங்கு முன்பாகவுள்ள, இல.77/1, ஒர்சாட் கட்டட தொகுதியில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

“உள்ளத்தின் குரல்” என்ற இப் புத்தகம் நமது வாழ்க்கையின் இரைச்சலை எவ்வாறு அமைதிப்படுத்துவது, நமது தனித்துவமான உண்மையான குரலைக் கேட்பது எவ்வாறு என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

உள்ளத்தின் குரல் நூல் ஒருவரின் புரிதல், வாழ்க்கை மற்றும் சுற்றியுள்ளவர்களது வாழ்க்கையை மாற்ற கூடியதாக அமைந்துள்ளது. இந்த அற்புதமான, விவேகம் நிறைந்த நூலில் பிரேம் ராவத், வெளிச் சத்தங்களை குறைத்து எவ்வாறு நாம் எமது உள்ளத்தின் குரலை கேட்பது என்பது பற்றி கற்பிக்கின்றார்.

தனது வாழ்நாள் முழுவதையும் அமைதிக்காக அர்ப்பணித்த பிரேம் ராவத், கடந்த 55 வருடங்களுக்கும் மேலாக, மிகுந்த அர்ப்பணிப்பு, ஞானம் மற்றும் நகைச்சுவையுடன் தனது செய்தியை 100 க்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு வழங்கியுள்ளார். அவரது உலகளாவிய உரைகளின் சாராம்சத்தை இப் புத்தகத்தில் காணலாம்.






கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி நந்தினி சுவாமிநாதன் சர்மா 2024 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழித் தின தேசிய மட்டப் போட்டியின் 5ஆவது பிரிவு "இலக்கிய விமர்சனம்" போட்டியில் தங்கப்பதக்கம் வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் பிரபல மிருதங்க வித்துவான் மற்றும் பட்டயக் கணக்காளர் பிரம்ம ஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மாவின் புதல்வியாவார்.

# முதல் வீடு

தலைமாட்டில் குத்துவிளக்கு ஒளிர்ந்து கொண்டே இருந்தது.

மங்கிய ஒளியில் அப்பாவின் முகம் தெளிவாகத் தெரிகின்றது.....

"அப்பா" பட்டு வேட்டியில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். கையுறை போட்ட கைகள் பின்னிப் பிணைந்திருந்தன. முகம் நீசமற்ற அமைதியாக இருத்தது.

அவளது உதடுகள் "அப்பா" என்று அவளை மீறி உச்சரித்தது.....

கண்களை நிறைத்த கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் வழிந்து கழுத்தைத் தொட்டது....

அவள் உதடுகள் ஏதேதோ முணுமுணுத்தன. இலேசாக அடித்த காற்றில் அங்கும் இங்குமாக எரிந்து கொண்டிருந்த விளக்கின் தீச்சுவாலை ஆடிக் கொண்டே இருந்தது.....

ஏதோ! மனம் உந்த அப்பாவின் கைகளை இறுகப் பற்றினாள். நினைவுகள் அவளை மீறி எங்கோ அழைத்துச் சென்றது.....

"மாயா கவனமாப் பார்த்து முன்னுக்கு நடவம்மா" என்றவர் சாராவின் கையைப் பிடித்து முன்னுக்கு போம்மா.

அக்கா போல பார்த்து நடவம்மா என்றா

எங்கள் ஊரில் மார்கழி மாதத் திருவெண்பா நடக்கும் போது....

லீவு நாட்கள் பார்த்து ஐஞ்சு மணிக்கு குளிச்சிட்டு இரண்டு மைல்கள் நடந்து நானும் சாராவும் போவோம்.

ஊர்க் கோயிலில் எல்லோரும் ஊரவர்கள், சொந்தக் காரர்கள் என்றால் சொல்லத்தேவையில்லை. பொங்கலும், பொரிச்ச மோதகமும், உளுந்து வாசம் மணக்கும் வடையும் சாப்பிட்டது போக தாராளமாகக் கொண்டு வருவோம் வீட்டிற்கும்.

பாடசாலை நாட்கள் போக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பாலைமரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுவதும், அடம்பன் குளத்தில் நீச்சல் அடிப்பதும்,

உயரமான அடம்பன் மரத்தில் ஏறிக் குதிப்பதும் அலாதிப் பிரியம் மாயாவுக்கு

இன்னும் எத்தனை எத்தனை விளையாட்டுகள் விளையாடி மகிழ்ந்திருப்பார்கள்.

அம்மா அப்பாவோடு இருந்த காலங்களில் சின்னச் சின்ன மகிழ்ச்சிகள்தான்.

உண்மையான அழகு நிறைந்த வாழ்க்கை என்பதை மாயா உணர்ந்திருந்தாள்.

திருமணம் ஆகி வெளிநாடு சென்ற இந்தப் பத்து வருடங்களில், நிற்காமல் ஓடும் இரயில் போல் எதையும் நினைக்கக் கூட நேரம் இல்லாமல் இருந்தது வாழ்க்கை.



இந்த பத்து வருடம் அப்பாவைத் தொலைபேசியின் கண்ணாடிச் சதுரத்தில்தான் பார்த்து வாரமொரு முறை பேசுவாள். எப்போ இங்கு பேரப் பிள்ளைகளோடு வருவாய் என்று நாசுக்காக அவர் கேட்பார். சில விடயங்களை காலம் கடந்த பின்னர் தான் உணர்ந்து நிற்கிறோம்.

அப்பாவோடு வாழ்ந்த காலத்தில் அவர்களுடைய தேவைகள் அனைத்தும் சாப்பாட்டையும் உடுப்பையும் படிப்பையுமே நோக்கியதாக இருந்தது.

அப்பா கமக்காரர்தான். சில தடவை காலநிலையால் விதைக்கும் வேளாண்மை கூட பிரச்சினை ஆகிவிடும்.

அப்போதெல்லாம் பாடசாலை விட்டு வந்து நெல் வெட்டும் காலங்களில் மாயாவும் சாராவும் வயலில் கதிர் பொறுக்கப் போவார்கள்.

கதிரோடு வெட்டி வைத்த உப்பட்டியும் அள்ளி வந்து தாமே காலால் கசக்கி

ஒரு போகத்தில் மூன்று மூடை நெல் சேகரித்து விடுவார்கள். இது அவர்களுக்கு பிடித்தமான விடயமாக இருந்தது. குற்றிய புதுப்பச்சரிசி கமகமக்க

சோதியம்மா வீட்டில் தந்த தயிர் ருசிக்க வெந்தயக் குழம்பும், புளியம்பூச் சொதியும் போதும்!

கையை மணக்கும் போதே சாப்பாட்டு ருசி தெரியும். கடற்கரை பக்கம் தான் என்பதால் சில நேரங்களில் அப்பா அங்க போவார். பழகிய சம்மாட்டிமார்கள்.

தங்கள் தங்கள் படகில் இருக்கும் கலவாய், குண்டூறு, நண்டு, திருக்கை என்று போட்டுக் கொடுப்பார்கள். அப்பா அள்ளிக் கொண்டு வருவார். பனையோலை கொழுத்தி நண்டு, குண்டூறு மீன் என்று சுட்டு உடைத்து உடைத்து சதையை ஊட்டி விடுவார்.

அப்பாவை பல பேருக்கு பிடிக்கும். எப்போதும் வீட்டிற்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் சாப்பிடுங்கள் என்பதுதான் அவரது வார்த்தையாக இருக்கும். நடுச் சாமங்களில் கூட அம்மா எழும்பி சமைக்கும் சத்தம் கேட்டு கண்ணை இறுக்கி மூடிப் படுத்துக் கொண்டு பார்த்த காலங்கள் நினைவுக்கு வருகிறது.

மாலை ஆனதும் தலைவாசலில் இருக்கும் திண்ணையில் ஒரு ஐந்து ஆறு பேர் கூடிடுவினம். சர்க்கரையோடு அம்மா தேனீர் கொடுக்க,

அரசியல், விவசாயம் பற்றி பேச்சுகள் சூடு பறக்கும்.

காட்டு விலங்குகள் பற்றி பலவிதமான சம்பாசணைகள் நடக்கும். வீட்டின் மூலையில் இருந்து படித்துக் கொண்டு இருக்கும் மாயா இதில் சில விடயங்களை மனதில் பதித்துக் கொள்வாள்.

இதன் காரணமாகவோ தெரியவில்லை அப்பாவோடு வேட்டைக்குப் போக வேண்டும் என்ற ஆவல் இவளுக்கு பல காலமாக இருந்தது. அப்போதெல்லாம் கமக்காரருக்கு வேளாண்மையைப் பாதுகாக்க அரசாங்கம் துவக்கு கொடுத்திருந்தது. அப்பா பதினாறாம் நம்பர் துவக்கு வைத்திருந்தார். ஒருநாள் ஆசைப் பட்டது போல மாயாவும், சாராவும் அப்பாவோடு வேட்டைக்குப் போயும் வந்தார்கள். ஊரில் இருக்கும் உறவினர்கள் எல்லோரின் வாய்க்குள்ளும் ஒரு முணு முணுமுணுப்பு...

சரியான செல்லத்தை பெட்டப் பிள்ளைகளுக்கு கொடுக்கிறாய் என்பதாக அது இருந்தது.

அப்பா எப்போதும் மற்றவர்களை விட சற்று வித்தியாசமானவர் பெண் பிள்ளைகளை ஆண் பிள்ளைகள் போல துடிப்போடு வளர்க்க நினைத்ததை அவளால் உணர முடிந்தது. ஆழமான குளத்தில் கழுதளவு நீரில் நின்று பிள்ளைகள் இருவரையும் நீந்தி வரச் சொல்லுவார். அதனால்தானோ என்னமோ அந்த மிக ஏழ்மையிலும் அவரோடு வாழ்ந்த வாழ்க்கை அவளுக்கு மறக்க முடியாத மகிழ்ச்சியைத் தந்திருந்தது. அந்த ஜீவனுக்குத் தெரிந்த தெல்லாம் பிள்ளைகள் வீடு, வயல், அடுத்து காடு இவையோடு மாலையில் சந்தியில் தேனீர்க் கடை அவ்வளவு தான்.

மாயாவிற்கு அடிக்கடி ஒரு பழக்கம் இருந்தது.

அவள் அதிக விடயங்களை ஆராய்ந்து சேகரிக்கும் ஒரு புத்தகமாக அவள் அப்பா இருந்தார். பழமை நிறைந்த வாழ்க்கை முறையையும், பழமையான சத்து நிறைந்த உணவுகளையும் மட்டுமல்லாமல் பல இயற்கைச் செடிகள் அதன் மருத்துவம்

இதெல்லாம் அவரிடமிருந்து அப்பப்போ அவள் சேகரிப்பாள். அவள் காணாத உறவுகளின் தலைமுறையை அப்பா விபரிக்கும் போது....

அவர்களை நேரே பார்த்தது போல இருக்கும் அவளுக்கு.

வானிலை மாற்றத்தை வைத்துக் கொண்டு எதிர்வு கூறுவதும்,

முகர்ந்து பார்த்து பாம்பு, மிருகங்கள் நடமாடும் விபரங்களைக் கூறுவதெல்லாம் இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது. அவருக்கு இசை மிகவும் பிடிக்கும் என்பதை அவள் அறிவாள். அவள் கேட்கும் போதெல்லாம் பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையே வாயை வைத்து உடுக்கடித்து அவர் சிந்துநடையில் காத்தவிராயன் கூத்து பாடுவார் அதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

அவரைப் பற்றி நினைக்கையில் எத்தனை விடயங்கள் மனதில் வந்து நிறைகிறது.

காலையில் பழஞ்சோற்றுக் கஞ்சியை நின்றபடியே பச்சமிளகாயோடு கடித்துக் குடித்து விட்டு...

வயலுக்குப் போவார் இடியனோடு.....

வர நேரம் ஆகும்.

எங்களுக்கு பசி வயிறை விராண்டும். அம்மாவின் முகம் அடிக்கடி எங்களைப் பார்த்து வாடிக் கிடக்கும். இடையிடையே எட்டி எட்டி வாசலைப் பார்ப்பா அம்மா.

"அப்பா கெதியா வந்திடுவார்" அவர் வாய்க்குள் இருந்து வார்த்தைகள் மெதுவாக உச்சரிக்கப் படும். நீண்ட நேரத்திற்குப் பிறகு அதோ அப்பா என்று சொல்ல முன் நாங்கள் ஓடிவந்து பார்ப்போம்....

தூரத்தில் குளக்கட்டில் இருந்து ஒரு உருவம் இறங்கி வருவது தெரியும். உடனே பாருங்கள் முகத்தில் என் தங்கச்சிக்கு ஒரு சிரிப்பு வரும் ஏன் எனக்கும் தான். அப்பா உடனே வந்து அம்மாவிடம் பிளேன்ரீயை வாங்கிக் குடித்த வண்ணம் மளமளவெனக் காட்டுக் கோழியை வெட்டிக் கொடுப்பார். கெதியா சமையப்பா பிள்ளைகள் பாவம் என்று சொல்வார்.

அம்மா உணவு தரும் போது..

பசிக் களையோடும் வியர்வையோடும் எண்ணெய்த்தன்மை பளபளவென இருக்கும் உடலில் காட்டு மரங்களின் சிறு சிறு இலைகள் ஒட்டி இருக்கும். அதையும் பொருட்படுத்தாமல் பிள்ளைகளை அருகில் இருத்தி பொறுமையோடு தனி இறைச்சியை அவர் கோப்பையில் இருந்து எடுத்து சோறோடு ஊட்டி விடும் அந்தப் பக்குவம் ஒரு தாயினும் மேலான உணர்வை அவளுக்கு கண் முன்னே கொண்டு வரும் அப்போதெல்லாம்.

அப்பாவின் பரந்த தோள்களும், சுருண்ட கேசமும், ஆறடி உயரமும்

அழகான கம்பீரமும், மனக் கண்ணை ஆக்கிரமிக்க ....

ஒரு தரம் தன்னையும் மீறி அ...ப்...பா...என்று உரத்திக் கத்திக் குலுக்கி அழுகின்றாள். யாராலும் சமாதானப் படுத்த முடியாத அந்த அழுகையின் ஊடே சூடாக வெளியேறும் கண்ணீர்த் துளிகள் சொல்கிறது அவள் உள்ளத்தின் வெம்மை கலந்த வெப்பியாரமான நினைவுகளை.

அவள் அப்பா....

அவளுக்கு காலத்தைக் கடந்த சாகாப்தமே!

**வன்னியூர் ஆர்.ஜெ. கலா...**

# மனித நேய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மாஹிறாவின் 'மனதின் மாயம்!

ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெருந்தொண்டாற்றிய படைப்பாளர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை மண்ணுக்கு உண்டு.

'ஞானரை வென்றான்' என்ற நூலைத் தந்து புகழ் பூத்திருந்த சின்னாலிமப்பா பிறந்த மண், 'வெண்பாவில் நீ யென்னை வென்றாய்' என்று புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையால் பாராட்டப்பட்ட புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் பிறந்த மண், அறுபதுகளில் இலக்கிய உலகில் பிரவேசித்து, ஈழத்தின் நவீன தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளர்களில் முன்வரிசையில் இடம் பிடித்திருந்த மருதூர்க் கொத்தன், மருதூர்க் கனி போன்றோர் பிறந்த மண், 14 தமிழ்க் காவியங்களைப் படைத்து 'காப்பியக்கோ' வாகப் பிரபலம் பெற்றிருக்கும் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் பிறந்த மண், இப்போதும் நவீன தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குச் செலுத்துகின்ற பல படைப்பாளர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற மண் மருதமுனை அம்மண்ணிலிருந்து அண்மையில் மலர்ந்திருக்கின்றது 'மனதின் மாயம்' என்ற புதுக் கவிதை நூல்.

அழகிய அட்டைப் படத்தோடு 232 பக்கங்களில் 100 கவிதைகளை உள்ளடக்கி நூல் விரிந்திருக்கின்றது. நூலின் ஆசிரியர் 1985இல் எழுத்துலகப் பிரவேசம் பெற்று, தொடர்ந்து எழுதி வருகின்ற எம்.ஏ. மாஹிறா.

மேடை நாடகக் கலைஞராகவும், பாடலாசிரியராகவும் பெயர் பதித்த மறைந்த ஐ.எல்.எம்.அமீரின் புதல்வியான அவர், ஹில்மா, கலீறா மருதமுனை மாஹிறா ஆகிய புனை பெயர்களிலும் எழுதி வருகின்றார். மாஹிறாவின் முதலாவது நூல் இது.

நூலுக்குத் தென்கிழக்குப் பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் அணிந்துரையையும், கவிஞர் விஜிலி பின்அட்டைக் குறிப்பையும் எழுதியுள்ளனர்.

புதுக்கவிதை என்ற வடிவம் அளித்திருக்கின்ற கட்டுப்பாடுகளற்ற சுதந்திரப் போக்கைப் பற்றிப் பிடித்தவராக பல்வேறு பொருட்பரப்பிலும் வரிகளை வடிவமைக்கிறார் மாஹிறா. மனிதாபிமானம், சமூகம், அரசியல், சமத்துவம், மார்க்கம் என்பவை உட்பொதிந்த அவரின் படைப்புக்கள் ஒடுக்கு முறைக்கு எதிரான குரலாக, பெண் அடக்கு முறைக்கு கண்டனம் தெரிவிப்பவையாக, வாழ்வியல் விமர்சனங்களாக, ஏற்றத் தாழ்வகற்றும் போராட்டக் குரலாக, அன்னை தந்தை பாசத்தை எடுத்தியம்பும் அன்புப் பிழிவாக பல்வேறு கோணங்களில் நூலில் விரிகிறது.

முதலாவது கவிதை "சுடுகாடு".

பசுஞ் சோலையாக நினைத்திருந்த திருமண வாழ்க்கை பாலைவனமாக அமைந்து விட, வாழ்வில் நொந்து போன ஒரு அபலையின் குமுறலாக கவிதை அமைகிறது.

பெண்களை அடிமைப்படுத்த நினைக்கும் சில கணவர்களால், திருமணவாழ்வு சிதைக்கப்படுவதையும், வாழ்க்கை சுடுகாடாக மாற்றப்படுவதையும், பெண்களின் அவஸ்தைகளையும் கண்ணீர் வரிகளாய் வடிக்கிறார் மாஹிறா.


"ஒரு மண வாழ்க்கைக்காய்
எத்தனை கொடுமைகளைத் தான்
எல்லோரும் சுமப்பது?
கட்டிய கணவன் அறிவிலி என்றால்
இப்படித்தான் பலரது வாழ்வும்
முன்னால் போய் அழும் .
வாழ்க்கை ஒரு நரக நெருப்பு
என்று
அப்போது தான்
கண்டும் கொண்டேன்!
அடிமைச் சங்கிலி இங்கே
பலமாய்ப் பலருள்
இறுக்கிப் பூட்டப்படுகிறது

என் தன்னம்பிக்கையின்
முதுகெலும்பை
யாரோ உடைத்தும் விட்டார்கள்
அதனால் தான் நான் இன்னும்
கூனிக் குறுகி முடங்கிக் கிடக்கிறேன்
வாழ்வியலில் நிமிர முடியாமல்!

ஆயிரம் மகளிர் தினங்கள்
அகிலத்தில் அப்பப்போ வந்தாலும்
யாருக்கு என்ன பலன்?
அடிமைச் சங்கிலி பூட்டிய
அபலைகளின் வாழ்வென்றும்
வெறும் சுடுகாடுதான்.."

துயர்கவிந்த கவிவரிகளோடு ஆரம்பிக்கும் அவரின் நூலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகள் அவலச் சுவை தருபவை.

"நிஜம் வலிக்கிறது
எதிலும்.. கைக்கெட்டியும்
வாய்க் கெட்டா நிலை வரும்போது!
பொறுமை எல்லை மீறுகிறது



எதிர்பார்ப்புக்கள் பூச்சியங்களை
எட்டிவிட்ட கோபத்தில்

சுடும் நிஜங்களுக்குள்
சுருங்கிவிடும் நினைவுகள்
கலங்கி அழும் கற்பனைகள்
இவற்றுக்கெல்லாம்
காலம் தரும் தீர்ப்பு
கண்ணீர் என்று
கலங்கி அழுகிறது மனது!'
என்று

'தன்னம்பிக்கை' என்ற கவிதையில் வரிகளை அடுக்கும் அவர்,

காலம் கரைகிறது ....
விதியெனும் பெயர் சொல்லி
முடிந்து தான் போய்விட்டது
வாழ்வியலில் அனைத்தும்!
ஏக்கமும் தாக்கமும்
தோல்விகளும் வலிகளும்
என்னை தாக்கி அழிக்க
முடிந்தவரை நானும்
முயற்சிகளைச் செய்கிறேன்
எல்லாவற்றிலும் தோற்று நிற்க
இதயம் கனக்கிறது
அழுகை வருகிறது

மரத்துத்தான் போகிறது மனது!
கண்ணீர்த் துளிக்கும் எனக்கும்
நெருக்கம் அதிகம்
என்னுள் விம்மி வெடிக்கும்
துயர்கள்! "

என்று "நிம்மதி" கவிதையிலும் தோல்விகளை, இழப்புகளை, ஏக்கத்தைப் பதிவு செய்கிறார் அவர்.

"உன் விழிகளை மேய்ந்தவர்
உன் முதுகினில் குத்துவர்
உன் மொழிகளை மேய்ந்தவர்
உன்னை வார்த்தைகளால் கொல்வர்
உன் முன்னே சிரிப்பவர்
உன் பின்னே தூற்றுவர்

ஆக மொத்தத்தில்
மனிதா நீ அடுத்தவரோடு
எச்சரிக்கையாக இருத்தலே
எதற்கும் சிறப்பு".

என்று 'எச்சரிக்கை' கவிதையில் குறிப்பிட்டு அறிவுரை பகர்கிறார்.

"மாய உலகில் இளம் சமுதாயம்
இறந்து கொண்டிருக்கிறது
இழந்து போகும்
இளமையோடு
எல்லாமே தொலைந்து போக..!
மாற்றம் நிகழும் உலகில்
மாறியே போகட்டும்
மானிடர் வாழ்வு
போதை தொலைந்த சமூகமாய்
மாயை தெளிந்த மனங்களாய்!'

என்று ஒரு நல்ல சமூகத்தை கட்டமைக்க விரும்புகிறார் மாஹிறா. அவரின் "போதை" என்ற கவிதையில்.

இவ்வாறு, அவரின் ஒவ்வொரு படைப்பும் உயர்ந்த எண்ணங்களிலான பொருளினைத் தருவதாக அமைந்திருக்கின்றன. ஆயினும், கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அணிந்துரையில் குறிப்பிடுகின்றவாறு கவிதைகளனைத்தும் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட குரல்வழிக் கவிதைகளாக அமைந்திருப்பதனால் அவை நீண்டனவாகவும், விபரிப்புக்களாகவும் சொல்லடுக்குகளாகவும் காணப்படுகின்றன.

'பெருகிய உணர்வின் இறுகிய, இசையோட்டமான சித்திரச் சிறைப்பிடிப்பு கவிதை' என்பார் பாவலர் பஸீல் காரியப்பர்.

பெருகி வரும் உணர்வுகளைப் புதுக்கவிதை என்ற வடிவத்தினூடாக வெளிப்படுத்திவரும் மாஹிறா, வெளிப்பாட்டு முறையிலும் கரிசனை செலுத்தி இலக்கிய உலகில் பிரகாசிக்க வேண்டுமெனபதே நமது பிரார்த்தனையாகும்.

வாசிப்பு, தேடல், என்பவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்ற அவர், கவித்துவ நுட்பங்களைப் புரிந்து கொண்டு இறுக்கம், கவித்துவ அடர்த்தி, நேர்த்திமிக்க நல்ல பல கவிதை நூல்களை இன்னும் தர வேண்டும்.

அவருக்கு நமது வாழ்த்துகள்.

நூல்: மனதின் மாயம்


நூலாசிரியர்: எம்.ஏ. மாஹிறா

வெளியீடு:ஹில்மா பதிப்பகம், 91, அல் ஹம்றா வீதி,மருதமுனை 04.

விலை: ரூபா 1000/.

**பாவேந்தல் பாலமுனை பாறூக் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 142



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 142
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 142

### இடமிருந்து வலம்

1.பக்கச் சார்பு இல்லாத சமநிலைப் போக்கு
4. இரத்தம்
6. பரம்பரை (குழம்பியுள்ளது)
7. உயர்வாகக் கருதும் நிலை(குழம்பியுள்ளது)
9. எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது
10. நீர்நிலை
12. ஒரு உணவுப் பண்டம்
13. ஞாபகம்
15. இந்தியாவுக்கு இப்படியும் ஒரு பெயர் (குழம்பியுள்ளது)
17. ஒரு தமிழ் மாதம் (திரும்பியுள்ளது)
18. இதுவும் ஒரு மலர்தான் (குழம்பியுள்ளது)
21. மனக் கொதிப்பு, சினம் (திரும்பியுள்ளது)
22. முன்னோக்கிச் செல்வதற்கு இடையூறு

### மேலிருந்து கீழ்

1. சிநேகம்
2. மன அமைதி
3. நீர்த்துளி (தலைகீழ்)
4. இதுவும் ஒரு நடனம்
5. இனிப்பு
8. கடினம் என்று தெரிந்திருந்தும் எப்படியாவது நிறைவேறும் என எதிர்பார்க்கும் நிலை (குழம்பியுள்ளது)
11. பல்வகைப் பயன்தரும் நெடுமரம்
12. விழாக்களின் போது இதனையும் தொங்கவிடுவதைக் காணலாம்.
13. தினமும் (குழம்பியுள்ளது)
14. இறுதிநிலை (தலைகீழ்)
16. ஒரு பணிக்குப் பொருத்தமானவர் என்பதற்கான அனுபவம் அல்லது அறிவு
19. சம்மதம் அல்லது சரியானதைக் குறிக்கும் சொல் (தலைகீழ்)
20. சிற்றுண்டி வகைகளில் ஒன்று

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 141

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 1. தீபாவளி | 13. பலி |
| 4. பகல் | 14. தைலம் |
| 7. மைதிலி | 15. கடைசி |
| 8. இயல்பு | 18. ஊதா |
| 9. மைந்தன் | 20. வாட்டம் |
| 11. வைகை | 21.வானம் |
| 12. சய | 22. அன்னம் |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. தீமை | 10. சந்தை |
| 2. பாதி | 11. வையகம் |
| 3. வலிமை | 16. கட்டை |
| 4. பயன் | 17. வாசி |
| 5. கல் | 18. ஊனம் |
| 6. புல் | 19. தானம் |
| 8. இதயம் | 21. அவா |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 141

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ரதி சிவசீலன்,**<br>நீர்வேலி வடக்கு,<br>யாழ்ப்பாணம் | **எம்.ஏ. எச்.எம். வஹ்பா**<br>517, காலி வீதி.<br>பம்பலப்பிட்டி<br>கொழும்பு 04 | **எபி. நடேசன்**<br>435/ 36 ஏ, மூன்றாம்<br>குறுக்கு பூம்புகார்<br>மட்டக்களப்பு |

### பாராட்டு பெறுவோர்

**1.கே. பத்மநாதன்**
ஹாலிஎல

**2, எஸ். சஞ்சனா**
வந்தாறுமூலை

**3. எம்.ஏ.நஜூமுத்தீன்**
அக்கரைப்பற்று

**4. எம்.எம்.ஹஷாத்**
மருதமுனை

**5. எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
உக்குவளை

**6. எஸ். செல்வாஜ்.**
பதுளை

**7. எஸ்.கனகநாயகம்**
மல்வத்தை

**8. எஸ். எச்.எம் ஜிப்ரி,**
மருதானை

**9. கே. ரமி'யப் பிரியா**
ரக்வானை

## தோட்டத்தொழிலாளர்கள் புதி... (13ஆம் பக்கத் தொடர்)

மேலும், இம் மக்கள் மலையக அரசியல் கட்சிகளினால் அதிகளவு நன்மைகளை பெறவில்லை. மாறாக அரசியல் கட்சிகளை நம்பி ஏமாந்தமையே வரலாறு.

எனவே, எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலில், இந் நாட்டில் இனத் துவேசம், ஊழல், இலஞ்சம், முறைகேடுகள் தொடர்ந்தும் இடம்பெறாத விதத்தில் எக் கட்சி செயற்பட முன் வருகிறதோ அக் கட்சிக்கு தமது முழுமையான ஆதரவை தருவதோடு, வாக்குரிமை மூலம் உறுதிப்படுத்தி அக் கட்சியை அரியாசனத்தில் அமர்த்த வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த மக்களில், ஏறத்தாழ 38 சதவீதத்தினர் வாக்களிக்கவில்லை. இதற்கு காரணம் என்னவெனில் இந்த நாடு சுதந்திரமடைந்த 76 ஆண்டு காலத்தில் எந்த அரசும் முறையாக செயற்படவில்லை என்ற மனப்போக்கே ஆகும். இந் நாட்டு அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் அமையாதமையும் காரணமாகும்.

## ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த... (09ஆம் பக்கத் தொடர்)

*2022ஆம் ஆண்டு இடம்பெற்ற 'அரகலய' மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியலுக்குப் பொருத்தமற்றவர்கள் என்றதொரு விம்பம் உருவாக்கப்பட்டிருந்தது.*

*இதனால் அரசியல்வாதிகள் என்றாலே மக்கள் வெறுக்கும் நிலைமை உருவாகியது.*

*இதன் பிரதிபலிப்பை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பார்க்க முடிந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இருந்த முன்னாள் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் பலர் மீதும் மக்கள் வெறுப்பைக் காட்டியிருந்தனர். இந்த வெறுப்பின் காரணமாக ரணிலுக்கு அவர்களால் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க முடியாமல் போயிருந்தது.*

*இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட அநுர அலையைத் தொடர்ந்து பல அரசியல்வாதிகளுக்குத் தம்மீதான மக்கள் செல்வாக்குக் குறித்த சந்தேகம் வலுத்துவிட்டது. இதற்கு சிறந்ததொரு உதாரணமாக ராஜபக்ஷ தரப்பின் செல்வாக்கு வீழ்ச்சியைக் குறிப்பிடலாம்.*

*நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டவர் எனப் போற்றப்படும் மஹிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்டம் தோல்வியைக் கொடுத்திருந்தது.*

*நாமல் போன்ற பல்வேறு சிரேஷ்ட தலைவர்களின் தொகுதிகள் படுதோல்வியைக் கொடுத்திருந்தன.*

*இதனை அடிப்படையாகக் கொண்டு பல சிரேஷ்ட அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிவிட்டனர்.*

*அத்துடன், கூட்டணிகள் அமைப்பதில் ஏற்பட்ட அதிருப்தி, உட்கட்சி முரண்பாடு எனப் பல்வேறு காரணங்களால் பலரும் விலகத் தீர்மானித்திருப்பதுடன், முக்கிய அரசியல் புள்ளிகள் பலரும் நேரடியாகப் போட்டியிடாது தேசியப் பட்டியலில் களமிறங்கியுள்ளனர். இது தோல்விப் பயமா அல்லது அரசியல் நகர்வா என்பது தெரியவில்லை.*

*குறிப்பாக கடந்த ஒன்பதாவது பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த 50 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை.*

*முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன், சிரேஷ்ட அரசியல்வாதிகளான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, விமல் வீரசன்ச எனப் பலரும் இம்முறை போட்டியிடவில்லை.*

*அதேநேரம், கூட்டணியுடனான முரண்பாடு காரணமாக இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லையென பாட்டலி சம்பிக்க ரணவக்க அறிவித்துள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை அக்கட்சி மீறியிருப்பதாகக் குற்றஞ்சாட்டியே சம்பிக்க ரணவக்கவின் கட்சி இம்முறை போட்டியிடவில்லை. இதுபோன்று இம்முறை வேட்புமனுக்கள் தொடர்பில் கட்சிகளுக்குள் கடுமையான வெட்டுக்குத்துக்கள் இடம்பெற்றுள்ளன. புதிய ஜனநாயகக் கூட்டணி கட்சிக்குள் வேட்புமனுக்களைத் தயாரிப்பதில் கடுமையான முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனால் பல அரசியல்வாதிகள் அதிருப்தியடைந்திருப்பதுடன் பொதுவெளியில் கட்சித் தலைமைகளை விமர்சித்தும் உள்ளனர்.*

### புதியவர்களுக்கான வாய்ப்புகள்:

*பழைய அரசியல்வாதிகள் பலரும் ஒதுங்கியிருப்பதால் புதியவர்களுக்கான வாய்ப்புகளைக் கொண்ட பொதுத்தேர்தலாக இது அமையப் போகின்றது.*

*தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் ஒரு சிலரைத் தவிர ஒட்டுமொத்தமானவர்களும் புதியவர்களாகவே இருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் கணிசமான புதிய முகங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. எனவே, இம்முறை பாராளுமன்றத்திற்குத் தெரிவாகக் கூடியவர்களில் பல புதிய முகங்கள் இருக்கப் போவது உறுதியாகியுள்ளது.*

*புதிய அரசியல் கலாசாரத்துக்கு இப்புதியவர்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும்.*

*புதிய முகங்களும் பழைய அரசியல் பாணியில் இறங்கிச் செயற்படுவார்களாக இருந்தால், அது நாட்டின் எதிர்காலத்திற்கு எவ்விதத்திலும் உதவியாக இருக்காது. இந்தக் களநிலைவரத்தைப் புரிந்துகொண்டு சரியான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அனுப்பும் பொறுப்பு வாக்காளர்களிடமே உள்ளது.*

# கோப்பிக் கணக்கு

*ஒரு மாலைப் பொழுதில்*
*வெள்ளையர் கோப்பி பருகி*
*சுவைத்துக் களித்திருக்க*
*நீ பூத்தாய்......*
*கோப்பி எம் இனத்தின்*
*உயிர் குடித்த கதை இது*
*எம் கணக்கை தீர்த்தவர்கள்*
*கல்லறையில் துயிலும்*
*வெள்ளைத் துரைமாரும்*
*கறுப்புத் துரை*
*கண்டாக்குகளும் கங்காணிகளும்*
*கோப்பி மலர் வாசம் தான்*
*பூத்து மணம் பரப்பி*
*பிரிந்தோர் கூடி மகிழ்ந்திருக்க*
*துணை சேர மணம் வீசும்*

*வஞ்சியரை வதைத்ததனால்*
*வாலிபத்தை சிதைத்ததனால்*
*எம் பெண்டிர் கோப்பி*
*பூவதனை சூடார்*
*கோப்பிப் பயிர் வளர்க்க*
*கொடிய மலைக் காட்டை*
*வெட்டி அழிக்கையிலே*
*நெளியும் மலைப் பாம்பும்*
*கொல்லும் சிங்கம், புலி, கரடிகளும்*
*ஓநாயும் கொன்று குவித்தனவே*
*எம் இனத்தை*
*காத்தடித்து வாதொடிந்து*
*மாய்ந்தவர்கள் ஏராளம்*
*பாதை வெட்ட கல்லுடைத்தோர்*
*காணாமல் போனார்கள்*
*அட்டை பாம்பு கடி பட்டு*
*அழிந்தவர்கள் ஆயிரங்கள்*
*கொள்ளை நோய் வந்து*
*கொத்துக் கொத்தாய் செத்தவர்கள்*
*இன்னும் பல ஆயிரங்கள்*
*மாண்டவரை உரமாக்கி*
*கோண மலை சீராக்கி*
*கூனி அடித்து விட்டு*
*கோப்பிக் கன்று நட்டு வைத்து*
*பேணி வளர்த்தார்கள்*
*தம் பிள்ளையைப் போல்*
*இங்கெவர்க்கோ*
*பொன் தேடி தருவதற்காய்*
*இம் மண்ணுள் புதைந்தார்கள்*
*அவருக்காய் அபராதம்*
*கேட்க ஒரு நாதி*
*இங்கில்லை*
*ஐக் கோட்டில் வழக்காட*
*ஆளுமில்லை பேருமில்லை*
*பொய்கோட்டு புழுதிகளால்*
*அவர் நீதி புதைந்ததுவோ*
*இருபத்து நான்காண்டுகளில்*
*முன்றரை லட்சம் பேர்*
*இரையாகிப் போனார்கள்*
*இவர் குடித்த கோப்பிக் காய்*
*இங்கிதற்கு கணக்குண்டு*
*இக் கணக்கை நேர் செய்ய*
*யாருள்ளார்?*

*(கேகாலை எஸ். கிருஷ்ணன்)*


இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**பொதுமக்களுக்கான அறிவித்தல் !**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளுக்காக நடாத்தப்படும் தேர்வுப் பரீட்சைகளு-க்கு விண்ணப்பித்த மாணவர்களை இலக்கு வைத்து, சமூக வலைத்தளங்களில் வுடுஊ (வுநயஉாலைபெ ரு டுநயசெைபெ ஊழடடநபந) என்கின்ற ஒரு நிறுவனம் விளம்பரங்களை வெளியிட்டு அத்தேர்வுப் பரீட்சைகளுக்காக விசேட பயிற்சி வகுப்புக்கள் நடாத்துவதாகக் குறிப்பிட்டு பணம் சேகரிப்பதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அனுமதி மற்றும் அதிகாரம் அளிக்கப்படாமல் செய்யப்பட்டுள்ள ஒரு விளம்பரம் என்பதை சகலருக்கும் அறியப்படுத்துகின்றேன்.

அந் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் (சம்பத் வங்கி/கணக்கு இல: 112654182777, இலங்கை வங்கி/கணக்கு இல: 93044674, மக்கள் வங்கி/கணக்கு இல: 065200210024683) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது.

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
13.10.2024



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழன் 2024.10.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5621 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 33,160,652.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 7 4 7 8 9 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 196 — ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 7 8 9 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3863 — சீட்டிழுப்பு திகதி 2024.10.10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,599,459.60
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 37 39 59 61 — விசேட எழுத்து O — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 45080

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1969 — 2024.10.10 — 89683 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 449,088,006.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 08 19 31 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.10.10 — சீட்டிழுப்பு இலக்கம் 447
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 7 8 7 6 4 2
L7 எழுத்து W
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,933,374.16

ராசி சுப பலன் — திகதி 2024.10.10 — சீட்டிழுப்பு இலக்கம் 930 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,009,498.40
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 01 05 16 30 — தனயோக இலக்கம் 88440 — நாளுக்கான விதி எண் 28

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1651 — 2024.10.10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,247,053.28
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 06 18 42 61 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14898



SriLankan Airlines
oneworld

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் வழங்குனர்களை பதிவு செய்தல் - சந்தைப்படுத்தல் பிரிவு

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸில் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்ய விரும்பும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் உள்ள புகழ்பெற்ற சப்ளையர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இதன் மூலம் கோரப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

| Procurement Category | Broad Listing of Items |
|---|---|
| Advertising | Creative agencies, media buying agencies (local / international), hoarding suppliers, media houses, publishing houses. |
| Promotions | Event management companies, suppliers of giveaway items / merchandising, production agencies, designers and interior design agencies / suppliers, fabrication agencies, printing suppliers, outdoor branding, hiring of furniture and other event management material, hiring of sounds and lights, vehicle hiring companies / suppliers, photographers, entertainment groups and comperes, hotels - for promotional and corporate events. |
| Brand Management | Production agencies, designers and interior design agencies. |
| Digital and Social Media | Photographers, videographers, audio/video production agencies, event strategist companies, courier services, tour operators, hotels, content writers, digital research companies, web developers, social media listening and solutions services, translators, digital and social media buying and planning / seo/sem, digital marketing agencies. |
| Sustainability | High resolution underwater photography and videography, videographers, photographers, audio /video production agencies, writers, boat facilities suppliers, fertilizer suppliers, Conservation related excavation/other related earth work within Negombo lagoon, Heavy earth moving machinery suppliers with operators, Nursery construction and equipment suppliers, wood fillings lorry transporters, Recycled handmade paper, upcycle / recycle of PET bottle yarn and fabric manufactures and finished garments producers using PET bottle yarn, Bamboo products suppliers, Collection and removal of plastic waste from Negombo lagoon. |
| Editorial and Publications | Translators - Sinhala, Tamil, Chinese, Japanese, Arabic, French and German, publishing houses. |

ஆவணங்களை (சப்ளையர்களுக்கான பொதுவான வழிமுறைகள், ஒவ்வொரு கொள்முதல் வகையின் விவரங்கள் மற்றும் சப்ளையர் பதிவு படிவம்) நேரடியாக **https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices.**
அக்டோபர் 13, 2024 முதல், 11.00 மணி தொடக்கம் (இலங்கை நேர GMT+05:30 நேர மண்டலம்) பதிவிறக்கம் செய்யலாம்.

**முக்கிய குறிப்பு: ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் மீண்டும் பதிவு செய்யும் ஆவணங்களை சமர்ப்பிக்கத்தேயில்லை. இது புதிய வழங்குனர்களுக்கு மாத்திரமே.**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களுடன் "ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் சந்தைப்படுத்தல் பிரிவின் வழங்குனர்களுக்கான பதிவு" என்று குறிக்கப்பட்ட சீல் செய்யப்பட்ட உறையில் அனுப்பப்பட வேண்டும்.

பதிவு தபால் மூலம்:
சந்தைப்படுத்தல் தலைவர்
ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், சந்தைப்படுத்தல் பிரிவு, விமான சேவை மையம்,
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை.
03.11.2024 அன்று அல்லது அதற்கு முன்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது சப்ளையர் பதிவு செயல்முறையை ரத்து செய்ய உரிமை உள்ளது.

# வீதியோர சுவரோவியங்களுடன் புதிய சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ள பெப்சி

வண்ணமயமான சுவரோவியங்களுடன் திறந்தவெளி காட்சியகமாக மாற்றும் வீதியோர கலைப் பிரசாரத்துடன் பெப்சி நிறுவனம் புதிய சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் கொழும்பு தாமரை கோபுரத்தில் அண்மையில் இடம்பெற்றது. உள்நாட்டு வெளிநாட்டு கலைஞர்களின் பங்குபற்றுதலுடன் 17 புதுமைமிக்க கலைப்படைப்புக்களுடன் இந்த அறிமுகம் இடம்பெற்றது.

சந்தைப்படுத்தலில் 125 வருட நிறைவை பெப்சி நிறுவனம் தற்போது கொண்டாடுகிறது. இச்சந்தர்ப்பத்தில் அதன் உலகளாவிய பொப் கலாசாரத்தின் மையமாக விளங்கும் வீதியோர கலை வடிவங்களுடன் அதன் சின்னத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறது. பெப்சி ஸ்ட்ரீட் கலா எனப் பெயரிடப்பட்டுள்ளதன் ஊடாக உலகளவில் முதன்முறையாக பொதுக்கலை மூலம் அதன் புதுப்பிக்கப்பட்ட அடையாளத்தை அறிமுகப்படுத்தியுள்ளமை அதன் அற்புத தருணத்தை பிரதிபலிக்கிறது. நாடு முழுவதும் 17 சுவரோவியங்களுடன், இந்த முன்முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெப்சியின் புதிய சின்ன அறிமுக நிகழ்வு அனுபவங்கள் மூலம் அதன் தைரியமான அடையாளத்தை உயிர்ப்பித்தது.



ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை கவரும் வகையில் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. இலங்கையில் உள்ள கலைச் சமூகத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்கவர்கள் இதில் பங்குபற்றினர்.

தாமரை கோபுரம் பெப்சியின் புதிய தடித்த நிறங்களுடன் ஒளியூட்டப்பட்டது.

இந்த டைனமிக் லைட்டிங் டிஸ்பிளேயானது தனியார் நிறுவனமொன்று தனது வர்த்தக முத்திரையை கோபுரத்தின் மீது காட்சிப்படுத்தியது இதுவே முதற்தடவையாகும். இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

# புதிய factoring நிதிச்சேவையை மீள ஆரம்பிக்கின்றது செலான்

செலான் வங்கியானது Seylan Factoring மூலம் அதன் பரந்த நிதிச் சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு நிலுவையில் உள்ள வர்த்தக வரவுகளை வர்த்தக பரிமாற்றம் செய்வதன் மூலம் நிதி திரட்டும் வழிமுறையாகும்.

பாரம்பரியக் கடன் வழங்கலைப் போலன்றி பரந்துபட்ட காரணிகள் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான ஆதாரங்களை கருத்திற் கொள்ளும் factoring முதன்மையாக பெறவேண்டியவைகளின் தரம் மற்றும் வசூலிப்பதற்கான வசதியை அமைப்பது ஆகியவற்றில் தங்கியுள்ளது.

Seylan Factoring மூலம் பணத்திற்கான விரைவான அணுகல், அதிகரித்த பணப்புழக்கம் மற்றும் விநியோகஸ்தர்கள் வழங்கும் ஆரம்ப கட்டண தள்ளுபடியை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் பெறுவர். இந்தச் சேவையானது ஒரு வணிகத்தின் கடன் விலைப்பட்டியல் மதிப்பின் 80% வரையான பெறுமதிக்கு சில மணிநேரங்களில் நிதியளிக்கிறது. பணம் செலுத்திய பிறகு கடன் காலத்தின் முடிவில் மீதமுள்ள நிலுவைத் தொகை பெறப்படும். மேலும், இச்சேவை ஊடாக வாடிக்கையாளர்கள் கடன்படுனர்களிடம் முடக்கப்பட்ட பணத்தை விடுவிக்கலாம், தங்கள் வணிகத்தில் அதிகரித்த செயல்பாட்டு மூலதனத்தை மீண்டும் முதலீடு செய்யலாம் அல்லது சேகரிப்பு செயற்பாடுகள் மற்றும் விற்பனைப் பேரேடு நிர்வாகத்தை ஒப்பந்த அடிப்படையில் வெளிநபர்களுக்கு (outsource) கையளிக்கலாம். Seylan Factoringஇற்கு நிலையான பிணையங்கள் (tangible securities) அவசியம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாடு 2024 இல் உரையாற்றும் AIA குழும சுகாதாரப் பணிப்பாளர்

AIA குழுமத்தின் சுகாதாரப் பராமரிப்புப் பணிப்பாளர் Dr.கிறிஸ்டியன் வார்ட்ஸ் சமீபத்தில் ஷங்ரிலா கொழும்பில் நடைபெற்ற சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாடு 2024 இல் உரையாற்றியிருந்தார். இன்றைய சிக்கலான மற்றும் மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் வளர்ச்சியடைந்து வரும் பங்கினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக உலகளாவிய தொழில்துறைத் தலைவர்கள், காப்புறுதித் திட்ட வல்லுநர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்கள் ஆகியோர் "சவால்கள் மற்றும் புதுமையான மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் பங்கு" என்ற கருப்பொருளில் இங்கு ஒன்றுகூடி இருந்தனர்.





Dr..வார்ட்ஸ் ஆரோக்கியக் காப்பீடு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவைகள் உட்பட சுகாதாரப் பராமரிப்புத் துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமான சர்வதேச அனுபவத்துடன் 'வளர்ந்து வரும் பிராந்தியப் போக்குகள் மற்றும் டிஜிட்டல் தழுவலுடன் வைத்தியக் காப்பீட்டின் எதிர்காலம்' பற்றிய தனது உள்ளார்ந்த அறிவினையும் இதன் போது பகிர்ந்து கொண்டிருந்தார். அவரது விளக்கக்காட்சி தொழில் துறையினை மாற்றியமைக்கும் முக்கிய போக்குகளை எடுத்துக் காட்டி இருந்ததுடன் பெறுமதி அடிப்படையிலான சுகாதாரப் பாதுகாப்பு, டிஜிட்டல் தீர்வுகளின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார இடர் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் பகுப்பாய்வு உள்ளறிவு மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தி வழங்குவதற்காக சுகாதாரக் காப்புறுதியினை ஆரோக்கியப் பராமரிப்புச் சேவை விநியோகத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

# முதலாவது நவீன தொடர்மனை நகர் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளர்களான Prime குரூப், பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த YOLO செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. கிரிபத்கொட நகரில் நிர்மாணிக்கப்படும் மிகப் பெரிய மற்றும் சொகுசான நவீன வீட்டு தொடர்மனை நகர் திட்டமாக இது அமைந்துள்ளது.

பிரத்தியேகமான வாழிட அனுபவத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்துடன், நிர்மாணப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கொழும்பு நகரின் வானுயர்ந்த கட்டடங்களில் ஒன்றாக அமைந்திருக்கும் என்பதுடன், பிரத்தியேகமான சமூகத்தில் புதிய நியமங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். YOLO செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் உயர் தர நிர்ணயங்களுக்கமையவும், நீடித்து நிலைத்திருக்கும் வகையிலும் முன்னெடுக்கப்படும். இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் Prime குரூப்பின் தவிசாளரும் இணை தலைமை அதிகாரியும், விசேட விருந்தினர்கள் மற்றும் எதிர்கால உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




உரிமையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இது சிறந்த வசதியாக அமைந்துள்ளது. முன்னரைவிட சொத்தின் உரிமையாண்மையை கொண்டிருப்பது என்பது இலகுவாக்கப்பட்டுள்ளது. புத்தாக்கமான வழிமுறை என்பது Prime குரூப்பின் உறுதியான நிதித் தன்மையுடன் சாத்தியமானதாக அமைந்துள்ளது." என்றார்.இந்தத் திட்டத்தின் இல்லமொன்றின் உரிமையாளராக விரும்புவோர் மற்றும் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் YOLO வின் விற்பனை Galleryக்கு விஜயம் செய்து, தமக்குரிய பகுதியை ஒதுக்கிக் கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

# சிறந்த வங்கி பங்குடைமையாளராக கௌரவிக்கப்பட்ட NDB வங்கி



ஏசியா ட்ரஸ்ட்டட் லைப் முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள் விருதுகள் 2024 இல்[Asia Trusted Life Agents & Advisors Awards] NDBAIA வங்கிக் காப்புறுதி பங்குடைமைக்காக ஆண்டின் சிறந்த வங்கிப் பங்குதாரர் என்ற பெருமைக்குரிய விருது வழங்கப்பட்டமையை AIA ஸ்ரீலங்காவுடன் இணைந்து அறிவிப்பதில் NDB வங்கியானது பெருமிதம் கொள்கிறது. இந்த சர்வதேச கௌரவத்தை இலங்கை பெறுவது இதுவே முதல் தடவை என்பதனால் இந்த அங்கீகாரம் ஒரு வரலாற்று மைல்கல்லைக் குறிக்கிறது.

ஏசியா ட்ரஸ்ட்டட் லைப் முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள் விருதுகள் நிகழ்வானது ஆசிய காப்புறுதி மதிப்பாய்வு [Asia Insurance Review] ஆசிய ஆலோசகர்கள் வலையமைப்பு [Asia Advisors Network] மற்றும் LIMRA (ஆயுள் காப்புறுதி சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு சங்கம் The Life Insurance Marketing and Research Association) ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட, ஆயுள் காப்புறுதி மற்றும் நிதியியல் ஆலோசனைத் துறையில் மிகவும் மதிக்கப்படும் விருதுத் தொடராகும். சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரிகள், சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய குழுவால் கடுமையான மதிப்பீட்டு செயல்முறை மூலம் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றமையானது, விருது பெறுபவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த நம்பகத்தன்மையையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்கிறது.

# ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேசிய முயற்சிக்கு தலைமை தாங்கும் 'ஈவா'

இலங்கையின் முன்னணி சானிட்டரி நாப்கின் வர்த்தகநாமமான ஈவா, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸூடன் இணைந்து 'மகஹருனு பாடம்' என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 'ஈவா தனமுத்து தரு தனகெனம லொகுவேமு' என்ற தலைப்பில் மாற்றியமைக்கும் கல்வி முயற்சியை தொடங்கியுள்ளது. 'ஈவா தனமுத்து தரு – தனகெனம லொகுவேமு' முயற்சியானது, நாடெங்கும் உள்ள 3,000க்கும் மேற்பட்ட பெண்கள் பாடசாலைகளில் பெண்களின் ஆரோக்கியம், பருவமடைதல், இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் மாதவிடாய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி 'மகஹருனு பாடம்' நிகழ்ச்சியின் ஆரம்பவிழா, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்த முயற்சியானது பெரும்பாலும் களங்கம் மற்றும் போலியான தகவல்களால் சூழப்பட்ட கல்வித் துறையிலுள்ள பகுதிகள் பற்றிய இடைவெளிகளை நிரப்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியில் ஈவாவின் ஈடுபாடு, கல்வியின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளை வலுப்படுத்தல் மற்றும் மாதவிடாய்க் காலத்தில் சாதகமான எண்ணங்களை மேம்படுத்துவதற்கான அதன் நோக்கத்தை பிரதிபலிக்கிறது. இந்த முன்முயற்சியின் ஒரு முக்கிய பகுதியாக, துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவாக இலங்கை பொலிஸின் குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தால் அவசரத்தொலைபேசி எண் 109 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# சான்று பெற்றுள்ள முதலாவது உள்நாட்டு வங்கி



தனது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பிற்காக பெருமதிப்புமிக்க சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ள முதலாவது உள்நாட்டு, கட்டமைப்புரீதியாக முக்கியமான வங்கி மற்றும் இலங்கையிலுள்ள அரச வங்கியாக மாறியுள்ளது குறித்து மக்கள் வங்கி பெரும் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. தனது வாடிக்கையாளர்கள், தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் ஒட்டுமொத்த வங்கித் துறைக்காக, தரவுக் காப்பு, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை குறித்த உயர் தராதரங்களைப் பேணுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இந்த முக்கியமான சாதனை மைல்கல் காண்பிக்கின்றது.

தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பில் அதிநவீன சர்வதேச தராதரத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த சான்று அங்கீகாரத்தை சம்பாதித்துள்ளதன் மூலமாக, பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற இணைய ஆபத்துக்களிலிருந்து பெறுமதிமிக்க தனது தகவல் சொத்துக்களைப் பாதுகாக்கும் வலுவான பாதுகாப்பு கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுல்படுத்தும் தனது ஆற்றலை மக்கள் வங்கி நிரூபித்துள்ளது. வங்கியின் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் இச்சான்று அங்கீகாரம் வழங்கப்படும் நிலையில், தகவல் பாதுகாப்பு மீது அதன் வலுவான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதம தகவல் அதிகாரி தம்மிக தாச இது குறித்து கருத்து வெளியிடுகையில், "சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற இச்சான்று அங்கீகாரத்தை சம்பாதித்துள்ள இலங்கையின் முதலாவது உள்நாட்டு, கட்டமைப்புரீதியாக முக்கியமான வங்கியாக மாறியுள்ளமை எமக்கு மிகுந்த கௌரவமளிக்கின்றது.

# புதிய சூரிய வலு தீர்வுகள் நிலையத்தை வெல்லவாயவில் திறந்துள்ள E.B. Creasy Solar

இலங்கையின் முன்னணி சூரிய வலுத் தீர்வுகளை வழங்கும் E.B. Creasy Solar, தனது புதிய சூரிய வலு தீர்வுகள் நிலையத்தை செப்டெம்பர் 6ஆம் திகதி வெல்லவாயவில் திறந்துள்ளது. இந்த நிலையத்தில் பரந்தளவு சூரிய வலுத் தீர்வுகள் கிடைப்பதுடன், இதில் நிலை 1 சூரிய படல்கள் மற்றும் LONGI, AE Solar, Thornova, LORENTZ Solar Water Pumps மற்றும் உலகின் முதல் தர இன்வேர்டர் வர்த்தக நாமமான SUNGROW ஆகியவற்றின் தொழில்நுட்பம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும். E.B. Creasy Solar தயாரிப்புத் தெரிவுகள் உயர் வினைத்திறன் மற்றும் நீடித்த பாவனையை கொண்டதாக அமைந்துள்ளன. E.B. Creasy Solar இனால் புத்தாக்கமான சூரிய வலுத் தொழில்நுட்பங்கள் வழங்கப்படுவது மாத்திரமன்றி, நம்பிக்கை மற்றும் நீண்ட கால வாடிக்கையாளர் தன்னிறைவை உறுதி செய்யும் வகையில் பரிபூரண விற்பனைக்கு பிந்திய ஆதரவையும் வழங்குகின்றது.




146 வருட கால நம்பிக்கையை வென்ற E.B. Creasy & Co. PLC இன் புதுப்பிக்கத்தக்க வலுப் பிரிவாக E.B. Creasy Solar இயங்குகின்றது. Darley Butler இன் துணை நிறுவனமாக அமைந்திருப்பதுடன், தூய வலுவில் முதலீடுகளுக்கு வலுவூட்ட E.B. Creasy Solar தன்னை அர்ப்பணித்துள்ளது. அதனூடாக சூழல்சார் வழிகாட்டல் மற்றும் நிலைபேறான எதிர்காலத்தையும் உறுதி செய்கின்றது.






அலங்காரம் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறையில் தமது 20 வருட கால வெற்றிப்பயணத்தை நினைவூட்டும் வகையில் டிசெல் ஃபெஷன் தனது புதிய விற்பனை நிலையத்தை கண்டியில் திறந்துள்ளது. அலங்காரம் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறையில் சுமார் 20 வருட காலம் மக்களது நன்மதிப்பைப் பெற்ற டிசெல் ஃபெஷன் தமது புதிய விற்பனை நிலையத்தை ஒக்டோபர் 3ஆம் திகதி இலக்கம் 451, பேராதனை வீதி, கண்டியில் வெகு விமரிசையாக திறப்பதற்கு தயாராகவுள்ளது. 2004ஆம் ஆண்டு ஹர்ஷ ஃபெஷன் எனும் நாமத்தில் கொழும்பில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆடைகள் விற்பனை நிலையமானது நாளடைவில் ஜா – எலயில் டிசெல் ஃபெஷன் என்ற விற்பனை நாமத்தில் புதுப் பொலிவுடன் இலங்கை மக்களுக்கு ஏற்றாற் போன்று அழகிய ஆடை வடிவமைப்புகளுடன் உயர்தரத்தில் சாதாரண விலையில் தமது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கி வந்தது. ஆண், பெண் இருபாலார் மட்டுமின்றி சிறுவர்களது மனதையும் கொள்ளை கொள்ளுமளவிற்கு புத்தம் புதிய ஆடைகளை தன்னகத்தே கொண்டுள்ளது இவ் ஆடையகம்.

## இனநலனா சுயநலமா?.... (07 ஆம் பக்க தொடர்)

இதையிட்டெல்லாம் சனங்களுக்குக் குழப்பம் வந்தால் அதற்குத் தமிழரசுக் கட்சியோ, தமிழ்த்தேசியவாதமோ பொறுப்பாகாது.

அடுத்தது, தமிழ்த்தேசியவாத அடையாளத்தைக் கொண்ட – தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். தேசமாகத் திரள வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் கட்சிகள் பிரிந்து – பிளவுண்டு நிற்பதாகும். ஒன்றுபட்டு நிற்பதன் மூலமே தமிழரின் கூட்டுணர்வை உலகின் முன்னே பிரகடனப்படுத்தலாம் என்று சொன்ன கட்சிகள் அதற்கு மாறாக நிற்பது அவற்றின் கொள்கைக்கும் நிலைப்பாட்டுக்கும் வார்த்தைகளுக்கும் எதிரானதல்லவா! அப்படியென்றால் இவை வலியுறுத்திய – மக்களைக் கோரிய ஒற்றுமையும் ஐக்கியமும் தேசத்திரட்சியும் என்ன பொருளாயிற்று? சுத்த ஏமாற்றைத்தானே இவ்வளவு காலமும் செய்திருக்கின்றன. இப்போதும் அதைத்தானே செய்யப் போகின்றன? இப்படி ஏமாற்றுச் செய்து கொண்டு எப்படி மக்களுக்கு முன்னால் இவற்றினால் நிற்க முடிகிறது? அதற்கான துணிச்சலும் அற நிமிர்வும் இவற்றுக்குண்டா?

இதையிட்டு தமிழ்த்தேசியவாதத்தை வலியுறுத்துவோரும் இந்தக் கட்சிகளை ஆதரித்து நின்றோரும் பதிலளிக்கவும் பொறுப்புரைக்கவும் கடப்பாடுடையவர்களாகின்றனர். அவர்களாவது இதைச் செய்வார்களா? அல்லது அவர்களும் இந்தக் கீழ்மைத் தரப்புகளோடு சல்லாபங் கொள்வரா?

தமிழ்த்தேசியவாதத் தரப்புகள் பொதுவாகவே சொல்லி வரும் கூற்று இனத்தின் நலனே முக்கியம். அதைக் கடந்து சுயநலனின் அடிப்படையில் செயற்படுவது அந்த (தமிழ்) இனத்துக்குச் செய்யும் துரோகமாகும் என்று. அப்படியென்றால் இப்பொழுது இனத்திரட்சிக்கு எதிராக – பெருந்தேசியவாதத்துக்கு ஆதரவாகச் செயற்படும் இந்தத் தரப்புகளின் செயற்பாட்டுக்குப் பெயரென்ன? இது பச்சைத் துரோகமின்றி வேறென்ன?

இறுதியாகவும் ஒன்றைச் சொல்லலாம். கட்சிகளில் தாம் மதிக்கப்படவில்லை. தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தமக்கு வாய்ப்பு (இடம்) அளிக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டை முன்னிறுத்திக் கொண்டு பலர் வேறு கட்சிகளிலும் வேறு அணியாகச் சேர்ந்து கொண்டு சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிடுகின்றனர்.

அட, தேர்தலில் போட்டியிடுவதற்குக் காட்டும் இந்தப் பேரார்வத்தையும் பெருமுயற்சியையும் அதற்காகப் பாடுபடுவதையும் மக்களுக்கான களப்பணிகளைச் செய்வதற்குக் காட்டலாம். அதுவே உண்மையில் அரசியற் தகுதியும் அரசியற் பணியும் அரசியல் மதிப்புமாகும். ஆதைச் செய்தால் மக்கள் அப்படியானவர்களுக்காக முன் வந்து நியாயம் கேட்பர். இடத்தைக் கேட்டுப் போராடுவார்கள். தங்களுடைய ஆதரவை அளித்து குறித்த வேட்பாளர்களை வெற்றியடைய வைப்பார்கள். ஆக களப்பணியார்களே வேட்பாளர்களாக வேண்டும். அத்தகைய ஒரு அரசியற் பண்பாடு தமிழ்ச் சூழலில் உருவாகி வளர்ச்சியடைய வேண்டும். இதனையே இந்தப் பத்தியாளர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

தமிழ்த்தேசியம் மட்டுமல்ல, எந்தத் தேசியவாதமும் மற்றமைகளை – பிற தேசியவாதத்தை நிராகரித்து – மறுதலித்துத் தன்னை நிலைப்படுத்த முடியாது. அவற்றை அங்கீகரித்து, மதித்து இணைநிலை கொள்ள வேண்டும். இங்கோ பிற தேசியங்களை எதிர்நிலையில் நிறுத்தி, அதற்குள்ளிருக்கும் முரண்பாடுகளைக் கூர்மையாக்கி, இனவாதமாக்கித் தமது அரசியலைச் செய்வதாகவே உள்ளது. இது அடிப்படையில் தவறானதாகும். இனியும் அப்படி இனவாதத்தைக் கட்டமைக்க முடியாது. இன நலன் என்ற நாடக வார்த்தைகளுக்கு இனி எந்தப் பெறுமானமும் இல்லை. அதை விடச் சுயநலனே முக்கியம் என இவை தெளிவாக நிரூபித்து விட்டன.

ஆக, இவ்வளவு காலமும் சொல்லி வந்த இன நலநனை விடச் சுயநலனே முக்கியம் என்று இந்தத் தேர்தற்களம் திறக்கப்பட்டுள்ளது.

மக்கள் இதைக்கு நித்து நிதானமாக – ஆழமாகச் சிந்தித்துச் செயற்படுவது அவசியம். உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, களப்பணி போன்றவற்றை நம்பிச் செயற்படுவோரை ஆதரிப்பதே சிறப்பு.

ஆம், இது விழித்தெழும் காலமாகும்.

## ஆன்மிக ஞானி...(08 ஆம் பக்க தொடர்ச்சி)

தன்மையரியாமலே இணைவைக்கும் செயற்பாடுகளுக்கு ஒப்பாக நடப்போரைக் காப்பாற்றும் வகையில் போதனை புரிந்தார்கள். அதே போன்று மார்க்கத்துக்கு முரணான புதுப் புதுப் கொள்கைகளில் ஈடுபட்டு வருவோரையும் தடுத்து நேர் வழியில் நடக்கச் செய்தார்கள். இறையச்சம் இறை நம்பிக்கைபற்றி ஆழமாக மக்கள் மனங்களில் பதியவைத்தார்கள். பத்குர் ரப்பானி என்ற நூல் இதற்கு தக்க சான்றாகும். இம்மை வாழ்வு குறித்தும் மறுமையில் நற்பெயரும் குறித்தும் அலகுர அந்நூலில் ஆணித்தனமாக முன்வைத்தார்கள்.

ஈமான் உறுதியோடு ஏகத்துவத்தின் பால் மக்கள் சீராக நடக்க தன் பிரசாரப் போதனைகளை நெறிப்படுத்தினார்கள்.

சத்தியத்தின்பால் மக்களை அழைக்க அரும் பாடு பட்ட ஆத்மீக ஞானி முஹியத்தீன் அப்துல் காதர் ஜீலானி (ரலி) அவர்களையும் எதிர் அன்றொரு கூட்டம் இருந்தது. சீர்திருத்தவாதிகளுக்கு இத்தகைய எதிர் அலைகள் மோதுவது வரலாற்று நெடுகிலும் உள்ள உண்மையாகும். இதற்கு ஆத்மீக ஞானியும் விதிவிளக்கல்ல. அத்தனை சோதனை, வேதனைகளையும் சகித்துக்கொண்டு தன்பயணத்தை துணிவுடன் தொடர்ந்தார்கள். கொலைப் பயமுறுத்தல்கள் வந்த வேளையிலும் தயங்காது, அஞ்சாது அல்லாஹ் ஒருவன் மீது நம்பிக்கை வைத்து இலட்சியத்திலே கண்ணாக இருந்தார்கள். இதனால் ஆத்மீகத்தில் அதிஉயர் நிலையடைந்த குத்பு நாயகமாக திகழ்ந்தார்கள்.

தம் பணியை திறம்பட நிறைவேற்றிக்கொண்டு இருந்த அன்னார், சிறிது நோய்வாய்பட்டிருந்த நிலையில், ஹிஜ்ரி 561 ரபியுல் ஆஹிர் பிறை 11 இல் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னாரினால் உருவாக்கப்பட்ட காதிரியா தரீக்கா எனும் ஆன்மீக வழிமுறை இன்று உலகின் நான்கு புறங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நூற்றுக்கு நூறு வீதம் ஷாதுலியா தரீக்காவை பின்பற்றும் சீனன் கோட்டையில் அன்னாருக்காக மனாகிப் மஜ்லிஸ் வருடாந்தம் நடத்தப்படு வருகிறமையானது தரீக்காக்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

சீனன் கோட்டை குட்டிமலை ஜலாலியா தரீகா பள்ளிவாசலில் அன்னார் பெயரில் மனாகிப் மஜ்லிஸ் தொடர்ந்து மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அஷ் ஷெய்கு ஜமால் தீன், அஷ் ஷெய்கு ஜலாலுத்தீன் போன்ற இறைநேசர்கள் அடங்கப்பட்டுள்ள, குட்டிமலை தர்கா பல வரலாற்று சிறப்புக்களை கொண்ட ஓர் பள்ளிவாசலாகும்.

சிறந்த சுற்றாடலும் மிகவும் ஒற்றுமையாகவும் இப்பகுதி வாழ் மக்கள் வாழ்வதுடன் குத்பும் அக்தாப் கௌதுல் அஃலம் முஹ்யத்தீன் அப்தில் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் ஞாபகர்த்தமாக இந்த இந்த மனாகிப் மஜ்லிஸை மிகச் சிறப்பாக வருடாந்தம் நடத்தி வருவதை பாராட்ட வேண்டும்.

---


லங்கை இராணுவம்

## விலைக் கோரல்

1. 2024 ஆம் ஆண்டுக்குரிய இலங்கை மின் மற்றும் இயந்திர பொறியியல் படையணி மத்திய நிலையத்தினை புதிதாக புனர்நிர்மாணம் செய்வதற்குரிய சாலாவ கொஸ்கம முகாம் வளாகத்தில் ஸ்தாபிக்கப்படவுள்ள தலைமையக அலுவலக கட்டித்தினை நிர்மாணிப்பதற்கு தேவையான பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொறியியல் பொருட்கள் வழங்கல் தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து முத்திரை வைக்கப்பட்ட விலை மனுக்களை பெறுவதற்கு படையணி மத்திய நிலையம், இலங்கை மின் மற்றும் இயந்திர பொறியியல் படையணி, இராணுவ முகாம், குமாரன் ரத்னம் மாவத்தை, கொழும்பு 02 படையணி டெண்டர் சபை (கொள்முதல்) குழு தலைவர் மூலம் விலை மனுக்கள் கோரப்படுகின்றது.

2. அவ் வழங்கல்களுக்கான வெளியிடப்படும் கொள்முதல் படிவங்கள் படையணி மத்திய நிலையம், இலங்கை மின் மற்றும் இயந்திர பொறியியல் படையணி, இராணுவ முகாம், குமாரன் ரத்னம் மாவத்தை, கொழும்பு 02 எனும் இடத்தில் விலைப்பத்திரங்கள் திறக்கும் கலந்துரையாடல் மண்டபத்தில் 2024.10.13 ஆம் திகதி முதல் 2024.11.02 ஆம் திகதி வரை வேலை செய்யும் வார நாட்களில் 0900 மணித்தியாளம் முதல் 1600 மணித்தியாளம் வரையான காலப்பகுதியில் வருகைத்தந்து பெற்றுக்கொள்ள முடியும். அவ் அனைத்து டென்டர்களும் 2024.11.02 ஆம் திகதி 1000 மணித்தியாளத்தில் படையணி மத்திய நிலையத்தில் இலங்கை மின் மற்றும் இயந்திர படையணி, இராணுவ முகாம், குமாரன் ரத்னம் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் திறக்கப்படும்.

3. குறித்த பொறியியல் பொருட்களின் வகைப்படுத்தல் உள்ளடங்கிய அனைத்து விபரங்களும் www.promise.lk எனும் இணையத்தளத்திற்கு வருகைத்தந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு
அ. படையணி மத்திய நிலையம் கொள்வனவு பிரிவு தொலைபேசிய இலக்கம் 0112432656

ரெஜிமென்ட் தலைமையகம்
இலங்கை மின் மற்றும் இயந்திர படையணி,
இராணுவ முகாம், குமாரன் ரத்னம் மாவத்தை,
கொழும்பு 02



## விலைமனு கோரல் (IFB)

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE)

## இரத்தினபுரி SLBFE புலம்பெயர்வள நிலைய கட்டிடத் தொகுதியை புதுப்பித்தல்

1. இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, கொஸ்வத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சார்பில் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரால் இரத்தினபுரி புலம்பெயர் வள நிலைய கட்டித் தொகுதியை புதுப்பிப்பதற்காக பொருத்தமான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளது. மதிப்பிட்டுத் தொகை 46.0 மில்லியன் இலங்கை ரூபாய்கள் (அடிப்படை விலை).
இரத்தினபுரி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புலம்பெயர்ந்தோர் வள நிலைய கட்டிடத் தொகுதியின் வளாகத்தில் இந்தக் கட்டிடப் பகுதி அமைந்துள்ளது. இடிக்கும் பணி, வர்ணம் பூசும் பணி, அலுமினியம் பணி, நீர்க்குழாய் மற்றும் கழிவுநீர் நிறுவும் பணி, தரை மற்றும் சுவர் பூர்த்தி செய்யும் பணி, மின்சாதனப் பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்த காலம் 120 நாட்கள்.
2. தேசிய போட்டி நடைமுறை மூலம் விலைமனு மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்திற்குத் தகுதி பெற,விலைமனுதாரர் கருப்புப்பட்டியலில் இருக்கக்கூடாது என்பதோடு பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
   (அ) CIDA பதிவு அவசியம்:
   விசேடமாக: கட்டிடம் நிர்மாணம்
   தரம்: C5 மற்றும் C4
4. விலைமனுதாரர் ஊனுவு திட்டத்தில் பதிவு மேற்கொண்டு தரத்தை பூர்த்தி செய்திருப்பதோடு ஒப்பந்த மதிப்பு ரூ. 5 மில்லியன்களாகும். 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண். 3 இன் விதிகளின்படி, நிறுவனங்களின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்தவர்கள் மட்டுமே விலைமனு கோரத் தகுதியுடையவர்கள். அரச நிதிச் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வேறு எந்த சுற்றறிக்கையும் மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதி பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:
   (அ) கட்டிடப் பகுதிக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள்:
   1. ஒரு பொறியாளர், 3 வருட அனுபவத்துடன் சிவில் ஊஉ பொறியியல் பட்டம்.
   2. ஒரு பணி மேற்பார்வையாளர், சிவில் துறையில் ஊெவு உடன் 5 வருட அனுபவம்.
6. மேலதிக தகவல்களை கொள்வனவு பிரிவு, 2வது மாடி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை, தொலைபேசி இல 011-2880550 அல்லது 09.00 முதல் 15.00 வரை விலைமனு ஆவணங்களை ஆராயலாம்.
7. தலைவர், டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை எனும் விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பத்துடன் 14.10.2024 முதல் 04.11.2024 வரை 09.00 முதல் 15.00 வரரயான காலப்பகுதியில் சமர்ப்பித்து ஆங்கில மொழியில் முழுமையான ஆவணங்களை பெறமுடியும். இதற்காக திரும்பப் பெற முடியாத . 11,600.00 ரூ கட்டணத்தை செலுத்த வேண்டும்.
8. விலைமனு திறப்பதற்கு முந்தைய கூட்டம் 24.10.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இல. 89.`6 வித்தியால மாவத்தை, இரத்தினபுரி புதிய நகரம், ஞடுமகுடு இல் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத விலைமனுதாரர்களின் விலைமனு நிராகரிக்கப்படும்.
9. சீல் செய்யப்பட்ட விலைமனுக்கள் 05.11.2024 அன்று 10.00 மணிக்கு முன் ஞடுமகுடு இன் கொள்முதல் பிரிவில் உள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்படாது.அவை நிராகரிக்கப்படும். காலக்கெடு நிறைவடைந்தவுடன் பங்கேற்பதற்குத் தேர்ந்தெடுக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. அனைத்து விலைமனுக்களுடனும் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் இலங்கை ரூபாய் (ரூ. 460,000.00) விலைமனுப் பாதுகாப்பு தொகை இருக்க வேண்டும். ஏலம் முடிந்த திகதியிலிருந்து 119 நாட்களுக்கு விலைமனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும். விலைமனுக்கள் 91 நாட்கள் வரை செல்லுபடியாகும்.
11. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவருக்கு அனைத்து அல்லது எந்தவொரு ஏலத்தையும் நிராகரிப்பதற்கு அல்லது கேள்வியின்றி ஒரு ஏலத்தின் ஒரு பகுதியை மட்டும் ஏற்கும் உரிமை உள்ளது.
12. மேலே குறிப்பிடப்பட்ட முகவரி,

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**கொள்முதல் பிரிவு, 2வது மாடி,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்தை, பத்தரமுல்லை.**
**தொலைபேசி இலக்கம் 011-2880550**



சுகாதார அமைச்சு

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சீதுவை**

## வெற்றிடங்கள்

**மருத்துவ ஆலோசகர் பதவி**

மருத்துவ ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

- **சம்பள அளவு : ரூபா 110,000.00 - 12X3,375 - 150,500/= (மாதாந்தம்)**

மேலதிக விபரங்களை சுகாதார அமைச்சு இணையதளம் **https://www.health.gov.lk** லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சீதுவை**



## முன்பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கைநெறி 2024/2025

### தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கல்வி நிறுவக, முன்பிள்ளைப் பருவ விருத்தி டிப்ளோமா கற்கைநெறிக்கான (SLQF - Level 3) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முன்பிள்ளைப் பருவ விருத்தி தொடர்பாக கற்க ஆர்வமுள்ளோரும் பொருத்தமான தகைமைகளைக் கொண்டோரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**தகைமைகள்**
விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
நன்னடத்தையும் நல்லாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
30.10.2024 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்**
க. பொ. த. உயர் தரத்தில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**
நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கைநெறியின் தன்மை**
ஒரு வருட கற்கைநெறியாகும்.

**பதிவுக் கட்டணமும் கற்கைநெறிக் கட்டணமும்**
பதிவுக் கட்டணம் 1000 ரூபாய் ஆகும். கற்கைநெறிக் கட்டணம் 40,000 ரூபாய் ஆகும். கற்கை நெறிக் கட்டணத்தை மூன்று தவணைகளில் செலுத்த முடியும்.

வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளும் செயற்பாடுகளும் நடைபெறும். அத்துடன் இக்கற்கை ஒப்படைகள், செயன்முறைக் கற்பித்தற் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இக் கற்கைநெறிக்காக வரையறுக்குப்பட்ட தொகையினர் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர். மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் 2024.10.30ஆந் திகதிக்கு முன்னர் தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் பிரவேசித்து https://www.exams.nie.lk/intakes/new வழியே நிகழ்நிலையில் (online) மாத்திரம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பித்தல் தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பின் வழியே பெறலாம். https://www.exams.nie.lk/info/applying-for-new-enrollments

**பேராசிரியர் பிரசாத் சேதுங்க,**
**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**
**www.nie.ac.lk**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA)

## பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் 2024/2025

1. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) பிரஈதிய பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. தேவைப்படுத்தல்களின் முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, இரண்டாம் மாடி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதே முகவரியிலுள்ள மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்குப் பிரிவில் (2ஆம் மாடி) 2024-10-13ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை) விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விசாரணைகளுக்கு மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 மணி வரையான அலுவலக நேரங்களில் 0112 303157 / 0777212043 எனும் தொலைபேசி இலக்கங்களில் கணக்காளரைத் தொடர்புகொள்ளவும். தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் பின்வரும் (05) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுக்களை கொள்வனவு செய்யலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஒக்டோபர் 13ஆம் திகதி முதல் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு (3,500.00) இலங்கை ரூபாவை செலுத்தி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து சிங்கள மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை இலங்கை வங்கி ரீஜன்ட் வீதி கிளையில் பேணப்படும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்கிலக்கத்திற்கு ''தலைவர் NMRA'' (கணக்கிலக்கம் 78088835) பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும்.
6. அரச நிறுவனங்கள் தவிர்ந்த சகல விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட 50,000.00 மீளளிக்கப்படும் பிணை முறியை வைப்புச் செய்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என இரு பிரதிகளில் தயாரித்து வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். இரு கடித உறைகளையும் முத்திரைக் குறி பொறித்த ஒரு உறையில் இட வேண்டும். விலைமனுக்கள் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் 2024/2025'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024 ஒக்டோபர் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, இரண்டாம் மாடி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கள் கொழும்பு-02, இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, இரண்டாம் மாடி, அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்குப் பிரிவில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரரினால் செய்யப்பட்ட ஏதேனும் செலவு அல்லது கிரயத்திற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பொறுப்புகூறாது.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை,**
**அரச பொறியியல் கூட்டுத்தாபனக் கட்டிடம், இரண்டாம் மாடி,**
**இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.**

சுகாதார அமைச்சு

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்காக (SPMC) ACCESS CONTROL DOOR LOCKS SYSTEM இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு**

**ஒப்பந்த (விலைமனு) இலக்கம்: SPMC/MM/21/2024**

01. கீழ் விபரிக்கப்பட்டதும் 3,000,000.00 இலங்கை ரூபா மதிப்பிடப்பட்டதுமான ACCESS CONTROL DOOR SYSTEM இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்புக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் சார்பில் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

    விபரக்குறிப்பு மற்றும் அளவுப் பட்டியலின்படி (*BOQ*) *Access Control Door locks system* இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தலை இந்த வேலைகள் கொண்டிருக்கும்.

    ஒப்பந்தக் காலம் 14 நாட்களாகும்.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
03. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கையில் செல்லுபடியான வர்த்தகப் பதிவைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:

| | |
|---|---|
| கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலையின் சராசரி ஆண்டுப் பெறுமதி | (2023, 2022, 2021) நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| கடந்த ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட இதனையொத்த விபரங்கள் | விபர அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன, பெறுகைக் குழு தலைவரிடம் இருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு 2024.10.14 ஆம் திகதி தொடக்கம் 2024.11.05 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை வேலை நாட்களில் அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
06. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்தி 2024.10.14 ஆம் திகதி தொடக்கம் 2024.11.05 ஆம் திகதி வரை இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன, பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்களை 2024.11.06 ஆம் திகதி 1400 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது கீழுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். இரத்மலானை, SPMC இல் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும் இந்தக் கேள்விமனுவுக்கான விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற முகவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.10.25 ஆம் திகதி 1030 மணிக்கு இரத்மலானை, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும். விலைமனுக்கள் (60 நாட்கள்) வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
09. அனைத்து விலைமனுக்களும் 2025.01.04 ஆம் திகதி வரை (60 நாட்கள்) செல்லுபடியான 50,000 இ.ரூபா விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Access Door Lock of SPMC – Bid Reference – SPMC/MM/21/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
11. மேலதிக விபரங்களை SPMC, பொறியியல், பிரதிப் பொது முகாமையாளரிடம் இருந்து பெற முடியும். (தொ.: 0112637574)

    விலைமனு விபரத்தின் தகவல்களை எமது இணையதளத்தில் இருந்து பெற முடியும். (www.spmc.gov.lk)

**தலைவர் - பெறுகைக் குழு**
**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல தோட்டம்,**
**இரத்மலானை, இலங்கை.**

**தொ.இல : (00) 94-11-2635353(00)94-11-2637574**
**மின்னஞ்சல் : chairman@spmc.gov.lk**
**இணையதளம் : www.spmc.gov.lk**



சுகாதார அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் – (NCB)

**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு புத்தம் புதிய FLOOR MOUNTED TROLLY MOVEMENT DYNAMIC PASS BOX ஒன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்**

**கேள்வி இல: SPMC/PD/07/2024 - 2024-11-06ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024-11-06ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை புத்தம் புதிய Dynamic Pass Box ஒன்றை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|
| 1. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு புத்தம் புதிய FLOOR MOUNTED TROLLY MOVEMENT DYNAMIC PASS BOX ஒன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | ரூபா 3,500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழக் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2024-10-14ஆம் திகதி முதல் 2024-11-05ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
    - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
    - மீளளிக்கப்படத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்.
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-10-24ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் Dynamic Pass Box பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2024-11-06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டத்தாபனத்தில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் இந்த கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புத்தம் புதிய **Dynamic Pass Box**இன் பெறுகை - கேள்வி இல: **SPMC/PD/07/2024**'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574)

''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம். (www.spmc.gov.lk)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: (00)94-11-2635353/(00)94-11-2637574**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmc.gov.lk**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### ராகம, வெலிசர வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கான வெடிபொருட்களின் பெறுகை

1. பின்வரும் வெடி பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் (CEFAP Unit) சார்பாக இலங்கை கடற்படையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் இப்போது தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| File No. | Description | QTY |
|---|---|---|
| CFEAP/PRT/11/2024 | Detonating Cord (10 Gm/Mtr) | 150,000 Mtr |
| CFEAP/PRT/13/2024 | Plain Detonator | 1,500,000 No's |

இதில் ஆர்வம் காட்டும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை CEFAP பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2. மேற்கூறிய முகவரியானது:

| | | |
|---|---|---|
| கவனத்திற்கு | : | பணிப்பாளர், CEFAP பிரிவு, |
| முகவரி | : | வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகம. |
| தொலைபேசி இல. | : | 0112958227/0112955514 |
| மின்னஞ்சல் | : | director.cefap@gmail.com |

3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா (மூவாயிரத்து ஐந்நூறு ரூபா) மற்றும் 12,500.00 ரூபா (பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா) கட்டணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது இலங்கை வங்கியில் 7041344 எனும் கணக்கிலக்கத்திற்கு கடற்படை தளபதியின் பெயரில் வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டாகும்.

4. 2024 நவம்பர் 26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கடற்படைத் தலைமையகம்.**



## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளின் கீழ், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்கான விதப்புரையினைப் பரிசீலிப்பதற்குப் பொருத்தமான தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது பதினைந்து வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட சட்டத்தரணியாக இருக்கவேண்டுமென்பதுடன் குற்றவியல் சட்ட நடவடிக்கைமுறைகளில் காத்திரமான அறிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் -**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்
- பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக ஐம்பத்தி ஐந்து (55) வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது
- தகுதிவாய்ந்தவராகவும், நேர்மைமிக்கவராகவும், நெறி வாய்மைமிக்கவராகவும் சிறந்த நன்மதிப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்

o பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்பதற்கு முன்னர் ஊதியம் பெறும் ஏனைய சகல பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும். எனினும், ஏதேனும் ஊதியம் பெறும் பதவியை வகிக்கின்ற பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய பணிப்பாளர் நாயகப் பதவியை ஏற்பதற்கு முன்னர் அத்தகைய ஊதியம் பெறும் எல்லாப் பதவிகளையும் கைதுறந்தால், பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்படலாம்

எவ்வாறாயினும், எந்த ஓர் அரசாங்க அதிகாரியினையும் பணிப்பாளர் தலைமையதிபதியை மாற்றுப் பதவி அடிப்படையில் பதவிக்கு அமர்த்துவதை இந்த ஏற்பாடுகள் தடுக்காது:

o பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்க முன்னர் நடைமுறையிலிருக்கும் எழுத்திலான சட்டங்களின் கீழ் அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனப்படுத்த வேண்டும் மற்றும்

o பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்க முன்னர், நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக அவருடைய அக்கறைகளின் பகிரங்க வெளிக்கூறலை அவர் அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும், ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில், பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்கு, அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியைத் தொடர்ந்து பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராக்கப்படுவார்

o குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறல்லாத குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்

o தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்

o சித்தசுவாதீனமற்றவராகவிருப்பின் அல்லது சித்தசுவாதீனமற்றவராக மாறின் அல்லது இச்சட்டத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றவராக இருப்பின்

o அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குரிய குற்றவாளியாகவிருப்பின் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்

o ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராக இருப்பின் அல்லது அவ்வாறான பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது

o தேர்தல்களுக்கு ஏற்புடையப்பாலனவான முறையான சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படும் சனாதிபதித் தேர்தல்களின், பாராளுமன்றத் தேர்தல்களின், மாகாண சபைத் தேர்தல்களின் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின்

விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்களின் விண்ணப்பத்தினைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர்.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை -அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

பாராளுமன்ற இணையதளத்தில் (www.parliament.lk), CIABOC இற்கான பணிப்பாளர் தலைமையதிபதி நியமனம் எனப் பெயரிடப்பட்டுள்ள துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல் படிவம் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு:** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமனம்" எனச் சுட்டிக்காட்டவும்.

அரசியலமைப்புப் பேரவையின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024 ஒக்டோபர் 13 ஆம் திகதி.**


# உயிர்காத்த போராளி எச்.எச்.விக்கிரமசிங்க

***12 ஆம் பக்கத் தொடர்ச்சி...***

*உங்கள் சமூகத்திற்கும் இலங்கை மக்களுக்கும் நீங்கள் சமூகப்பணியாற்றியிருக்கிறீர்கள்.*

*நீங்கள் என்மீது கொண்டிருந்த நன்னம்பிக்கைக்கு நான் பெரும் நன்றியுணர்வு கொண்டவனாயிருக்கிறேன். நாங்கள் யாருமே எந்த உதவியும் செய்துகொள்ள முடியாத நிலையில், உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும், நெருக்கடி மிகுந்த சூழலில் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் நீங்கள் நம்பிக்கையுடன் என்னுடன் ஆலோசித்ததை நான் நினைவுகூர்கிறேன்.*

*1989இல் இலங்கையை விட்டு வெளியேறியபின், நான் இலங்கை வந்தபோதோ, அல்லது நீங்கள் அவுஸ்திரேலியா வந்தபோதோ நாங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளத் தவறியதில்லை. எங்கள் பிள்ளைகள் தொழில்துறைசார் வல்லுனர்களாக வளர்ந்து விட்டனர். சொந்தக் குடும்பங்களுடன் பேரக்குழந்தைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வளமாக வாழ்வதைப் பார்க்க சந்தோஷமாயிருக்கிறது.*

*வாழ்க்கையில் எங்களின் அடிச்சுவடுகளை அவர்கள் பின்பற்றிச் செல்லவில்லை. அவ்வாறு அவர்கள் எங்களைப் பின்பற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. இந்தச் சிக்கலான உலகில் நின்று பிடிக்கவும், இணைந்து போகவும் அவர்கள் தயாராகி வருகிறார்கள். தங்களின் சொந்த வழிகளில், உன்னத உலகம் ஒன்றைக் கட்டிஎழுப்புவதில் அவர்கள் தங்களின் பணிகளை ஆற்றி வருகிறார்கள் என்பதை நாம் பாராட்டவேண்டும்.*

*எங்களின் தனிப்பட்டதும் அரசியல் சார்ந்ததுமான வாழ்வு, ஐந்து தசாப்தங்களை நெருங்கி விட்டது. அது எம் வாழ்நாள்வரை நீடிக்கும். எங்களின் நண்பர்களுக்கு வழங்கும் பிறந்தநாள் வாழ்த்துகளில் ஒரு பொதுத் தன்மை உண்டு. சமூக நீதி, நேர்மையான வாழ்வு என்ற பரந்த கருத்தாடல்களுக்குப் பங்கம் ஏற்படாத வகையில், எங்களின் வாழ்வில் நாங்கள் ஆற்றிய சமூகப் பணியினைப் பாராட்டும் பண்பே அது. நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, நிம்மதியான, ஆக்கபூர்வமான வாழ்த்துகளையே ஆசித்திருக்கிறோம். ஆனால், நாம் தொடர்பு கொண்டிருந்த ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். அவர்களது ஆளுமைக்கும் அரசியலுக்கும் ஏற்ப விஷேடமான குணாம்சங்களை அவர்கள் கொண்டிருக்கக்கூடும். நாங்கள் நேசிக்கும் நண்பர்களுக்கு நாங்கள் தெரிவிக்கும் நல்வாழ்த்துகள் மனதின் எதிரொலி மட்டுமல்ல, அவை உண்மையானதுமாகும்.*

*நல்ல ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் நீங்கள் செய்ய நினைக்கிற பணிகளில் எல்லாம் வெற்றி பெறவும், என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். எங்கள் வாழ்வில் எந்தக் கஷ்டங்களை நாங்கள் எதிர்கொண்டிருந்தபோதும், எங்கள் வாழ்விலும் சமூகத்திலும் எங்களின் உதவியை நாடி நின்றவர்களுக்கு அக்கறையோடு உதவ முனைந்திருக்கிறோம் என்பதை எங்களின் பேச்சிலும் செயலிலும் நாங்கள் நிரூபித்திருக்கிறோம்.*

*உங்களின் எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகாண என் இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். நீங்கள் அடைய நினைத்தவற்றை உங்கள் வாழ்நாளில் அடைவீர்கள் என்பது உறுதி.*

*கடந்து போன உங்களின் எழுபத்தைந்து ஆண்டு கால வாழ்க்கை இனிய நினைவுகளால் பொலிவதாக! வாழ்க்கையில் இன்னும் அழகிய தருணங்கள் காத்திருக்கின்றன.*

*இனிய தோழனே! தங்களுக்கு பவள விழா நல்வாழ்த்துகள் உரியதாகுக!*

# மட்டு. மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை பிளவுபடுத்த முயற்சி

***03 ஆம் பக்கத் தொடர்ச்சி...***

*பதில் : மட்டக்களப்பில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் காலங்காலமாக மொழி, தொழில், அடிப்படையில் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர். இவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், இவ்விரு இனங்களையும் பிளவுபடுத்துவதற்கான அரசியலை 80 களிலிருந்து செய்துவருவதும் வாக்குகளைப்பெற்று பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு பிரிவினைகளை தோற்றுவித்ததும் உண்மைதான்.*

*எனினும், இந்த அரசியல்வாதிகளால் நிரந்தர பகைமையை ஏற்படுத்த ஒரு காலமும் முடியாது. இவ்விரு இனங்களின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதாயின் கட்சி பேதமற்ற கோஷம் முன்வைக்கப்பட வேண்டும்.*

*மதத்தால் இந்துவானாலும், மாண்பில் முஸ்லிம் என்றாலும், வேதம் பயிலும் கிறிஸ்தவரெயென்றாலும் ஈழத்தவர், ஈழத்தவரே! அவர்கள் எங்கிருந்தாலும் நம்மவரே என்று ஈரோஸ் இயக்கத்தை தோற்றுவித்த மறைந்த தோழர் இரத்தின சபாபதி எழுதிய "ஈழவர் இடர் தீர்" என்ற புத்தகத்தில் கூறியிருந்த கோட்பாடு மீண்டும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். தமிழ் முஸ்லிம் என்ற அடையாளத்துக்கு அப்பால் நாம் ஈழவர் என்ற அடையாளம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.*




## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கும். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

நல்ல யோகமான பலன்களைப் பெறுவீர்கள். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே நேசம் பலப்படும். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. மாணவர்கள் பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக் கூடும். வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

வழக்குகளில் சாதகமான பலன் கிடைக்கும். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும். பாராட்டும் கிடைக்கும். உடற்சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள். பெண்கள் மனத் திருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவார்கள்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். சுபச் செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும்.எதிர்ப்புகள் நீங்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். மாணவர்களுக்கு புத்திசாதுரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறைச் சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டுப் பெறுவர். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். பெண்கள் உதவி கேட்டு நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வார்கள். நட்புகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களுக்கு சகமாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2 ஆம் பாதம்)**

எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். பெண்களுக்கு நிதானமாக பேசுவது நன்மை தரும். கோஷ்டி சண்டையிலிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் ஆதாயமடைவர். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

விரய ஸ்தானத்தில் இருக்கும் கேதுவால் பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோதைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும்.தடைப்பட்ட காரியங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விருப்பங்கள் கைகூடும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். அடுத்தவர் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

கிரகங்கள் அனுகூலமாக இருக்கும். வீடு, மனை, வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரியத் தடை தாமதம் விலகும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும் படியான சூழ்நிலைகள் மாறும். ஆனாலும் அனைத்து விஷயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். செல்வாக்கு உயரும். கலைத்துறையினர் சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும். அதிக மதிப்பெண் எடுக்க ஆர்வமாக படிப்பார்கள்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்வீர்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் வாய்ப்பளிக்கும். மாணவர்கள் மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் சஞ்சாரம் அனுகூலமான பலன் தரும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். உறவினர்கள்,நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்தப்படி இருக்கும். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**


வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலைகள் நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரிய தடங்கல்கள் வரலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். புதிய ஆர்டர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். புதிதாக வீடு, மனை வாங்குவதற்கான வேலைகளை தொடங்குவீர்கள். பெண்கள் பணியிடங்களில் புதிய பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு சக கலைஞர்களால் நன்மை உண்டாகும்.மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவர்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். எந்தவொரு வேலையை செய்வதாக இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். பெண்களுக்கு திடீர் செலவுகள் உண்டாகலாம். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களுக்கு மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

# இரண்டு இலட்சம் தமிழர்கள்...






சிங்கப்பூரைவிட மூன்று மடங்கு பெரிய நிலப்பரப்பு கொண்டது ரியூனியன். அதன் மக்கள் தொகை 2023ஆம் கணக்கெடுப்பின்படி 985825 ஆகும். இதில் தமிழர் தொகை இரண்டு இலட்சமாகும். கறுப்பு, வெள்ளை, தெற்காசிய இனக் கலப்பு மக்களே பெரும்பான்மையாகும். இவர்களுக்கு அடுத்து சீனர்கள் (4.6%) மடகஸ்கார் தீவின் மக்கள் (1.9%) வேறு இன மக்களும் அடங்குவர். தமிழர்கள் தனித்த இரண்டாவது (26.9%) பெரும்பான்மையினமாகும். ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் பிரெஞ்ச் உள்ளது. அங்குள்ள பல்லின மக்களின் பேச்சு மொழியாக கிரியோல் இருக்கிறது. தமிழரின் முதல் தலைமுறைக்கு தமிழ் மட்டுமே தெரிந்தது. இரண்டாவது தலைமுறைக்கு தமிழும் பிரெஞ்சும் தெரிந்தது. ஆனால் அதற்கடுத்த தலைமுறைக்கு பிரெஞ்சே முழுமையாகத் தெரிந்தது. இன்று பிரெஞ்ச் மொழியில் கல்வி கற்பதால் தமிழ்க்கல்வி அந்நியமாகிப் போனது. பேச்சு மொழியாக கிரியோல் வந்தது. பிரெஞ்சில் எழுதி தமிழில் பாடுகிற பழக்கம் அதுவும் கோயில்கள் இருப்பதால் இருக்கிறது.

பிரெஞ்சின் பிராந்திய ஆட்சியில் இருப்பதால் அற்புதமான கட்டமைப்புகள் தீவு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே அதிக செலவில் 12.4 கிலோ மீட்டர் தூரத்திற்கு அழகான கடலோர பாதை கட்டப்பட்டுள்ளது. சில இடங்களில் கடல் மீதும் போடப்பட்டுள்ளது. இதற்கான செலவு இரண்டு மில்லியன் யூரோவாகும். தீவின் விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது பயணிகளுக்காக டாக்ஸிகள் காத்திருந்தன. ஏற்கனவே மொரீசியஸில் பேரம் பேசி விட்டு டாக்சியில் போங்கள் என்று சொன்னதால் டாக்ஸி பக்கம் போகத் தயங்கினோம். டாக்சியை ஓட்டுவது பெரும்பாலும் இந்தியர்கள் என்பதால் பேரம் பேச வேண்டியுள்ளது. அங்கிருந்து தங்குமிடத்துக்கு பேருந்திலும் போகலாம் என்று சொல்லப்பட்டது. பெரிய சூட்கேசுகளோடு எப்படிப் போவது என்ற கேள்வி சுமையாய் அழுத்த வேறு வழியின்றி பேரம் பேசி ஒரு டாக்சியில் ஏறி முன்பு பதிவு செய்த விடுதிக்குப் போனோம்.

அது விடுதியன்று. ஒரு அபார்ட்மென்ட். அது பயணிகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது. அதன் உரிமையாளர் ஒரு பெண்மணி. கணவனால் கைவிடப்பட்டவள். பிரெஞ்ச் மொழியும் கிரியோல் மொழியும் பேசுவாள். ஆங்கிலம் வராது. ஆங்கிலத்தில் பேசினால் கைபேசியின் வழியே மொழி மாற்றம் செய்து பதில் கொடுப்பாள். வீடு வசதியாக இருந்தாலும் நகரத்தைவிட்டுத் தள்ளி இருந்தது. மூன்றாவது மாடியில் தங்கும் இடம். லிப்ட் இல்லை. படியேற வேண்டும். வீட்டுச் சொந்தக்காரி எங்களிடம் வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டு நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். அவள் போன சிறிது நேரத்தில் என் கைபேசி அழைத்தது. அழைத்தவர் புலவன் சின்னராமன் அறிமுகப்படுத்திய வேலாயும் ஆங்கிலத்தில் பேசினார். 'ரியூனியனுக்கு வந்திருக்கும் உங்களை வரவேற்கிறேன். நாளை காலை பத்து மணிக்கு சந்திக்கலாம். சில இடங்களுக்கு உங்களை அழைத்துப் போகிறேன்...''

''மிக்க நன்றி. நாளை சந்திப்போம்'' என்றதும் கைபேசி அழைப்பு முடிந்தது. பொழுது சாய ஆறுமணி நேரம் இருந்ததால் மூவரும் வீட்டைப் பூட்டி விட்டு கீழே இறங்கி நடந்து பேருந்து நிற்கும் இடத்திற்கு வந்தோம். தலைநகர் செயின்ட் டெனிஸை (SAINT DENIS) நோக்கி ஒரு பேருந்தில் புறப்பட்டோம். ரியூனியனின் முக்கிய அரசியல் நகரும் இதுவே. மக்கள் தொகை சுமார் ஒன்பது இலட்சமாகும். செயின்ட் டெனிஸ் நதி அருகே வடக்கு கடற்கரையோரமாக இருக்கும் தலைநகரில் பிரெஞ்ச் பேசுபவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். நகரின் நிர்வாக அமைப்பு, பன்னாட்டு விமான நிலையம், பல நூலகங்கள், அருங்காட்சியகங்கள், நீதி, பொருளாதாரம், அரசியல் ஆகியன கற்பதற்கான பல்கலைக்கழகம் என்பன அங்கு உள்ளன. மேலும் தகவல் அறிய கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தேன்.

உல்லாசப் பயணிகளைக் காந்தமாய் இழுக்கும் தீவுகளில் ஒன்று ரியூனியன் வெப்ப மண்டல காலநிலை. நீலநிறமான கடல், பசுமையான தாவரங்கள், அழகழகான கடற்கரைகள், சிறிய, பெரிய மலைச் சிகரங்கள், நெருப்பைக் கக்கும் எரிமலைகள். இவை எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தால் திறந்தவெளி அருங்காட்சியகம். அதனால்தான் போலும் தீவின் பரப்பளவில் கிட்டத்தட்ட பாதி யுனெஸ்கோவினால் உலக பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தீவின் பொருளாதாரத்தை உல்லாசப் பயணத்துறை ஈட்டிக் கொடுக்கிறது. 2021இல் 227 மில்லியன் யு.எஸ்.டொலர் வருமானம் வந்துள்ளது.

ரியூனியனில் சுற்றிப் பார்க்க நிறைய இடங்கள் இருந்த போதும் பத்து இடங்களைப் பட்டியல் இடலாம்.

1. LA PITON DE LA FOR FOURNAISE என்பது செயலில் உள்ள அகன்ற வாயுள்ள எரிமலை.
2. கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் இருக்கும் மாஃபேட் (MAFATE) என்ற அபூர்வ கிராமம்.
3. CILAOS என்பது எரிமலை உள்ள பகுதி. ஆனால் அதனைப் பார்க்க மலையேறும்போது அங்கிருக்கும் பள்ளத்தாக்குகள், நீர் வீழ்ச்சிகள் பிரபல்யமானவை.
4. VOILE DE IA MARIEE என்ற இடம் ரியூனியனின் இயற்கைப் பொக்கிஷங்களில் ஒன்றாகும். இங்குள்ள நீர்வீழ்ச்சி தாவரங்களால் சூழப்பட்ட இயற்கை குளத்தில் விழுவதன் தோற்றம் அற்புதமானது.
5. இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் வெள்ளை மணலாய் கிடக்கும் எர்மிடேஜ் கடற்கரை.
6. 700க்கும் மேற்பட்ட தாவரங்களுடன் கூடிய ரடன் தோட்டம்.
7. BOUCAN CANOT என்பது தீவின் மேற்கு கடற்கரை
8. கேப் ஜோன் 50 மீட்டர் உயரமுள்ள பாறைச்சுவர் தெற்கு கடலில் உள்ளது. இதனைத் தங்கப்பாறை என்பர்.
9. KELONIA AQUARIUM கடல் ஆமைகளைப் பராமரிக்கும் குளம் (நோய்வாய்ப்பட்ட, காயம்பட்ட)

இந்த ஒன்பதுக்குள் ரியூனியனில் பார்க்க வேண்டிய இடங்கள் அடங்காது; நிறைய இடங்கள் பார்ப்பதற்கு இருக்கின்றன. லோன்லி பிளானட் (LONELY PLANET) எனும் பயணக் கையேடு நூல், 'சின்ன சின்ன அழகான மலைகள், பச்சை பசேலென்ற காடுகள், நடனமாடுவது போல் கொட்டும் நீர் வீழ்ச்சிகள், உல்லாசமான வெள்ளை மற்றும் கறுப்பு நிற மணல் கொண்ட கடற்கரைகள், உலகத்திலேயே தீச்சுவாலையைக் கக்கிக் கொண்டிருக்கும் எரிமலை ஆகியவற்றை கொண்ட மாயஜால தீவு' என்று சொல்கிறது.

டிசம்பர் மாதம் முதல் ஏப்ரல் வரை வெப்ப காலமாகும். ஏப்ரல் தொடக்கம் நவம்பர் வரை குளிர்காலமும் கொண்ட தீவு வெப்பக் காலத்தில் 22 முதல் 27 வரையிலான வெப்பம்



இருக்கும். அந்தக் காலத்தில் பயணம் மேற்கொள்வதே சிறப்பு..

“என்ன மாத்தளை... ஊரைப் பார்க்காமல் புத்தகத்தைப் படிக்கிறீர்?” என்றார் மதியழகன்..

“ரியூனியனில் என்ன பார்க்கலாம் என்று புத்தகத்தைப் பார்க்கிறேன்.” என்றபோது பக்கத்தில் இருந்தவர். “தமிழா?” என்றார் புன்னகையோடு,

ஆகா ரியூனியனில் தமிழ் பேசுகிற ஒருவரைச் சந்திக்கிறேன் என்ற உற்சாகம் எனக்கு.. அவரோடு பேசினேன். ஆனால் அவர் தமிழ்நாட்டிலிருந்து கோயிலில் குருக்கள் வேலைக்காக வந்தவர். அவருக்கு கிரியோல், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரியும்..

''எப்போது இங்கு வந்தீர்கள்?''

''நான் வந்து வந்து போகிறேன். ஒரு தடவை வந்தால் ஆறு முதல் எட்டு மாதம் இருப்பேன். நிரந்தர கோயில் வேலை இல்லை. சிறுசிறு கோயில் உற்சவங்களில் எனக்கு அர்ச்சகர்ப் பணி.''

அப்போது பேருந்து ஒரு இடத்தில் நின்றது.

“இங்கே கேபிள் கார் இருக்கிறது. இதில் போனால் மேலேயிருந்து ரியூனியனை கண்ணுக்கெட்டிய தூரம் பார்க்கலாம்” என்றார் அவர்.. நான் உடனே மதியழகனுக்கும், புருஷோத்தமனுக்கும் அதைச் சொல்லி நானும் பேருந்தில் இருந்து இறங்கி அவர்களையும் இறங்க வைத்தேன்.

கேபிள் காரில் மக்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். அது கீழே இருந்து மேலே மலையில் குடியிருப்பவர்களுக்கானதென்றாலும் சுற்றுலா பயணிகளும் போய் வரலாம். 15 நிமிட பயணம் ஐந்து இடத்தில் நின்று பயணிகளை இறக்கி, ஏற்றிக் கொண்டு போகும். பயணச் சீட்டை வாங்கி கேபிள் காரில் ஏறி உட்கார அது பயணத்தைத் தொடர்ந்தது. தீவின் பெரும் பகுதியை மேலே இருந்து பார்க்க முடிந்தது. ரியூனியனுக்கு வருகிற வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்த பயணம். இதுபோன்ற கேபிள் கார் பல நாடுகளில் பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. உலகிலேயே கடல் நடுவே நீண்ட தூரம் கடந்து போகும் கேபிள் கார் வியட்நாமில் அமைக்கப்பட்டுள்ள HONTHOM CABLE CAR ஆகும். பொலிவியா என்ற நாட்டில் 16 கிலோ மீட்டர் தூரக் கேபிள் கார் உண்டு. அது 25 இடங்களில் நின்று போகும். தரையில் போக்குவரத்து நெரிசல் இருப்பதால் இந்தக் கேபிள் கார் மக்களுக்கு உதவியாக இருக்கிறது.

நாங்கள் மூன்று பேரும் மேலே மலைப் பகுதிக்குச் சென்று கீழே வந்த பின்னரும் இறங்காமல் அதில் இருந்தவாறே திரும்பவும் மேலே போய் வந்தோம்.

கேபிள் காரிலிருந்து இறங்கியதும் புருஷோத்தமன், “நேரம் இருந்தால் திரும்பவும் போய் வர வேண்டும்” என்றார். நானும் தான் என்றார் மதியழகன்.

தலைநகர் போகிற பயணத்தைக் கைவிட்டு நடந்து ஒரு பெரிய பல் விற்பனை நாளங்காடிக்குள் (MEGA MALL) நுழைந்தோம். மூன்றடுக்கு நாளங்காடி. ஒவ்வொரு அடுக்கிலும் ஒரு சுற்று சுற்றினோம். இரண்டாவது அடுக்கிலிருந்த புத்தகக் கடைக்குப் போய் ரியூனியன் நாடோடிக் கதைப் புத்தகம் இருக்கிறதா என்று தேடினேன். பிரெஞ்ச் நாட்டு நாடோடிக் கதைகளைத் தழுவியக் கதைகளே இருந்தன. ரியூனியனில் ஆதிக் குடிமக்கள் இல்லாததால் அதன் வரலாறும் 18ஆம் நூற்றாண்டில் தான் தொடங்குகிறது. பிரெஞ்ச் ஆதிக்கத்தால் இலக்கியம், கலை, கலாசாரம் பிரெஞ்சைச் சார்ந்தே இருக்கிறது.

புத்தகக்கடையை விட்டு வெளியே வந்து பகல் உணவுக்காக ஒரு உணவகத்துக்குப் போனோம். மூவரும் தாவர உணவே கொண்டு வரச் சொன்னோம். ஒரு பிளேட்டில் சோறு. சில காய்கறி. விலை 15 ஈரோ.

இதற்கு 78 ரிங்கிட்டா? இருவரின் குரல்கள் ஒலித்தன. “இது ரியூனியனாய் இருந்தாலும் பிரெஞ்ச் ஆட்சிக்கு உட்பட்டது. விலை அப்படித் தான் இருக்கும். ஆஸ்திரேலியாவில் ஐந்து காய்கறிகளோடு எடுப்பு உணவு விலை 14 டொலர். ஆடு அல்லது கோழி இறைச்சி என்றால் 20 டொலர். நாட்டுக்கு ஏற்ற விலை. ஒப்பிட்டு பார்த்தால் சாப்பிடவே முடியாது.” என்றேன்.


உணவுக்குப் பிறகு புறநகரில் நடந்தோம். எல்லா இடமும் தூய்மையாக இருந்தது.

எங்கும் பிச்சை கேட்பவர்களைக் காண முடியவில்லை.

(தொடரும்)



# படித்ததும் பகர்வதும் 212





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இஸ்ரேலின் அராஜகம்!



இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது போர் தொடுத்து கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதியோடு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. எதேச் சதிகாரமாக, முரண்டு பிடித்துக்கொண்டு 'பாலஸ்தீன மக்களை அழிக்க வேண்டும்' என்ற நோக்கத்தோடு செய்கின்ற இந்த அட்டூழிய தாக்குதலால் இதுவரை ஏற்பட்டுள்ள அழிவுகள் கணக்கில் அடக்க முடியாதவையாக உள்ளன. கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் பெறப்பட்டுள்ள அழிவுகளில் சில பின்வருமாறு உள்ளன.

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் கடந்த ஒரு வருடமாக நடத்தி வரும். தாக்குதலில் இதுவரை 41,500 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 97 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர். உயிரிழந்த பலஸ்தீனர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர் என்பது விசேடமாக குறிப்பிட வேண்டிய விடயமாகும்.. காசாவில் வாழ்ந்த சுமார் 23 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். மனித உரிமை உதவிகள் எட்டாத துண்டிக்கப்பட்ட பிரதேசமாக காசா திகழ்ந்து வரும் நிலையில், இஸ்ரேல் வீசும் குண்டுத் தாக்குதல்களோடு உணவுத் தட்டுப்பாடும், சுகாதார சீர்கேடும் அம்மக்களின் வாழ்க்கையை கொடுங்கனவாக மாற்றியுள்ளன. கை, கால்களை இழந்த சிறுவர் சிறுமியரின் படங்கள் காண்போர் நெஞ்சை பதற வைப்பனவாக உள்ளன.ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பான யுனிசெப்பின் (UNICEF) அறிக்கைத் தரவுகளில் காசாவில் கடந்த ஒரு வருடத்தில் போருக்கு மத்தியில் பிறந்த, 20,000க்கும் அதிகமான குழந்தைகள் பல்வேறு விதங்களில் அவதிப்படுகின்றன.

இந்த தாக்குதலால் பாலஸ்தீனத்தின் மீதுள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொது இடங்கள் உட்பட 58% வீதமான கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது சேதமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பேரழிவுகளை ஏற்படுத்துகின்ற இஸ்ரேலின் இந்த கொடூர யுத்தத்திற்கு இன்றும் கூட ஆதரவு தெரிவிக்கின்ற ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் மனித உரிமைகள் பற்றிப் பேசும் உரிமையையும், அருகதையையும் இழந்த நாடுகளாகக் கருதப்பட வேண்டும் என மனிதாபிமானம் மிக்க ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாலஸ்தீனத்தோடு மட்டும் நின்று விடாது சிரியா, லெபனான், யெமன், ஈரான் போன்ற நாடுகளையும் தான்தோன்றித்தனமாக தாக்கி, அநீதியாக தனது அதிகாரத்தை, ஆதிக்கத்தை அகம்பாவமாக நிலைநாட்ட முயற்சிக்கும் இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையோ, ஏனைய சர்வதேச அமைப்புகளோ, அல்லது வல்லரசு நாடுகளோ ஆக்கபூர்வமான, செயற்பாட்டு ரீதியான, காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இஸ்ரேல் மீது ஈரான் தொடுத்த, ஒரு தாக்குதலுக்கு எதிராக பெரும் குரலெழுப்பி, அதற்கெதிராக பொருளாதார தடையை கொண்டு வர வேண்டும் என்றெல்லாம் கூட பேசிய ஐக்கிய அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் இழிவான நிலை பற்றி என்னதான் கூறுவது? உலகம் விழித்தெழுந்து இஸ்ரேலின் அயோக்கிய, அராஜக தாக்குதல்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பது எப்போது? என்பதே நீதி, நியாயம், மனிதாபிமானம் மிக்க உலக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## சிந்தனை செய் மனமே

### மனைவியை கைவிட்ட கணவன்!



தனது மாணவர்களுக்கு ஆசிரியை ஒருவர் கூறிய ஒரு கதை இது: ஒரு கப்பலில் ஒரு கணவன் மனைவி ஜோடியும் பயணம் செய்து கொண்டிருந்தது. அப்போது கப்பல் கவிழும் அபாயமான கட்டம் உருவானது. ஒரேயொருவர் மட்டுமே தப்பிக்க வசதியான படகு ஒன்று மாத்திரமே இருந்தது. அப்போது, மனைவியை பின்னே தள்ளி விட்டு, எல்லோரையும் முந்திக்கொண்டு கணவன் மட்டும் அந்தப் படகில் ஏறி தப்பிச் சென்றான். கவிழும் கப்பலின் ஓரத்தில் இருந்தவாறு தப்பிச் செல்லும் தனது கணவனை நோக்கி மனைவி சத்தமாக ஏதோ சொன்னாள் இந்த இடத்தில் அந்தப்பெண்மணி தன் கணவரிடம் என்ன சொல்லியிருப்பாள்?" என்று மாணவர்களை நோக்கி ஆசிரியை கேட்டார்.

மாணவர்களும் பல வகையான பதில்களைக் கூறினர். ஒரு மாணவன் மட்டும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான். அதை கவனித்த ஆசிரியை அவனிடம், "ஏம்பா நீ சைலண்டா இருக்க?" என்று கேட்க, அவன், 'நம்ம கொழந்தைய பத்திரமா பாத்துக்கங் கன்னு' சொல்லிருப்பா டீச்சர்' என்று சொன்னான்.


"எப்பிடிப்பா கரெக்டா சொல்ற, ஒனக்கு முன்னாடியே இந்த கதை தெரியுமா?" 'இல்ல டீச்சர், எங்கம்மாவும் சாவுறதுக்கு முன்னாடி எங்க அப்பாக்கிட்ட இதையேதான் சொன்னாங்க டீச்சர்.'

பலத்த மௌனத்திற்கு பிறகு ஆசிரியை கதையை தொடர்ந்தார்.“ தனி ஆளாக அவர்களது பெண்ணை, அந்த தந்தை வளர்த்து வந்தார். அவரின் மரணத்தின் பின்னர் பல வருடங்கள் கழித்து அந்தப் பெண் தனது தந்தையின் டைரியைப் பார்க்க நேர்ந்தது. தனது தாய்க்கு உயிர்க்கொல்லி நோய் இருந்திருப்பது அப்போதுதான் அவளுக்கு தெரிய வந்தது. கப்பல் கவிழ்ந்த சம்பவத்தை அப்பா இவ்வாறு எழுதியிருந்தார்., “அன்று, உன்னோடு நானும் கடலின் அடியில் சங்கமித்திருக்க வேண்டும். நம் இருவரின் மரணமும் ஒரே நேரத்தில் ஒன்றாக நிகழ்ந்திருக்க வேண்டும். நான் என்ன செய்ய, நமது பெண்ணை வளர்த்தெடுக்க நான் மட்டுமே தப்ப வேண்டியிருந்தது. என்னால் வேறு என்னதான் செய்திருக்க முடியும்?”

கதையை இத்தோடு முடித்து விட்டு அந்த ஆசிரியை கூறினார்:“' வாழ்கையில் நல்லது, கெட்டது எல்லாமே நடக்கும். எல்லாவற்றுக்கும் ஏதாவதொரு காரணம் இருக்கும். ஆனா சில நேரங்களில் அதை நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம். அதனால நாம ஆழமா யோசிக்காமலோ, சரியா புரிஞ்சிக்காமலோ யார் மேலயும் எந்த தவறான முடிவுக்கும் வந்துடக்கூடாது.”

## புது வரவு

### நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்



சிரேஷ்ட சட்டத்தரணி எம். எம். அபுல் கலாம் 1986/1987 ஆம் வருடங்களில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் “நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்” என்ற தலைப்பில் சுமார் 60 வாரங்கள் நிகழ்த்திய பேச்சுத் தொடர், “நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்” என்ற தலைப்பில் இப்போது நூலாக வெளிவந்துள்ளது. மருதமுனையில் பிறந்த அபுல் கலாம் 1980களின் நடுப்பகுதியில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் பத்திரிகையாளராகவும் பணிபுரிந்துள்ளார். அப்போதிருந்தே என் நட்புக்குரியவரான அபுல் கலாம், தற்போது ஐக்கிய இராஜ்ஜியத்தில் வசிக்கிறார். இவரது இந்த இந்நூல் கடந்த 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 56 தலைப்புகளில் நாட்டுக்கான முஸ்லிம்களின் பங்களிப்புகள் இந்நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.“சிரேஷ்ட சட்டத்தரணி எம். எம். அபுல் கலாம் அவர்களின் “நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்” எனும் இந்நூல் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினை ஆவணப்படுத்தும் முக்கிய ஒரு முயற்சியாகும். முஸ்லிம்கள் வர்த்தகத்தில் கவனம் செலுத்தினார்களேயொழிய நாடு பிடிக்கும் ஆசை என்றைக்குமே அவர்களுக்கு இருந்ததில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் இங்கு வந்தவுடன் செய்த முதல் வேலை கோட்டைகளைக் கட்டியதாகும். முஸ்லிம்களோ தமது குடியிருப்புகளைச் சுற்றி ஒரு தடுப்புச்சுவர் கூடக் கட்டவில்லை. இந்நாட்டு மக்களுடன் ஒன்றாக இணைந்து அவர்கள் மத்தியிலேயே அன்று முதல் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய அந்நியோன்னிய உறவினையும் அவ்வுறவின் மூலமாக நாட்டு நலனுக்கு நம்மவர் அளித்துள்ள பங்களிப்பினையும் பற்றி அபுல் கலாமின் இந்நூல் விஸ்தாரமாகக் கூறுவது பாராட்டுக்குரியது.” என்று குறிப்பிட்டுள்ளார் மூதறிஞர் எஸ். எச். எம். ஜெமீல். “அரசியலில் பௌத்தம் எழுச்சி பெற்று இந்நாட்டை பௌத்தத்துக்கூடாக கட்டமைக்கத் திட்டமிட்டு நகர்வுகள் முன்னெடுக்கப்படும் இன்றைய சூழலில் அப்பெருங் கதையாடலை கேள்விக்குட்படுத்தும் வகையில், முஸ்லிம்களும் இந்நாட்டில் தேசிய அளவில் மிகப் பெரும் பங்களிப்புகளையும் ஒத்தாசைகளையும் வழங்கியுள்ளனர், என்பது சிறந்த சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.பொதுவாக வரலாற்று நூல்களைப் படிக்கும் போது ஏற்படும் சோர்வை நீக்கும் வகையில் சம்பவங்களையும் ஆதாரங்களையும் எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் எடுத்துரைக்கும் விதமும் கையாளப்பட்டுள்ள மொழியும் மிகச் சிறப்பாக உள்ளது.” எனத் தெரிவித்துள்ளார் ஏ. பி. எம். இத்ரீஸ். “இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம், பண்பாடு மற்றும் கல்வி கலாசார ஈடுபாடுகள், சமூக, பொருளாதாரத் துறையிலான பங்களிப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் தப்பபிப்ராயங்கள் தவறான தகவல்கள் காணப்பட்டன. அத்தப்பபிப்ராயங்களைத் தெளிவு படுத்தி உண்மை நிலையை வெளிப்படுத்தவும் மறந்தனவற்றையும் மறைந்தனவற்றையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும் 20 ஆம் நூற்றாண்டில் ஓரளவு முயற்சிகள் முஸ்லிம் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அது தொடர்பாக 1950 களின் பின்னரான காலப்பகுதிகளிலேயே முக்கியமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த மூன்று தசாப்தங்களுள் பல முஸ்லிம் கல்விமான்கள் இது விடயமாக அதிகமாக எழுதியும் வானொலி நிகழ்சிகளை நடாத்தியும் வந்துள்ளனர். எனினும் இந்த முயற்சிகளில் பெரும்பாலானவை நூலுருப் பெறவில்லை என்ற விடயம் கவலைக்குரியதே” என்ற அபுல் கலாமின் ஆதங்கத்தின் வெளிப்பாடாக இந்நூல் அமைந்துள்ளது எனலாம். நூல்: நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள், ஆசிரியர்: சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். அபுல் கலாம், முதற்பதிப்பு: 2024, பக்கங்கள்: XVIII + 247, விலை: 1500/=,

## வாசித்ததில் வசீகரித்தது

### என்ன விந்தை உலகம் இது?



ஐம்பது ரூபாவை யாரும் ஒரு ஏழைக்கு அவ்வளவு எளிதில் தானமாகக் கொடுக்க மாட்டார்கள் ஆனால் ஹோட்டலில் டிப்ஸ்ஸாக அவர்கள் ஐம்பது ரூபாவைச் சாதாரணமாக கொடுப்பார்கள்.மூன்று நிமிடம் இறைவனை வணங்கப் பிடிக்காது. ஆனால் மூன்று மணி நேர சினிமாப் படம் பார்க்கப் பிடிக்கும்.

முழுநேர வேலைக்குப் பின்னர் கூட உடற்பயிற்சிக்கு செல்வார்கள். ஆனால் வீட்டில் அப்பா அம்மாவுக்கு உதவக் கேட்டால் முடியாது என்பார்கள்.

காதலர் தினத்திற்காக ஒரு வருடம் காத்திருந்து பரிசு வாங்குவார்கள். ஆனால் அன்னையர் தினம் மட்டும் கொஞ்சமும் அவர்களது நினைவில் இருக்காது.

ஏழைச் சிறுவனுக்கு ஒரு பாண் துண்டை கொடுக்க யாரும் இருக்கவில்லை. ஆனால் அந்த பையனை ஓவியமாக வரைந்த போது 'இந்த ஓவியம் வரையப்பட்ட முறையில் சோகம் இருக்கிறது' எனக்கூறி அதனை ஒருவர் பத்து இலட்சம் ரூபாவுக்கு வாங்கிச் சென்றுள்ளார்.

இதுதான் இன்றைய மனிதனின் நிலை. இத்தகைய மனிதர்களை நினைக்கும் போது நூதனமாக உள்ளது அல்லவா.?

## பேசும் கவிதை

### காதல் மனிதமானது

காதலிக்கத்தான் வேண்டும்!
காதலிக்கத் தெரியாதவன்
காரியம் சாதிக்கத் தெரியாதவனே!

காதலிக்கக் கற்றுக்கொண்டால்
பேதலிக்காது புத்தி!
ஆபத்தானது காதல் வெறி......
கனதி மிக்கது காதல் நெறி!

பெண்மையைக்
காதலிப்பதை விடவும்
உண்மையைக்
காதலிக்க வேண்டும்!

இயற்கையைக் காதலித்தால்
இன்பமோ இன்பம்!
மண்ணில் உள்ளோரைக்
காதலித்தால்
விண்ணில் உள்ளவனின்
காதல் கிட்டும்!

வரவேண்டும் காதல் வெறி
மானுடத்தின் மீது!
மானுடத்தைக் காதலிக்காமலிருப்பது
குற்றத்திலும் குற்றமே!

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

## பேசும் படம்



இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

---



மொழிவாணனின் 03

# என்னவோ என்னவோ என்வாசம் நானில்லை

# விதைப்பதெல்லாம் முளைப்பதில்லை மண்ணின் மீதிலே நினைப்பதெல்லாம் நடப்பதில்லை மனித வாழ்விலே!

சுரங்கவை அழைத்துச் சென்ற மரகதம்,

அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தாள்

அவனைப் பற்றிய தகவல்கள் எதுவுமே தெரியாததால்,

தன்வீட்டு முகவரியையே கொடுத்தாள்.

சுரங்கவின் வலது கை, கால் எலும்பில் முறிவு ஏற்பட்டிருந்ததால்,

அவன் வேதனை மிகுதியால் முனங்குவதை

மரகதத்தால் உணர்ந்துகொள்ள முடிந்தது!

இதனால்,

அவனுக்கு உதவியாக,

அவன் அருகில் யாராவது இருந்தேயாகவேண்டும் என்பதும் அவளுக்குப் புரிந்தது

கட்டிலின் அருகில் நின்றிருந்த மரகதம்,

அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அம்மா நீங்க எனக்கு செஞ்ச உதவிக்கு ரொம்ப தேங்ஸ் இந்தாங்க இந்த சல்லிய கார் டிரைவருக்கு குடுங்க!” சொல்லியபடியே

பணநோட்டுகளை எடுத்து அவளிடம் நீட்டினான் சுரங்க.

“இல்லீங்க தம்பி சல்லிய பத்தி பிரச்சினையில்லை நான் குடுத்துட்டேன்!!

“பரவாயில்ல இத வெச்சிக்குங்க”

“இல்லிங்க தம்பி அது இருக்கட்டும் அடுத்து என்ன செய்யலாம்னுதான் நான் யோசிக்கிறேன் நீங்க இப்ப இருக்கிற நெலமய பார்த்தா உங்களுக்கு பக்கத்துல யாராச்சும் இருக்கணும் அதனால உங்க அப்பா அம்மாவுக்கு சொல்லி அனுப்பினா நல்லது தானே?”

“மரகதம் இப்படிச் சொன்னதும்,

‘திக்’கென்றது சுரங்கவுக்கு,

அண்ணாவுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்ற அதிர்ச்சியில் இருக்கும் வீட்டாருக்கு,

இன்னுமொரு அதிர்ச்சியைக் கொடுக்க அவன் விரும்பவில்லை!

அதனால்,

இந்த விஷயத்தைப் பற்றி வீட்டுக்கு சொல்லாமல் இருப்பதற்கு முடிவு செய்தான்!

“நான் இங்க இருந்தே சுகமாகிப் போயிடறேன். தகவல் சொல்லி அனுப்புறதுக்கு எனக்கு யாரும் இல்ல”

அவன் இப்படிச் சொன்னதும்,

வியப்புடன் விழிகளை உருட்டி அவனைப் பார்த்தாள் மரகதம்!

இப்போது,

அவளுக்கு அவன்மீது அனுதாபம் இன்னும் அதிகமாகியது!

“சரிதம்பி ஒடம்ப கவனமா பார்த்துக்கோங்க அப்ப நான் வாறேன்”

அவனிடமிருந்து விடைபெற்றார் மரகதம்!

காரில் திரும்பி வரும் போது கூட,

சுரங்கவைப் பற்றிய நினைவுகளே அவளை வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

அவள் மனம் எண்ணியது,

பாவம் யாருமே இல்லாத அநாதையாக இருக்கிறானே. என்ன இருந்தாலும் அவன் நல்ல ஒரு ஆண் பிள்ளை!

ஆனாலும்,

கொஞ்சம் ராங்கிக்காரன்!

பார்கவியிடம் அவன் நடந்து கொண்ட விதத்திலிருந்தே அது புரிந்தது.

ம் ஆண் பிள்ளையானால் அப்படித்தானே இருக்க வேண்டும்.

வீட்டுக்குள் நுழைந்ததும்,

சோர்வுடன் அமர்ந்து கொண்டாள் மரகதம்.

“என்னம்மாகளைப்பா இருக்கா?” கேட்டபடியே அவள் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள் பார்கவி.

“ம் அந்த தம்பிய ஆஸ்பத்திரியில எட்மிட் பண்ணியாச்சு சொல்லியபடியே,

பார்கவியின் முகத்தைப் பார்த்தாள் மரகதம்!

அந்த விஷயத்தைக் கேட்டதற்கு அவன் ஆர்வம் காட்டவில்லை என்பது மரகதத்திற்குப் புரிந்தது!

“ம் பார்கவி உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?”

“என்னம்மா?” ஆர்வமில்லாமல் கேட்டாள் பார்கவி.

“அந்தத் தம்பிக்கு அம்மா அப்பா யாரும் இல்லையாம் கேக்குறதுக்கே ரொம்ப கஷ்டமாக இருக்குடி பாவம் அந்த தம்பி கட்டில்ல இருந்து கீழே இறங்கிறதுக்குக் கூட ரொம்பவும் கஷ்டப்படுது”

அவள் சொன்னதைக் கேட்டு

அதை காதில் வாங்கிக் கொள்ளாதவளைப் போல்,

வெளியே நடந்து சென்றாள் பார்கவி!

அவள் இப்போது பெரிய தர்மசங்கடத்திற்குள்ளானாள்.

அப்பாவைக் கொலை செய்தவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற வெறியில் இருந்த பார்கவி,

தனது வெறியை வளர்த்துக் கொள்வதற்காக,

அவர்கள் எவருடனும் பழகாமலேயே இருந்து வந்தாள்.

ஆனால்,

இன்று ஒருவன் அவளுடைய வீட்டுக்குள்ளே வந்துவிட்டான்!

அதுவுமில்லாமல்,

அம்மா விழுந்தடித்துக் கொண்டு அவனுக்கு உதவி வேறு செய்கிறாள்!

அவனுக்கு உதவி செய்ய வேண்டாமென்று அம்மாவிடம் சொல்லும் சக்தி அவளிடம் இல்லை!

அவன் பெரும்பான்மையினத்தவன் என்று தெரிந்திருந்தால்,

விழுந்தவன் அப்படியே சாகட்டும் என்று விட்டிருப்பாள்.

அப்படியொரு இன வெறி அவள் மனதிற்குள் உருவாகியிருந்தது!

தோட்டத்தில் எக்கவுண்ட் கிளார்க்காக வேலை பார்த்து வந்த மரகதம்,

அன்று கொஞ்சம் தாமதமாகித்தான் வேலைக்குப் போனாள்.

மாலையில் தான் திரும்பி வந்தாள்

வழக்கமான நாட்களைப் போல் இன்று அவள் மனம் மகிழ்ச்சியாக இருக்கவில்லை.

காலையில் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்த சுரங்கவைப் பார்க்கப் போக முடியவில்லையே என்ற தவிப்பு அவளுடைய உள்ளத்தில்,

வேதனையை அதிகரித்தது.

அன்று இரவு,

படுக்கச் செல்லுமுன்,

அம்மா சாமி கும்பிடுவதை பார்கவி பார்த்தாள்

ஆஸ்பத்திரியில் இருக்கும் சுரங்க விரைவாக குணமடைய வேண்டும் என்றுதான் அவள் கடவுளிடம் வேண்டுவதாக இருக்க வேண்டும் என்ற பார்கவி நினைத்துக் கொண்டாள்!

மறுநாள் காலையில்,



பார்கவி கண்விழித்தபோது,

பொழுது நன்றாகவே விடிந்து விட்டிருந்தது!

அம்மா வந்து ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துவிட்டுப் போன பிறகு,

அந்த வெளிச்சம் பட்டுத்தான் அவள் விழித்துக் கொண்டாள்!

விழித்துக் கொண்டாலும்,

எழுந்திருக்க மனமில்லாமல்,

தலையணையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சாய்ந்திருந்தாள்!

நேற்று சுரங்க தலைவைத்துப் படுத்திருந்த தலையணை,

சற்று தொலைவில் இருந்தது!

அந்தத் தலையணையில் அவள் தலைசாய விரும்பவில்லை!

அதுமட்டுமல்ல,

கட்டிலில் விரித்திருந்த பொட் ஷீட்டையும் எடுத்து கழுவிப் போட்டாள்.

அப்படி ஒரு வெறுப்பு அவளுக்கு!

இப்போது,

அவள் சிந்தனை கொஞ்சம் சிதறி ஓடியது!

அன்று ஞாயிற்றுக்கிழமை

விடுமுறை.

விடுமுறை நாட்களில்,

இதற்கு முன்பெல்லாம் இப்படி காலையிலேயே அம்மா எழுந்திருக்க மாட்டாள்.

ஆனால்,

இன்று எல்லாமே தலைகீழாக மாறியிருக்கிறது!

விடுமுறை நாட்களில்,

ஒரு வாரத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவதற்காக அம்மா டவுனில் உள்ள சந்தைக்கு போய் வருவது வழக்கம்.

“பாரு எழும்பி வந்து ஒரு வேலை செய்றியா?”

அம்மாவின் குரல் கேட்டு,

சிந்தனையில் இருந்து விடுபட்டாள் பார்கவி.

“ஏம்மா நீங்க இன்னிக்கு சந்தைக்குப் போகல்லியா?”

“போகத்தான் போறேன் நீ எழும்பி அந்த டீய குடிச்சிட்டு அப்பாட சட்டை ஒண்ணும் சாரம் ஒண்ணும் கழுவி வச்சிருக்கேன், அத கொஞ்சம் அயன் பண்ணித்தா!!

மரகதம் இப்படிச் சொன்னதும்,

வியப்புடன் நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தாள் பார்கவி,

அம்மா இப்படிக் கேட்டதும்,

உண்மையிலேயே பார்கவிக்கு அச்சரியமாகத்தான் இருந்தது!

காரணம்,

அப்பாவின் ஞாபகமாக இதுவரைகாலமும் அவருடைய உடைகளை கவனமாக பாதுகாத்து வந்தாள் அம்மா.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அதை வெளியில் கூட எடுக்கவில்லை!

“ஏம்மா இப்போ அத அயன் பண்ணச் சொல்றீங்க அப்பாவுக்கு புண்ணியம் கிடைக்கிறதுக்காக யாராவது பிச்சைக்காரனுக்கு குடுக்கப் போறீங்களா?”

“இல்லபாரு,.. ஆஸ்பத்திரியில் இருக்கிற அந்த தம்பிக்கு குடுக்கத்தான் அந்த தம்பிக்கு மாத்திக் கட்டுறதுக்கு உடுப்பு எதுவும் இல்ல நேத்துராவு கூட கூதல்ல நடுங்கிக்கிட்டுதான் இருந்திருக்கும்!” தாழ்ந்த குரலில் சொன்னாள் மரகதம்.

“என்னம்மா இது உங்களுக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு இதுவரைக்கும் நீங்க அந்த ஆளுக்கு செஞ்ச உதவிகளே போதும்.. அவன் ஒரு சிங்களவன் என்பதை மறந்துவிடாதீங்க நாளைக்கு ஒரு கொழப்பம் வந்தா அவனே ஐஞ்சாறு பேரோட வந்து உங்களையும் என்னையும் கொளுத்திட்டுப் போயிடுவான்” ஆத்திரத்துடன் கத்தினாள் பார்கவி.

“இல்லபாரு உன்னோட நெனப்பு தப்பானது இந்த சிங்களவங்க எங்களுக்குப் பார்க்க ரொம்பவும் நல்லவங்க கோவம் வந்த நேரத்துலமட்டும்தான் அப்படி நடந்துக்குவாங்க அதுக்கப்புறம் அதையெல்லாம் மறந்துடுவாங்க ஆனா எங்களோட ஆக்கள் அப்படியில்ல. அதையே மனசுல வச்சிக்கிட்டு பழிவாங்குவாங்க” என்று சொல்லியபடியே,

டிபன் கெரியரில் சாப்பாட்டைப் போட்டாள்.

“என்னமோ அம்மா நீங்க செய்றது ஒண்ணுமே எனக்குப் பிடிக்கல்ல!” சொல்லியபடியே எழுந்து நின்றாள் பார்கவி.

“பாரு இங்க பாரு! ஒரு மனுஷன் நல்லா இருக்கிறப்போ அவனோட எப்படி வேண்டுமானாலும் சண்டை போடலாம் ஆனா அவன் ஆபத்துல இருக்கிறப்போ அவனுக்கு நம்மால முடிஞ்ச உதவிய செய்யனும் அதுதான் மனுஷ தர்மம்”

“அம்மா தென்னங்கன்றுக்கு தண்ணி ஊத்தினா அது இனிப்பான இளநியா திருப்பித்தரும். ஆனா பாம்புக்கு பால் வார்த்தா அது விஷத்தைத்தான் திருப்பித்தரும். இவனுகளும் அப்படித்தான்!”

“சரி சரி உன்னோட கெழட்டுக் கதையை வச்சிட்டு அந்த உடுப்ப அயன் பண்ணி எடு” கொஞ்சம் அதட்டலுடன் சொன்னாள் மரகதம்.

அதற்குமேல்,

பார்கவி எதுவும் பேசவில்லை

ஆனால்,


அடுத்தடுத்து நடந்த சில சம்பவங்கள்,

அவள் உள்ளத்திலும் ஒருவித சலனத்தை ஏற்படுத்தக் கூடியதாகவே அமைந்திருந்தது

தொடரும் ....

# சிறுவர் உலகம்

சுகந்தி



அருளுடைமை: அல்லல் அருளாள்வார்க் கில்லை வளி வழங்கு மல்லன்மா ஞாலங் கரி

*தெளிவுரை :*
அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.

## பொன்னுக்கு ஆசைப்பட்டு பல்லக்கு சுமந்தவர்கள்

வேட்டைக்குப் போன அரசன் ஒரு காட்டிற்குள் தனியாக வந்து சிக்கிக் கொண்டான். அரசனை பல்லக்கில் வைத்துக்கொண்டு அவனது நாட்டிற்கு கொண்டு போய் சேர்க்க அங்கே இருந்த காட்டுவாசிகள் நான்கு பேர் ஒப்புக் கொண்டார்கள். அவர்களிடம் பேசிய போது நாட்டிற்கு போய் சேர ஆறு நாட்களாகும் என்று அறிந்து கொண்டான்.

அரசனுக்கோ வெகு விரைவாக நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்ற விருப்பம். எனவே அரசன் அவர்களிடம் "என்னை மூன்று நாட்களில் கொண்டு போய் சேர்த்தால் மூவாயிரம் தருகிறேன். இரண்டே நாட்களில் கொண்டு போய் சேர்த்தால் 5000 பொற்காசுகள் தருகிறேன்" என்றான்.

பல்லக்கு சுமந்த காட்டு வாசிகள் பொன்னுக்கு ஆசைப்பட்டு வேகத்தை கூட்டிக் கொண்டே போனார்கள். ஆனால் நடந்ததோ வேறு.

ஆறு நாட்கள் கழிந்தும் காட்டுக்குள்ளேயே சுற்றிக் கொண்டு இருந்தார்கள். ஒரு கட்டத்தில் சோர்ந்து போய் பல்லக்கை கீழே இறக்கி வைத்து விட்டார்கள்.

அரசனுக்கு கோபம். ஆனால், அவர்கள் "மன்னிக்க வேண்டும் மன்னா... வேகத்திலேயே கவனம் வைத்த காரணத்தால் வழியை தவற விட்டு விட்டோம்." என்று வேதனையுடன் கூறினார்கள்.

இப்படித் தான் நம்மில் பலரும் வாழ்க்கையில் பணத்தை எட்டிப் பிடிக்க ஆசைப்பட்டு நல்ல வழியை தவற விட்டு விடுகிறோம்.

## அமெரிக்காவில் இன்றும் கழுதையில் அஞ்சல் சேவை



அமெரிக்காவின் சுபாய் கிராமத்தில் இன்றும் கழுதைகள் மூலம் அஞ்சல் அனுப்பப்படுவது நவீன உலகில் ஒரு அரிய காட்சியாகும்.

அமெரிக்காவின் கிராண்ட் கேனியனின் ஆழத்தில், ஹவாசுபாய் பழங்குடியினர் வாழும் சுபாய் கிராமம் இருக்கிறது. இந்த கிராமம் மிகவும் தொலைதூரத்தில் அமைந்துள்ளதால், இங்கு சாலை வசதி இல்லை. குதிரை அல்லது ஹெலிகொப்டர் மூலம் மட்டுமே இங்கு செல்ல முடியும்.

இவ்வளவு தொலைதூரத்தில் இருக்கும் சுபாய் கிராமத்திற்கு அஞ்சலை எப்படி கொண்டு செல்வது என்பது மிகவும் சுவாரசியமானது. இங்கு அஞ்சலை கழுதைகள் மூலமாகவே கொண்டு செல்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக சுபாய் கிராம மக்கள் கழுதைகளைப் பயன்படுத்தி அஞ்சல் சேவையை நடத்தி வருகின்றனர். இது அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிட்டது. கிராண்ட் கேனியனின் செங்குத்தான பாறைகள் மற்றும் குறுகிய பாதைகளில் கழுதைகள் மிகவும் எளிதாக நடக்கக்கூடியவை. இம் மக்களுக்கு ஹெலிகொப்டர் போன்ற நவீன வாகனங்களைப் பயன்படுத்துவதை விட, கழுதைகளைப் பயன்படுத்துவது மிகவும் செலவு குறைந்தது.

இந்த முறையில் சில சவால்களும் இருக்கின்றன. கழுதைகள் செங்குத்தான பாறைகள் மற்றும் கடுமையான வானிலையை சந்திக்க வேண்டும். மேலும், இது அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயல் முறையாகும். கழுதைகளால் அதிக எடையை சுமக்க முடியாது என்பதும் ஒரு குறைபாடாகும்.

இத்தனை சவால்கள் இருந்தும், இன்றும் இம்முறை தொடர்ந்து வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. சுபாய் கிராம மக்களின் வாழ்க்கையில் இது ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அவர்களை வெளி உலகத்துடன் இணைக்க இதுவே எளிமையான வழி.

இந்த முறை தொடர்ந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு சிக்கலான கேள்வி. ஒருபுறம், இது அவர்களின் கலாசாரத்தின் ஒரு பகுதி. மறுபுறம், இது மிகவும் கடினமான மற்றும் நேரத்தை எடுத்துக்கொள்ளும் முறையாகும்.

எது எப்படியோ, சுபாய் கிராமத்தில் கழுதைகள் மூலம் அஞ்சல் அனுப்பப்படுவது உலகின் மற்ற பகுதிகளுக்கு ஒரு சுவாரஸ்யமான உதாரணமாகும். இது நமக்கு நாகரிகம் மற்றும் தொழில்நுட்பம் எவ்வளவு முன்னேறியிருந்தாலும், சில இடங்களில் பழைய முறைகள் இன்னும் தொடர்ந்து இருக்கின்றன என்பதை உணர்த்துகிறது.

## இவ்வார மழலை



ஆர். அகரன்

சுதன் – கங்கா

## சிறுவர் சித்திரங்கள்



R. AKARAN
PAT'S NURSERY SCHOOL, DEHIWALA.

## குறுக்கழுத்துப் போட்டி இல. 135

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| | 06 | | 07 | 08 | |
| 09 | | 10 | 11 | | 12 |
| 13 | 14 | | 15 | | 16 |
| 17 | | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | | 25 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................
.............................. ..............................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) மீன், நண்டு ஆகியன போன்று இதுவும் மனிதனின் மாமிச உணவுகளில் ஒன்றாகும். கடல், குளம், ஆறு போன்ற நீர்நிலைகளில் வாழ்கிறது.
(4) தொடர்ச்சியாக மழை பெய்கின்ற காலப்பகுதியைக் குறிக்கும் காலப்பெயர்ச் சொல் இது.
(7) ஆண்மானைக் குறிக்கும் மரபுச்சொல்.
(10) மீன்பிடித் தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற பிரதான மீன்பிடி உபகரணம்.
(13) பாடல்கள் புனைபவரைக் குறிக்கும் சொல்.
(18) அக்கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அழகிய வெண்ணிறப் பறவை இது. பெண்களின் நடைக்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ள பறவை.
(22) நன்னீர் நிலைகளில் வாழ்கின்ற ஆபத்தான உயிரினம். நீர் அருந்துவதற்காக கரைக்கு வருகின்ற மிருகங்களை திடீரெனப் பிடித்துச் சென்று உணவாக்கிக் கொள்ளும்.

**மேலிருந்து கீழ்**

(2) சமாதானப் பறவை. (தலைகீழான சொல்)
(4) அந்திப்பொழுதை இவ்வாறும் கூறலாம். கழுத்தில் சூடிக் கொள்ளும் பொருள் ஒன்றுக்கும் இப்பெயர் வழங்கப்படுகின்றது.
(7) கலைகளில் வல்லவனைக் குறிக்கும் சொல்.
(9) மா, பலா, வாழை ஆகிய மூன்று கனிகளையும் பொதுச்சொல்லால் இவ்வாறு கூறலாம். (தலைகீழான சொல்)
(12) நுளம்புகளின் வாழ்க்கைப் பருவம் முட்டையில் தொடங்கி நிறையுடலியில் முடிவடைகின்றது. நுளம்பின் வாழ்க்கை வட்டத்தில் முட்டைக்கு அடுத்த பருவம் இது.
(18) கடற்கரைக்குச் சென்றீர்களானால் இதனைப் பார்க்கலாம். கரையை நோக்கி ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்கும்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 134

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பாடசாலை 08. அடி 05. அரவம் 14. காகம்
17. மிடி 22. பாதை 24. குதிரை

**மேலிருந்து கீழ்**

01. பாலை 03. சாகரம் 05. மாடி 08. அம்மி
10. அகந்தை 18. குட்டி 20. கீரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 133

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம். ஹம்ஸா**
தரம் 07, அஸ்ஸம்ஸ் வித்தியாலயம்,
இல. 179, நிவ் எல்பிட்டிய கெலிஓயா.

**2. எம்.எப்.எம். யூசுப்**
தரம் 05C, ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி,
இல. ஜும்மா மஸ்ஜித் வீதி, மாளிகாவத்தை. கொழும்பு 10.

**3. மரியம் மொஹமட்**
தரம் 05B, மின்ஹத் தேசிய பாடசாலை,
இல. 53/2, திக்வெல்ல.

**4. எம்.ஆர். முஹம்மது இஸ்ஹக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி மாவத்தை, இரத்மலானை.

**5. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா மு.ம. வித்தியாலயம்,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, கொழும்பு 10.

**6. அயாஷா ஜின்னா**
தரம் 05, எஹட்டு முல்ல மு. வித்தியாலயம்,
இல. 315, எஹட்டு முல்ல, நாகொல்லாகொட,

**5. என். ஷேத்தரணியா**
தரம் 05, கார்மேல் பாத்திமா கல்லூரி,
கல்முனை.

**6. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல, மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 135
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## "அகல்டெக்" உலகின் அழகான குதிரை



"அகல்டெக்" உலகின் மிக அழகான குதிரை இனம். தங்கம் போன்ற மின்னும் ரோமங்களையும், பட்டு போன்ற மென்மையான தோலையும் கொண்ட இந்த குதிரைகள், தங்கள் அழகால் எவரையும் மயக்கும்.

துர்க்மெனிஸ்தானின் கரகம் பாலைவனத்தை தாயகமாகக் கொண்ட அகல்டெக் குதிரைகள், தங்கள் தனித்துவமான தோற்றத்தால் உலகப் புகழ் பெற்றுள்ளன. சூரிய ஒளியில் அவற்றின் ரோமங்கள் தங்கம் போல் மின்னிக்கொண்டே இருக்கும். இந்த அழகான காட்சி பலரை ஈர்க்கிறது.

அகல்டெக் குதிரைகள் மிகவும் அரிதான இனமாகும். உலகம் முழுவதும் இவற்றின் எண்ணிக்கை 7,000க்கும் குறைவு. துர்க்மெனிஸ்தானின் தேசிய விலங்காக அங்கீகரிக்கப்பட்ட இவை, தங்கள் நாட்டின் பெருமையாகத் திகழ்கின்றன.

அழகு மட்டுமின்றி, அகல்டெக் குதிரைகள் தங்கள் சுறுசுறுப்பு, வலிமை மற்றும் விசுவாசத்திற்கும் பெயர் பெற்றவை. தங்கள் உரிமையாளர்களை மிகவும் நேசிக்கும் இவை, அவர்களுக்கு மிகவும் நம்பகமான நண்பர்களாக இருக்கின்றன.

அகல்டெக் குதிரைகளின் மூதாதையர்கள் அரேபிய குதிரைகள் என்று நம்பப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக துர்க்மெனிஸ்தானின் கடுமையான காலநிலையில் வாழ்ந்து வந்ததால், இவை தனித்துவமான தோற்றம் மற்றும் குணங்களைப் பெற்றுள்ளன.

அகல்டெக் குதிரைகள் தங்கள் அழகு, வலிமை ஆகியவற்றால் உலகெங்கிலும் உள்ள மக்களை கவர்ந்திழுக்கின்றன.

இந்த அரிய இனத்தைப் பாதுகாத்து, வருங்கால சந்ததியினருக்கும் இவற்றைப் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது நம் அனைவரின் கடமையாகும்.

## சுப்பிரமணிய பாரதியார்



1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி எட்டயபுரத்தில் பிறந்தார் பாரதியார். இவர் சின்னச் சாமி ஐயர், இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். பாரதியார் இனிமையான பாடல்களை இயற்றியுள்ளார். முண்டாசுக் கவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு சிறந்த கவிஞர்.

அவர் எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். இவரது இளமைப் பெயர் சுப்பிரமணியம் ஆகும். எட்டய புரத்து சமஸ்தானப் புலவர்கள் "பாரதி" எனும் பட்டத்தை இவருக்கு வழங்கினர்.

பாரதி தனது 14ஆவது வயதில் 7 வயது நிரம்பிய செல்லம்மாவை திருமணம் செய்தார். பரந்த உள்ளம், புதுமை எண்ணம், தெளிந்த அறிவு, இலட்சியப் பற்று முதலான பண்புகளைக் கொண்டவர். இவர் இயற்றிய பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு முதலானவை பிரசித்தி பெற்ற கவிதைகளாகும். பெண் விடுதலை வேண்டி பல பாடல்கள் பாடினார். இவர் புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி 39ஆவது வயதில் மறைந்தார்.

**எம்.எப். சாலிஹா...**
தரம் 5A, பதியுதீன் மஹ்முத் ம. கல்லூரி, கண்டி.

## ஹெர்குலஸ் கோபுரம்

ஸ்பெயினின் வடமேற்கு கடற்கரையில் அமைந்துள்ள உலகின் மிகப் பழமையான கலங்கரை விளக்கங்களில் ஒன்று தான் ஹெர்குலஸ் கோபுரம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக, இந்த கோபுரம் மாலுமிகளுக்கு வழிகாட்டியாக விளங்கி வருகிறது.



கி.பி 2ஆம் நூற்றாண்டில் ரோமானியர்களால் கட்டப்பட்ட ஹெர்குலஸ் கோபுரம், பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான அலெக்ஸாண்டிரியாவின் கலங்கரை விளக்கத்தால் ஈர்க்கப்பட்டு வடிவமைக்கப்பட்டது. ரோமானிய பொறியியலாளர் கயஸ் செவியஸ் லூபஸ் என்பவரால் கட்டப்பட்ட இந்த கோபுரம், ஏறத்தாழ 55 மீற்றர் உயரத்தில் எழும்பி நிற்கிறது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்பெயின் பொறியியலாளர் யூஸ்டாகியோ கியானினியின் வழிகாட்டுதலின் கீழ் இந்த கோபுரம் மறுசீரமைப்பு செய்யப்பட்டாலும், அதன் அடிப்படை வடிவமைப்பு இன்றும் அதேபோல் உள்ளது.

ஹெர்குலஸ் கோபுரம் வெறும் கலங்கரை விளக்கமல்ல. இது கடல்சார் வரலாறு மற்றும் ரோமானிய பொறியியல் வல்லமையின் சின்னமாகும்.

2009ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்ட இந்த கோபுரம், தனது வரலாற்று மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவத்திற்காக உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## அறிந்து கொள்வோம்

1. இங்கிலாந்து அரசிக்கு சீதனமாகக் கொடுத்த நகரம் - மும்பாய்
2. நயகரா நீர் வீழ்ச்சியைக் கடந்த முதல் மனிதன் - விலோன்டின்
3. டார்சனை உருவாக்கிய எழுத்தாளன் - எட்கர் ரைஸ் பர் ரோஸ்
4. 'இந்துஸ்தான் நமதே' கவிதையை இயற்றியவர் - கவிஞர் அல்லாமா இக்பால்
5. அதிக காடுள்ள இந்திய மாநிலம் -அஸ்ஸாம்
6. விக்டோரியா நீர் வீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர் - டேவிட் லிவிங்ஸ்டன்.
7. தலையைத் திருப்பாமல் பின்புறம் பார்க்கும் மிருகம் - ஒட்டகச் சிவிங்கி.
8. உலகில் பெரிய முத்து - பிரெஸ்ட் போர்டு ஹோப் முத்து
9. உலகில் அதிக உயரத்திலுள்ள இரயில்பாதை உள்ள நாடு - பெரு - தென் அமெரிக்கா
10. உலகில் பெரிய இரயில் நிலையம் உள்ளநாடு - கிராண்ட் சென்ரல் டெர்மினல் - நியூயோர்க்

சாரணாகையும்...

## புகைவண்டி!



*சிற்றெறும்பு ஊர்வது போல்*
*சீராய்ப் போகும் புகைவண்டி!*
*ஏற்றம் இறக்கம் எதுவானாலும்*
*எளிதாய்த் தாண்டும் புகைவண்டி!*

*சிகுபுகு சிகுபுகு புகைவண்டி*
*சீறிச் செல்லும் புகைவண்டி*
*சீமையில் செய்த புகைவண்டி*
*புகையைக் கக்குது பின்னாடி!*

*கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம்*
*காலம் நேரம் தவறாமல்,*
*தாண்டிச் செல்லும் புகைவண்டி*
*தாத்தாக் காலப் புகைவண்டி!*

# மஞ்சரி விளையாட்டு



# ஜயசூரிய பாணியில் தயாராகும் இலங்கை டி20 அணி

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இலங்கை அணி ஆடும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடர்கள் இன்று ஆரம்பமாகும். தொடர்ச்சியாக டெஸ்ட் போட்டிகளில் ஆடிய பின்னரே இலங்கை அணி வெள்ளைப் பந்துக்கு திரும்புகிறது. என்றாலும் நவீன கிரிக்கெட்டில் டெஸ்ட் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகள் என்பது மாறுபட்ட போட்டிகளாக இருப்பதால் இந்த இரு அணிகளுமே வித்தியாசப்பட்டிருக்கும்.

இரண்டு கிரிக்கெட்டிலும் தாக்குப்பிடிக்கக் கூடிய பத்தும் நிசங்க, கமிந்து மெண்டிஸ், குசல் மெண்டிஸ் போன்ற வீரர்கள் தவிர்த்து அணிகளுமே முற்றிலும் மாறுபட்டிருக்கும். எனவே, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டுக்கு என்று அணிகள் பிரத்தியேகமாக மாற வேண்டி இருக்காது.

ஆரம்பத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக மூன்று டி20 போட்டிகளில் இலங்கை ஆடவிருக்கிறது. இதன் முதல் போட்டி இன்று (13) நடைபெறவிருப்பதோடு அடுத்த இரு போட்டிகளும் முறையே எதிர்வரும் 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெறும். அனைத்துப் போட்டிகளிலும் தம்புள்ளையில் இரவு நேர ஆட்டமாகவே நடைபெறப்போகிறது.

இலங்கை அணி சில முக்கிய மாற்றங்களுடனேயே இந்த டி20 தொடரில் களிறங்குகிறது. முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்கவின் வெளியேற்றம் மற்றும் பானுக்க ராஜபக்ஷவின் வருகையை இங்கு குறிப்பிட்டுக் கூறலாம்.

தசுன் ஷானக்க என்பவர் போட்டியை எப்போது வேண்டுமானாலும் திசை திருப்பக் கூடியவர் என்றாலும் அவரது ஆட்டத்தில் ஒரு தொடர்ச்சிப் போக்கு இல்லாமை இன்று அவர் ஓரங்கட்டப்படுவதற்கு காரணமாகி இருக்கிறது. ஆரம்பத்தில் அவர் அணித் தலைமை பொறுப்பை இழப்பதற்கும் அவரது தலைமையில் இருந்த குறைகளை விடவும் ஆட்டத்தில் இருந்த குறைகளே பெரிதாகக் காணப்பட்டது.

பின்னர், சாதாரண வீரராகவும் அவரால் சோபிக்க முடியாமல்போனது. பந்துவீச்சில் ஓரிரு விக்கெட்டுகளை வீழ்த்த முடிந்தபோதும் துடுப்பாட்டம் நாளுக்கு நாள் மோசமடைந்தது. கடைசியாக அவர் ஆடிய மூன்று போட்டிகளிலும் டக் அவுட் ஆனதோடு, அதன்பின்னர் உள்ளூர் அல்லது லீக் கிரிக்கெட்டுகளிலும் அவர் தனது திறமையைக் காட்டத் தவறிவிட்டார்.

மறுபுறம் பானுக்க ராஜபக்ஷ அணிக்குத் திரும்பியதும் பெரும் போராட்டத்தின் பின்னராகும். கடந்த 20 மாதங்களாக அவரால் அணியில் இடம்பிடிக்க முடியாமல்போனது. ஓட்டங்களைச் சேர்க்கத் தவறியது, அணியில் பிடிமானம் இல்லாமல் இருந்தது எல்லாமே அவருக்குப் பாதகமாக இருந்தது.

என்றாலும் உலகெங்கும் டி20 லீக் கிரிக்கெட்டுகளில் ஆடி வரும் பானுக்க ராஜபக்ஷ அந்தப் போட்டிகளில் சோபித்த நிலையிலேயே அணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

டி20 கிரிக்கெட்டின் பிரத்தியேக வீரராக இருக்கும் பானுக்க ராஜபக்ஷவின் ஆட்டம் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் சனத் ஜயசூரியவின் கிரிக்கெட் பாணிக்கு நன்றாக பொருந்துகிறது. எப்போதுமே எதிராணியை முற்றாக முறியடிக்கும் போட்டித் தந்திரத்துக்கு பெயர்போன சனத் ஜயசூரிய தனது ஆட்டப்போக்கை செயற்படுத்துவதற்கு பானுக்கவை சிறப்பாகப் பயன்படுத்த முடியும்.

அத்தோடு பானுக்கவின் வருகையுடன் இலங்கை அணியின் மத்திய வரிசையில் இருந்து வந்த குறைபாட்டை சரி செய்ய வாய்ப்பு இருக்கிறது. கடந்த காலத்தில் தசுன் சானக்க சோபிக்கத் தவறியது, பதிலாக அழைக்கப்பட்ட அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸும் சரியாக ஆடாதது என்று மத்திய வரிசை தடுமாற்றம் கண்டு வந்தது.

இந்நிலையில், பானுக்கவை சரியாக பயன்படுத்த முடியுமாக இருந்தால் இலங்கை அணிக்கு பெரும் பலமாக இருக்கும். துரதிர்ஷ்டவசமாக அவரை இலங்கை அணி இன்றுவரை சரியான வகையில் பயன்படுத்தத் தவறியது பெரும் இழப்பாகும்.

பானுக்கவால் பந்தை எந்த நேரத்திலும் பௌண்டரிக்கு வெளியில் அடிக்க முடியும் என்பது அவருக்கேயுரிய பிரத்தியேகமான திறமையாகும். அவ்வாறான வீரர்கள் கிடைப்பது மிக அரிதானது.

இலங்கை அணி அனுபம் மற்றும் இளம் வீரர்கள் என்று கலவையாகவே மேற்கிந்திய தீவுகள் அணியை எதிர்கொள்கிறது. இதில் இளம் வீரர் சமிந்து விக்கிரமசிங்க அழைக்கப்பட்டிருப்பது எதிர்காலத்துக்கான முதலீடாகவே பார்க்க முடிகிறது. 22 வயதான சமிந்து கடைசியாக நடந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஒரு வேகப்பந்து சகலதுறை வீரராக தேர்வாளர்களின் அவதானத்தை பெற்றார்.

கடைசியாக நடந்த இந்தியாவுக்கு எதிரான கடைசி டி20 போட்டியில் ஆடிய அவர் பந்துவிச்சில் 4 ஓவர்களுக்கும் 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது 4 ஓட்டங்களை பெற்றிருந்தார்.



அனுபவ வீரர் தினேஷ் சந்திமால் டி20 குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளபோதும் அவர் பதினொரு வீரர்களில் இடம்பெறுவதற்கு தொடர்ந்து போராட வேண்டி இருக்கும். லங்கா பிரீமியர் லீக்கில் சோபித்ததை அடுத்தே அவர் இலங்கை டி20 அணிக்கு சேர்க்கப்பட்டார். என்றாலும் அவர் கடைசியாக டி20 போட்டி ஒன்றில் ஆடி இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளது.

அதேபோன்று ஜெப்ரி வன்டர்சே கடந்த ஓகஸ்டில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தனது சிறந்த பந்துவீச்சாக 33 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சோபித்த நிலையில் இரண்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கை டி20 அணிக்கு திரும்பியுள்ளார்.

என்றாலும் வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன போன்ற டி20 போட்டிக்கே பிரத்தியேகமான சுழற்பந்து வீச்சாளர்கள் இருக்கும்போது அவர் அணியில் 11 வீரர்களுக்குள் இடம்பெறுவது என்பது போராட்டமாக இருக்கும்.

மதீஷ பதிரண, நுவன் துஷார, பினுர பெர்னாண்டோ மற்றும் அசித்த பெர்னாண்டோ ஆகியோர் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் வேகப்பந்து வீச்சாளர்களாக இடம்பெற்றிருக்கிறார்கள்.

மறுபறம் மேற்கிந்திய தீவுகள் அணி நிகலஸ் பூரன், அன்ட்ரே ரசல், அகீல் ஹொசைன் மற்றும் ஷிம்ரோன் ஹெட்மியர் போன்ற முன்னணி வீரர்கள் இன்றியே இலங்கை வந்திருக்கிறது. என்றாலும் அந்த அணி தொடர்ந்து வலுவாகவே உள்ளது. ரோவ்மன் பொவல் தலைமையிலான மேற்கிற்திய தீவுகள் அணியில் அதிரடி வீரர்களுக்கு பஞ்சம் இருக்காது.

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் இதுவரை ஆடிய 15 டி20 சர்வதேச போட்டிகளில் இலங்கையால் அதிபட்சமாக 8 போட்டிகளில் வெல்ல முடிந்திருப்பதோடு 7 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.

என்றாலும் இலங்கை மண்ணில் ஆடிய போட்டியில் மேற்கிந்திய தீவுகள் ஆதிக்கம் செலுத்தி இருப்பது தான் விசித்திரமானது. அதாவது இரு அணிகளும் இலங்கை மண்ணில் ஆடிய 6 டி20 போட்டிகளில் மேற்கிந்திய தீவுகளால் 4 போட்டிகளில் வெல்ல முடிந்துள்ளது. எனவே சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்வதில் இலங்கை அணி அவதானமாக இருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.



# சமரியும் இலங்கையின் வெளியேற்றமும்



மகளிர் டி20 உலகக் கிண்ணத்துக்கு பெரும் எதிர்பார்ப்புடன் சென்ற இலங்கை அணி அடுத்தடுத்து தோல்விகளுடன் வெளியேறியது. ஆரம்ப சுற்றின் முதல் மூன்று போட்டிகளிலும் இலங்கை பெற்ற மோசமான தோல்விகளுக்கு பெரிதாக வியாக்கியானங்கள் சொல்லத் தேவையில்லை.

இந்த மூன்று போட்டிகளிலும் அணித் தலைவி சமரி அத்தபத்து பெற்ற ஓட்டங்கள் 6, 3 மற்றும் 1. இதனால் இலங்கை அணி இந்த ஒரு போட்டியில்கூட 100 ஓட்டங்களையேனும் பெற முடியாமல் போனது. கடைசியில் தோல்வி என்பது வழக்கமானது.

இலங்கை மகளிர் அணி அண்மைக் காலத்தில் பெரும் எழுச்சி பெற்றிருப்பதை காண முடிந்தது. அதன் உச்சம் கடந்த ஜுலையில் நடத்த மகளிர் ஆசிய கிண்ணப் போட்டி. இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்தியா நிர்ணயித்த 166 ஓட்ட வெற்றி இலக்கை இலங்கை அணியால் எட்ட முடிந்தது.

அதாவது இந்த உலகக் கிண்ணத்துக்கு வரும் முன்னர் ஆசிய கிண்ணத்தை வென்ற இலங்கை மகளிர் அணி இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரு தரப்பு டி20 தொடர்களை வென்றது. இந்த வெற்றிகள் அனைத்துமே இலங்கைக்கு புதியது. இதற்கு முன்னர் வீழ்த்த முடியாத அணிகளாக பார்க்கப்பட்ட இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபரிக்கா மற்றும் இந்திய அணிகளையே இலங்கை மகளிர்கள் சாய்த்தனர்.

எனவே, மகளிர் டி20 உலகக் கிண்ணம் பற்றிய எதிர்பார்ப்பு முன்னரை விடவும் அதிகமாக இருந்தது. அது அணியிலும் எதிரொலித்தது. உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடனேயே சமரியும் ஐக்கிய அரபு இராச்சியம் சென்றார். என்றாலும் தனது குழுவில் ஒப்பீட்டளவில் பல வீனமாக பாகிஸ்தானிடம் 31 ஓட்ட வித்தியாசத்தில் தோற்ற இலங்கை அணியால் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய மற்றும் இந்தியாவை சமாளிக்க முடியவில்லை.

குறிப்பாக, சமரி அத்தபத்துவே அணியை முழுமையாக சுமக்க முயன்றது தெரிகிறது. அது முடியாதபோது ஒட்டு மொத்த அணியும் வீழ்ச்சி கண்டிருப்பதும் புரிகிறது.

ஹர்ஷிதா சமரவிக்ரம, கவீஷா டில்ஹாரி போன்ற வீராங்கனைகள் அண்மைக் காலத்தில் வளர்ந்து வந்தபோதும், அணியை பொறுத்தவரை முழுக்க முழுக்க சமரி அத்தபத்துவிடமே தங்கியுள்ளது. அது இலங்கை அணிக்கு எவ்வளவு சாதகமானதோ அந்த அளவுக்கு பாதகமானது. இதற்கு இந்த டி20 உலகக் கிண்ணமே போதுமான உதாரணம்.

'ஆடுகளத்தின் மீதோ அல்லது யாரின் மீதே எமக்கு குற்றம் சுமத்த முடியாது. நாம் சந்தித்த அதே சவாலை அடுத்த அணிகளும் சந்தித்தன. அவர்களால் அவைகளைத் தாண்டி வர முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது' என்று உலகக் கிண்ணத் தோல்விகள் குறித்து சமரி குறிப்பிடுகிறார்.

இத்தனைக்கும் உலகக் கிண்ணம் சென்ற இலங்கைக் குழாத்தை எடுத்துக் கொண்டால், அனுபவம் அற்ற அத்தனை இளமையான அணி என்று குறிப்பிட முடியாது. இலங்கைக் குழாத்தின் சராசரி வயது 30. பிரியதர்ஷனி, பிரபோதனி மற்றும் ரணவீர ஆகிய அனைவரும் 37க்கு மேல். அத்தபத்த உட்பட மேலும் அறுவர் தமது 30 வயதுகளில் இருக்கிறார்கள். எனவே, இந்த அணிக்கு நீண்ட எதிர்காலம் இல்லை.

'சமரியின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. அவர் குறைந்தது 4 ஆண்டுகள் ஆட வேண்டும். அவர் இன்னும் 34 வயதில் இருக்கிறார். எனவே பெண்களால் 39 அல்லது 40 வயது வரை ஆட முடியுமாக இருக்கும்' என்று இலங்கை மகளிர் அணியின் பயிற்சியாளர் ருமேஷ் ரத்னாயக்க குறிப்பிடுகிறார்.

கடந்த ஒன்றரைத் தசாப்தமாக இலங்கை மகளிர் அணிக்காக ஆடும் சமரி அத்தபத்துவின் சாதனைகள் இலங்கையின் வேறு எந்த மகளிராலும் இதுவரை எட்ட முடியாதது. அவர் ஓய்வு பெறுவது பற்றி அரசல் புரசலாகக் கூறி வருகிறார். என்றாலும் அவரை விடுவதற்கு இலங்கை மகளிர் கிரிக்கெட் இன்னும் தயாரில்லை என்பது தெரிகிறது. மறுபுறம் அவரில் முழுமையாக தங்கி இருக்கும் சூழலை மாற்றி திறமையான இளம் வீராங்கனைகளை முன்னிலைப் படுத்தினாலேயே நிரந்தர வெற்றிகளும் கிடைக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2024 ஒக்டோபர் 13 ஞாயிற்றுக்கிழமை



## நடிகை
## அனிதா சம்பத்

சென்னை அருந்ததி நிறுவனத்தின் மாற்றுமோதிரம்

சர்வதேச நிகழ்வில் நடிகை அனிதா சம்பத் (அலங்காரம் – யாழ் கோபிநாத்)

# 38 நிமிட குட்டிப் போர்



**பூகோள சஞ்சாரம்**

பிர்தௌஸ்

கிழக்கு ஆபிரிக்காவுக்கு அருகில் இருக்கும் சிறிய தீவு தான் சான்சிபார். 1896 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி இந்த சான்சிபாரில ஓர் போர் வெடித்தது. ஆங்கிலேயப் படைக்கும் சான்சிபாருக்கும் இடையிலான அந்தப் போர், ஒரு போராக வர்ணிப்பதற்கு தகுதியற்றது. ஏனென்றால் போர் நடந்தது வெறுமனே 38 நிமிடங்கள் தான். அதாவது உலகில் இடம்பெற்ற குறுகிய காலப் போர் இது தான்.

அப்போது இந்தத் தீவு பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்தது. அங்கு சுல்தானாக இருந்தவர் மரணிக்க அவரது மகன் காலித் பின் பர்காஷ் புதிய சுல்தானாக முடிசூடிக் கொண்டார். ஆனால் பர்காஷை பிரிட்டனுக்குப் பிடிக்கவில்லை. தனக்குக் கட்டுப்படக் கூடிய ஒரு செல்லப்பிள்ளையே ஆட்சிக்கு அமர வேண்டும் என்பது பிரிட்டனின் விருப்பம். ஆனால் பர்காஷ் சிம்மாசனத்தில் இருந்து இறங்க மறுத்துவிட்டார். தன்னால் பிரிட்டனுக்கு எதிராக நிற்க முடியும் என்பது அவரது குருட்டு நம்பிக்கை. பிரிட்டனோ பர்காஷை அரண்மனையை விட்டு வெளியேற உத்தரவிட்டது. மறுத்த பர்ஷான் தனது படைகளை அரண்மனையைச் சூழ நிறுத்திவிட்டு அரண்மனையைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருந்துவிட்டார்.

அப்போது மன்னரிடம் 2800 படையினர் தான் இருந்தார்கள். எந்த தைரியம் இருந்தால் அவர் இத்தனை சிறிய படையுடன் பிரிட்டனை எதிர்த்து நிற்க முடியும்.

அப்போது பிரிட்டன் இறுதி எச்சரிக்கையை விடுத்தது. அதாவது காலை 9 மணிக்குள் சரணையும்படி சுல்தானுக்கு உத்தரவிட்டது. ஆனால் பர்காஷ் பின்வாங்கவில்லை. சரியாக 9.02 இற்கு பிரிட்டன் போர்க் கப்பல்களில் இருக்கும் பீரங்கிகள் அரண்மையை நோக்கி சுட ஆரம்பித்தன. சில நிமிடங்களிலேயே அரண்மனை பெருத்த சேதத்திற்கு உள்ளானது. என்றாலும் சுல்தானின் படையினர் எதிர்த்துப் போராட முயன்றார்கள். என்றாலும் அதனால் ஒரு மணி நேரத்திற்குக் கூட தாக்குப் பிடிக்க முடியாமல்போனது. பிரட்டன் வென்றது. சுல்தான் பர்காஷ் அரண்மனையின் பின் கதவால் தப்பி ஓடிவிட்டார்.

# 2ஆம் உலகப் போரில் போர் புரியாத பேய்ப் படை



இரண்டாம் உலகப் போரில் போர் புரியாத இராணுவப் படைப் பிரிவு ஒன்றும் இயங்கியது. அதற்குப் பெயர் 'பேய்ப் படை'. உண்மையில் அந்தப் படைப் பிரிவில் படை வீரர்களே இருக்கவில்லை. கலைஞர்களும் பொறியியலாளர்களும் தான் இருந்தார்கள். 1,100 பேரைக் கொண்ட இந்தப் படை இரண்டாம் உலகப் போர் முழுவதும் போர் புரிவது போன்று பாசாங்கு செய்ததைத் தான் பிரதான வேலையாகச் செய்தது.

அதாவது நாஜிப் படை முதற்கொண்டு அச்சுப் படையை போர் களத்தில் தவறாக வழி நடத்துவது தான் இவர்களின் வேலை. அச்சுப் படைக்கு முன்னால் ஒரு பிரமாண்ட படை போல் இவர்கள் பொய்யாக இயங்குவார்கள். பெரிய படை ஒன்று இருப்பது போன்று ஒலி எழுப்புவது, கானரக ஆயுதங்களைப் போன்று போலியான ஆயுதங்களைத் தயாரித்து அவர்களின் காட்சிக்கு வைப்பது போன்ற வேலைகளையே இந்தப் படை செய்தது.

இதனால் நாஜிப் படையினர் தமக்கு முன்னால் பிரமாண்ட படை ஒன்று இருப்பதாக நம்பி பின்வங்கிய சம்பவங்கள் ஏகத்துக்கு இருந்தன. இது உண்மையாக போர் புரியும் நேச நாட்டுப் படைகளுக்கு போர்க் களத்தில் பெரிதாக உதவி இருக்கிறது.



## காட்டர் சொன்ன ஜோக்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் ஜப்பான் சென்றிருந்தபோது கல்லூரி ஒன்றில் உரை நிகழ்த்தினார். இடையில் அவர் கூறிய நகைச்சுவை ஒன்றை அங்கிருந்த மொழிபெயர்ப்பாளர் ஜப்பான் மொழியில் கூறியதுதான் தாமதம் எல்லோருமே வாய்விட்டு சிரித்தார்கள். காட்டருக்கு அதிர்ச்சி தாங்கவில்லை. தான் கூறியதை கச்சிதமாக மொழிபெயர்த்ததாலேயே அனைவராலும் இப்படி உரக்க சிரிக்க முடியும் என்று நினைத்தார். மொழிபெயர்ப்பாளரிடமே அதனை கேட்டார். அதற்கு அந்த மொழிபெயர்ப்பாளர், 'ஜனாதிபதி நகைச்சுவையான கதை ஒன்றை கூறுகிறார் அனைவரும் கட்டாயம் சிரிக்க வேண்டும் என்று நான் பார்வையாளர்களிடம் கூறினேன்' என்றார்.

# ஊதா கலரு ஆப்பிள்



கனடா நாட்டில் பயிரிடப்படும் அபூர்வமான ஊதா நிற அப்பிள் பற்றிய தகவல் அண்மையில் இணையத்தில் வைரலானது. இந்தத் தகவலுடன் பகிரப்பட்ட ஊதா நிற அப்பிள்களின் ஒளிப்படங்கள் கண்ணைக் கவர்ந்தன. இந்த அப்பிள்கள் கனடா நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில், குளிரான சூழலில் விளைபவை எனத் தகவல் சொல்லப்பட்டது. அவ்வளவுதான், ஊதா நிறத்தில் அப்பிளா எனும் ஆச்சரியத்தோடு பலரும் இத்தகவலைப் பகிர்ந்தனர். ஒரு சிலர், இந்த அப்பிள்களைத் தேடி கனடா நாட்டின் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கே படையெடுக்கவும் செய்தனர்.

இப்படி ஊதா நிற அப்பிள் இணையத்தில் பரபரப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்த நிலையில், தோட்டக்கலை வல்லுநர்கள், இப்படி ஒரு அப்பிள் இயற்கையில் கிடையாது என்பதைத் தெளிவுபடுத்தினர். கனடா நாட்டுத் தோட்டக்கலை உரிமையாளர்களும், இப்படி ஒரு ஆப்பிள் இங்கு விளைந்ததே இல்லை எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில், இணையப் பொய்களைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் முன்னோடி இணையதளமான 'ஸ்னோப்ஸ்' (https://www.snopes.com/factcheck/purpleapplessaskatchewan/) இந்த விவகாரம் தொடர்பாக ஆய்வு செய்து, இந்தப் படமும், தகவலும் பொய்யானது எனத் தெரிவித்துள்ளது.

# நூலிழையில் தப்பிய உலகம்



**உலக வரலாற்றில் இதுவரை சோதிக்கப்பட்ட மிகப்பெரிய வெடிகுண்டின் பெயர் ட்சார் பம்பா. பனிப் போர் காலத்தில் 1961 ஆம் ஆண்டு சோவியட் ஒன்றியம் இந்த குண்டை வெடிக்கச் செய்தது. அது ஒரு ஹைட்ரஜன் குண்டு. 1961 ஆம் ஆண்டு வடக்கு ரஷ்யாவின் நொவாயா செம்பலியா தீவுக் கூட்டத்தில் இந்த குண்டை வெடிக்கச் செய்தபோது அதன் தீப்பந்து 1000 கிலோமீற்றருக்கு அப்பாலும் தெரிந்தது. அதாவது எங்கேயோ இருக்கின்ற நோர்வே, கிறீன்லாந்து மற்றும் அலாஸ்காவில் இருந்து கூட இந்தப் பயங்கரத்தைப் பார்க்க முடிந்தது.**

**குண்டு வெடித்தபோது அதன் புகை இரண்டு அடுக்கு குடை போன்று வானில் 67 கிலோமீற்றர் உயரத்துக்கு எழுந்தது. வெடிப்பின் அதிர்வலை பூமியை மூன்று முறை சுற்றிவந்தது. வெடிப்பு இடம் பெற்ற இடத்தில் இருந்து 780 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் வீடுகளிலும் கண்ணாடிகள் உடைந்தன.**

**உண்மையில் இதுவல்ல பயங்கரம், சோவியட் விஞ்ஞானிகள் ஆரம்பத்தில் 100 மெகா தொன் குண்டையே தயாரித்து வெடிக்கச் செய்ய முடிவெடுத்தார்கள். நல்லவேளை அப்படியான குண்டு ஒன்றை விமானத்தில் எடுத்துச் செல்வது சாத்தியமில்லை என்று தெரிந்ததும். பாதி அளவான 50 மெகா தொன் குண்டையே தயாரித்து வெடிக்கச் செய்தார்கள்.**

**ஒருவேளை 100 மெகா தொன் குண்டை தயாரித்து வெடிக்கச் செய்திருந்தால் என்னவாகி இருக்கும்! பெரிதாக யோசிக்கத் தேவையில்லை உலகெங்கும் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தி இருக்கும். அது பூமியின் சூழற்சியையே மாற்றியிருக்கக் கூடும்.**

கருப்பையா: வயலுக்குள்ள என்ன சண்டை அவங்க ரெண்டு பேருக்கும்? ஒருத்தர் வாயைப் பேத்துடுவேன்கிறார் இன்னொருத்தர் காலை ஒடச்சிடுவேன்கிறார்..!

சுப்பையா: ஒண்ணுமில்லங்க 'வாய்க்கால்' சண்டைதான்!



திருடன் 1: டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாம கூட ஒளிச்சி வச்சிட்டோமே..

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்ல வரும்ல அப்ப பார்த்துக்கலாம்.





இந்த ஆபரேஷன் ரொம்ப கஷ்டமானதா டொக்டர்...?

நோ... நோ... டெட் ஈஸி



"என் உயிரைக் காப்பற்றிய நர்சையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

"எப்படிக் காப்பாத்தினா?"

"ஆபரேசன் ரூமிலேயிருந்து பின்வழியா என்னைத் தப்பிச்சிப் போக வச்சது அவதான்!"

"ஹலோ! நாங்க பேங்க்லேர்ந்து பேசறோம், உங்க அக்கவுண்டை பேஸ் பண்ணி உங்களுக்கு 10 லட்ச ரூபாய் வரைக்கும் லோன் சாங்ஷன் ஆகியிருக்கு சார்

அப்படியா! உடனே அந்தப் பணத்தை என்னோட சேவிங்ஸ் அக்கவுண்ட்லயே போட்டுருங்க!

ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும் வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?



சார் ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே என்ன ஆச்சு?

நிதி நிறுவனம்: இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே!





என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?

ஏன் என்ன பண்றாங்க?

நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா.

கார் ஓட்டி பாரேன்.





என்ன சார் செல்போன் வெடின்னு சொன்னீங்க சத்தமே கேட்கல்லே?

சைலன்ஸ் மூட்ல இருந்திருக்கும்...!



தலைவருக்கு சீட் கிடைச்சதும் ஆனந்தத் தாண்டவம் ஆடுறாரே.....!

இலக்ஷன் ரிசல்ட் வந்ததும் அதிர்ச்சி தாண்டவம் ஆடுவார்...



கபாலி... இந்தா வெற்றிலை பாக்கு தட்டில சாவி இருக்கு எடுத்துக்க.... ஏன் இப்படி தாறீங்க

மரியாதையா பீரோ சாவியை தான்னு நீங்க தானே சொன்னீங்க...



டொக்டர் கொன்சல்டேஷன் பீஸ் 100 ரூபா தானே....? எதுக்கு 200 ரூபா கேக்கிறீங்க...?

ஆபரேஷன் பீஸ் தேவையில்லன்னு சொன்னேனே.. அதற்கு கேசன்ல்டேஷன் 100 ரூபா

# ஹாஷிம் உமர் பௌண்டேசனின் மடி கணினி வழங்கல்








ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் மாணவர்களுக்கு மடி கணினி வழங்கும் நிகழ்வின் ஐந்தாவது தொடர் நேற்று 05ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்றது. இதன் போது செல்வி. பீ.எச்.ஆயிஷா பேருவளை, செல்வி கேசவதாஸ் கீர்த்தனாகடவளை, செல்வி. எம்.ஆர்.எஸ்.மனார் அஹ்மட்திஹாரிய, செல்வி. மின்ஹாநிந்தவூர் மற்றும் செல்வி எம்.ஏ.எப்.ரஹுமாநாங் கல்ல ஆகியோர் புரவலர் ஹாஷிம் உமரிடமிருந்து மடி கணினிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், சுயாதீன தொலைக்காட்சி நிறுவன தமிழ்ப் பிரிவு முகாமையாளர் சித்தீக் ஹனீபா ஃ, சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, சமூகஜோதி ரபீக், கட்டார் ஸ்கை அமைப்பின் ஸ்தாபகர் வாஸீத், ஒருங்கிணைப்பாளர் ஆகிப் மொஹம்மத் மற்றும் பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# MSC விளையாட்டு கழகம், நமக்காக நாம் அமைப்புகளின் கௌரவம்

சர்வதேச ஆசிரியர்கள் தினம் மற்றும் சர்வதேச சிறுவர்கள் தினம் ஆகியவற்றை முன்னிட்டு வத்தளை MSC விளையாட்டு கழகம் மற்றும் நமக்காக நாம் அமைப்பு ஆகியன இணைந்து நடாத்திய சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான மாபெரும் கிரிகெட் சுற்றுப்போட்டி வெலிசறை நவலோக மைதானத்தில் 06.10.2024 ம் திகதி நடைபெற்ற போது அறநெறி ஆசிரியர்களையும் சிறுவர்களையும் கௌரவித்தனர்,

வெற்றிபெற்ற தமிழ் யூத் அணிக்கு 100,000/ ரூபாய் காசோலை MSC விளையாட்டுகழகம் மூலம் வழங்கி வைக்கப்பட்டதுடன் அந்த நிதியை வத்தளையில் இயங்கும் நமக்காக நாம் அமைப்பிற்கு வழங்கியதுடன் இந்த நிதி பாடசாலை சிறார்களின் கல்விப்பணிக்காக பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதம அதிதியாக சர்வதேச இந்து மத பீட செயலாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா கலந்து சிறப்பித்தார்.

விஷேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம உதவி ஆசிரியர் கே. ஈஸ்வரலிங்கம் MSC விளையாட்டு கழகத் தலைவர் தேசபந்து அ.கிஷோகுமார் நமக்காக நாம் அமைப்பின் தலைவர் ச.கணேசன், செயலாளர் சொ.மகேந்திரன் ஜேபி, பொருளாளர் கலையழகன், ஒருங்கிணைப்பாளர் இரா. கமலேஸ்வரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.








## ஸ்கை தமிழ் விருது விழாவுக்கு ஹாசிம் உமர் பௌண்டேசன் பிரதான அனுசரணை








ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் பிரதான அனுசரணையில் ஸ்கை தமிழ் விருது வழங்கும் மாபெரும் விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி ஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விருது விழாவில் அகில இலங்கை ரீதியாக பல்வேறு துறைகளில் சாதித்த ஆளுமைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விழாவுக்கு ஹாஷிம் உமர் பவுண்டேஷனினால் வழங்கப்பட்ட காசோலையை ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாசித்துடன் இந்த நிகழ்விற்கு பிரதான ஊடக அனுசரணை வழங்கவுள்ள தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் ஸ்கை தமிழ் உதவி செய்தி முகாமையாளர் அஸ்ரியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# கனடாவில் வெளியாகும் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள்















கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்பட வுள்ளது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகியஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (Scarborough Recreation Centre, 3600 Kingston Rd, Scarborough, ON M1M 1R9)

எதிர்வரும் 3ம் திகதி நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 1600 முதல் 1900 மணி வரை இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது. இந் நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர். இ. பாலசுந்தரம் வழங்குவார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ்பெற்ற வானெலி அறிவிப்பாளர் இளங்குமரன், கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் கா. யோ. கிரிதரன், மற்றும் எழுத்தாளர் திருமதி. சிறி ரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் திரு. லெனி மரியதாஸ் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் . மீரா பாரதி ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் அகனி சுரேஷ் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும், நூலாசிரியரின் ஊடக எழுத்து பற்றி உரையையும் உலகத்தமிழர் ஆசிரியர் கமல் நவரட்ணம் வழங்குவார். கனடாவில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# ஆதவன் வானொலியின் 8வது பிறந்தநாள் விழா..







# அழகியலிலும் கலையிலும் கலக்கி வரும் நிந்தவூர் றியாசா எம். ஸவாஹிர்

**நேர்காணலின் ஆரம்பமாக உங்களைப் பற்றிய தகவல்களை எமது வாசகர்களுக்கு அறியத் தாருங்கள். ?**

நிந்தவூரை பிறப்பிடமாகக் கொண்ட நான் ஒரு பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியை. சிறு பிராயத்திலிருந்தே வரைதலிலும் ஆக்க வேலைகளிலும் மிகை ஆர்வம் இருந்தது. என் தாயார் தைக்கின்ற போது அதை அவதானிப்பதூடாக அதனைக் கற்றுக்கொண்டேன். எனது தாயும் தந்தையும் தையற்கலையில் தேர்ச்சி பெற்றிருந்ததனால் ஆரம்ப நாட்களிலிருந்தே எனக்கு அது சிரமமாக இருக்கவில்லை. தற்போது Cinderella எனும் தையல் பயிற்சி வகுப்புகளை நடாத்திவருகிறேன். கவிதைகள் வாசிப்பதில் எழுதுவதில் ஆர்வமாக இருக்கிறேன்.

**எத்தனை வருடங்களாக இலக்கியத்துறையுடன் தொடர்புபட்டிருக்கிறீர்கள்... உங்களை ஊக்கப்படுத்தியவர்களையும் உங்களது குடும்பம் இலக்கிய குடும்பமா போன்ற விபரங்களைத் தாருங்கள்?**

அழகியலும் கலையும் நாம் இருக்குமிடமெல்லாம் நிறைந்து கிடைக்கிறது. பாடசாலை நாட்களில் தரம் 5 படிக்கின்ற போது எனது கட்டுரை பத்திரிகையில் பிரசுரமாகியது. மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நிகழ்வு ஒன்றிலும் தரம் 10 ல் கலந்து கொண்டிருக்கிறேன். என் ஆற்றலை வளர்த்தெடுத்ததில் எனது தாய்ப் பாடசாலை கமு/ கமு_ அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலைக்கும் எனது ஆசிரியர்களுக்கும் நிறைந்த பங்குண்டு. எனது தாய் எனக்கு நிறைந்த ஊக்கம் தருபவர். தற்போது கணவர் நிறைந்த சுதந்திரத்தை எனது எழுத்துகளிற்குத் தந்திருக்கிறார். எனது வெற்றிகளைக் கொண்டாடி ஊக்கப்படுத்துவார்.





நான் கல்வி கற்ற பாடசாலையிலேயே 14 வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றியிருக்கிறேன். அங்கிருந்த எனது சக ஆசிரியத்தோழமைகள் எனக்கு மிகுந்த ஊக்கம் தந்தவர்கள்.

எனது மூத்த சகோதரர் சிறப்பாகப் பாடக்கூடியவர்.

**பயிற்றப்பட்ட சித்திரக் கலை ஆசிரியராக எத்தனை வருடங்கள் எந்த பாடசாலையில் பணியாற்றுகிறீர்கள்?**

20 வருடங்களாக பணியாற்றுகிறேன். நாம் ஓடியாடிப் பயின்ற பாடசாலையில் ஒரு ஆசிரியையாக பணிபுரிவது ஒரு இனிமையான அனுபவம். நமது பூர்வீகத்தைக் கொண்டாடி தாய்மடியில் புரள்வது போன்றது அது. எனது தாய்ப் பாடசாலையில் பணியாற்றிய பின் தற்போது கமு/ கமு_இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் கடமையாற்றுகிறேன்.

**ஒரு சித்திரம் பல ஆயிரம் வார்த்தைகளுக்கு சமம் இல்லையா...இது சம்பந்தமாக மாணவர்களுடனான உங்களது அனுபவங்களை கூறுங்கள்?**

சித்திரப் பாட ஆசிரியையாக இருப்பது இதமானது. மாணவர்களுக்கு மிகுந்த அழுத்தமற்ற, மகிழ்வான பாடம் அது. நிறங்களோடு விளையாடும் நேரம். தனது மனத்தின் எண்ணங்களை சுதந்திரமாய் வரையவிடுவது. வெள்ளைக்காகிதத்தில் நிறமூற்றி நாம் பூக்கள் செய்யும் மகிழ்வு அது. தற்போது முன்னர் போலல்லாது பாடத்திட்டத்தின் நயத்தல் பகுதியிலும் நிரம்பத் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நுழைவிற்கும் கூடுதலான வாய்ப்பினை பெறக்கூடியத்க உள்ளது. தனது சூழலை நுட்பமாக கலைசார்ந்து நேசிக்கக் கூடிய, மற்றவர் ஆக்கங்களை மதிக்கக் கூடிய பண்புகளை சித்திர மாணவர்கள் வளர்த்துக்கொள்கிறார்கள்.

அத்தோடு வாழ்வியலுக்குத் தேவையான அழகியல் உணர்வையும் சித்திரப்பாடம் மேம்படுத்துகிறது.

**கிராபிக்ஸ் எனிமேஷன் என்றாலே சிலர் மாயாஜாலம் என்று நினைப்பதுண்டு. த த்ரூபமான சித்தரிப்பு கூட கிராபிக்ஸ் உதவும் இல்லையா... உங்கள் சித்திரங்கள் கிராபிக்ஸ் உடன் சம்பந்தப்பட்டதாக இருக்கிறதா விளக்குங்கள்?**

தற்போது கணணியின் வளர்ச்சியில் ஓவியத்துறையில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. கணணியின் மூலம் சித்திரங்கள் வரையப்படுகின்றன. அண்மையில் செயற்கை நுண்ணறிவானது ஓவியனின் சிந்தனையை உள்வாங்கி சித்திரங்களை வடிவமைத்துத் தருகின்றது. இங்கு ஓவியனின் திறமை கேள்விக்குறியாவதும் வலுவிழந்து போவதும் தவிர்க்க முடியாதுள்ளதோடு ஓவியன் தனது திறனை வேறொரு தளத்திற்கு நகர்த்தியாக வேண்டிய சவாலிற்கும் ஆளாகிறான்.

எமது பாடத்திட்டத்தில் கிரபிக் சித்திரம் வர்த்தக நோக்கமான உற்பத்திப் பொருட்களை திட்டமிடும் தேர்ச்சியை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொழில் உலகுக்கு மாணவரைத் தயார் படுத்தக் கூடியது. இதனை கணணி மூலமாகவே நாங்கள் கற்பிக்க வேண்டி இருப்பதனால் வளம் குன்றிய பாடசாலைகளில் அது சாத்தியமற்றதாகிறது.

**கவிதை இலக்கியகலையின் அரசி என்பர். இலக்கிய அடக்கத்தில் நீங்கள் கவிதைகளுக்கு அதிகம் முன்னுரிமை கொடுக்கிறீர்களா...உங்களது கவிதை எந்த வகையைச் சார்ந்தது..?**

நிச்சயமாக. ரசனைதான் நம் வாழ்வை மினுங்கச் செய்கிறது, உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. மொழியின் ரசனை கவிதை. கவிதை முந்தியது. " காட்டுவாசி ஒருவன்



கொட்டிய பறையில் கவிதை தோன்றியிருக்க வேண்டும்" என்பர். கவிதை, மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப் பாடல்களாக தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். சிறந்த கவிதை அழகுணர்ச்சியையும் உணர்ச்சிப் பான்மையையும் சாந்தி செய்யும் அருமையான திரவியம். அழகும் நேர்த்தியும் கொண்டது கலை. அதில் தனித்துவமான மிகை அழகும் பொலிவும் சுவையும் உடையது கவிதை.

புதுக்கவிதையின் தோற்றப்பாடு மனவெழுச்சியை மனதின் சுவையை அனுபவத்தை வடிக்கத் தோதாக இருக்கிறது.

‘ஓவியம் பேசாத கவிதை
கவிதை பேசுகின்ற ஓவியம் ‘என்றொரு வார்த்தை உண்டு

**இன்றைய கவிதையில் சொற்களின் ஓசை, ஒழுங்குமுறை, சந்தம் பிசகாத அடிகள் என்று நீங்கள் விரும்பி வாசித்த கவிதைகள் எவை....அவை எந்த படைப்பாளியினது கவிதைகள்.?**

யாப்பிலக்கணம் கவனித்து வார்த்தைகளோடு கவிதையின் லட்சணங்கள் சேர்த்துப் பின்னுவது எல்லாமே கவியாகாது. உள்மனதின் உணர்ச்சி உத்வேகம் வரிகளுக்குள் ஜீவசக்கியாய் ஈரலித்துக் கிடக்க வேண்டும். மகிழ்வாகவோ துக்கமாகவோ நம்மை ஈர்த்த ஒரு விடயத்தை அல்லது நம் மனதின் தவிப்பினை கவிதையாய் வடிக்கின்ற போது அது பார்ப்பவர் மனதில் ஒரு பரவசத்தை ஒரு அதிர்வை ஏற்படுத்த வேண்டும். படைப்புகள் ஏதாவது ஒரு சேதி சொல்ல வேண்டும்.

மொழிபெயர்ப்புக் கவிதைகள் அதிகமாக வாசிப்பேன்.

நிரம்பக் கவிதைகள் பிடிக்கும்

அண்மையில் படித்த கவிஞர் சச்சிதானந்தன் அவர்களின் கவிதை ஒன்றினைப் பகர்கிறேன்.

நினைவில் காடுள்ள மிருகத்தை
எளிதாகப் பழக்க முடியாது
அதன் தோலில்
காட்டுச் சதுப்பு நிலங்களின் குளிர்ச்சி
அதன் மயிர்க் கால்களில்
காட்டுப் பூக்களின் உக்கிர வாசனை
அதன் கண்மணிகளில்
பாறைகளில் வழுக்கி விழும்
காட்டுச் சூரியன்
அதன் வாயில்
காட்டாறுகள் கர்ஜிக்கின்றன
அதன் நாவில்
காட்டுத்தேன் எரிகின்றது
அதன் செவிகளில்
அடவிகளின் மேகங்கள்
முழங்குகின்றன
அதன் இரத்தத்தில்
காட்டானைகள் பிளிறுகின்றன
அதன் இதயத்தில் காட்டு நிலாக்கள் பூக்கின்றன
அதன் சிந்தனைகள்
காட்டுப் பாதைகளில் குதித்தோடுகின்றன
நினைவில் காடுள்ள மிருகத்தை எளிதாகப் பழக்க முடியாது
என் நினைவில் காடுகள் இருக்கின்றன.

**விமர்சனம் இல்லாத கலையும் இலக்கியமும் உயிர்ப்பற்றதாகிவிடும் இல்லையா...விமர்சனம் அத்தியவசித் தேவை. நீங்கள் எந்த வகையான படைப்புகளை விமர்சனம் செய்து வருகிறீர்கள்.**

**உங்கள் படைப்புகளும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளதா...?**

முதலில் படைப்பாளிகளை நாம் வரவேற்க வேண்டும் சட்டென்று கடக்காமல் நின்று ரசிக்கும் கலைமனதைக் கொண்டாட வேண்டும். படைப்புகளை நாம் ஒரு இலக்கியவாதியாக மட்டுமன்றி ஒரு வாசகனாகவும் பார்க்கவேண்டும். "வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' என்றால் வாசகனைப் பூரணமாக்கும் பொறுப்பு எழுத்தாருக்குரியது.



**நேர்காணல் பாத்திமா நளீரா**

# கம்மல்துறை அல்–பலாஹ்வில் 'மீண்டும் பாடசாலைக்கு' (back to school)







கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் பழைய மாணவர்கள் கலந்து கொண்ட ' மீண்டும் பாடசாலைக்கு' (back to school) ஆண்களுக்கான நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை

நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.யூ. பாயிஸ் (நளீமி) மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். முன்னாள் அதிபரான ஏ.எஸ்.எம். முஹம்மத் அதிபராகப் பொறுப்பேற்றார். பெண்களுக்கான 'மீண்டும் பாடசாலைக்கு' நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வுகளுக்கு முன்னாள் அதிபர் எம்.எஸ். எம். முனவ்வர் பொறுப்பேற்றார்.

பாடசாலை காலை கூட்டம் நடைபெற்றபோது பழைய

மாணவர்கள் அனைவரும் 'அகிலமாய் ஜோதியே'என்ற பாடசாலை கீதத்தை இசைத்தார்கள்.

முன்னாள் அதிபர் ஏ.எஸ். எம். முஹம்மத் மற்றும் ஆசிரியர்களான சக்கரியா, இர்ஷாத் ஆகியோர் இந்த நிகழ்விலே உரை நிகழ்த்தினார்கள்.

பழைய மாணவர்கள் வகுப்பறைகளில் ஒன்றுகூடி சுவாரஸ்யமான பழைய நினைவுகளை மீட்டி மகிழ்ந்தனர்.

குழுக்களாக இணைந்து பாடசாலைச் சுற்றாடலை தூய்மைப் படுத்தினர்.

நான் அ, ஆ எழுதக் கற்றுக் கொண்ட அந்த பழைய பாடசாலை கட்டடத்துக்குள் நுழைந்தபோது எனக்குள் ஒருவித இன்ப அதிர்வலைகள்.

மனதுக்குள் மகிழ்ச்சி வெள்ளம் மின்சாரம் போன்று பாய நான் நீண்ட நேரம் அந்தப் பாடசாலைக் கட்டடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆம். அங்குதான் எனது ஐந்தாம் வயதில் ஒரு தமிழ் ஆசிரியை என் விரல்களைப் பற்றி தமிழ் அரிச்சுவடி அ, ஆ எழுத்துக்களை





எழுதப் பழக்கினார். இப்பாடசாலையின் பழைய மாணவர் எம். ஜே.எம். தாஜுதீன் தலைமையில் நடைபெற்ற மாணவர் மன்றத்தில் பல்சுவை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

தோப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை அதிபர் எம். சி. இர்ஷாத் மற்றும் அறிவிப்பாளர் சல்மான் ஆகியோர் நிகழ்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.

எமது எதிர்கால கனவுகள் என்ற தலைப்பில் பாடசாலையின் முக்கிய தேவைகள் வீடியோ திரைகள் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இத்தேவைகளை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதியளித்து பல மாணவர் குழுக்கள் அவற்றைப் பொறுப்பேற்றனர்.

நிகழ்ச்சி முடிவில் முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோருக்கு பழைய மாணவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்த நிகழ்வில் அனைவருக்கும் நன்றி தெரிவித்து இறுதியாக உரையாற்றிய பிரதி அதிபர் M.M. சதீஸ்கான், எதிர்காலத்தில் இப்பாடசாலை ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் அதன் காரணமாக பல பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றும் கூறினார். அதற்காக பழைய மாணவர்களும் பெற்றோர்களும், தனவந்தர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க உறுதி கொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

–எம்.ஜே.எம். தாஜுதீன்

# அழகியலிலும் கலையிலும்...

*(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

விமர்சனம் படைப்பின் நுண்தளத்தைச் சுட்டிக்காட்டி மற்றவர்களுக்கான புரிதலை இலகு செய்கிறது. மற்றும் குறித்த ஒரு பிரதி மீதான பல விமர்சனங்கள் படைப்பின் மீதான பலகோணப் பார்வைகளை முன் வைக்கின்றன. விமர்சனத்தின் நோக்கம் எழுத்தாளனுக்கு ஆலோசனை கூறுவதோ சாடுவதோ சரி பிழை காண்பதோ அல்ல. தான் இன்னும் மேம்பட வேண்டும் என நினைக்கின்ற எழுத்தாளன் விமர்சனங்களை வரவேற்கிறான்.

நான் சில கவிதை நூல்கள் சிறுகதைகள் விமர்சனம் செய்திருக்கிறேன்.

எனது படைப்புகள் விமர்சனத்திற்குள்ளாகி இருக்கின்றன. ஆரம்பப் பிரதியை நன்கு செப்பனிடும் பயிற்சியை தந்திருக்கின்றன. என்னை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியிருக்கின்றன. விமர்சனங்களை வரவேற்கிறேன்.என் படைப்புகளை விமர்சித்து என்னை மேம்படுத்திய தோழமைகளுக்கு அன்பான நன்றி சொல்கிறேன்.

**கலைகளுக்குள் சிறந்த கலை தையற்கலை எனலாம். அதில் நீங்கள் தேர்ச்சியும் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் என்ன மாதிரியான வகுப்புகளை நடாத்துகிறீர்கள். ?**

தங்களுக்குத் தேவையான ஆடைகளை தாங்களே வடிவமைத்துக் கொள்வது கூந்தலில் இன்னொரு பூவைச் சூடிக் கொள்வது போல அழகானது. ஆடைத்தெரிவிலும் மற்றவர்களிடம் கொடுத்து எமது ஆடைகளைத் தைப்பதிலும் பல சிரமங்களைக் காண்கிறேன். நாம் அன்றாடம் அணிகின்ற ஆடைகளைத் தைக்கப் பயின்றாலே போதுமானது.

தையல் இயந்திரம் பற்றிய அறிமுகமே இல்லாத மாணவர்களும் தையல் வகுப்பிற்கு வருகிறார்கள். இந்தப் பயிற்சி நெறி மூன்று மாத காலத்திற்குரியது. இதில் ஆடைகளை வெட்டித் தைக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது. சில மாணவர்கள் தையலை தொழிலாகச் செய்யுமளவிற்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பது இவ் வகுப்புகளில் எனக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

**பெண்களின் ஆளுமைகள் புரட்சி கருத்துக்கள் சிலநேரம் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. பல விமர்சனங்கள் தலையெடுக்கிறது. இதற்கு என்ன காரணம் மரபுவழி வந்த பண்பாடா அல்லது இப்படிப்பட்ட மாற்றங்களை விரும்புவதில்லையா... அல்லது சமூகம் இன்னமும் பெண் விடயத்தில் பக்குவப்படவில்லையா....?**

இந்த வினாவிலிருந்து பெண்களின் ஆளுமை விருத்தியினை அறிந்து கொள்ள முடிகிறது. ஒப்பீட்டளவில் கல்விப் பெறுபேறுகளிலும் தொழில் நிறுவனங்களிலும் பெண்களின் எண்ணிக்கையே அதிகம். குடும்ப நிர்வாகம் தலைமைத்துவம் என்பவற்றில் கூட பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாகிறது. குடும்ப பொருளாதார அமைப்பில் கூட பெண்ணின் பங்களிப்புண்டு. இவை அனைத்தும் சமூகத்தில் பெண்ணின் தேவைப்பாட்டையே உணர்த்துகின்றன. இத்தனை தேவைப்பாடுடைய பெண் அவசியம் ஆளுமை மிக்கவளாகத் திகழ வேண்டும். பெண்களின் வகிபாக முக்கியத்துவத்தையும் அதனை இன்னும் கூர்மைப்படுத்த வேண்டிய அவசியத்தையும் அழுத்தமாய் உணர்த்தவே மகளிர் தினம் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப் படுகிறது.

அதேவேளை சங்க காலம் தொட்டு பெண்ணை ஒரு பதுமையாக நம் பண்பாடும் கலாச்சாரமும் சித்தரித்து வருகிறது. புரட்சிகரமான கருத்துகளை ஆளுமை மிக்க ஆண்கள் முன்வைக்கின்ற போது கொண்டாடி வரவேற்கும் அதே நேரம் பெண் ஆளுமையை மலிவானதாகவும் குறைபாடுடையதாகவும் பண்பாட்டு மீறலாகவும் சித்தரிக்கின்றது. பெண் ஆளுமைகளின் எழுச்சிகள் மேம்படுகின்ற போது ஆண் ஆளுமைகள் வீழ்த்தப்படுவதாக அல்லது பெண் தனக்கு கட்டளையிடுபவளாகப் பரிணமிப்பதாய் அர்த்தப்படுத்தப்படுகிறது.

பெண் தனது ஆளுமையினை நிலைநாட்டுகின்ற போது பல கட்டுடைப்புகள் நிகழ்கின்ற.

இன்னும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண் தனது பாதுகாப்பு வலையத்தை விட்டு வெளியேற வேண்டி இருப்பதனால் பல ஆபத்துக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி இருக்கிறது.இதற்கு எதிராக ஆண்களை மட்டும் காரணம் காட்டாது கலாச்சாரம் பண்பாடு சமூக பொருளாதார அரசியல் உடலியல் காரணிகளையும் கூறலாம்

அத்தோடு ஒரு பெண் ஒரு விடயத்தை முன்வைக்கின்ற விதமும் அதற்கான அங்கீகாரத்தைத் தீர்மானிக்கின்றது எனலாம்.

**உங்களது படைப்புத் தொகுதிகள் ஏதேனும் வெளிவந்துள்ளனவா...உங்களுக்கு கிடைத்த விருதுகள் ...,மேலும் இன்றைய விருதுகளின் தனித்துவம் எப்படியுள்ளது?**

இதுவரை எனது படைப்புகளைத் தொகுதியாக்கவில்லை. எனது கவிதைத் தொகுதி விரைவில் வெளிவர இருக்கிறது. விருதுகள் படைப்பாளிகளை ஊக்கப்படுத்துவதாக இருந்தாலும் அதில் பல்வேறு அரசியல்கள் இல்லாமலில்லை. எனது படைப்புகள் ஒரு வாசகனில் ஏற்படுத்துகின்ற திருப்தியையே நான் விருதாகக் கருதுகிறேன்.

**அடுத்த கட்ட நகர்வாக உங்களது முயற்சிகள் எதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும். ...நேர்காணலின் இறுதியாக மேலும் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

சிறந்த படைப்புகள் என்னிடமிருந்தும் வரவேண்டும் எனும் தவிப்பு என்னுள் நிரம்ப இருக்கிறது. இறை உதவியுடன் அது நிகழும் என நம்புகிறேன்.

இறுதியாக செந்தூரம் இதழுக்கு நன்றி. புதிதாக இலக்கிய உலகிற்குள் வருபவர்களை மகிழ்வாய் வரவேற்று அனைவரும் ஊக்கப் படுத்துவோம். நிறைந்த வாசிப்பு அனைவர்க்கும் அவசியம். வாழ்வை மகிழ்வாய்க் கொண்டாடுவோம்.



## வேட்டையன் படத்தில் அமிதாப் பச்சனுக்கு ரூ 6 கோடி

ஜெயிலர் என்ற சூப்பர் ஹிட் படத்துக்குப் பிறகு ரஜினிகாந்த் த செ ஞானவேல் இயக்கிய வேட்டையன் படத்தில் நடித்து முடித்துள்ளார். படத்தில் துஷாரா விஜயன், ரித்திகா சிங், மஞ்சு வாரியர், ராணா டகுபதி, பஹத் பாசில் மற்றும் அமிதாப் பச்சன் ஆகியோர் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்க, எஸ் ஆர் கதிர் ஒளிப்பதிவு செய்யும் இந்த படத்தை லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. சமீபத்தில் டீசர் மற்றும் டிரைலர் ஆகியவை வெளியாகிக் கவனம் ஈர்த்துள்ளன. படத்தின் ரிலீஸ் வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில் படத்தில் நடித்துள்ள பாலிவுட் சூப்பர் ஸ்டார் நடிகர் அமிதாப் பச்சனின் சம்பளம் எவ்வளவு என்பது பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி அமிதாப் பச்சனுக்கு 6 கோடி ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாம். இது பாலிவுட் படங்களில் நடிக்க அவர் வாங்கும் சம்பளத்தை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

34 ஆண்டுகளுக்குப் பிறகு ரஜினிகாந்துடன் இந்த படத்தில் அமிதாப் பச்சன் இணைந்து நடித்துள்ளார். மேலும் அமிதாப் பச்சன் முதல் முதலாக நடிக்கும் ஒரு தமிழ்ப் படம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

## நான் எந்த போட்டியிலும் இல்லை மெய்யழகன் அரவிந்த்சுவாமி



கார்த்தி மற்றும் அரவிந்த்சுவாமி நடிப்பில் இயக்குனர் பிரேம்குமார் இயக்கியுள்ள மெய்யழகன் செப்டம்பர் 27 ஆம் திகதி உலகம் முழுவதும் ரிலீஸானது. ரிலீஸுக்கு முன்பே இந்த படத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது. படம் வெளியானதில் இருந்து ரசிகர்கள் மத்தியில் பாசிட்டிவ்வான விமர்சனங்களை பெற்று வருகிறது.

ஆனால் படத்தின் மீதான விமர்சனமாக வைக்கப்பட்டது படத்தின் நீளமும், இரண்டாம் பாதி கதையை விட்டு விலகி செல்வதும்தான். அதையடுத்து படத்தின் நீளம் 18 நிமிடம் அளவுக்குக் குறைக்கப்பட்டு இப்போது கணிசமான திரைகளில் ஓடிவருகிறது.

இந்நிலையில் சமீபத்தில் படத்தின் சக்ஸஸ் மீட் நிகழ்ச்சி நடந்தது. அதில் பேசிய அரவிந்த்சுவாமி “இந்த படத்தில் கார்த்தியின் நடிப்புப் பாராட்டப்பட்டதில் எனக்கு மகிழ்ச்சி. இயக்குனர் கேட்டதைதான் நானும் கார்த்தியும் கொடுத்தோம். நான் மற்றவர்களுக்கு போட்டியாக நடிப்பதில்லை. நான் அதிகமாகப் படங்களில் கூட நடிப்பதில்லை. அது உங்களுக்கே தெரியும். செய்யும் வேலையை ரசித்து செய்யவேண்டும். இதுபோன்ற ஒரு அழகிய சூழலில் வேலை செய்ய வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

## நடிகை சோனா வீட்டில் திருட முயன்ற இருவர் கைது

கவர்ச்சி நடிகை சோனா வீட்டில் கத்தியை காட்டி பயமுறுத்தி திருட முயன்ற இரண்டு நபர்களை காவல் துறையினர் கைது செய்து, அவர்களிடம் விசாரணை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல கவர்ச்சி நடிகை சோனா, சென்னை மதுரவாயல் அருகே உள்ள வீட்டில் வசித்து வரும் நிலையில், கடந்த சனிக்கிழமை திடீரென அவரது வீட்டில் இரண்டு மர்ம நபர்கள் உள்ளே புகுந்து, கத்தியை காட்டி அவரை மிரட்டியதாக புகார் அளிக்கப்பட்டது. சோனாவின் வீட்டில் அவர்கள் திருட முயன்றதாகவும், ஆனால் சோனா அலறியதை அடுத்து அக்கம் பக்கம் ஆட்கள் வந்ததால் திருடர்கள் தப்பிச் சென்று விட்டதாக கூறப்பட்டது. இது குறித்து அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, சிசிடிவி காட்சிகளின் மூலம் விசாரணை செய்தனர்.

## ஊதியம் வாங்காத ரேவதி!

சமூகத்துக்கு விழிப்புணர்வு தரும் படங்களை மட்டுமே இயக்க வேண்டும் என்கிற கொள்கை கொண்டவர் ரேவதி. அதே நோக்கம் கொண்ட படங்களுக்கு உதவவும் தயங்க மாட்டார்.

‘டபுள் டக்கர்’ படத்தின் மூலம் கவனம் பெற்றவர் தீரஜ். மனோகரன் பெரிய தம்பி இயக்கத்தில், அவர் அடுத்து நடித்துள்ள படம் ‘பிள்ளையார் சுழி’. அதில் முக்கிய கதாபாத்திரம் ஏற்றுள்ள ரேவதி, இப்படத்தில் நடித்தற்காக ‘ஒரு ரூபாய் கூட ஊதியம் வாங்கமாட்டேன்; இப்படத்தில் நடிப்பது என் கடமை’ எனக் கூறி மறுத்துள்ளார். தீரஜ், அபிநயா, மைம் கோபி உள்ளிட்ட பலருடன் 7 வயது ஆட்டிசக் குழந்தையான உன்னி கிருஷ்ணன் நடித்திருக்கிறார். படம் குறித்து தீரஜ் கூறும்போது, “நான் இதய அறுவை சிகிச்சை நிபுணராக இருக்கிறேன்.

நான் சினிமாவில் நடிக்க வந்தது பணம் சம்பாதிக்க அல்ல. மாறாக நல்ல கதைகளில் நானும் என்னை ஈடுபடுத்திக்கொள்ளும் ஒரு கலைஞனாகப் பெயர் பெற விரும்புகிறேன்.


இன்றைக்கு மாற்றுப் பாலினத்தவர் பற்றி மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு மகத்தானது. ஆனால் ஆட்டிசக் குழந்தைகள் குறித்த விழிப்புணர்வு அதுபோன்ற குழந்தைகளைப் பாதுகாத்து அன்பு செலுத்தும் பெற்றோர்களுக்கு இல்லை, பொதுச் சமூகத்துக்கும் இல்லை. அதற்கு ‘பிள்ளையார் சுழி’ போடும் படைப்பு இது.

இப்படத்தில் எனது மகனை அடிப்பது போல் காட்சி. நான் முடியாது என்று இயக்குநரிடம் மறுத்தேன். ஆனால், உண்மையாக அடிக்க வேண்டும் என்று இயக்குநர் என்னை வற்புறுத்தினார். குழந்தையை அடித்து விட்டு நான் பல நாள் அழுதேன். ரேவதியின் பங்களிப்பு இந்தப் படத்தை உயர்த்திவிட்டது” என்றார்.





## மாளவிகா மோகனனின் ஆதங்கம்



ஈரானிய இயக்குனர் மஜித் மஜிது இயக்கிய பியாண்ட் தி கிளவுட்ஸ் படத்தின் மூலம் நல்ல அறிமுகம் பெற்ற மாளவிகா மோகனன், அதன் பிறகு தமிழில் மாஸ்டர், பேட்ட, மாறன் மற்றும் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்ற தங்கலான் ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தங்கலான் படம் வெளியான போது மாளவிகா நடித்திருந்த ஆரத்தி கதாபாத்திரம் ரசிகர்களைக் கவர்ந்து பாராட்டுகளைப் பெற்றுத்தந்தது. ஆனால் தங்கலான் படம் மிகப்பெரிய வெற்றியைப் பெறும் என எதிர்பார்த்த நிலையில் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. மாளவிகா இப்போது தென்னிந்திய மொழிகள் மட்டும் இல்லாமல் பாலிவுட் படங்களிலும் நடிக்கத் தொடங்கியுள்ளார்.

சமீபத்தில் அவரளித்த ஒரு நேர்காணலில் “நடிகர்கள் நவீன நாடோடிகள் போன்றவர்கள். ஒரு நாள் எங்கோ ஒரு நகரத்தில் ஷூட்டிங் இருக்கும். அடுத்த நாள் ஏதோ ஒரு சிறிய கிராமத்தில் நடக்கும். இதற்காக நடிகர்கள் அந்த இடத்துக்கு ஏற்ற மாதிரி தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். உணவு, வானிலை அந்த பகுதிகளின் விதிகள் என அனைத்தையும் மாற்றிக் கொள்ளவேண்டும். ஒரு படம் ஓடினால் அதன் பாராட்டுகள் எல்லாம் ஆண் நடிகர்களுக்கு செல்கிறது. ஆனால் படம் ஓடவில்லை என்றால் பெண் நடிகர்களை அதற்குக் காரணமாக காட்டி விடுகிறார்கள்” எனக் கூறியுள்ளார். மாளவிகா மோகனனின் ஆதங்கம்



## கர்ணனாக சூர்யா

நடிகர் சூர்யா தற்போது சிறுத்தை சிவா இயக்கும் கங்குவா படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படம் நவம்பர் 14 ஆம் தேதி ரிலீஸாகவுள்ள நிலையில் அடுத்து அவர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். இதை முடித்ததும் அவர் ஆர் ஜே பாலாஜி இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார்.

இதற்கிடையில் சூர்யா, பாலிவுட் இயக்குனர் ராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ரா இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க உள்ளதாக சொல்லப்பட்டது.

மகாபாரத கதையை மையப்படுத்தி உருவாகும் கர்ணா என்ற இந்த படத்தில் சூர்யா கர்ணனாக நடிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளது. மிகப்பிரம்மாண்டமாக பேன் இந்தியா படமாக உருவாகும் இந்த படத்தில் கதாநாயகியாக ஜான்வி கபூர் நடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது.இதுவரை இந்த தகவல் உறுதிப்படுத்தப் படாததாக இருந்த நிலையில் இப்போது அதை இயக்குனர் ராகேஷ் மெஹ்ரா உறுதிப்படுத்தியுள்ளார். சமீபத்தில் அவர் அளித்த ஒரு நேர்காணலில் “என்னுடைய அடுத்த படத்தில் சூர்யா நடிக்கிறார்” எனக் கூறியுள்ளார்.

## ஒரு நல்ல நகைச்சுவை படமாகவும் முகம் காட்டும் இதுவொரு கல்யாண விருந்து!

வானம் கொட்டட்டும்’, ‘படைவீரன்’ ஆகிய கவனத்துக்குரிய படங்களைத் தந்தவர் தனா. அடிப்படையில் சிறுகதை எழுத்தாளரான இவர், எழுதி, இயக்கி, விஜய் ஆண்டனி நடிப்பில் உருவாகியிருக்கும் ‘ஹிட்லர்’ திரையரங்குகளில் வெளியாகும் நிலையில் அவருடன் உரையாடியதிலிருந்து ஒரு பகுதி:

மணிரத்னத்தின் உதவியாளர் நீங்கள். உங்கள் திரைப்படங்களில் உள்ள கிராமம் மணிரத்னம் உருவாக்கும் கிராம வெளியிலிருந்து முற்றிலும் வேறொன்றாக இருக்கிறது.. இயக்குநர் மணி ரத்தினத்திடமிருந்து சினிமா என்கிற கலை வடிவத்தைத்தான் கற்றுக்கொள்ள முடியும். அவருடைய படைப்பு மனநிலையை காப்பி அடிக்க முடியாது. திரைக்கு எப்படிக் கதை சொல்ல வேண்டும், அதற்கு எப்படித் திரைக்கதை அமைக்க வேண்டும் என்பது உள்பட சினிமா பற்றி அவரிடம்தான் கற்றுக்கொண்டேன். ஆனால், எனது படம் என்பது என்னுடைய படைப்பு மன நிலையாகத்தானே இருக்க முடியும்.

உங்களுடைய ‘படை வீரன்’ தலித் பிரச்சினைகளைப் பேசிய படம். அது விமர்சகர்களின் பாராட்டைப் பெற்ற அளவுக்கு வரவேற்பு பெறாமல் போய்விட்டதே. இயக்குநர்கள் மாரி செல்வராஜ், பா.இரஞ்சித் இருவரும் தங்கள் வாழ்க்கையின் வலிகளைச் சொந்த அனுபவங்களிலிருந்து பதிவு செய்தார்கள். அதேபோல் தான் நானும் எனது வாழ்க்கையின் வலியை அதில் பதிவு செய்தேன். ஆனால் அது தெற்கத்தித் தமிழ்நாட்டின் பதிவு. தலித் பிரச்சினையை இந்தப் பக்கம் நின்று பேசிய படம் அது. அந்தப் படத்தைப் பார்த்த தனுஷ் மிகவும் பாராட்டினார். மக்களைச் சென்றடைந்த ஒரு ஹீரோ இல்லாதது, இன்னும் பல காரணங்களால் கவனம் பெறாமல் போய்விட்டது.

‘வானம் கொட்டட்டும்’, ‘படை வீரன்’, ‘ஹிட்லர்’ மூன்றும் மூன்று விதமான படங்கள். இது நீங்கள் திட்டமிட்டே செய்ததா? அடிப்படை யில் நான் ஒரு பார்வையாளர் அப்படித்தான் சினிமாவைப் பார்க்கிறேன். எனக்குக் கமல் படமும் பிடிக்கும், ரஜினிகாந்த் படமும் பிடிக்கும். ஒரே மாதிரியான படங்கள் எடுக்கும் அளவுக்கு நான் இன்னும் வளரவில்லை என்றே நினைக்கிறேன்.

ஒரு சிறுகதை ஆசிரியராக சினிமாவை எப்படிப் பார்க்கிறீர்கள்? சிறுகதை ஆசிரியராக அதனுடைய கடைசிப் பாராவில் தான் அந்தக் கதை இருப்பதாக நான் நம்புகிறேன். இந்தப் பயிற்சி எனக்கு சினிமாவை அணுகுவதற்கு உதவியாக இருந்தது. சினிமா என்கிற வடிவத்தை ஒரு சிறுகதையைப் போலவே அணுகுகிறேன். சினிமாவுக்கான திரைக் கதையை அமைப்பதில் சிறுகதை எழுதிய பயிற்சி எனக்குக் கை கொடுத்தது. அதைப்போல் சிறு கதையும் நாவலும் வாசகரிடம் பெற முடியாத ஓர் இடத்தை சினிமாவால் வெகு எளிதாகப் பெற முடியும் என்பதையும் நான் உணர்ந்தேன்.

ஹிட்லர் ஓர் அரசியல் த்ரில்லர் படமா? ஹிட்லர் படம் ஒரு கல்யாண விருந்து போன்றது. இதை ஒரு நல்ல த்ரில்லர் படமாக உணர முடியும். இதில் ஒரு நல்ல காதல் கதையைப் பார்க்கலாம்.



## பூனம் பாஜ்வாவின் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஆல்பம்!

ஒரு காலத்தில் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்தவர் பூனம் பாஜ்வா. சமீபகாலமாக படவாய்ப்புகள் ஏதுமின்றி சிறு சிறு வேடங்களில் தலைகாட்டி வந்தவர் திடீரென உடல் எடை கூடி பருமனாக தோற்றமளித்ததால் அந்த வாய்ப்பும் கிடைக்காமல் போக பிறகு கவர்ச்சியில் தாராளம் காட்ட ஆரம்பித்தார்.

இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை, பட வாய்ப்புகளும் உருப்படியாக ஏதும் அமையவில்லை.இருந்தாலும் அம்மணி தொடர்ந்து ஏதேதோ செய்து முயற்சித்து வருகிறார். அந்த முயற்சியின் ஒருபகுதியாக, சமீபகாலமாக இவர் எடுத்துள்ள ஆயுதம் தான் கவர்ச்சி. எந்தவித தடையுமின்றி கவர்ச்சிக்கு தாராளம் காட்டிவரும் அம்மணி தற்போது தனது இன்ஸ்டாகிராமில் தொடர்ந்து புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார்.

அவரின் புகைப்படங்களுக்காகவே ஒரு ரசிகர் பட்டாளத்தை உருவாக்கியுள்ளார். இந்நிலையில் இப்போது கிளாமரான ஆடையணிந்து அவர் வெளியிட்டுள்ள இன்ஸ்டாகிராம் போட்டோஷூட் புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகியுள்ளன.



# பரீட்சையில் பிட் அடிப்பது சினிமாவின் பாதிப்பா!

**(கடந்த வாரத் தொடர்)**

பரீட்சை தேர்வு அல்லது பரீட்சை (examination, சுருங்க:exam) என்பது தேர்வுக்குட்பட்ட ஒருவரின் அறிவு, திறன், நாட்டம், உடல் நலத்தகுதியை (அல்லது மற்றவற்றில் வகைப்படுத்துதலுக்காக, காட்டும் நம்பிக்கைகள்) மதிப்பிடுவதாகும்.

இந்தப் பரீட்சை தேர்வில் நாம் வெற்றிப் பெற உழைக்க வேண்டும். உழைப்பு என்பது வயதுக்கு வயது மாறுபடும். படிக்கும் வயதில் நற்கல்விப் பெற உழைக்க வேண்டும். பரீட்சையில் வெற்றியீட்ட உழைக்க வேண்டும்.

அதேபோல் பணம் சேர்க்க உடல் உழைப்பு அவசியம்.

இந்த உலகில் எதுவும் இலகுவில் கிடைத்து விடாது என்பதை பிள்ளைகளுக்கு சொல்லி புரியவையுங்கள். பரீட்சை என்கிற கனியை சுவைக்க படிப்பு எனும் மரத்தில் ஏறி கற்றல் என்கிற உழைப்பில் கவனம் செலுத்தி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை பிள்ளைகளுக்கு சொல்லி வளருங்கள்.

சினிமா, நாடகம் எல்லாமே அத்துறையின் உழைப்பு. அவர்களின் வெற்றிக்காக பல பொய்யான விடயங்களை நடித்து விட்டு கடந்து விடுவார்கள். அதன் பாதிப்பு சமூகத்தில் எப்படியுள்ளது என்கிற கவலை நடிகர்களுக்கு தேவையுமில்லை. அவர்கள்தான் நடித்த திரைப்படம் சமூகத்தில் மாற்றம் தந்ததா அதன் விளைவுகள் தான் என்பதை தேடினார்களா என்ற சம்பவங்கள் எதுவும் நான் அறிந்ததில்லை.

நடிக்கும் நடிகர்கள் தங்கள் பிள்ளைகளை சினிமா வாசனையின்றி நல்ல கல்வியைக் கொடுத்து உயர் நிலையில் வைத்திருப்பார்கள். வைத்து இருக்கிறார்கள்.

உதாரணமாக நடிகை குஷ்புக்கு இரசிகர்கள் கோவில் காட்டினார்கள். அவரின் பிள்ளைகள் குஷ்புவின் படம் பார்த்ததே இல்லையாம்.

சூர்யா ஜோதிகா தம்பதிகள் பிள்ளைகளின் கல்விக்காக இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள்.

பொன்வண்ணன் செந்தில், கவுண்டர் மணி என பல நடிகர்களின் பிள்ளைகள் வைத்தியர்களாகவும் நல்ல தொழில் துறையிலும் உயர்கல்விக்காக வெளிநாடுகளில் கற்பதையும் தேடி பார்த்திருக்கிறோமா!

இல்லை சினிமா நடிகர்கள் தங்கள் தொழிலை சரியாக செய்கிறார்கள். குடும்பத்தை சரியாக வைத்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே சமூக சிந்தனை அவர்களுக்கு இருந்தால் பல தமிழக அரச பாடசாலைகள் தரவுயர்வுடன் காணப்படும்.

நாம் தான், திரைப்படங்கள் உண்மை, கதாபாத்திரங்கள் உண்மையென நம்பி ஏமாறுகிறோம்.

பிள்ளைகளும் ஏமாந்து நிற்கிறார்கள். சினிமாவால் நடை, உடை பாவனை மாறியது. இன்று கூடாத விடயங்களும் நம் இளைய சமூகத்தின் மத்தியில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் நாம் இனியும் சிந்திக்காமல் இருப்பது பாதகமே!.



நம் வீட்டு குழந்தைகளோ, சினிமா நடிகர்களின் நடிப்பு என்பது உண்மை என்று எண்ணி தங்கள் வாழ்க்கையை நாசம் செய்து கொள்கிறார்கள். பிள்ளைகளின் சமூகப் பொழுதுபோக்கு அம்சங்களை பொழுது போக்கு அம்சமாக பார்த்து விட்டு நகரும் பக்குவத்தை நாம் கற்றுக் கொடுக்கும் கட்டாயத்தில் உள்ளோம்.

பிழையான வழிநடத்தல் கொண்ட சினிமாவும் ஒரு சமூக சீரழிவை உருவாக்கும் போதையே.

நம் பிள்ளைகளை இதனிலிருந்து காப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

அக் கடமையை சரியாக நிறைவேற்ற தயாராவோம்.

இந்தக் கட்டுரை மாணவர்கள் வாசிக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கும். எனவே வாசிக்கும் அனைவரும் உங்கள் குழந்தைகள், உங்களுடன் பயணிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பகிரும் பொறுப்பில் உள்ளீர்கள். எனவே நீங்கள் வாசிப்பதுடன் நிறுத்தி விடாமல் பகிர்ந்து கொள்ளுங்கள்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# வேலைக்கு போகும் பெண்களின் ஆரோக்கியம்



**பணிபுரியும் பெண்கள் தங்கள் பிஸியான தினசரி வழக்கத்தில் கவனம் செலுத்துவது மிகவும் கடினமாகும். வேலை செய்யும் பெண்களில் பெரும்பாலானோர் வீடு, அலுவலகம் என பிசியாக இருப்பதால் தங்களை கவனிக்க முடியாமல் தவிக்கின்றனர். இருப்பினும், அவர்கள் தங்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் பராமரிக்க, பல பொறுப்புகளுக்கு மத்தியில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது முக்கியமாகும். அத்தகைய சூழ்நிலையில், நாங்கள் உங்களுக்கு சில எளிய சுகாதார குறிப்புகளை கூறுகிறோம். அதை தினமும் முயற்சி செய்தால், பெண்கள்தங்கள் ஆரோக்கியத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க முடியும், மேலும் எப்போதும் அவர்கள் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள்.**



**நீரேற்றத்துடன் இருக்கவும்:**
நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க போதுமான ஹைட்ரேஷனுடன் இருப்பது அவசியமாகும். ஆரோக்கியமாக இருக்க, பெண்கள் ஒரு நாளைக்கு குறைந்தது 3 லீட்டர் தண்ணீரைக் குடிக்க வேண்டும். இது உடலை நீரேற்றமாக வைத்திருக்கும். நீரேற்றத்துடன் இருப்பது உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் தொற்றுநோயைத் தடுக்கிறது. மேலும், தண்ணீர் குடிப்பதால் திசுக்கள் ஆரோக்கியமாக இருக்கும், இதனால் சருமம் பளபளப்போடு இருப்பது மட்டுமல்லாமல், செரிமானமும் நன்றாக இருக்கும்.

**ஆரோக்கியமான உணவு:** ஒரு தனிநபரின், குறிப்பாக பெண்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை பராமரிப்பதில் ஆரோக்கியமான உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் அடிக்கடி நொறுக்குத் தீனிகள் அல்லது பொரித்த உணவுகளை உண்பது அவர்களின் உடல் நலத்தில் மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதோடு, நோய்வாய்ப்படவும் செய்கிறது.

எனவே வேலைக்குச் செல்லும் பெண்கள் எப்போதும் வீட்டில் சமைத்த உணவையே சாப்பிட வேண்டும். தயிர், பச்சை இலைக் காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள், நட்ஸ்கள், விதைகள் மற்றும் பால் உணவுகள் போன்ற சத்தான உணவுகளை உங்கள் உணவில் அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**உடற்பயிற்சி:** உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருப்பது ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் ஒரு முக்கிய பகுதியாகும். மயோ கிளினிக்கின் படி, தினசரி உடற்பயிற்சியானது உங்கள் தசை வலிமையை மேம்படுத்துகிறது.

உடற்பயிற்சியானது உங்கள் திசுக்களுக்கு ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை அனுப்புகிறது. மேலும் இது இதயம் மற்றும் நுரையீரல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

பணிபுரியும் பெண்கள் தினமும் 40 நிமிடங்கள் கார்டியோ உடற்பயிற்சி செய்ய வேண்டும். இதனால் உடலில் உள்ள நச்சுத்தன்மையின் அளவு குறைகிறது. இது தவிர, சில நேரம் தியானமும் செய்ய வேண்டும், இது மன அழுத்தத்தை குறைக்கிறது.

**நல்ல தூக்கம்:** உங்கள் உடலை ரீசார்ஜ் செய்ய, தினமும் 7 முதல் 8 மணி நேரம் தூக்கம் அவசியமாகும். தரமான தூக்கம் ஆனது ஆரோக்கியமான எடையை பராமரிக்கிறது, நாள்பட்ட உடல்நலப் பிரச்சனைகளின் அபாயத்தைக் குறைக்கிறது மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கிறது.

**மன அழுத்தத்தை நிர்வகிக்கவும்:** வேலைக்குச் செல்லும் பெண்களின் வாழ்க்கையில் மன அழுத்தம் அதிகமாக உள்ளது, ஏனெனில் அவர்கள் வீடு மற்றும் அலுவலகத்தை கவனிப்பார்கள், எனவே மன அழுத்தத்தை சமாளிப்பது மிகவும் முக்கியமாகும்.

ஆழ்ந்த சுவாசம், உடற்பயிற்சி, யோகா, இசை கேட்பது மற்றும் தியானம் போன்ற மன அழுத்தத்தை குறைக்கும் செயல்களில் ஈடுபடுங்கள்.

# கவிஞர் புத்தளம் மரிக்காரின் இரு நூல்கள் வெளியீட்டு விழா







கவிஞர் புத்தளம் மரிக்கார் எழுதியுள்ள இரு நூல்களின் வெளியீட்டுவிழா புத்தளம் நகரில் சனிக்கிழமை மிக விமரிசையாக இடம்பெற்றது.

புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி ஷாமில் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரப் சிஹாப்தீன் தலைமை வகித்தார்.

புத்தளம் CREATE இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் "ரகசியங்கள்" , "மைத்துளிகள் மரணிப்பதில்லை" ஆகிய இரு நூல்களே வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமத் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக வலம்புரி கவிதா வட்டம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன், புத்தளம் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், வரலாற்று ஆய்வாளர் இஸட்.ஏ.சன்ஹீர், கவியரங்க நெறியாளர், தமிழ்த் தென்றல் கவிஞர் எஸ்.எம்.அலி அக்பர், கவிஞர், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், வலம்புரி கவிதா வட்டம் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கௌரவ அதிதிகளாக கவிஞர், பன்னூலாசிரியர் கலாபூஷணம் ஜவாத் மரிக்கார், கவிஞர், நாடகக் கலைஞர் அப்துல் லதீப், இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகம் தலைவர் நெய்னார் இம்ரான், எழுத்தாளர், பன்னூலாசிரியர் ஸாக்கிரா இஸ்ஸதீன், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அய்ன், சங்கக்கவி கிண்ணியா அமீர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புரையினை புத்தளம் எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபர் எச்.அஜ்மல் நிகழ்த்தியதோடு தலைமையுரையினை அஷ்ரப் சிஹாப்தீன் நிகழ்த்தினார். "மைத்துளிகள் மரணிப்பதில்லை" என்ற நூலின் நயவுரையை ஓய்வு நிலை உதவிக்கல்விப்பாளர் இஸட்.ஏ.சன்ஹீரும், கவி வாழ்த்துக்களை கவிஞர் ரஷீத் எம்.இம்தியாசும் நிகழ்த்தினர்.

















"ரகசியங்கள்" எனும் நூலின் நயவுரையினை கவிஞர் எஸ்.எம். அலி அக்பர் நிகழ்த்தினார். இதன் கவி வாழ்த்தினை இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்த்தினார்.

முதல் பிரதியை புத்தளத்தின் சமூகவியலாளர் தொழிலதிபர் சங்கர் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டதையடுத்து ஏனையோருக்கும் விஷேட பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் ஏற்புரையினை நூலாசிரியர் கவிஞர் புத்தளம் SACP மரிக்கார் நிகழ்த்தினார். விஷேட உரையினை புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) நிகழ்த்தினார். நிகழ்ச்சித் தொகுப்பினை புத்தளம் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எம். பாத்திமா ரிஸ்கியா மற்றும் ஊடகவியலாளர் எம்.எச். முஹம்மத் ஆகியோர் வழங்கினர்.








# லக்ஷ்மி சத்யலிங்கத்தின் வயலின் அரங்கேற்றம்









# தமிழ்ச் சங்கத்தின் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் நினைவரங்கம்







யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் (04.10.2024) வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது

தமிழ் சங்க உபதலைவர் அருட்பணி ஜெரோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகள், தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மாலைகளை அணிவித்தனர்

தமிழ் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்க உரையாற்றினார் தமிழ் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் வாழ்த்துரை வழங்கினார் தொடர்ந்து மாணவர் உரையிடம் பெற்றது தனிநாயகம் எங்கள் தமிழ் நாயகம் என்ற பொருளில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி குரு மாணவன் ஆண்டனி குமார் அனோஜ் உரையாற்றினார்.

சிறப்பு நிகழ்வாக இலங்கை பல்கலைக்கழக முறைமையில் சேர் பொன் அருணாசலத்தின் வகிபாகம் என்ற பொருளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார்.

இவருக்கான அறிமுக உரையை தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் சந்திரமௌலீசன் லலீசன் மேற்கொண்டார். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் கருத்துரை வழங்கினார்.









# ஜேர்மனி ஆடல் கலாலயத்தின் 35 ஆவது ஆண்டு விழாவில் உலக சாதனை

ஜேர்மனி ஆடல்கலாலயத்தின் 35 ஆவது ஆண்டு விழாவில் உலக சாதனை நிகழ்த்தப்பட்டது.

12 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற நடனவிழா...

6 வயதிலிருந்து 60 வயதுவரை நடனம் புரிந்த நடனமணிகள்...

ஜேர்மனி கிறீபீல் நகரத்திலுள்ள ஆடல்கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா ஜேர்மனி டியூஸ்பேக் நகரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நேரடி பக்கவாத்தியக் கலைஞர்களின் பின்னணி இசையுடன் ஆசிரியர், ஆசிரிய மாணவர்களின் நட்டுவாங்கத்துடன் 30 நடன நிகழ்வுகள் நடைபெற்றமை இந்நிகழ்வின் தனித்துவமான அம்சமாகும்.

ஆடற்கலைமணி திருமதி றெஜீனி சத்தியகுமார் பதித்த விதை இப்போ கிளைகள் பரப்பி பெரு நிறுவனமாக வளர்ந்து வருகின்றமை கண்கூடு. புலம்பெயர் தேசத்தில் பிறந்து வளர்ந்த இளையவர்கள் முன்னின்று நடாத்திய ஒரு பெரு விழா.

பற்பல துறைசார்ந்தவர்கள் அவையை அலங்கரித்திருந்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அழகாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. நடனமணிகளின் பெற்றோர்கள்புடைசூழ நடனஆசிரியர் சத்தியகுமார் தம்பதிகள், பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

செல்வி சிம்ரன் சிவகுமார் (இந்தியா), சிறப்பு விருந்தினராகவும் நடன ஆசிரியர் திருமதி சாந்தினி துரையரங்கன் (ஜேர்மனி) சகிதம் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கை மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வை.சிவராசா, சமூக ஆர்வலர் எஸ் கந்தசாமி மற்றும் பிரமுகர்கள் ஏற்றினர், இறை வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.









# 8 வயதில் கலையுலகில் காலடி பதித்தவர் ஹெலன்குமாரி

இலங்கைத் தலைநகர் கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் இடமான ஜயந்தி நகர் என்று அழைக்கப்படும் ஜிந்துப்பிட்டியில் அருள் பெர்னாண்டோ, திரேசம்மா ஆகியோருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார் ஹெலன் குமாரி . இவருக்கு மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரனும் உள்ளனர். இவரது வீட்டுக்கருகில் மேட்டுத் தெருவிலுள்ள சென் ஆன்ஸ் பெண்கள் பாடசாலையில் படித்தார். பள்ளியில் படிக்கும் போதே நடனத்தில் தேர்ச்சி பெற்றார். பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் நடனமாடிக் கலந்து கொண்டார்.




இவருக்கு எட்டு வயதாக இருக்கும்போது, "மனோரஞ்சித கான சபா" ராஜேந்திரா மாஸ்டர் இவரை கலை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். மனோரஞ்சித கான சபாவில் கலை நிகழ்ச்சிகளை அளித்து வந்தார். பின்னர் பிரபல சிங்களத் திரைப்பட நடன இயக்குநர் ரொனால்ட் பெர்னாண்டோவிடம் மேற்கத்தைய நடனத்தையும் கற்று வந்தார்.



சிங்கள திரைப்பட இயக்குநர் எம்.வி.பாலனின் வழிகாட்டலில் 1970 ஆம் ஆண்டு ‘ஒக்கம ஹரி’ என்ற சிங்களத் திரைப்படத்தில் முதன்முதலாக அறிமுகமானார். இத்திரைப்படத்தில் இவர் எம். வி. பாலனுடன் இணைந்து நடனமாடினார்.

இத்திரைப்படம் பெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 36 சிங்களத் திரைப்படங்களில் நடனமாடியுள்ளதோடு நடன இயக்குநராகவும் இவர் இருந்துள்ளார்.

புகைப்படக் கலைஞர் கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் ஆனந்தா புரடக்சன்சின் உதவியுடன் எம். வி.பாலன் தயாரித்த மஞ்சள் குங்குமம் என்ற தமிழ்த் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்தார்.

இலங்கையில் தயாரான முதல் சினிமாஸ்கோப் திரைப்படமான லெனின் மொராயசின் "நெஞ்சுக்கு நீதி என்ற திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். ஆனாலும், இத்திரைப்படம் திரைக்கு வரும் முன்னரே இதன் திரைப்படச்சுருள் 83 ஜூலை கலவரத்தில் தீக்கிரையானது. அதே போன்று காமினி பொன்சேகாவுடன் இவர் இணைந்து நடித்த "இளைய நிலா" திரைப்படத்தை நடிகர் பிரஷாந்தின் தந்தை தியாகராஜன் தயாரித்திருந்தார். அதுவும் ஜீலைக் கலவரத்தில் எரிந்து போனது.

பிரபல எழுத்தாளர் மானா மக்கீன் தயாரிப்பில் உருவான "டயல் எம்போர்மேடர்" என்ற நாடகமே இவரது முதல் தமிழ் மேடை நாடகமாகும். அவர் தயாரித்த விட்னஸ்போர்த பிரசிகியூசன் என்ற நாடகத்திலும் நடித்துப் பாராட்டைப் பெற்றார்.

கிங்ஸ்லி எஸ். செல்லையாவின் ஆனந்தா புரடக்சன்சு தயாரித்த பல நாடகங்களில் ஹெலன் குமாரி நடித்திருக்கிறார். அவரது தயாரிப்பில் உதயகுமார் கதை வசனத்தில் தயாரான ‘தாலிக் கொடி’, நீர்கொழும்பு முத்துலிங்கம் மாஸ்டரின் உண்மை பேசும், உதயகுமாரின் ராம் ரஹீம் ரீட்டா, போன்ற நாடகங்கள் கொழும்பின் டவர், லும்பினி, கதிரேசன் மண்டபங்களில் பல முறை மேடையேறின.

ஆர். ராஜசேகரனுடன் இணைந்து ‘வெள்ளி நிலா காலாலயம்’ என்ற அமைப்பை ஏற்று நடத்தினார். "முக்கோணத்தில் மூவர்" கலாலயத்தின் முதல் நாடகமாக மேடையேறியது. அதைத் தொடர்ந்து "ஒன்று எங்கள் ஜாதியே", "கெரி ஒன் டிரக்டர்" போன்ற நாடகங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. "கெரி ஒன் டிரக்டர்" என்ற நகைச்சுவை நாடகம் ரூபவாகினியில் பல முறை ஒளிபரப்பப்பட்டது.




வெள்ளி நிலா கலாலயத்தின் நிறுவனர் ஆர். ராஜசேகரையே இவர் 1985 ஆம் ஆண்டில் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு விக்ரம், கார்த்திகா என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நடித்த தமிழ்த் திரைப்படங்கள் மஞ்சள் குங்குமம், தென்றலும் புயலும், ஏமாளிகள்.

விருதுகள் "ஒக்கமஹரி" சிங்களத் திரைப்படத்தின் 100 ஆவது நாள் வெற்றி விழாவை முன்னிட்டு இவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது 25 ஆண்டு கலைச்சேவையைப் பாராட்டி அன்றைய இந்து கலாசார அமைச்சராக இருந்த செ. இராசதுரையால் ‘கலைமணி’ விருது வழங்கப்பட்டது."சகல கலாவல்லி", "கலையரசி" கௌரவப் பட்டங்கள்."நடனமயில்" பட்டம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன வழங்கிய சிறந்த குணசித்திர நடிகை விருது. ரி. எம். சௌந்தரராஜன் வழங்கிய நவரசநாயகி விருது.1994ஆம் ஆண்டு அரச நாடகப் போட்டியில் ‘ஆராரோ ஆரிரரோ’ நாடகத்திற்கான சிறந்த நடிகை, சிறந்த அளிக்கைக்கான விருது.1998 இல் கோவிந்தராஜ் கதையில் தயாரான கவ்வாத்து கத்திக்கான விருது. ஒன்று எங்கள் ஜாதியே நாடகத்திற்கான சிறந்த துணை நடிகை விருது.நீண்டகால கலைச் சேவையைப் பாராட்டி 2012ஆம் ஆண்டிற்கான கலாபூஷணம் விருது.

## அழுகை ஒரு தொழுகை

முதற்செயலாய் முகிழ்க்கும்
அந்தத் தன்வினை
பிற(ர்) வினையாகிறது
முடிவின்போது
கண்ணீர் சுரக்காத
குழந்தையின் அழுகை
கவனிக்கப்படுகிறது
மௌனம் ததும்பும்
மூத்தோர் அழுகை
புறக்கணிக்கப்படுகிறது
ஆனந்தம் தொடங்கி
அந்திமத் துயரம்வரை
அழுகையில் உண்டு
ஆயிரம் வகை
அவையெல்லாம்
கண்ணீராகவே கசிந்துருகுகிறது
நீர்த்துவிட்ட நெஞ்சத்து
உணர்வுகளின் ஊர்வலம்
என்றா நினைக்கின்றீர்?
இல்லை
அழுகையென்பது
ஆனந்தத்துயர் கழிக்கும் விழியருவி
மனித நாகரீகத்தின் நதிமூலமாய்
திரண்டு வழிகிறபோது
சமுத்திரத்தை விட
ஆழமாய் இருக்கிறது
புறஉலகின் விளைச்சல் பெருக
விண்ணீர் உதவலாம்
அகஉலகின் உளைச்சல் கழிய
கண்ணீரே உதவுவது
நேற்றைய சோகம்
நாளைய சிரிப்பாவதை
நெஞ்சம் அறிந்தாலும்
இன்றைய அழுகையில் நம்மை
இழந்து போகிறோம்
துயரமும் அவலமும்
தோழமை என்றாலும்
அதிக மகிழ்வும்
அழுகையைத் தருகிறது
ஆனாலும் துயரம்
அழுகையை மறக்கிறது
இயல்பில்லா அழுகை
இழிவடைந்து நிற்க
தொழுகையாகிவிடும் அழுகை
தூயவனை அடைகிறது

கனடாவிலிருந்து
இனியவன் இசாறுதீன்







கொழும்பு 09, தெமட்டகொடை விபுலானந்தர் தமிழ் மகா வித்தியாலயத்தில் பாடசாலைக் கட்டிடமொன்று புனரமைத்து பாடசாலையின் அதிபர் என். ரவிச்சந்திரனின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

# வாசிப்பு மாதமும் புத்தக வாரமும்

இது வாசிப்பு மாதமெனப்படுகிறது, வாசிப்பு விழிப்புணர்வூட்டி வாசிப்பை ஆற்றுப்படுத்தலே இந்த மாதத்தை முன்வைத்து எழுப்பப்படும் வேலைத் திட்டங்களின் இலக்கெனலாம்.

குறிப்பாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள்,சமூக நிறுவகங்களென இதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கவும் படுகின்றன.

இதற்கிசைவாகவும் தூண்டுதலாகவும் புத்தகக் கண்காட்சிகள் தேசிய,பிரதேசிய ரீதியில் நிகழ்கின்றன.

இந்த இரண்டும் சார்ந்த இடைவினை குறித்து தேசிய நூலகம் சர்வதேச புத்தக அரங்கில் கணிப்பீடொன்றை மேற்கொண்டபோதான அனுபவத்தை நூலக ஆவணவாக்கல் நிறுவகத்தின் அதிகாரி எம்.எஸ்.எம்.ஸியாம் தன் மதிப்பிடலை அல்லது ஆய்வறிக்கையை யொட்டி இப் பத்தி மேலெழுகிறது.

**இருபத்தைந்தாவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி.**

வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்கள்,ஆயிரக்கணக்கான புத்தக கொள்வனவாளர்கள் என கூட்டம் நிறைந்த புத்தகத்தையும்,வாசிப்பையும் மையப்படுத்திய களம்.

சிங்கள மற்றும் தமிழ் முஸ்லிம் வாசிப்பாளர்களின் போக்கு குறித்து உணரமுடிகிறது.



நானூறுக்கு மேற்பட்ட விற்பனைக் கூடங்களில் தமிழ் மொழியை மையப்படுத்தியது வெறும் பத்து. வருகைதரும் பார்வையாளர்கள் அல்லது கொள்வனவாளர்களில் தமிழ் மொழியிலானவர்கள்மிகக்குறைந்தவர்களே.

முஸ்லிம்களில் இளையோர் முதியோரும் ஆங்கில மொழி ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.முஸ்லிம் சமூகம் தமிழிலிருந்து சிங்கள ஆங்கில மொழிகளை நோக்கி நகர்கிற மனோபாவம் மேலெழுந்து நிற்கிறது.இது சாதகமானதா?

அதுமட்டுமன்றி

இலக்கிய நூல் நுகர்ச்சி கல்வி வெளியீடுகள் அளவில் சுருங்கி விட்டது.

வணிக அளவிலான நிறுவனங்கள் ஒப்பீட்டளவில் குறைவானது, தமிழ்ச் சந்தை சிறிது, அச்சிடப்படும் புத்தக அளவும் மிகக்குறைவு,வாசக ஈர்ப்பு அதை விடவும் குறைந்தளவுடையது.

வெளியீட்டு வகையளவில் தமிழில் இலக்கியம்,சமயம் சார்ந்தே உள்ளது.சிறுவர் இலக்கியப்படைப்பளவும் பெரிய அளவில் அதிகரிக்கவில்லை. சிங்களத்துறையில் பிள்ளைகளின் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் வகையில் கவர்ச்சியாகவுள்ளது. அத்துடன் வெளிப்பாட்டுக் கவர்ச்சி அல்லது கவன ஈர்ப்பும் காணப்படுகிறது.தமிழில் இத்தன்மையின் மேம்பாடு போதாமையாகவுள்ளது.

இன்னுமொரு அவதானிப்பு சிங்களத்தில் சிறுவர் படைப்பாளர்கள் உருவாகியுள்ளனர். தமிழில் இந்நிலை வளரவில்லை.

மொழிபெயர்ப்புத்துறை சிங்கள அளவுடன் நோக்கும் போதும் பலவீன நிலையேயுள்ளது.

இவ்வாறான அவதானிப்பு மதிப்பீடொன்றை சியாம் மேற்கொண்டுள்ளார்.

இத்தகைய மதிப்பீடுகளும், ஆய்வுகளும் அபிவிருத்திக்குரியதாக செயல் வடிவம் பெற வேண்டும்




# முல்லை முஸ்ரிபா




**1. வாப்பாவின் பெட்டகம்**

வாப்பாவுக்கு ஒரு றெங்குப் பெட்டியிருந்தது
அதற்குள் எதை வைத்திருந்தாரென
என்னால் அறிய முடியவில்லை
அந்தப் பெட்டிக்குள் ளிருந்து ஒரு சொல் இடைக்கிடை வெளியே வந்தது
அது சொல்தானா என்பதையும் ஆச்சரித்தேன்
அதன் அர்த்தத்தை காலம் முழுதும் தேடுகிறேன்
ஆயிரம் புனைவெழுதிய எனக்கு அந்த ஒற்றைச் சொல் புரிவதாயில்லை
வாப்பாவைப் போலவே என் நினைவில் அலைகிறது
அந்தச் சொல்லும்

**2. உம்மா வெற்றிலை**

துளிர் பச்சை நிறத்துக் குளிர்த்தி உம்மா
வெற்றிலையின் பரந்த மன வாசம் என் நெஞ்சுக்குள் ஊறுமோர் சுவை நினைவு
வெற்றிலைக் கொடியைக் காணுகையில் உம்மாவின் முகம் பூக்கும் தருணங்களெனக்குள் ஆயிரம்
கமுகென நெடுத்த வாப்பாவின் குரல்
பச்சைப் பாக்கெட் பசியும் மனம்
காசிக்கட்டி
பூட்டி முத்தும்மா மனசு வெண்மை
சுண்ணாம்பாய்த் தடவும்
விரல் ரேகை பொன்னியும்மம்மா
புகையிலையாய் சுருண்ட நினைவுகளில் மீராசாய்வு
அப்பா
மீள் மீள மீளா உணர்வு



வெற்றிலை தட்டமாய் வாசலில் பூத்த வரவேற்பு முகங்கள்
வெற்றிலைச் சிவப்பாகிக் கிடக்கிறது முற்றத்தில் காலம்
நான்
உம்மாவின் கால் தடம் கொஞ்சுகிறேன் சுவர்க்கம்

**நன்றி : மௌனத்தின் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாவு**

# ரூமியின் வைரங்கள்



உண்மையில் நீ ஆசைப்படுவதை கேட்க வேண்டிய தருணம் இது மீண்டும் உறங்கச் செல்லாதே

இகமும் பரமும் தொட்டுக்கொள்ளும் கதவின் விளிம்பருகே முன்னும் பின்னும் அசைகிறார்கள் எல்லோரும் மீண்டும் உறங்கச் செல்லாதே

அகலத் திறந்துள்ளது கதவு மீண்டும் உறங்கச் செல்லாதே

வசதிகளை விட்டு ஓடிவிடு பாதுகாவல் மற எங்கிருக்க அஞ்சு வாயோ அங்கே இரு நற்பெயரை நசி வசைப் பெயர் வாங்கு!

காதலைத் தேடுவதல்ல உன் வேலை அதற்கெதிராய் உன்னில் நீயே எழுப்பியிருக்கும் தடைகளையெல்லாம் கண்டுபிடி

காதல் இது ரகசிய வானம் நோக்கிப் பறந்து போ

ஒவ்வொரு கணமும்

நூறு திரைகளை அப்பால் விழுந்திடச் செய்

போகும்படி விட்டுவிடு

வாழ்வை. முதலில்

இறுதியில் காலடி எடுத்துவை பாதம் இல்லாமல்

ஒளி நிழல் இரண்டுமே காதலின் நடனம்தான்

காதலுக்குக் காரணமில்லை

தெய்வீகத்தை அளக்கும் கருவி அது

காதலனும் காதலும்

பிரிவற்ற நிரந்தரம்

காதலை விபரிக்க எவ்வளவு முயன்றாலும் அதன் அனுபவத்தில் மௌனமாகிப் போகிறேன்

என் எழுதுகோல் உடைகின்றது

நழுவி விழுகிறது தான்

காதலன் காதலி காதல்

ஒன்றென்றான அந்த இடத்தில்

ஒவ்வொரு கணமும் பிரகாசிக்கின்றது

காதலின் ஒளியில்

சிறுகச் சிறுக குறைந்து விடு

மனதிற்கு நீ புகட்டும் இச்சைகளை திறக்கத் தொடங்கும்

உன் ஆன்மாவின் கண்

வைரங்கள் சுடர்ந்தன

நன்றி:

கஸல் வெளியீடாக வெளிவந்த ரமீஸ் பிலாலியின் ரூமியின் வைரங்கள்)

# சிறுவர் நாடகங்களை வலுவூட்டல்

உலக சிறுவர் தினம் சிறுவர் உலகை வண்ணமயப்படுத்துவதில் கவனக் குவிவை கோரி நிற்கிறது.

சிறுவர்கள் கல்வி,பண்பாடு,கலாசாரம்,உரிமைகள்,கடமைகள்,இணைப்பாட ஆற்றல்கள்,ஒருமைப்பாடு,தேச உணர்வு,கலை,இலக்கியமென எல்லாத்துறைகளிலும் வலுவூட்டப்படுவதனூடாக எதிர்காலத்துக்கான ஆளுமை மிக்க சந்ததிகளாக வளர்க்கப்படலாம்.

சிறுவர்களை ஆற்றுப்படுத்துகின்ற அல்லது விழிப்பூட்டுகின்ற ஊடகமாக சிறுவர் நாடகங்களையும் கையாளலாம்.



சிறுவர் நாடகங்கள் மீது சிறார்களையும்,மற்றோரையும் குவிமையப்படுத்துவதற்கான நாடக ஆற்றுகைக் கலை ஏற்பாடுகள் பிரதேச,தேசிய அளவில் மேற்கொள்ளவும் படுகின்றன.

இவ்வாண்டுக்கான கலாசாரத் திணைக்களத்தில் சிறுவர் நாடக விழா ஒக்டோபர் ஒன்றில்சிறுவர் தினத்தில் டவர் அரங்கில் தொடங்கியிருக்கிறது.தொடர்ந்து பத்துத்தினங்கள் மாலை நான்கு மணிமுதல் தினமும் நான்கு நாடகங்கள் போட்டியிடும் அரங்காற்றுகையாகக் கடந்த வாரம் அமைந்தது.

டவர் அரங்கிலே சுமார் நாற்பது நாடகங்கள் மேடையேறின. இவற்றுள் பத்து நாடகங்கள் தமிழ் மொழியாலமைந்தவை.

சிங்கள,தமிழ் சிறுவர் நாடக விழா அரங்கிலே சிறுவரும் பெற்றோரும் தினமும் கூடி நாடகங் களித்தனர்.

நாடக ஆற்றுகை மேம்பாடு குறித்து நோக்குகையில் இதுவொரு கூட்டுக்கலையாக்கம்.மிகுந்த பயிற்சிகளைக் கோருவது.பொருளாதாரச் செலவுகளும் நடிபங்கினரின் நேர ஒதுக்கீடுமென சவால் நிறைந்தது. எனினும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிறுவர் நாடகக்குழுக்கள் பங்கேற்றமை பாராட்டுக்குரியதே.

ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ் நாடகங்களை விடவும் சிங்கள சிறுவர் நாடகங்கள் மேலுயர்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.நாடகப் பிரதி,கதைக் கட்டுமானங்கள்,மேடையேற்பாடு,நடிப்பு,உத்திகள்,நவீனத்துவமென ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளது.

இந்நிலைக்கான பின்புலம் கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியிருக்கிறது.

துறைசார் ஆளுமைகள் கவனம் செலுத்தவரா?

பாடசாலைகள்,பெற்றோர்கள் அவதானம் கொள்ளுமா? சமூக நிறுவனங்கள் முன்நிற்குமா?

சிறுவர் நாடகம் எனும் ஊடகம் வலுவூட்டப்படல் வேண்டும்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



மண்டேலா அரசியல் வாழ்க்கையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்த காலத்தில் 1946 இல் சுரங்கத் தொழிலாளர்களின் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது. அப் போராட்டம் மண்டேலாவை பெரிதும் ஈர்த்தது மட்டுமில்லாமல் ஆபிரிக்கர்களுக்கு சுதந்திரத்தை வெகு சீக்கிரத்தில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உத்வேகத்தையும் அவனுள் ஏற்படுத்திவிட்டது.

சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்தில் சுமார் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஆபிரிக்க தொழிலாளர்கள் களமிறங்கினார்கள். ஒருநாளைக்கு இரண்டு ஷில்லிங் குறைந்த பட்ச ஊதியம் போதாமையால் ஊதியத்தை கூட்டும்படி கோரிக்கை விடுத்ததின் பொருட்டே இப் போராட்டம் இடம்பெற்றது. சுரங்க நிர்வாகம் அதை ஒத்துக் கொள்ளாததால் வேலை நிறுத்தம் தொடர்ந்த வண்ணமாகவே இருந்தது. இப் போராட்டத்திற்கு ஜே.பி. மார்க்ஸ் என்பவரே தலைமை தாங்கி தொழிலாளர்களை அணிதிரட்டி போராட்டத்தில் மும்முரமாக களமிறங்கியிருந்தார்.

ஜே.பி. மார்க்ஸ் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியிலும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினராக இருந்தார். மண்டேலாவுக்கும் அவருக்கும் இடையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மூலமாக நட்பு மலர்ந்திருந்தபடியால் மண்டேலாவும் இப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு அவருக்கு கைகொடுத்து உதவினான். தன் இன தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது என அவன் மனம் சுட்டிக்காட்டியது. அதனால் போராட்டத்தில் தொழிலாளர்களை ஒன்று திரட்டும் பணியில் ஜே.பி. மார்க்ஸ{டன் இணைந்து செயற்பட்டான். சுரங்கத்தில் சிலகாலம் பணியாற்றிய அனுபவம் மண்டேலாவிற்கு இருந்தபடியால் தொளிலாளர்களுடன் இயல்பாக உரையாடி அவர்களின் பிரச்சினையை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. இப் போராட்டத்தில் மண்டேலா தன்னை முழுமையாக இணைத்துக் கொள்ளாவிட்டாலும் நிழலாக இருந்து இப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமென துடித்தான். தொடர்ச்சியாக இப் போராட்டம் இடம்பெற்றதைக் கண்டு திகைத்தான்.அடுத்தடுத்து அறுபதுக்கும் மேற்பட்ட போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. தொழிலாளர்கள் வெற்றி பெரும் தினத்தை ஆவலோடு எதிர்பார்த்த மண்டேலாவுக்கு இறுதியில் இலவு காத்த கிளி போல ஏமாற்றமே மிஞ்சியது. அரசாங்கம் கடுமையாக இப் போராட்டத்தை எதிர்த்து ஜே.பி. மார்க்ஸ் உள்ளிட்ட பல தலைவர்களை கைது செய்து தொழிலாளர்களை மிரட்டியது.

அது மட்டுமில்லாமல் அப்பாவி ஆபிரிக்க பொதுமக்கள் பலர் இப் போராட்டத்தினால் பலியாகினர். இறுதியில் இப் போராட்டம் அரசாங்கத்தின் எல்லை மீறலால் தோல்வியை தழுவிக் கொண்டது. இப் போராட்டத்தில் நிழலாக தன்னை இணைத்துக்கொண்ட மண்டேலாவிற்கு மனதில் கோப எரிமலை வெடித்து தீப்பிழம்புகளை கக்கியது. தொழிலாளர்களை நினைத்து மனம் வெதும்பி ஆபிரிக்க தேசிய கட்சியிலும் இதுபற்றி முறையிட்டான். பலன் பூச்சியமாகத்தான் இருந்தது. கறுப்பின ஆபிரிக்கர்கள் மீது மட்டுமில்லாமல் இந்தியர்கள் மீதும் அடக்குமுறையை ஏவிவிட்டது அரசு.

19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியாவில் இருந்து தொழில் நிமித்தமாக பல இந்தியர்கள் தென்னாபிரிக்காவிற்கு வந்திறங்கினார்கள். 1860 ஆம் ஆண்டில் தான் இந்தியர்களின் முதல் பிரிவினர் "ட்ரூரோ" எனும் கப்பலில் ஆபிரிக்காவை வந்தடைந்தனர். அவர்களைத் தொடர்ந்து பல ஒப்பந்த தொழிலாளர்கள் ஆபிரிக்காவில் நேட்டலிலுள்ள கரும்புத் தோட்டங்களில் பணியாற்ற அழைத்து வரப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆலை முதலாளிகளுடன் வாழ்நாள் ஒப்பந்தத்தில் பிணைந்திருந்தனர். இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் இருந்து பல இந்திய வர்த்தகர்கள் தென்னாபிரிக்காவிற்கு குடிபெயர்ந்தனர்.நேட்டலின் மிகப்பெரிய துறைமுக நகரமான டர்பனில் இந்தியர்கள் உள்ளிட்ட ஆசியர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்தது.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# அக்குறணை பிரதேச செயலக பிராந்திய சாஹித்திய விழா











**மாவத்தகம தினகரன் நிருபர்**

அக்குறணைப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவினால் வருடாந்தம் நடத்தப்படும் சாஹித்திய விழா அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக சிங்கள மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நிமல் விஜயசிரி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக அக்குறணை ஐடெக் கல்வி நிலையத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், அக்குறணை வர்த்தகப் பிரமுகர்கள் பாடசாலை மாணவ, மாணவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் விடேசமாக அக்குறணை சி. எஸ். எம். விசேட தேவையுடைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் சிங்கள, தமிழ் பாரம்பரிய நடனங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இக்பால் அலி

# அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகளின் நடன நிகழ்வு















நடன ஆசிரியை திவ்யா சுதனின் அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகளின் இராமாயண நாட்டிய நடன நிகழ்வொன்று கொழும்பு நெலும்பொக்குன மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.